# 2019.11.16 ஆம் திகதி நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல் பற்றிய அறிக்கை

# சனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக 2019.11.16 ஆம் திகதி நடாத்தப்பட்ட தேர்தல் தொடர்பான அறிக்கை

தேர்தல் ஆணைக்குழு

* இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் அட்டவணைகள் அல்லது புள்ளி விபரக் குறிப்புக்களைப் பிரித்தெடுத்து வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதாயின் அதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

CM 34517 - 200 (2021/10) அரசாங்க அச்சுத் திணைக்களம், இலங்கை.

## முன்னுரை

இலங்கை அரசியலமைப்பில் சனாதிபதிப் பதவி 1972 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் மூலமாகவே முதன் முதலில் அறிமுகம் செய்யப்பட்டது. அந்த அரசியலமைப்பின் VII ஆம் அத்தியாயத்தின் 19 ஆம் உறுப்புரையில் "இலங்கைக் குடியரசிற்கு சனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும். அவரே அரசின் தலைவராகவும் இருத்தல் வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி இதுவரை காணப்படாதிருந்த சனாதிபதிப் பதவி இலங்கையின் அரசியலமைப்பில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

அந்த அரசியலமைப்பின் 25 ஆம் உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதி அவர்களை பிரதமர் அவர்கள் பெயர் குறித்தல் வேண்டும். இதற்கமைய சனாதிபதி அவர்கள் பெயரளவிலான சனாதிபதியொருவராவார். அவரின் பதவிக் காலம் நான்கு வருடங்களாகும். இந்த அரசியலமைப்புச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் அப்போதைய பிரதமராக இருந்த திருமதி சிறிமா ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களினால் வில்லியம் கொபல்லவ அவர்கள் முதலாவது பெயரளவிலான சனாதிபதியாக நியமிக்கப்பட்டார். திரு. லகிசுறு வில்லியம் கொபல்லவ அவர்கள் 1978 ஆம் ஆண்டில் அந்தப் பதவியிலிருந்து விலகியதன் பின்னர் 1972 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பில் செய்யப்பட்ட இரண்டாவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அமைவாக அப்போது பிரதமராகப் பதவி வகித்த திரு. ஜே.ஆர். ஜயவர்தன அவர்கள் சனாதிபதியாக நியமனம் செய்யப்பட்டார்.

அதன் பின்னர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 1978 ஆம் ஆண்டில் அதிகாரத்திலிருந்த அப்போதைய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டதோடு, அந்த அரசியலமைப்பின் மூலம் நிறைவேற்று அதிகார சனாதிபதி முறைமை முதலில் அறிமுகம் செய்யப்பட்டது. அந்த அரசியலமைப்பின் 30(1) ஆம் உப உறுப்புரைக்கமைய "இலங்கைக் குடியரசிற்குச் சனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும். அவரே அரசின் தலைவராகவும், ஆட்சித் துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவராகவும், ஆயுதந்தாங்கிய படைத் தலைவராகவும் இருத்தல் வேண்டும்" என்ற நிறைவேற்று அதிகார சனாதிபதிப் பதவிக்கான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 30(2) ஆம் உப உறுப்புரைக்கமைய "குடியரசின் சனாதிபதி மக்களினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் சனாதிபதி ஆறு வருடங்கள் கொண்டவொரு தவணைக்குப் பதவி வகித்தலும் வேண்டும்." என்று குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்புச் சட்ட ரீதியான ஏற்பாடுகளின் பிரகாரம் சனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்யும் முறை மற்றும் சனாதிபதியின் பதவிக் காலம் ஆறு வருடங்கள் என உறுப்புரை மூலம் விதிக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பின் XXI ஆம் அத்தியாயத்தின் 160 ஆம் உறுப்புரையின் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் அப்போது சனாதிபதிப் பதவியை வகிக்கின்ற நபரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக நியமனம் செய்வதற்குத் தேவையான சட்டரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அந்த ஏற்பாடுகளின் கீழ் அப்போது சனாதிபதியாகப் பதவிவகித்த திரு. ஜே.ஆர். ஜயவர்தன அவர்கள் 1978 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 04 ஆம் திகதி நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாகப் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

"சனாதிபதி மக்களால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்." என்ற அரசியலமைப்பின் விதிக்கமைய சனாதிபதி ஒருவரைத் தேர்தலொன்றின் மூலம் தேர்ந்தெடுப்பதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் உருவாக்கம் பெற்றது.

அரசியலமைப்பின் மற்றும் மேற்படி சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் சனாதிபதி ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான முதலாவது தேர்தல் 1982 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆம் திகதி நடாத்தப்பட்டது. அதன்பின்னர் முறையே 1988 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19, 1994 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09, 1999 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21, 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17, 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 மற்றும் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆகிய திகதிகளில் தேர்தல்கள் திணைக் களத்தினால் 07 சனாதிபதித் தேர்தல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பில் திருத்தம் செய்வதற்காக நிறைவேற்றப்பட்ட பதினேழாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்பட்டு முன்னர் காணப்பட்ட தேர்தல்கள் திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்களை அந்த ஆணைக்குழுவிற்கு கையளிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இருப்பினும், பதினேழாவது திருத்தத்தின் மூலம் அல்லது அதற்குப் பின்னர் நிறைவேற்றப்பட்ட பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட தேர்தல் ஆணைக்குழுவைத் தாபிப்பதற்குரிய ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படவில்லை.

எவ்வாறு இருப்பினும் அதன் பின்னர் 2015 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பத்தொன்பதாவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அமைய திருத்தம் செய்யப்பட்ட இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரையின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உட்பட அங்கத்தவர்கள் 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆம் திகதி அரசியலமைப்புச் சபையின் பரிந்துரைக்கிணங்க சனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்டதுடன், நியமனம் செய்யப்பட்ட அங்கத்தவர்கள் 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி கடமைகளைக் கையேற்றுக் கொண்டதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழு தொழிற்படு நிலைமைக்கு மாறியது. அவ்வாறு நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை தவிசாளர் உட்பட மூன்று அங்கத்தவர்களை உள்ளடக்கிக் காணப்பட்டது. பதவிக்காலம் ஐந்து வருடங்களாகும். 103(2) ஆம் உப உறுப்புரைக்கமைய ஆணைக்குழுவின் குறிக்கோளானது சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்களையும் மற்றும் மக்கள் தீர்ப்புக்களையும் நடாத்துவதற்கானதாக இருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைவாக, இதுவரை தேர்தல்கள் திணைக்களம் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் வசம் காணப்பட்ட தேர்தல்களை நடாத்துதல் உள்ளிட்ட அதனோடு இணைந்த நியதிச்சட்ட அலுவல்களுக்கான அதிகாரங்கள் மற்றும் தத்துவங்கள் தேர்தல் ஆணைக்குழுவிற்குக் கையளிக்கப்பட்டது. இந்த அதிகாரக் கையளிப்புக்கு அமைய முதலாவது தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள், நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியவற்றுக்கு அமைய தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளடங்கலாக அனைத்து ஆணைக்குழுவின் பணியாட் குழுவினர் களால் 2018 ஆம் ஆண்டில் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தேர்தல் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட 2019 சனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிக்கை இதனூடாக சமர்ப்பிக்கப்படுகின்றது. 2019.11.16 ஆம் திகதி நடாத்தப்பட்ட அந்த சனாதிபதித் தேர்தலுக்குரிய அனைத்து தகவல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இடைநேர்விளைவான அனைத்து விடயங்கள், குறிப்புகள் மற்றும் பெறுபேற்று ஆவணங்கள் என்பனவற்றை உள்ளடக்கியதாக இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது. தேசிய மட்டத்தில் தேர்தலொன்றை நடாத்துதல் என்பது பாரிய பொறுப்புக் கொண்ட ஒரு பணியாகும். சுதந்திரமான, நீதியான மற்றும் நம்பகத்தன்மை கொண்டதாக சனாதிபதித் தேர்தலொன்றை நடாத்துவதற்கான பாரிய பொறுப்பை சட்டரீதியாகவும், பக்கச் சார்பின்றியும் மற்றும் நீதிமன்றத்திற்கு மற்றும் மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வெளிப்படைத் தன்மையுடன் நிறைவேற்றுவது ஆணைக்குழுவின் நோக்கமாகக் காணப்பட்டது.

வாக்கெடுப்பொன்று நடாத்தப்பட்ட பின்னர் அதற்குரிய இடைநேர்விளைவான அனைத்து விடயங்கள், தகவல்கள், குறிப்புக்கள், தேர்தல் பெறுபேற்று (முடிவுகள்) ஆவணங்கள், பிற தரவுகள் மற்றும் புள்ளிவிபரங்களை ஆய்வு செய்து முறையாகத் தயாரிக்கப்படுகின்ற அறிக்கையொன்றைத் தயாரித்தல் மற்றும் பொதுமக்களுக்கு குறித்த அறிக்கையை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுப்பது தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பொறுப்பொன்றாகும். அதற்கமைய 2019 ஆம் ஆண்டின் சனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட்டதன் பின்னர் வெளியிடப்படுகின்ற இவ்வறிக்கை தேர்தல் ஆணைக்குழுவின் பங்குதாரத் தரப்பினர்களான அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள், வாக்காளர்கள், பிரசைகள்,கண்காணிப்பு அமைப்புக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களின் அந்த அபிலாஷைகளை நிறைவேற்றுதல் போன்றே அனைவருக்கும் இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் முழுமையானதோர் அறிக்கையைச் சமர்ப்பிப்பதும் ஆணைக்குழுவின் எதிர்பார்ப்பாகும். அதேபோன்று அரசியல் அலுவல்கள் தொடர்பாக ஆர்வமொன்றைக் காட்டுகின்ற அனைவருக்கும் இந்த அறிக்கை முக்கியமானதாகுமென்பதை விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியதில்லை. தேர்தல் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு மாத்திரமன்றி தேர்தல் செயற்பாடுகள் மற்றும் தொடர்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு, விசேடமாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாணவ சமூகத்தினர்களுக்கு, ஆராய்ச்சியாளர்களுக்கு மற்றும் கல்வியலாளர்களுக்கு அவர்களின் அறிவு வளர்ச்சிக்காகவும் அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காகவும் இதன்மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகள் அளப்பரியதாகும். ஆதலால் இவ்வறிக்கை ஏற்புடையதானவாறு நியதிச்சட்ட விடயங்கள், தேர்தல் செயற்பாடுகள், சட்ட ஒழுங்குகள், பணிப்புக்கள், வழிகாட்டு நெறிகள், ஒழுக்க நெறிகள், தேர்தல் பெறுபேறுகள் (முடிவுகள்) மற்றும் தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவம் தொடர்பான தகவல்கள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியதாக இதனை சகல அம்சங்களையும் கொண்ட முழுமையான அறிக்கையொன்றாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த சனாதிபதித் தேர்தல் தொடர்பான பணிகள் மற்றும் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் தேர்தல் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட பணிக்குழுவினருக்குக் கையளிக்கப்பட்ட போதிலும் அது உண்மையாக மொத்த அரச சேவையின் கூட்டுச் செயற்பாடொன்றின் பயனொன்று எனக்கூறுவது பொருத்தமானதாகும். எனவே, தேர்தலொன்றை ஒழுங்கு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் மற்றும் தொடர்புபடு கின்ற இலங்கை பொலிஸார் மற்றும் முப்படையினர் உட்பட அனைத்து அரச உத்தியோகத்தர்களதும் தேர்தல் ஆணைக்குழுவின் ஏனைய அனைத்துப் பங்குதாரத் தரப்பினர்களதும் பாரிய அர்ப்பணிப்பு, இணையற்ற தைரியம், கையளிக்கப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புகளை முழுமையாக நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் ஆகிய அனைத்தினதும் மொத்தப் பிரதிபயனாகும். இந்தக் கூட்டுச் செயற்பாடுகளுக்கு உதவிய பாதுகாப்பு பிரிவு உள்ளிட்ட அனைத்துத் தரப்பினர்களுக்கும் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் ஒவ்வொரு பிரிவுகளிலும் பணியாற்றுகின்ற பணியாட்குழுவினர் மற்றும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பணியாட்குழுவினர்கள் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் மொத்தப் பணியாட்குழுவினர்கள் ஆகியவர்களால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புத் தொடர்பான தேர்தல் ஆணைக்குழுவின் விசேட நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோன். மேலும் இந்த அறிக்கைகளைத் தயாரித்தல் பொறுப்பை நிறைவேற்றிய தேர்தல் ஆணைக்குழுவின் செயலாளர் திரு. எச்.எம்.ரீ.டீ. ஹேரத் அவர்கள் உள்ளிட்ட அதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அலுவலர்களுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் நன்றிகளை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நிமல் ஜீ. புஞ்சிஹேவா,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

# உள்ளடக்கம்

பக்க இலக்கம்

## முதலாம் அத்தியாயம்

## அறிமுகம் மற்றும் சனாதிபதித் தேர்தல்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள்.


**01. அறிமுகம். 01**

1.1 சனாதிபதித் தேர்தல்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள். 02

1.1.1 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு. 02

1.1.2 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம். 02

1.2 சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் தேர்தல்கள் திணைக்களத்தினால் 1982 – 2015 வரை நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல்கள். 03

1.3 சனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு - 2019 03


## இரண்டாம் அத்தியாயம்

## பெயர்குறித்த நியமனங்கள்.


**02. பெயர்குறித்த நியமனங்கள். 04**

2.1 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழான கட்டளை. 04

2.2 ஒவ்வொரு மாவட்டங்களுக்காகவும் தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமனம் செய்தல். 04

2.2.1 தேர்தல் மாவட்டங்களுக்காக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமனம் செய்தல். 04

2.2.2 முழுத்தீவும் உள்ளடங்கும் அடிப்படையில் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமனம் செய்தல். 04

2.3 அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள். 05

2.4 சனாதிபதி வேட்பாளர் ஒருவராவதற்கான தகைமைகள். 05

2.5 வைப்புப் பணம் செலுத்தப்படுதல். 05

2.6 பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றல். 06

2.7 பெயர் குறித்த நியமனங்கள் தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்தல். 06

2.8 பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் தொடர்பான முடிவுகளை அறிவித்தல். 07

2.9 ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரங்களுக்கமைய வேட்பாளர் தொடரொழுங்கு. 07

2.10 வேட்பாளர்களின் தேர்தல் முகவர்களை நியமனம் செய்தல். 08


## மூன்றாம் அத்தியாயம்

## தேர்தலுடன் தொடர்புடைய பூர்வாங்க நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்.


**03. தேர்தலுக்குரிய பூர்வாங்க நடவடிக்கைகள். 09**

3.1 வாக்கெடுப்புக்குச் செல்லுபடியான தேருநர் இடாப்புக்கள். 09

3.2 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம். 10

3.3 வாக்குச் சீட்டுக்களை அச்சிடல். 10

3.4 தேர்தல் மாவட்டங்களை வேறுபிரித்தல். 10

3.5 வாக்கெடுப்புப் பிரிவுகளும் வாக்கெடுப்பு மாவட்டங்களும். 11

3.6 வாக்களிப்பு நிலையங்கள். 11

3.7 வாக்குப் பெட்டிகள் விநியோகம். 12

3.8 பாதுகாப்பு அலுவல்கள். 13

## நான்காம் அத்தியாயம்

## பணியாட் குழுவினர் தேவைப்பாடு மற்றும் போக்குவரத்து வசதிகள்.

**04. பணியாட் குழுவினர் தேவைப்பாடு** 15

4.1 வாக்கெடுப்பு பணியாட்குழுவினரை நியமனம் செய்தல். 15
4.2 பணியாட்குழு அலுவலர் ஒதுக்குக் குழாத்தைப் பேணிவருதல். 16
4.3 போக்குவரத்து வசதிகள். 16
4.4 பொதுப் போக்குவரத்து வசதிகளை வழங்குதல். 17

## ஐந்தாம் அத்தியாயம்

## அஞ்சல் வாக்கு வசதிகளைச் செய்துகொடுத்தல்

**05. அஞ்சல் மூலம் வாக்களித்தல்.** 19

5.1 அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குத் தகைமை பெறுகின்ற நபர்கள். 19
5.2 அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்றல். 19
5.3 அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை நிராகரித்தல். 20
5.4 அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள். 20
5.5 அஞ்சல் தேருநர் இடாப்புக்களைத் தயாரித்தல். 20
5.6 அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை வழங்குதல்/விநியோகித்தல். 21
5.7 அஞ்சல் வாக்குகளை அடையாளமிடல். 21
5.8 அஞ்சல் வாக்கு கண்காணிப்பு அலுவல்கள். 21
5.9 அடையாளமிடப்படாத அஞ்சல் வாக்குகள். 22

## ஆறாம் அத்தியாயம்

## பிரச்சார அலுவல்கள் மற்றும் ஊடகங்கள்

**06. பிரச்சார அலுவல்கள்.** 23

6.1 சட்ட விரோதமான பிரச்சார அலுவல்கள் தொடர்பாக நடவடிக்கையெடுத்தல். 23
6.2 பிரச்சாரக் கூட்டங்களுக்காக இடங்களைக் குறித்தொதுக்குதல். 24
6.3 இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்கான ஊடக வழிகாட்டு நெறிகள். 24
6.4 ஊடகப் பொறுப்பு மற்றும் ஊடக ஒழுங்குபடுத்தல். 25
6.5 ஊடக அறிவித்தல்கள் மற்றும் அறிக்கைகள். 26
6.6 வேட்பாளர் பிரச்சாரத்திற்காக தொலைக்காட்சி மற்றும் வானொலி வசதிகளை வழங்குதல். 26
6.7 வாக்காளர்களுக்கு தேர்தல் தொடர்பான விடயங்களை அஞ்சல் கட்டணமின்றி அனுப்புவதற்காக வேட்பாளர்களுக்கு வழங்கப்படுகின்ற வசதிகள். 27
6.8 அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களைத் தாபித்தல். 27

## ஏழாம் அத்தியாயம்

## தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.

**07. தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள்.** 30

7.1 உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள். 30
7.2 வாக்காளரின் ஆளடையாளத்தை உறுதி செய்தல். 30
7.3 துடைத்தழிக்க முடியாத மையினால் வாக்காளர்களை அடையாளமிடுதல் இன்றேல். தோதான குறியினால் அடையாளமிடுதல். 31
7.4 இறந்த அல்லது வெளிநாடு சென்றுள்ள வாக்காளர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல். 32
7.5 அலுவலக முறையான அடையாளம் - 35 ஆம் பிரிவு. 32
7.6 தேர்தலொன்றின் போது உடல் வலிமையிழப்பொன்றிற்குட்பட்ட வாக்காளர்களுக்கு விசேட போக்குவரத்து வசதிகளை செய்து கொடுத்தல். 32
7.7 ஊழியர் வாக்களிப்பதனை இயலச் செய்வதற்காக விடுமுறை வழங்குதல் - 110 ஆம் பிரிவு. 33

## எட்டாம் அத்தியாயம்

## வாக்கெடுப்பை நடாத்துதல்.

**08. வாக்கெடுப்பு தினத்திற்கு முந்திய தினம் ஆற்றப்பட வேண்டிய அலுவல்கள். 34**

8.1 வாக்கெடுப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லக்கூடிய பொருட்களை விநியோகித்தல். 34
8.2 வாக்கெடுப்பு நிலைய உதவியாளர்கள் மற்றும் பாதுகாப்பு அலுவலர்களை ஈடுபடுத்தல். 35
8.3 வாக்கெடுப்பு நிலையத்திற்கு வசதிகளை வழங்குதல். 35
8.4 வாக்கெடுப்பு அலுவல்களின் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பு. 36
8.5 வாக்கெடுப்பு தினத்திற்கு முந்திய தினம் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் செயற்பட வேண்டிய விதம். 37
8.6 வாக்கெடுப்புத் தினக் கடமை அலுவல்கள். 38
8.7 வாக்கெடுப்பை நடாத்துதல். 39
8.8 வாக்கெடுப்பை நிறைவு செய்தல், வாக்குப் பெட்டிகள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட ஆவணங்களைக் கையளித்தல். 39
8.9 தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவம். 40
8.10 தேர்தல்கள் முறைப்பாடுகளை அறிக்கையிடல். 41
8.11 தேசிய மற்றும் மாவட்ட தேர்தல்கள் முறைப்பாட்டு நிலையத்திற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான விபரங்கள். 41
8.12 தேசிய தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகள். 43
8.13 தேர்தல் முறைப்பாடுகள் வகையீடு. 44

8.13.1 வன்முறைச் செயல்கள். 44
8.13.2 சட்டங்கள் மீறப்பட்டமை. 44
8.13.3 உசாவுதல்கள். 44
8.13.4 அனுமதியை எதிர்பார்த்து முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள். 45

8.14 அரச வளங்கள் துஷ்பிரயோகத்தை தவிர்த்தல். 45
8.15 தேர்தல்கள் மற்றும் தொடர்புடைய நீதிமன்ற அலுவல்கள். 46
8.16 தேர்தல்கள் அலுவல்களை கண்காணித்தல். 47

8.16.1 உள்நாட்டு கண்காணிப்பு நிறுவனங்கள். 47
8.16.2 வெளிநாட்டு கண்காணிப்பு அமைப்புகள். 48

## ஒன்பதாம் அத்தியாயம்.

## வாக்கெண்ணல் மற்றும் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தல்.

**09. வாக்கெண்ணல். 50**

9.1 வாக்கெண்ணல் நிலையங்கள். 50
9.2 வாக்கெண்ணல் நிலையங்களுக்கான முகவர்களை நியமித்தல். 51
9.3 வாக்கெண்ணல் பணியாட் குழுவினர்கள். 52
9.4 வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்காகப் பூரணப்படுத்தப்பட வேண்டிய அடிப்படை நிபந்தனைகள். 52
9.5 வாக்கெண்ணல். 53
9.6 பெறுபேறுகளைக் கணிப்பீடு செய்தலும் மாவட்டப் பெறுபேறுகளை வெளியிடுதலும். 54
9.7 முடிவுகளை அட்டவணைப்படுத்தல். 54
9.8 இறுதி முடிவைக் கணிப்பீடு செய்தல். 55
9.9 இறுதிப் பெறுபேறுகளைத் தயாரித்தலும் பரிசீலனை செய்தலும். 55
9.10 உத்தியோகபூர்வ முடிவுகளை வெளிப்படுத்தல். 56

## பத்தாம் அத்தியாயம்

## தேர்தலுக்கான செலவுகளைச் செய்தல்.


**10. சனாதிபதித் தேர்தலுக்கான செலவுகள். 57**

10.1 தேர்தலுக்காகச் செலவுகளைச் செய்தல். 57
10.2 சனாதிபதித் தேர்தலுக்காகச் செய்யப்பட்ட மொத்தச் செலவினங்களின் வகையீடு. 57
10.3 ஏனைய நிறுவனங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகள். 58


## பதினோராம் அத்தியாயம்

## அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள்.


**11. சனாதிபதித் தேர்தல் தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள். 59**

11.1 அரச அலுவலர்களைத் தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தல். 59
11.2 வேட்பாளர் வைப்புப் பணம். 59
11.3 அஞ்சல் வாக்கு வசதிகள். 60
11.4 இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல். 60
11.5 தேர்தல் சட்டத் திருத்தங்கள். 60
11.6 உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகித்தல் 61
11.7 அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம். 61
11.8 ஊடகப் பயன்பாட்டை முகாமைத்துவம் செய்தல். 61
11.9 சமூக ஊடக வலையமைப்புக்கள். 62
11.10 சமயத் தலங்களை தேர்தல் பிரச்சார அலுவல்களுக்காகப் பயன்படுத்தல். 62
11.11 தேர்தல் பிரச்சார செலவினக் கட்டுப்பாடு. 62
11.12 வேட்பாளர்களுக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலி/ஒளிபரப்புக்காக வானலைக் காலத்தை வழங்குதல். 63


## பன்னிரெண்டாம் அத்தியாயம்

## நன்றி நவிலல் மற்றும் முடிவுரை.


**12. நன்றி நவிலல். 64**

12.1 முடிவுரை. **70**

**இணைப்புக்கள் மற்றும் புள்ளிவிபரக் குறிப்புக்கள்.**

- இணைப்புக்கள். 71 - 139
- புள்ளிவிபரக் குறிப்புக்கள். 140 - 212

# முதலாம் அத்தியாயம்

## அறிமுகம் மற்றும் சனாதிபதித் தேர்தல்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள்.

### 01. அறிமுகம்.

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி போன்றே சட்டவாக்க சபைக்கு மக்கள் பிரதிநிதிகளும், மாகாண சபைகள் தொடர்பில் நோக்கும் போது மாகாண சபைகளுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதும், உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதும் அதற்காக நடாத்தப்படுகின்ற வாக்கெடுப்புக்கள் மூலமாகும். இந்த ஒவ்வொரு தேர்தல்களுக்குமுரிய சட்டங்கள் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளன அதற்கு மேலதிகமாக இவை அனைத்தினதும் அடிப்படைச் சட்டமாக இலங்கையின் அரசியலமைப்பு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு நாட்டின் அடிப்படைச் சட்டமாகும். இந்த அடிப்படைச் சட்டம் சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் பிரித்தானிய முடியாட்சியால் விதிக்கப்பட்ட அரச ஆணையினால் நிறைவேற்றப்பட்டிருந்தன. பின்னர் டொனமோர் அரசியலமைப்பு மற்றும் அதன் பின்னர் சோல்பரி அரசியலமைப்பு மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அடிப்படைச் சட்டம் சுதந்திரத்தின் பின்னரும் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இலங்கைக்கு ஆரம்பமாக உள்நாட்டு ரீதியாக தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட அரசியலமைப்பு 1972 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த யாப்பு “இலங்கை அரசியலமைப்பு” என்ற பெயரில் அழைக்கப்பட்டது. இதனூடாக இலங்கை அரசாங்கத்திற்கு பெயரளவிலான சனாதிபதியொருவர் மற்றும் பிரதமர் தலைமையிலான அமைச்சரவை ஒன்றையும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய அரச பேரவை ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. 1972 - 1978 வரையான காலப்பகுதி வரை செயல்வலுவில் காணப்பட்ட இந்த முதலாவது உள்நாட்டு அரசியலமைப்பு 1978 ஆம் ஆண்டில் நிறை வேற்றப்பட்ட “1978 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு” நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இல்லாதொழிந்தது. 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் மூலம் அதுவரை காணப்பட்ட பெயரளவிலான சனாதிபதிப் பதவி நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிப் பதவியாக மாற்றம் செய்யப்பட்டது. பாராளுமன்றம் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டவாக்க சபையாக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, 1978 ஆம் ஆண்டின் அரசிய லமைப்புத் திருத்தம் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட பதின் மூன்றாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு நிறுவனமாக இருக்கின்றமையினால், அதற்காக மக்கள் பிரதி நிதிகளை நியமனம் செய்வதற்கான வாக்கெடுப்பை நடாத்துவதற்காக புதிய சட்டங்கள் வகுக்கப்பட்டன.

சனாதிபதித் தேர்தல்கள், பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான மக்கள் பிரதிநிதிகளை நியமனம் செய்வதற்காக வாக்கெடுப்புக்களை நடாத்துவதற்குத் தேவையான அடிப்படை ஏற்பாடுகள் அரசியலமைப்பின் மூலமும் அந்தந்த வாக்கெடுப்புக்கு அல்லது தேர்தலுக்குத் தேவையான சட்டங்கள் சட்டவாக்க சபையினால் விசேட சட்டங்கள் மூலமும் உருவாக்கப்பட்டன. இந்த அரசிய லமைப்பின் மூலம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மக்கள் தீர்ப்பை நடாத்துவதற்காகவும் வழிமுறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

அந்தச் சட்டங்கள் பின்வருமாறு.

1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்.

1981 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மக்கள் தீர்ப்புச் சட்டம்.

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்.

1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்.

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம். (262 ஆம் அத்தியாயம்)(திருத்தம் செய்யப்பட்ட)

தேர்தல் சட்டங்களுக்கேற்ப உரிய காலப்பகுதியில் தேர்தல்களை நடாத்துவது தேர்தல்கள் திணைக் களத்தின் பொறுப்பாகும். அவ்வாறே ஒவ்வொரு தேர்தல் அல்லது வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு முடிவடைந்த பின்னர் அது தொடர்பான அறிக்கையொன்றை வெளியிடுவது வழமையானதாகும். அதற்கமைய சனாதிபதித் தேர்தல்கள் அறிக்கை, பாராளுமன்றத் தேர்தல்கள் அறிக்கை, மாகாண சபைத் தேர்தல்கள் அறிக்கை மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் அறிக்கை போன்றே நடாத்தப்பட்ட ஒரேயொரு மக்கள் தீர்ப்புக்காகவும் 1982 ஆம் ஆண்டு மக்கள் தீர்ப்பு அறிக்கை என்பன அவ்வப்போது பணியாற்றிய தேர்தல்கள் ஆணையாளர்களினால் வெளியிடப்பட்டன. ஏதேனும் தேர்தலொன்றுக்கு அல்லது வாக்கெடுப்பொன்றுக்குரிய அறிக்கையொன்று தனியாக வெளியிடப்படாத சந்தர்ப்பங்களில் அது தொடர்பான இடைக்கால அறிக்கையொன்றை வெளியிடுதல் அல்லது தேர்தல் அல்லது வாக்கெடுப்பொன்று நடாத்தப்பட்ட வருடத்தின் **“வருடாந்த அறிக்கையில்”** ஒரு பகுதியாக அத்தேர்தல் அல்லது வாக்கெடுப்புத் தொடர்பான தகவல்களைச் உட்சேர்த்துப் பிரசுரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.

தேர்தல் ஆணைக்குழு 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் தாபிக்கப்பட்ட பின்னர் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 103(2) ஆம் உறுப்புரைக்கமைய நீதியானதும் மற்றும் சுதந்திரமானதுமான தேர்தல்கள் / வாக்கெடுப்புக்கள் மற்றும் மக்கள் தீர்ப்பு என்பவற்றை நடாத்தும் பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

### 1.1. சனாதிபதித் தேர்தல்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள்.

சனாதிபதி தேர்தல்களை நடாத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்கின்ற சட்டரீதியான மூலாதாரமாக அமைவது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு மற்றும் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல் சட்டம் என்பனவாகும்.

#### 1.1.1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு.

1978 இல் இலங்கை அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு 2019 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தல்கள் சந்தர்ப்பமாகும் போது பத்தொன்பது தடவைகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளதால் அந்த குறித்த அரசியலமைப்புத் திருத்தங்களுக்கமைய சனாதிபதித் தேர்தல்கள் தொடர்பாகக் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். அரசியலமைப்பின் மூன்றாம் உறுப்புரைக்கமைய இலங்கைக் குடியரசின் இறைமை மக்களுக்குரியதெனவும், அந்த இறைமை என்பது ஆட்சித்தத்துவங்கள், அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்குமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் நான்காம் உறுப்புரை மக்களின் இறைமையைப் பிரயோகித்தல் மற்றும் அனுபவித்தல் நடைபெறுகின்ற முறை தெளிவு படுத்தப்பட்டுள்ளது. 4 (ஆ) உறுப்புரைக்கமைய நாட்டின் பாதுகாப்பு உள்ளிட்ட மக்களின் ஆட்சித்துறைத் தத்துவம் மக்களால் தெரிவு செய்யப்படும் குடியரசு சனாதிபதியினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டுமெனவும், 4 (உ) ஆம் உறுப்புரையின் பிரகாரம் தேருநராக இருப்பதற்குத் தகைமைகளைக் கொண்டுள்ள தேருநர் இடாப்பில் தம் பெயர் பதிவு செய்யப்பட்டவருமான ஒவ்வொரு பிரசையினாலும் சனாதிபதித் தேர்தலொன்றின் போது தனது வாக்குரிமையைப் பிரயோகிக்க முடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் VII ஆம் அத்தியாயத்தின் 30 தொடக்கம் 41 வரையிலான உறுப்புரைகள் மூலம் சனாதிபதியைத் தேர்ந்தெடுத்தல், பதவிக்காலம், சனாதிபதிப் பதவியை வறிதாக்குதல், சனாதிபதித் தேர்தலின் செல்லுபடித் தன்மை மற்றும் அடுத்துவரும் சனாதிபதியைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் அரசியலமைப்பின் XIV ஆம் அத்தியாயத்தின் 88 தொடக்கம் 102 வரையான உறுப்புரைகளின் மூலம் தேருநர் ஒருவராக இருப்பதற்கான தகைமைகள், சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாமற் செய்யும் தகைமையீனங்கள் மற்றும் சனாதிபதித் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. XIVஅ அத்தியாயத்தில் வாக்கெடுப்புத் தொடர்பாக அதிகாரம் கிடைக்கின்ற தேர்தல் ஆணைக்குழுவைத் தாபித்தல் மற்றும் அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகள் 103 தொடக்கம் 104 வரையான உறுப்புரைகள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளன.

#### 1.1.2. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்.

1978 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல்களை நடாத்துவதற்குத் தேவையான சட்டரீதியான ஏற்பாடுகள் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் மூலம் தேவையான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இச் சட்டம் “மக்களால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காகவும் அதனோடு தொடர்பான அல்லது இடைநேர்விளைவான விடயங்கள் தொடர்பாகவும் ஏற்பாடுகளைச் செய்வதற்கான ஒரு சட்டமாகும்” என அழைக்கப்படுகின்றது. இச்சட்டத்தில் கீழே காட்டப்பட்டுள்ள திருத்தச் சட்டங்கள் மூலம் புதிய ஏற்பாடுகள் உட்சேர்க்கப்பட்டன.

1988 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் தொடர்பான (திருத்தச்) சட்டம்.

1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

மேற்படி திருத்தங்களினால் திருத்தம் செய்யப்பட்ட சனாதிபதித் தேர்தல்கள் சட்டம் VII பாகங்களை உள்ளடக்கியுள்ளது. அது பின்வருமாறானதாகும்.

பாகம் **I** “முதல் நிலையானவை”

பாகம் **II** “பெயர் குறித்த நியமனங்கள் தொடர்பான ஏற்பாடுகள்”

புாகம் **III** “வாக்கெடுப்போடு தொடர்பான ஏற்பாடுகள்”

பாகம் **IV** “வாக்கெண்ணல்”

பாகம் **V** “தவறுகள், ஊழல் பழக்கங்கள், சட்ட முரணான பழக்கங்கள் மற்றும் ஊழல் பழக்கங்கள் அல்லது சட்டமுரணான பழக்கத் திற்கான மன்னிப்பு”

பாகம் **VI** “தேர்தல் மனுக்கள் தொடர்பான ஏற்பாடுகள்”

பாகம் **VII** “பொது விடயங்கள்”

மேற்படி ஏற்பாடுகள் தொடர்பில் ஐந்து அட்டவணைகளில் சம்பந்தப்பட்ட மாதிரிப் படிவங்கள் மற்றும் அத்தகைய ஏற்பாடுகளைச் செயல்படுத்துவதற்காகப் பயன்படுத்த வேண்டியவைகள் பற்றிய விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**1.2. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் தேர்தல்கள் திணைக்களத்தினால் 1982 – 2015 வரை நடாத்தப் பட்ட சனாதிபதித் தேர்தல்கள்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளின் கீழ் சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான முதலாவது வாக்கெடுப்பு 1982 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி நடாத்தப் பட்டது. அதனைத் தொடர்ந்து, தேர்தல்கள் திணைக் களத்தினால் முறையே 1988 ஆம் ஆண்டு திசெம்பர் 19, 1994 நவெம்பர் 09, 1999 திசெம்பர் 21, 2005 நவெம்பர் 17, 2010 சனவரி 10 மற்றும் 2015 சனவரி 08 ஆகிய திகதிகளில் ஏழு (07) சனாதிபதித் தேர்தல்கள் நடாத்தப் பட்டுள்ளன. இத்தேர்தல்களின் போது பின்வருவோர் சனாதிபதிகளாக வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

| சனாதிபதித் தேர்தல்கள் நடாத்தப்பட்ட திகதிகள் | வெற்றிபெற்ற வேட்பாளர்கள் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | பெற்றுக் கொண்ட வாக்குகளின் சதவீதம் |
|---|---|---|---|
| 1982.10.20 | கௌரவ ஜே.ஆர். ஜயவர்தன | 3,450,811 | 52.91% |
| 1988.12.19 | கௌரவ ரணசிங்க பிரேமதாஸ | 2,569,199 | 50.43% |
| 1994.11.09 | கௌரவ சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க | 4,709,205 | 62.28% |
| 1999.12.21 | கௌரவ சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க | 4,312,157 | 51.12% |
| 2005.11.17 | கௌரவ மஹிந்த ராஜபக்ஷ | 4,887,152 | 50.29% |
| 2010.01.10 | கௌரவ மஹிந்த ராஜபக்ஷ | 6,015,934 | 57.88% |
| 2015.01.08 | கௌரவ மைத்திரிபால சிறிசேன | 6,217,162 | 51.28% |

மூலம் - தேர்தல் ஆணைக்குழு, தேசிய தேர்தல்கள்

**1.3. சனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு - 2019**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசிய லமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்திற்கிணங்க, தேர்தல் ஆணைக்குழு 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆம் திகதி தாபிக்கப்பட்டதன் பின்னர் அந்த ஆணைக்குழுவினால் முதற் தடவையாக வழிநடாத்தப் பட்ட சனாதிபதித் தேர்தல் 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி நடாத்தப்பட்டது. அரசிய லமைப்பின் 31(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ் 2019.09.18 ஆம் திகதி அதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்டது. மேற்படி அறிவித்தலுக்கு அமைவாக 2019.10.17 ஆம் திகதி பெயர்குறித்த நியமனங்கள் கையேற்கப்பட்டதோடு 35 வேட்பாளர்களால் பெயர்குறித்த நியமனங்கள் கையளிக்கப்பட்டன. 2019.11.16 ஆம் திகதி நடாத்தப்பட்ட வாக்கெடுப்பில் அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை 13,252,499 ஆகக் காணப்பட்டதோடு அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் 6,924,255 (52.25%) வாக்குகளைப் பெற்று சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

# இரண்டாம் அத்தியாயம்

## பெயர்குறித்த நியமனங்கள்.

### 02. பெயர்குறித்த நியமனங்கள்.

ஏதேனும் தேர்தலொன்றின் போது அதற்கான வாக்கெடுப்புப் பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னர் பெயர்குறித்த நியமனங்களைக் கையேற்றல் அச் செயன்முறைகளின் முதன்மையான முக்கிய பணியொன்றாகும். சனாதிபதித் தேர்தலுக்கான தேர்தலொன்றின் போது பெயர்குறித்த நியமனங்களைக் கையளித்தல் தேர்தல்கள் திணைக்களம் காணப்பட்ட காலப்பகுதியில் தேர்தல்கள் ஆணையாளரிடமும், தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்பட்டதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட வேண்டும். அதற்காக உரிய தினமொன்று, குறிப்பிட்ட நேரம் மற்றும் இடமொன்று என்பன வர்த்தமானி அறிவித்தலொன்றினூடாக வெளியிடப்படும்.

### 2.1. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை.

சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு பதவியிலுள்ள சனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் ஒரு மாதத்திற்குக் குறையாமலும் மற்றும் இரண்டு மாதங்களுக்கு மேற்படாத காலப் பகுதியினுள் நடாத்தப்படுதல் வேண்டுமென அரசியலமைப்பின் 31(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட வேண்டிய அறிவித்தல் உரியவாறு 2019.09.18 ஆம் திகதிய 2141/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. பெயர்குறித்த நியமனங்களைக் கையேற்கும் திகதி 2019.10.07 ஆம் திகதி எனவும், பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் காலம் அன்றைய தினம் மு.ப. 9.00 தொடக்கம் 11.00 மணி வரை எனவும், பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றுக் கொள்ளும் இடம் இராஜகிரிய, சரண மாவத்தையில் அமையப்பெற்றுள்ள தேர்தல்கள் செயலகம் எனவும், அதற்கான வாக்கெடுப்பு நடாத்தப்படுகின்ற தினம் 2019.11.16 ஆம் திகதி எனவும் அவ்வறிவித்தல் மூலம் நிர்ணயிக்கப்பட்டது. இதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் **இணைப்பு 01** என இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2019.09.18 ஆம் திகதி வெளியிடப்பட்ட ஊடக அறிவித்தல் மூலமும் குறித்த விபரங்கள் பகிரங்கப் படுத்தப்பட்டன.

### 2.2. ஒவ்வொரு மாவட்டங்களுக்காகவும் தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமனம் செய்தல்.

ஒவ்வொரு மாவட்டத்தின் தேர்தல்கள் செயற்பாடுகளை தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனைகள், வழிகாட்டல்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தெரிவத்தாட்சி அலுவலர்களிற்கு கையளிக்கப்படுகின்றது. இதற்கமைய அரசியலமைப்பின் 104ஊ (1) மற்றும் அந்த யாப்பின் 104 ஊ (2) (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் மற்றும் சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப் பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்காகவும் தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். இந்த நியமனங்கள் பெயரில் அல்லது வகிக்கின்ற பதவியின் கீழ் செய்யப்படும். இந்த சனாதிபதித் தேர்தல் தொடர்பாக 2141/26 ஆம் இலக்க மற்றும் 2019.09.18 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 22 தேர்தல் மாவட்டங்களுக்காக 22 தெரிவத்தாட்சி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் (2141/26 ஆம் இலக்க மற்றும் 2019.09.18 திகதிய) **இணைப்பு 02** இன் மூலம் காட்டப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தேர்தல் மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய தேர்தல் மாவட்டங்களுக்காக அந்தந்த நிர்வாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர் அந்தந்த தேர்தல்கள் மாவட்டங்களின் தெரிவத் தாட்சி அலுவலர்களாக நியமிக்கப்பட்டனர். யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இரண்டு நிர்வாக மாவட்டங்களைக் கொண்ட யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் தெரிவத் தாட்சி அலுவலராக யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர் அவர்களும், வன்னி தேர்தல் மாவட்டம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளதோடு அதன் தெரிவத்தாட்சி அலுவலராக வவுனியா நிர்வாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர் அவர்களும், திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலராக அம்பாறை நிர்வாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர் அவர்களும் தேர்தல் ஆணைக் குழுவினால் நியமனம் செய்யப்பட்டனர்.

### 2.2.1. தேர்தல் மாவட்டங்களுக்காக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமனம் செய்தல்.

ஒவ்வொரு தேர்தலின் போதும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கையளிக்கப்படுகின்ற தேர்தல் கடமைகளை மேற்கொள்வதற்கு உதவுவதற்காகவும் மற்றும் அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காகவும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். அதற்காக 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 7 (1) பிரிவுக்கிணங்க ஒவ்வொரு மாவட்டங்களின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக தேர்தல் ஆணைக்குழுவின் கீழ் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் சேவையாற்றுகின்ற பிரதித்தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் அவர்கள் வகிக்கின்ற பதவிப் பெயரில் 2019.09.18 ஆம் திகதிய 2141/27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் நியமனம் செய்யப்பட்டதோடு அது **இணைப்பு 03** இன் கீழ்க்காட்டப்பட்டுள்ளது.

### 2.2.2. முழுத்தீவும் உள்ளடங்கும் அடிப்படையில் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமனம் செய்தல்.

அந்தந்த மாவட்டத்திற்காக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமிக்கப்பட்ட மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் பூர்வாங்க அலுவல்களில் தங்களுக்கு உதவுவதறிய அந்தந்த மாவட்டங்களில் பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமனம் செய்வதற்குத் தகைமையுடைய அலுவலர்கள் தேர்தல் பணிகள் ஆரம்பிக்கப் பட்டதைத் தொடர்ந்து மாவட்டத்தின் தேர்தலோடு

தொடர்புடைய பூர்வாங்க ஒழுங்கமைப்புப் பணி களுக்காக இனங்காணப்படும். அதன் பின்னர் முழுத் தீவும் (நாடு முழுவதும்) உள்ளடங்கக்கூடிய வகையில் தேர்தல் கடமைகளில் ஈடுபடக்கூடியதாக தகைமைபெற்ற பதவிநிலை அலுவலர்கள் பெயரில் மற்றும் பதவிப் பெயரில் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக தேர்தல் ஆணைக்குழுவினால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டனர். இந்த அலுவலர்கள் ஒவ்வொரு மாவட்டத்தினதும் தேவைப்பாட்டுக்கேற்ப இணைப்புச் செய்வதன் மூலம், குறிப்பாக வாக்கெடுப்பு தினத்தில் வாக்கெடுப்புச் செயற்பாடுகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை விநியோகித்தல், கையேற்றல், வலயக் கண்காணிப்பு, வாக்கெண்ணல் நடவடிக்கைகள் மற்றும் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஒருங்கிணைப்புக் கடமைகள் மற்றும் முறைப்பாட்டு விசாரணை போன்ற தேர்தல் செயற்பாட்டின் பல்வேறு சந்தர்ப்பங்கள் நடைமுறைப்படுத்துவதற்காக ஈடுபடுத்தப் பட்டனர். அவ்வாறே இந்த உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களிலிருந்து வாக்கெடுப்புத் தொடர்பான அனுபவம் கொண்ட மற்றும் தேர்தல் ஆணைக்குழுவுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணிப் பணியாற்றுகின்ற சில அலுவலர்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் கையளிக்கப்படுகின்ற விசேட கடமை அலுவல்களில் ஈடுபடுத்துவதற்காக தேர்தல் செயலகத்திற்கு இணைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 2.3. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள்.

1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளு மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் கீழும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாகக் கருத்திற் கொள்ளப்படும். சனாதிபதித் தேர்தல்கள் சட்டம் தொடர்பான சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழான கட்டளை 2019.09.18 ஆம் திகதி வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 70 ஆகும். அதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தொடர்பான ஆவணம் வெளியிடப்பட்ட 2019.01.31 ஆம் திகதிய 2108/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் **இணைப்பு 0**4 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

### 2.4. சனாதிபதி வேட்பாளர் ஒருவராவதற்கான தகை மைகள்.

பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 92 ஆம் உறுப்புரை மூலம் சனாதிபதிப் பதவிக்குத் தேர்ந் தெடுக்கப்படுவதற்குத் தேவையான தகைமைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கமைய தேருநரொருவராக இருப்பதற்குத் தகைமையுடைய ஆள் ஒவ்வொருவரும் அவர்,

(அ) 35 வயதையடையாதவராக இருத்தல்.

(ஆ) 91 ஆம் உறுப்புரையின் (1) உப உறுப்புரைகள் (ஈ) (உ) (ஊ) அல்லது (எ) இன் கீழ் சனாதி பதியாகத் தேர்ந்தெடுப்பதற்குத் தகைமையற்ற வராக இருத்தல்.

(இ) இரண்டு தடவைகள் சனாதிபதிப் பதவிக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருத்தல்.

(ஈ) 38 ஆம் உறுப்புரையின் (2) ஆம் உப உறுப்புரையின் (உ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் சனாதிபதி பதவியிலிருந்து அகற்றப்பட்டவராக (நீக்கப்பட்டவராக) இருத்தல்.

(உ) வேறு நாடொன்றின் பிரசையான இலங்கையின் பிரசையொருவராக இருத்தல்.

ஆகிய தகைமையீனங்களில் ஏதேனும் தகைமையீன மொன்றுக்கு உட்பட்டவராயிருந்தாலொழிய, அவர் சனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவராவார்.

### 2.5. வைப்புப் பணம் செலுத்தப்படுதல்.

சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 8 ஆவது பிரிவில் வைப்புப் பணம் செலுத்தப்படுதல் தொடர்பான சட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது. சனாதிபதித் தேர்தலுக் குரிய பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் தினமான 2019.10.07 ஆம் திகதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் போட்டியிடுவதற்கு எதிர்பார்க்கின்ற வேட்பாளர்கள் 2019.10.06 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் வைப்புப் பணத்தைச் செலுத்துதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் வேட்பாளரொருவர் சார்பாக 50,000/-ரூபா தொகையும், ஏனைய வேட்பாளரொருவர் சார்பாக 75,000/-ரூபா தொகையும் என்ற அடிப்படையில் வைப்புப் பணம் செலுத்தப்படுதல் வேண்டும். வைப்புப் பணம் தேர்தல் ஆணைக்குழு சார்பாக ஆணைக்குழுவின் பிரதான நிதி அலுவலர் அவர்களினால் கையேற்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் பெயர் குறித்து நியமனம் செய்யப்படுகின்ற வேட்பாளர்கள் தவிர்ந்த ஏனைய வேட்பாளர்களால் வைப்புப் பணம் செலுத்தப்படும் போது அவர் சட்டமாக்கற் சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராக உள்ளார் அல்லது இருந்துள்ளார் என்ற பொருள்பட பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களின் கையொப்பத்தின் கீழான சான்றிதழ் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்துதல் கட்டாயமான சட்டத் தேவைப்பாடாகும். சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 8(1) (ஆ) (1) ஆம் பிரிவின் பிரகாரம் அதற்குரிய அறிவித்தல் 2141/92 ஆம் இலக்க மற்றும் 2019.09.22 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. இது **இணைப்பு 05** என இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று இது தொடர்பாக 2019.09.18 ஆம் திகதிய தேர்தல் ஆணைக்குழுவின் ஊடக அறிவித்தல் இலக்கம் 01 ஊடாகவும் வெளியிடப்பட்டது. இந்த அறிவுறுத்தல் களின் பிரகாரம், உரிய திகதியாகும் போது அதாவது, 2019.10.06 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து 19 வேட்பாளர்களும் ஏனைய அரசியல் கட்சிகளிலிருந்து 3 வேட்பாளர்களும், ஏனைய 19 வேட்பாளர்களும் என்ற அடிப்படையில் 2019.11.16 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலுக்காக பெயர் குறித்த நியமனங்களைக் கையளிக்கும் எதிர்பார்ப்பில் 41 பேர் சார்பாக வைப்புப் பணம் செலுத்தப்பட்டது. அவ்வாறு வைப்புப் பணம் செலுத்தியவர்கள் தொடர்பான விபரங்களடங்கிய பெயர்ப் பட்டியல் **இணைப்பு 06** இல் காட்டப்பட்டுள்ளது.

உரிய வகையில் இந்த வைப்புப் பணம் கையேற்றுக் கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்தும் பொருட்டு சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் பணம் கையேற்கப்பட்டமைக்காகப் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டதோடு வைப்புப் பணம் செலுத்தப்பட்ட பின்னர் ஒவ்வொரு வைப்பாளருக்கும் பின்வரும் ஆவணங்கள் கையளிக்கப் பட்டன.

- 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான பற்றுச்சீட்டு.
- 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்.
- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான 6 பெயர் குறித்த நியமனப் பத்திரத் தொகுதிகள்.
- வேட்பாளரின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகைப் படிவம்.
- பெயர் குறித்த நியமன நிலையத்திற்குள் பிரவேசித்தல் பற்றிய அறிவுறுத்தல்கள்.
- பெயர் குறித்த நியமன நிலையத்திற்குள் பிரவேசிப்ப தற்கான அனுமதிப்பத்திரம் மற்றும் வாகனங் களுக்கான அனுமதிப்பத்திரம்.
- தகைமையீனமொன்றுக்கு உட்படவில்லை எனச் செய்கின்ற சத்தியம் அல்லது உறுதியுரை.

### 2.6. பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றல்.

பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றலைத் தேர்தல்கள் செயன்முறையில் மிக முக்கியமானதும் பிரதானமானதுமான ஒரு சந்தர்ப்பமாகக் குறிப்பிட முடியும். இந்தத் தேர்தலுக்கான பெயர்குறித்த நியமனங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் திரு. மஹிந்த தேசப்பிரிய, அங்கத்தவர், சனாதிபதி சட்டத்தரணி திரு. என்.ஜே. அபேசேக்கர மற்றும் அங்கத்தவர் பேராசிரியர் திரு. எஸ்.ஆர்.எச். ஹூல் ஆகியோர்களால் கையேற்கப்பட்டன. கையேற்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர்கள் உள்ளிட்ட அதற்காக நியமனம் செய்யப்பட்ட பதவியணியினரால் பரிசீலனை செய்யப்பட்டன.

சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 12, 13 மற்றும் 14 ஆம் பிரிவுகளுக்கு இணங்க செயற்பட்டு பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்றுக்கொள்ளல் நடவடிக்கைகளை முறையாக திட்டமிட்ட வகையில் மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவினால் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்கும் செயன்முறைகள் சம்பந்தமாக குறித்த கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் வேட்பாளர்களை அறிவுறுத்தும் கலந்துரையாடலொன்றும் நடாத்தப்பட்டது. அதற்கு மேலதிகமாக, பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையளிப்பதற்காக வருகை தருகின்ற வேட்பாளர்கள் உட்பட அனுமதியளிக்கப்பட்ட நபர்களின் பாதுகாப்பு, போக்குவரத்து நடைமுறைகள் மற்றும் பெயர் குறித்த நியமனங்களை கையளிப் பதற்குத் தேவையான வசதிகள் தேர்தல் ஆணைக் குழுவின் பணியாட்குழுவினர்களால் இலங்கை பொலி ஸாரின் உதவியுடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பெயர் குறித்த நியமனங்களை கையளிக்கும் இடத்திற்கு சனாதிபதி தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் வேட்பாள ருக்கு, வேட்பாளரின் பெயர் குறித்த நியமனப் பத்திரத்தில் கையொப்பமிட்டவருக்கு மற்றும் மேலும் ஒருவருக்கு வருகை தருவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையினால் பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் மண்டபத்தில் சகலருக்கும் வசதிகளை வழங்கும் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. குறித்த காலப்பகுதியினுள் 41 சனாதிபதி வேட்பாளர்கள் சார்பாக வைப்புப் பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் வைப்புப் பணம் செலுத்தப்பட்ட அனைத்து வேட்பாளர் களினாலும் பெயர் குறித்த நியமனங்கள் கையளிக்கப் படாமை விசேட அம்சமாகும். வைப்புப் பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் கீழேயுள்ள ஆறு நபர்கள் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையளிக்கவில்லை.

- திரு. பஷீர் சேகுதாவூத் - இல. 8, ஏறாவூர் 2, ஏறாவூர்.
- திரு. ஜயந்த லியனகே - 14/5ஏ, தர்மபால மாவத்தை, பொல்லத்தாபிட்டிய, குருநாகல்.
- திரு. சாந்த குமார ஆனந்த வெல்கம - டெனிஸ்டன் வத்தை, ஹொராவல, வெலிபென்ன.
- திரு. சமல் ஜயந்த ராஜபக்ஷ - மெதமுலன. வீரக்கெட்டிய.
- திரு. குணபால திஸ்ஸகுட்டிஆரச்சி - இல. 30, ஜயவீதி, உடஹமுல்லை, நுகேகொட.
- திரு. கனேஆரச்சிகே மஹிபால ஹேரத் - இல. 76, கங்கொட வீதி, கேகாலை.

35 நபர்களால் மாத்திரம் வேட்பாளர்களாக பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் கையளிக்கப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து பதினெட்டு (18) வேட்பாளர்களும், வேறு அரசியல் கட்சிகளிலிருந்து இரண்டு (02) வேட்பாளர்களும், ஏனைய பதினைந்து (15) வேட்பாளர்களும் தமது பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்திருந்தனர். பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் கையேற்கப்பட்டதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவினால் அப் பெயர் குறித்த நியமனங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அவை ஏற்றுக் கொள்ளப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதா என்பது தெரிவிக்கப்பட்டது.

### 2.7. பெயர் குறித்த நியமனங்கள் தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்தல்.

சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 14 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகின்ற பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் தொடர்பாக ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்கு 2019.10.07 ஆம் திகதி மு.ப 9.00 தொடக்கம் மு.ப. 11.30 வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. சட்டத்தின் 13(2) உட் பிரிவின் பிரகாரம் கையேற்கப்பட்ட பெயர் குறித்த நியமனப்பத்திரம் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை உடனடியாகத் தயாரித்து ஆட்சேபனை தெரிவிப்பதற்காக அப்பிரதியை காட்சிப்படுத்தல் வேண்டும். அதற்கமைய செயற்பட்டு பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்கும் மண்டபத்திற்கு வெளியே தாபிக்கப்பட்டுள்ள அறிவித்தல் பலகையில் கையேற்கப்பட்ட அனைத்து பெயர் குறித்த நியமனப் பத்திரங்களினதும் பிரதிகள் காட்சிப்படுத்தப்பட்டன. இதற்கமைய 14(1) ஆம் பிரிவின் கீழ் எதிர் வேட்பாளரொருவரினால் அல்லது அத்தகைய எதிர் வேட்பாளரின் பெயர் குறித்த நியமனப்பத்திரத்தில் கையொப்பமிடப்பட்ட ஆளினால் ஆட்சேபனை தெரிவிக்க முடியும். ஆட்சேபனைத் தெரிவிக்கின்ற குறித்த காலப்பகுதியினுள் எதிர் வேட்பாளர்கள் தொடர்பாக இரண்டு (02) ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டன. அந்த ஆட்சேபனைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் இல. | ஆட்சேபனை சமர்ப்பித்தவர் | எந்த வேட்பாளர் தொடர்பாக ஆட்சேபனை சமர்ப்பிக்கப்பட்டது என்பது | ஆட்சேபனைக்கான காரணம் | ஆட்சேபனை தொடர்பான முடிவு |
|---|---|---|---|---|
| 01 | திரு. சரத் மனமேந்திரா | திரு. எம். கே. சிவாஜிலிங்கம் | அரசியலமைப்புக்கு முரணாகச் செயற்படுதல். | நிராகரிக்கப்பட்டது |
| 02 | வண. பத்தரமுல்லை சீலரத்ன ஹிமி | திரு. எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா | அரசியலமைப்புக்கு முரணாகச் செயற்படுதல். | நிராகரிக்கப்பட்டது |

**2.8. பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் தொடர்பான முடிவுகளை அறிவித்தல்.**

இந்த சனாதிபதித் தேர்தலுக்குரியதாக 41 வேட்பாளர்களுக்காக பிணைப்பணம் வைப்பிலிடப் பட்டிருந்த போதும் கையளிக்கப்பட்ட மொத்த பெயர் குறித்த நியமனப்பத்திரங்களின் எண்ணிக்கை 35 ஆகும். அதன்படி, பிணைப்பணம் செலுத்திய 6 வேட்பாளர்களால் பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் கையளிக்கப்பட வில்லை. சட்டத்தின் 15 ஆம் பிரிவின் மூலம் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி தகைமைகளைப் பூர்த்தி செய்யாதுள்ள வேட்பாளர்களின் பெயர்குறித்த நியமனப்பத்திரங்களை நிராகரிப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், கையளிக்கப்பட்ட 35 பெயர் குறித்த நியமனப்பத்திரங்களும் உரிய விதத்தில் மற்றும் சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்திற்கு இணங்க தகைமை யுடைய நபர்களால் சனாதிபதி தேர்தல்கள் சட்டத்திற்கு அமைய மற்றும் உரியவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததென ஆணைக்குழு திருப்தியடைந்ததன் பிரகாரம் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகள் செல்லுபடியற்றவை என ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டதுடன் கையளிக்கப்பட்ட அனைத்து பெயர் குறித்த நியமனங்களும் அதாவது 35 பெயர் குறித்த நியமனங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இந்த தீர்மானங்கள் மற்றும் காரணங்களை அறிவித்தல் 2019.10.07 ஆம் திகதி பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையளித்த வேட்பாளர்களின் முன்னிலையில் தேர்தல்கள் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பிரகடனப்படுத்தப் பட்டது.

**2.9. ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரங்களுக்கமைய வேட்பாளர் தொடரொழுங்கு.**

வாக்குச் சீட்டுக்காக வேட்பாளர்களின் தொடரொழுங்கு தயாரிக்கப்படுவது, அங்கீகரிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையளித்த வேட்பாளர்களின் பெயர்களின் சிங்கள அகரவரிசை தொடரொழுங்கிற்கு அமைவாகவாகும். இங்கு பெயர் குறித்த நியமனப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் அல்லது வேட்பாளர் தனது விருப்பின் பிரகாரம் முன்வைக்கின்ற பெயரைப் பயன்படுத்திக் கொள்வதற்குச் சாத்தியம் காணப்படுகின்றது. அதன் பிரகாரம் பயன்படுத்தப்படும் பெயர் தொடர்பில் வேட்பாளரின் விருப்பத்தை உசாவுவ தற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதன்போது வேட்பாளர் களினால் வழங்கப்பட்ட பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ள முறையைக் கருத்திற்கொண்டு அகராதி தொடரொழுங்கில் தயாரிப்பதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப் பட்டது. அதன் பின்னர் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் 20(1) ஆம் உப பிரிவில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடு களுக்கு ஏற்ப வேட்பாளர்களுக்குரிய சின்னங்களை குறித்தொதுக்கி வழங்கும் போது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களுக்கு கட்சியின் அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டதோடு,ஏனைய வேட்பாளர்கள் தொடர்பாக 20(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக் குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இங்கு அபரக்கே பூஞ்ஞானந்த ஹிமி மற்றும் திரு. எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியவர்கள் தமது சின்னமாக மீன் சின்னத்தையும் மற்றும் திரு. அநுர குமார திசாநாயக்க மற்றும் திரு. சமன்சிறி ஹேரத் ஆகியவர்கள் தமது சின்னமாக திசைகாட்டி சின்னத்தையும் கோரிய காரணத்தால் அந்த வேட்பாளர்களுக்கு சின்னங்களை வழங்குவதற்காக சீட்டிழுப்பு மூலம் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி,அந்த குறித்த நான்கு வேட்பாளர்களுக்கும் பின்வருமாறு சின்னங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| வேட்பாளரின் பெயர் | வேட்பாளர்கள் கோரிய சின்னங்கள் | சீட்டிழுப்பின் பின்னர் குறித்தொதுக்கி வழங்கப்பட்ட சின்னம் |
|---|---|---|
| அபரக்கே பூஞ்ஞானந்த ஹிமி | மீன் | நாய் |
| திரு. எம்.கே. சிவாஜிலிங்கம் | மீன் | மீன் |
| திரு. அநுர குமார திசாநாயக்க | திசைகாட்டி | திசைகாட்டி |
| திரு. சமன்சிறி ஹேரத் | திசைகாட்டி | கிரிக்கெட் மட்டை |

சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவிற்கு அமைய சனாதிபதித் தேர்தலில் போட்டி நிலை நிலவுவதாகவும் அதற்கான வாக்கெடுப்பொன்று 2019.11.16 ஆம் திகதி மு.ப. 7.00 தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை நடாத்தப்படுமெனவும் இந்த வாக்கெடுப்பு, வாக்காளர் அட்டையில் வேட்பாளர்களின் பெயர்கள் சிங்கள அகர வரிசைப்படி பெயர்கள் குறிப்பிடப்பட்டு ஒழுங்குமுறை மற்றும் ஒவ்வொரு வேட்பாளருக்கும் குறித்தொதுக்கப்பட்ட இலக்கமும், வேட்பாளரின் பெயரைப் பரிந்துரைத்த கட்சியின் பெயர்/ வேறு அரசியற் கட்சியின் பெயர் / அல்லது வாக்காளரின் பெயர் 2144/06 ஆம் இலக்க மற்றும் 2019.10.07 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டதோடு, அது **இணைப்பு 07** இல் காட்டப் பட்டுள்ளது.

### 2.10. வேட்பாளர்களின் தேர்தல் முகவர்களை நியமனம் செய்தல்.

சனாதிபதி தேர்தல்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் தேர்தல் முகவர்களை நியமனம் செய்வதற்கான சந்தர்ப்பம் செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய போட்டியிடுகின்ற வேட்பாளரொருவருக்கு தேர்தல் முகவர் ஒருவரை நியமனம் செய்யலாம். தேர்தல் முகவர் ஒருவரை நியமனம் செய்யாத வேட்பாளர் ஒருவருக்கு தன்னை நியமனம் செய்து கொள்ள முடியும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் வேட்பாளரும் தேர்தல் முகவரும் ஒரே ஆள் ஆகும். சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 31(3)(1) ஆம் பிரிவின் பிரகாரம் நியமனம் செய்யப்படுகின்ற தேர்தல் முகவர் தொடர்பான விபரங்களை ஆணைக்குழுவிற்கு வழங்குதல் வேண்டும்.

தேர்தல்கள் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல் முகவரால் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற் காகவும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முகவரை நியமனம் செய்யமுடியும். மேலும், அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு ஒவ்வொரு வாக்கெடுப்பு பிரிவிற்காகவும் பிரதேச முகவர் ஒருவரை நியமிக்க முடியும். இந்த வேட்பாளர்களால் நியமிக்கப்படுகின்ற அதிகாரமளிக்கப் பட்ட முகவரின் மற்றும் பிரதேச முகவரின் விபரங்களைத் தேர்தல்கள் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரிற்கு வழங்குதல் வேண்டும். அதற்கிணங்க நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளர்களதும் முகவர் களின் பட்டியல் **இணைப்பு 08** இல் காட்டப்பட்டுள்ளது.

# மூன்றாம் அத்தியாயம்

## தேர்தலுடன் தொடர்புடைய பூர்வாங்க நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்.

### 03. தேர்தலுக்குரிய பூர்வாங்க நடவடிக்கைகள்.

சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக் கமைய குறிப்பிட்ட கால எல்லைக்குள் தேர்தலை நடாத்தி நிறைவு செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ளதனால் இந்த தேர்தலை நடாத்தும் செயன்முறைகளை ஒழுங்கமைத்தல் பணிகள் மற்றும் அதனை உடனடியாக நிறைவேற்றுவதற்கான பொறுப்பு என்பன ஆணைக்குழு விற்கு கையளிக்கப்பட்டுள்ளது. தேர்தல் அலுவல்களின் போது தெரிவத்தாட்சி அலுவலர்களாக செயற்படுகின்ற மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள் மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களின் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் அழைக்கப்பட்டு பூர்வாங்க நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் சம்பந்தமாக தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல் இதன் முதற்கட்டமாகும். ஆதலால், தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் மாவட்ட அலுவலகங் களின் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் 2019.08.06 மற்றும் 2019.08.23 ஆகிய திகதிகளில் தேர்தல்கள் செயலகத்திற்கு அழைக்கப்பட்டு பூர்வாங்க ஏற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான இரண்டு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, பூர்வாங்க ஏற்பாட்டுச் செயற்பாடுகள் மற்றும் அச்சந்தர்ப்பமாகும் போது தோன்றியிருந்த பிரச்சினைகள் தொடர்பாக காணொளி தொழில்நுட்பம் மூலம் (வீடியோ) கலந்துரையாடி தேவையான அறிவுறுத் தல்கள் மாவட்ட பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணை யாளர்களுக்கு வழங்கப்பட்டன.

வாக்கெடுப்புத் தொடர்பான அறிவித்தல் வெளியிடப் பட்டவுடன், அதாவது தேர்தலின் ஆரம்ப சந்தர்ப்பத்தில் இருந்து தேர்தல் ஆணைக்குழுவிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் அத்தியாவசிய சேவை களை வழங்குகின்ற நிறுவனங்களிற்கிடையில் அரசாங்க அச்சகம் மற்றும் அஞ்சல் திணைக்களம் ஆகியவற்றுக்கு முதன்மையான இடமொன்று உரித்தாகும். அதற்கமைய வாக்கெடுப்புப் பற்றிய அறிவித்தல் பிரகடனப்படுத்தப் பட்டவுடன் அந்த நிறுவனங்களின் தலைவர்களான அரசாங்க அச்சக அழுத்தகர் மற்றும் அஞ்சல் மா அதிபர் ஆகியோருடன் கலந்துரையாடி அந்த நிறுவனங் களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள சேவைகள் தொடர்பாக அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

வாக்குச் சீட்டுக்கள் உள்ளிட்ட நியதிச்சட்ட எழுத்தாவ ணங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைப் பாரிய அளவில் குறித்த காலப்பகுதியினுள் அச்சிட்டு தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கும் பாரிய பணிப்பொறுப்பு அரசாங்க அச்சகத்திற்கு கையளிக்கப்பட்டது. அவ்வாறே வாக்கெடுப்புப் பற்றிய அறிவித்தலில் இருந்து வாக்கெடுப்பின் முடிவுகளை வெளியிடும் அறிவித்தல் வரையான தகவல்கள் மற்றும் உரிய அறிவித்தல் வர்த்தமானிப் பத்திரங்களை வெளியீடு செய்தல் அரசாங்க அச்சகத்தினால் நிறைவேற்றப்படும் மற்றொரு முக்கிய மானதொரு பணியாகும்.

தேர்தல் ஆணைக்குழுவிற்கும் மற்றும் அந்தந்த மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களும் வாக்கெடுப்பு தொடர்பான எழுத்தாவணங்களை அனுப்புவ தற்கும் மற்றும் கிடைக்கின்ற கடிதங்களை வரவழைத்துக் கொள்வதற்கும் முதன்மைச் சேவையாகக் கருதி செயற்படுவதற்காக அஞ்சல் திணைக்களத்தினால் தேவையான வசதிகள் வழங்கப்படுகின்றன. தேர்த லொன்றின் முக்கியமான அம்சங்களில் ஒன்றான அஞ்சல் வாக்கு வசதிகளை வழங்கும் போது அஞ்சல் திணைக்களமானது குறிப்பிடத்தக்க விசேட பணிப் பொறுப்பொன்றை ஆற்றுகின்றது. மேலும் வாக்காளர் களுக்கு அவர்களின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கான பணியும் அஞ்சல் திணைக்களத்திற்கு கையளிக்கப்படுகின்ற ஒரு பொறுப் பாகும். அதேபோன்று அந்நிறுவனத்தினால் வழங்கப்படு கின்ற குறித்த சேவைகள் தொடர்பான செலவின மதிப்பீடுகளை தேர்தல் ஆணைக்குழுவிற்கு விரைவாகச் சமர்ப்பிக்குமாறும் அந்த நிறுவனங்களின் தலைவர் களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது.

வாக்களிப்பு பணிகளுக்குத் தேவையான பொது வசதிகளை வழங்கும் போது இலங்கை மின்சார சபை, ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆகிய நிறுவனங்களினால் விசேடமான பணிகள் நிறைவேற்றப் படுகின்றன. அந்தப் பணிகளை முறையாகவும், சிக்கனமாகவும் மேற்கொள்வதற்காக குறித்த நிறுவனத் தலைவர்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி வழங்கப்படுகின்ற சேவைகளின் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய விலைத்தொகைகள் தொடர்பாகவும் உடன்பாடு காணப்பட்டது.

தேர்தல் கடமைகளுக்கான போக்குவரத்து வசதிகளை வழங்குவது சம்பந்தமாக இலங்கை போக்குவரத்து சபை உத்தியோகத்தர்களுடன் மற்றும் தனியார் பஸ் உரிமை யாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அவர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக அவசியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அவ்வாறே மாவட்ட மட்டத்தில் வாடகை வாகன உரிமையாளர்கள் சங்கங்களின் உறுப்பினர்களை அழைத்து அவர்களின் உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 3.1. வாக்கெடுப்புக்குச் செல்லுபடியான தேருநர் இடாப்புக்கள்.

சனாதிபதி தேர்தல்கள் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் கீழுள்ள தேவைப்பாடுகளுக்கமைய தேர்தல் ஆணைக் குழுவினால் 2019.09.18 ஆம் திகதி வாக்கெடுப்பு பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்ட சந்தர்ப்பமாகும் போது 2019 ஆம் ஆண்டுக்குரிய தேருநர் இடாப்புக்களின் மீளாய்வு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாத காரணத்தால் அந்தத் தேருநர் இடாப்புக்கள் அத்தாட்சிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. இரண்டாம் பிரிவின் கீழான கட்டளை வெளியிடப்பட்ட தினத்தில் நடைமுறையில் காணப்பட்ட

தேருநர் இடாப்பை வாக்கெடுப்பிற்காகப் பயன்படுத்த வேண்டுமென சனாதிபதி தேர்தல்கள் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் ஏற்பாடு களின் கீழான தேர்தலொன்றில் வாக்களிப்பதற்கு ஆளொருவர் உரித்துடையவரா அல்லது இல்லாதவரா என்பது குறித்த தீர்மானத்தை எடுப்பதற்கான முடிவான சான்றாக அமைவது ஐந்தாம் பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள செல்லுபடியான தேருநர் இடாப்பு என சட்டத்தின் 6 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைவாக 2018 ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட அப்போது நடைமுறையில் காணப்பட்ட 2018 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை இந்த சனாதிபதித் தேர்தலுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு அதன்படி சனாதிபதி தேர்தலுக்குத் தேவையான 2018 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பின் பிரதிகள் தேவையான எண்ணிக்கை அச்சிடப் பட்டது. 2018 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்பில் தகைமை பெற்ற பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 15,992,096 ஆகும்.

### 3.2. 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க வாக்காளர் களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

சனாதிபதி தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கட்டளைகளுக்கு ஏற்புடையவாறு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்த நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங் களில் தகைமையுடையவர்களுக்கு 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் மூலம் அவ்வாறு இடம்பெயர்வதற்கு முன்னர் அவர்களின் நிரந்தர வதிவிடம் அமையப்பெற்றுள்ள தேர்தல் மாவட்டத்திற்குரியதாக தமது வாக்கைப் பிரயோகிப் பதற்கு வாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப் படும். சட்டத்தின் ஏற்பாடுகளின்படி 2018 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பிற்கு உரியதாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட குறைநிரப்பு இடாப்பில் பதிவு செய்யப்பட்ட ஆட்களுக்கு வேறு வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்கு விண்ணப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டு மென்பதோடு அதற்காகத் தகைமை பெற்ற இருவருக்கு மாத்திரம் இந்த வாய்ப்பு கிட்டியது.

### 3.3. வாக்குச் சீட்டுக்களை அச்சிடல்.

பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்றல் முடிவுற்றவுடன் வாக்குச் சீட்டுக்களை அச்சிடு வதற்காக வேட்பாளர்களின் பெயர் தொடரொழுங்கு மற்றும் ஒவ்வொரு வேட்பாளருக்காகவும் குறித் தொதுக்கப்பட்ட தேர்தல் சின்னங்கள் உள்ளடக்கப்பட்ட மாதிரி வாக்குச் சீட்டொன்று அரசாங்க அச்சக அழுத்தகருக்கு கையளிக்கப்பட்டது. அதற்கிணங்க அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் செவ்வை (சரி) பார்க்கப்பட்டு ஆணைக்குழுவினால் அது அங்கீகரிக்கப் பட்டதன் பின்னர் வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்காகவும் பொதுவான வாக்குச் சீட்டொன்று அச்சிடப்பட்டதன் காரணமாக பாராளுமன்றத் தேர்த லொன்றின் போது வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதை விட அது மிகவும் இலகுவான பணியாகக் காணப்பட்டது எனினும், மிகக் குறுகிய காலத்தினுள் அச்சிடல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தமை காரணமாக அரசாங்க அச்சகப் பணியாட்குழுவின ருக்கு இதற்காக கடுமையான முயற்சிகள் எடுக்க நேரிட்டது. அஞ்சல் வாக்காளர்களுக்குத் தேவையான வாக்குச் சீட்டுக்களை முதலாவதாக அச்சிடுவதற்கும் அந்தந்த மாவட்டத்தின் தேவைப்பாட்டுக்கேற்ப மீதி வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்கும் அரசாங்க அச்சகத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. பல்வேறு தடைகளுக்கு மத்தியில் அரசாங்க அச்சக அழுத்தகர் மற்றும் அதன் பதவியணியினர் அச்சிடல் அலுவல்களை குறித்த காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்வதற்காக மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டத்தக்கது.

வாக்குச் சீட்டுக்கள் அச்சிட்டு முடிவடைந்தவுடன் அந்த வாக்குச் சீட்டுக்கள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் களினால் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பறைகளில் வைக்கப்பட்டு வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு விநியோகிக்கும் வரை விசேட பொலிஸ் பாதுகாப்பின் கீழ் பாதுகாப்பாக வைத்திருப் பதற்கு நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டன. வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினமாகும் போது அந்த வாக்குச் சீட்டுக்கள் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும் தேவையான எண்ணிக்கை அடிப்படையில் கட்டுக்களாக தயாரிக்கப்பட்டு விநியோகித்தல் மண்ட பங்களுக்கமைய வேறுபடுத்தி இலகுவாக விநியோ கிக்கக் கூடிய வகையில் மீண்டும் பாதுகாப்பறைகளில் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் வைத்திருப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

### 3.4. தேர்தல்கள் மாவட்டங்களை வேறுபிரித்தல்.

தேர்தல்களை நடாத்தும் நோக்கத்திற்காக இலங்கை 22 தேர்தல்கள் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் இந்த தேர்தல்கள் மாவட்ட எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டன. அந்த எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அரசிய லமைப்பின் 97 உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதி அவர்களால் வெளியிடப்பட்ட 1981 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆம் திகதிய 1233 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு இந்தக் கட்டளைக்கமைய இலங்கை 22 தேர்தல்கள் மாவட்டங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதாக வன்னி தேர்தல்கள் மாவட்டமும் 1984 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் கிளிநொச்சி என்ற பெயரில் தனியாக ஒரு நிர்வாக மாவட்டம் நிறுவப்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டங்களை இணைத்து யாழ்ப்பாணத் தேர்தல்கள் மாவட்டமும் தாபிக்கப்பட்டது. இவை தவிர்ந்த ஏனைய 19 நிர்வாக மாவட்டங்கள், அவற்றின் பெயர்களில் தேர்தல்கள் மாவட்டங்களாகப் பெயர் குறிக்கப்பட்டதோடு அம்பாறை நிர்வாக மாவட்டத்திற்காக நிறுவப்பட்ட தேர்தல்கள்

மாவட்டம் திகாமடுல்லை தேர்தல்கள் மாவட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த 22 தேர்தல்கள் மாவட்டங்கள் சனாதிபதித் தேர்தல்களை நடாத்துவதற்காக நடாத்தப் படவுள்ள தேர்தலுக்காகவும் தேர்தல்கள் மாவட்டங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 3.5. வாக்கெடுப்புப் பிரிவுகளும் வாக்கெடுப்பு மாவட்டங்களும்.

22 தேர்தல்கள் மாவட்டங்கள் வாக்கெடுப்புப் பிரிவுகள் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டங்களாக மேலும் வேறு பிரிக்கப்பட்டுள்ளன. இந்த வேறுபிரித்தல் 1978 ஆம் ஆண்டின் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 97 ஆம் உறுப்புரையின் பிரகாரம் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு வேறு பிரிக்கப்பட்ட வாக்கெடுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை 160 ஆகும். அந்த வாக்கெடுப்புப் பிரிவுகளினுள் அமையப்பெற்றுள்ள வாக்கெடுப்பு மாவட்டங்கள் தொடர்பான விபரங்கள் 1981.02.03 ஆம் திகதி தொடக்கம் 1981.02.13 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் 09 வர்த்தமானிகளின் மூலம் பிரசுரிக் கப்பட்டன. வாக்கெடுப்புப் பிரிவொன்றினுள் வாக்கெடுப்பு மாவட்டங்களை வேறுபிரித்தல் தேர்தல் ஆணைக்குழு வினால் வெளியிடப்படுகின்ற பணிப்புரைகளின் கீழ் மேற்கொள்வது ஒவ்வொரு தேர்தல்கள் மாவட்டத்தினதும் பதிவு செய்தல் அலுவலர்களின் பொறுப்பாகும். அந்தந்த வாக்கெடுப்புப் பிரிவுகளில் பதிவு செய்யப் பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு, குறைவு வாக்கெடுப்பு நிலையங்களுக்கான நுழைவு வசதிகள் போன்ற பௌதீக விடயங்களைக் கவனத்தில் கொண்டு தேர்தல் பணிகள் மற்றும் வாக்காளர்களைப் பதிவு செய்தல் பணிகள் ஆகியவற்றை இலகுவான முறையில் அந்த வாக்கெடுப்புப் பிரிவுகளில் அமைந் துள்ள வாக்கெடுப்பு மாவட்டங்களின் உள்ளடக்கம் மற்றும் எண்ணிக்கையில் மாற்றங்களைச் செய்வதற்குரிய சட்ட ஏற்பாடுகள் வாக்காளர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் மூலம் செய்யப்பட்டுள்ளது. சனாதிபதித் தேர்தல்கள் தேசிய மட்டத்தில் ஒரு வாக்கெடுப்பு மாவட்டமாகக் கருதி செயற்படுகின்ற போதிலும், ஒழுங்கமைத்தல் வசதிகள், விடயங்களைச் சேகரித்தல் வசதிகள் மற்றும் பெறுபேறுகளை கணக்கிடக்கூடிய வசதிகள் போன்ற விடயங்களைக் கவனத்திற் கொண்டு தேர்தல்கள் மாவட்டம், வாக்கெடுப்புப் பிரிவுகள் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டங்கள் ஆகிய வேறு பிரித்தல்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டது. 22 தேர்தல்கள் மாவட்டங் களையும் வாக்கெடுப்புப் பிரிவுகளையும் உள்ளடக்கிய வரைபடம் **இணைப்பு 9** இல் காட்டப்பட்டுள்ளது.

### 3.6. வாக்களிப்பு நிலையங்கள்.

வாக்கெடுப்பு நிலையங்கள் என்பது பதிவு செய்யப் பட்ட வாக்காளர்களுக்கு இலகுவாக தமது வாக்கினை சுதந்திரமாகவும் மற்றும் அச்சமின்றியும் பிரயோகிப் பதற்காக தாபிக்கப்படுகின்ற இடமாகும். பொதுவாக இதற்காக நிரந்தரக் கட்டிடமொன்று அல்லது அவ்வாறு இல்லையெனில் தற்காலிகமாக நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடமொன்று (கொட்டில்) பயன்படுத்த முடியும். பெயர் குறித்த நியமனத் திகதியிலிருந்து இரண்டு வார காலத்திற்குள் இந்த இடங்களை அடையாளம் கண்டு கொள்வதும், அவைகளை வாக்கெடுப்பின் போது பயன் படுத்தப்படுவதற்கு முடியுமானவாறு தேவையான பழுது பார்த்தல்களை மேற்கொண்டு பொருத்தமான நிலை மைக்கு மாற்றி வைத்திருத்தல் அத்தியவசியமாகும். வாக்கெடுப்பு மாவட்டமொன்றை அடிப்படையாகக் கொண்டு அந்த நிலையத்திற்கு அழைப்பதற்கு எதிர் பார்க்கப்படுகின்ற வாக்காளர்களின் எண்ணிக்கையும் கவனத்திற் கொள்ளப்படுவதோடு வாக்கெடுப்பு நிலை யங்களை அமைக்கும் போது பல்வேறு சமூக விடயங்களையும் கருத்திற் கொண்டு அந்த நிலை யங்கள் கலப்பு வாக்கெடுப்பு நிலையங்கள் (பெண்கள், ஆண்கள்),அல்லது பெண் வாக்காளர்கள் (பெண்கள்) மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் என்ற அடிப்படையில் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த வாக்கெடுப்பு நிலையங்கள் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு தேர்தல்கள் மாவட்டத்திலும் ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவுகளிலும் ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்திலும் தாபிக்கப்படு கின்ற ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையம் அல்லது வாக்கெடுப்பு நிலையங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப் படும். இத் தேர்தலிற்குரிய 12,845 வாக்கெடுப்பு நிலை யங்கள் உள்ளடக்கப்பட்ட பட்டியல் 2144/08 ஆம் இலக்க மற்றும் 2019.10.07 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டது. மாவட்ட மட்டத்தில் வாக்கெடுப்பு நிலையங்களின் வகையீடு **இணைப்பு 10** இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பு நிலையங்களைத் தாபிப்பதற்காக கட்டிடங் களைத் தெரிவு செய்யும் போது, விசேடமாக அது அமைந்துள்ள இடத்தின் பொருத்தமான தன்மையும் வசதிகளும் கவனத்திற் கொள்ளப்படும். அத்துடன் பின்வரும் விடயங்களும் முக்கியமானதாகும்.

(i). வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை.

(ii). வாக்காளரொருவர் நடந்து செல்ல வேண்டிய தூரத்தின் அளவைக் குறைத்தல்.

(iii). வாக்கெடுப்பு மாவட்டத்தினுள் இயலுமானவரை மையப்படுத்தப்பட்ட இடமொன்றில் தாபித்தல்.

(iv). பாதுகாப்பான அறையொன்றுடனான நிரந்தரக் கட்டிடமொன்றாக காணப்படல்.

(v). இலகுவாகப் பிரவேசிக்கக் கூடிய சாத்தியப்பாடு.

(vi). தேர்தல் பணியாட்குழுவினர்களுக்கு தேவையான தங்குமிடம், சுகாதார வசதிகள், நீர் மற்றும் மின்சாரம் போன்ற அடிப்படைத் தேவைகள் காணப்படுதல்.

(vii). விசேட தேவையுடைய வாக்காளர்களுக்கு தடையின்றி நுழைவதற்கான சாத்தியப்பாடு.

(viii). இயற்கை அனர்த்தங்கள் காரணமாக ஏற்படக் கூடிய இழப்புக்கள் குறைவான இடமொன்றாக இருத்தல்.

### 3.7. வாக்குப் பெட்டிகள் விநியோகம்.

தேர்தலொன்றில் போது அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்களை உள்ளே இடுவதற்காக அரச கைத்தொழில் நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மரப்பலகை வாக்குப் பெட்டிகளைப் பயன்படுத்துவது பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முறையாகக் காணப் பட்டது. இருப்பினும், மரப்பலகையினால் தயாரிக்கப்பட்ட வாக்குப் பெட்டிகளுடன் கலப்பு பயிபர் வாக்குப் பெட்டிகள் போன்றே அலுமினியத் தகடுகளினால் தயாரிக்கப்பட்ட வாக்குப் பெட்டிகளும் தேர்தல்களின் போது பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டு. அஞ்சல் வாக்குகளை இடுவதற்காக சாதாரண வாக்கெடுப்பு நிலையங்களில் பயன்படுத்தப்படுகின்ற வாக்குப் பெட்டிகளை விட பெரிய அளவிலான வாக்குப் பெட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. தற்போதுள்ள நிலைமையில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை அதிகரித்தல், தேர்தல்களில் அக்கட்சிகளின் கீழ் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் மற்றும் சுயேச்சை வேட்பாளர்களாக அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமை காரணமாக வாக்குச் சீட்டுக்கள் அசாதாரணமான முறையில் நீளம் அதிகரித்தல் காரணமாக ஒவ்வொரு வாக்குப் பெட்டிக்குள்ளும் உள்ளடக்கப்படக்கூடிய வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை காரணமாக ஒரு வாக்கெடுப்பு நிலையத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான வாக்குப் பெட்டிகளை வழங்க வேண்டி ஏற்பட்டது. இது வாக்கெடுப்பு நிலையங்களின் முகாமைத்துவத்தில் பாரிய பிரச்சினையான நிலைமையொன்று ஏற்பட்டதென குறிப்பிடுதல் வேண்டும்.

இந்த சனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் பெயர் குறித்த நியமனப்பத்திரங்களைக் கையளித்தமை காரணமாகவும் மற்றும் அந்த அனைத்து பெயர் குறித்த நியமனப் பத்திரங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் காரணமாகவும் வாக்கெடுப்பின் போது வழங்கப்பட்ட வாக்குச் சீட்டின் நீளம் அடியிதழ் இன்றி 24 அங்குல மாகக் காணப்பட்டது. வாக்குச் சீட்டின் அளவு பெரிதடைந்தமை காரணமாக ஒரு வாக்கெடுப்பு நிலை யத்தில் வாக்கு அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்களை உள்ளிடுவதற்காகத் தேவையான வாக்குப் பெட்டிகளை வழங்குவது சவால்மிக்க விடயமாக இருந்தது. தேர்தல் ஆணைக்குழு வசம் காணப்பட்ட இதுவரை நடாத்தப்பட்ட தேர்தல்களின் போது பயன் படுத்தப்பட்ட மரப்பலகையிலான வாக்குப் பெட்டியினுள் இந்தத் தேர்தலின் போது பயன்படுத்தப்பட்ட அளவுடைய 350 – 400 இடைப்பட்ட எண்ணிக்கையான வாக்குச் சீட்டுக்களை வாக்குப் பெட்டியினுள் இடக்கூடியதாக இருந்தமை ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது. ஆதலால், ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையங்களுக் காகவும் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குப் பெட்டிகளை பயன்படுத்துவதற்கு நேரிடுமென குறித்த அலுவலர்களால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டது. அந்த மரப்பலகையிலான வாக்குப் பெட்டிகள் அதிக பாரம் மற்றும் கையாளுவது அசௌகரியமானது என்பதால் வாக்கெடுப்பு நிலையமொன்றுக்கு பல வாக்குப் பெட்டிகள் வழங்கப்பட்டால் விசேடமாக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் அவற்றை கையாளுவது மிகவும் அசௌகரியமாக அமையுமென்பது தெளிவாக விளங்கியது. அதே போன்று விரைவாக மேலதிக மரப்பலகை வாக்குப் பெட்டிகளை பெற்றுக்கொள்வதும் அசௌகரிய மான பணியொன்றாக இருந்த காரணத்தால் மாற்று நடவடிக்கையொன்றின் தேவைப்பாடு தோற்றம் பெற்ற தோடு அது துரிதமாகவும் விரைவாகவும் நடைமுறைப் படுத்தக்கூடிய ஒன்றாகவும் காணப்பட வேண்டியிருந்தது.

இந்நாட்டின் பிரதான பிளாஸ்டிக் தயாரிப்பாளர்களுடன் பிளாஸ்டிக் வாக்குப் பெட்டிகளை உற்பத்தி செய்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட போதும் ஆணைக் குழுவின் தேவைப்பாடுகளை உடனடியாக நிறைவேற்றுவ தற்கு பொருத்தமான பின்னணியொன்று ஏற்படவில்லை. வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து வாக்குப் பெட்டி களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போனதற்கான காரணம் அதிக செலவினமாகும். இவ்வாறான சூழ்நிலையின் கீழ் காட்போட் வாக்குப் பெட்டிகளைத் தயாரித்துப் பயன்படுத்துவது மிகவும் இலாபமிக்கதாகவும் மற்றும் பொருத்தமான தீர்வொன்றெனவும் உறுதி செய்யப்பட்டதால் அதன்பால் கவனம் செலுத்தப்பட்டது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் களில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு அமைவாக மூன்று அளவுகளில் கணதிமிக்க காட்போட் கொண்டு தயாரிக்கப்பட்ட வாக்குப் பெட்டிகளைப் பயன்படுத்துவது பொருத்தமானதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்காக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வாக்குப் பெட்டிகளைப் பயன்படுத்துவதற்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், தேசிய தேர்தல்கள் பிரிவிற்குப் பொறுப்பான மேலதிகத் தேர்தல் ஆணையாளர் தலைமையிலான ஏனைய பணியாட்குழுவினரால் உள்நாட்டு வழங்குநர்களுக்கு மாதிரிகளை வழங்கி தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதோடு அவர்களை ஊக்குவித்து காட்போட் கொண்டு தயாரிக் கப்பட்ட வாக்குப் பெட்டிகளை உள்நாட்டில் தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இச்செயன் முறை காரணமாக பாரம் குறைந்த, இலகுவாகக் கையாளக்கூடிய வாக்குப் பெட்டிகளின் தேவைப்பாட்டை குறைந்த செலவில் தயாரித்துக் கொள்வதற்கு முடிந்தது.

அதற்கமைய உள்நாட்டு வழங்குநர்களினால் உரிய விபரக் குறிப்புக்களுக்கு இசைவானதாகவும் மற்றும் தரமிக்கதாகவும் வாக்குப் பெட்டிகள் சிறிய (14"x14"x24"), நடுத்தரமான (18"x15.5"x25") மற்றும் பெரிய (21"x18.5"x27") ஆகிய அளவுகளைக் கொண்டதாக, சிறிய பெட்டியின் நிறை 1.55 கி.கி. மற்றும் நடுத்தரமான பெட்டியொன்றின் நிறை 2.05 கி.கி. ஆகவும், பெரிய பெட்டியொன்றின் நிறை 2.65 கி.கி. என்றவாறு நிறைகளைக் கொண்டதாக வாக்கெடுப்புக்குத் தேவையான எண்ணிக்கையான வாக்குப் பெட்டிகளை மிகவும் குறுகிய காலத்தினுள் உற்பத்தி செய்து கொள்வதற்கு முடிந்தது.

அரசாங்க கைத்தொழிற்சாலையில் மரப்பலகை வாக்குப் பெட்டியொன்றை உற்பத்தி செய்வதற்கான செலவு 15,000.00 ரூபாவை விட அதிகமாகும். 2014 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டியின் அப்போதைய விலை 10,450.00 ரூபாவாகக் காணப் பட்டது. இருந்த போதிலும் சிறிய வாக்குப் பெட்டி யொன்றை 800.00 ரூபா வீதமும் மற்றும் நடுத்தர அளவிலான பெட்டியொன்றை 950.00 ரூபா வீதமும் பெரிய அளவிலான வாக்குப் பெட்டியொன்றை 1050.00 ரூபா வீதமும் வட் வரி இன்றிய விலையில் உற்பத்தி

செய்து கொள்ள முடிந்தது. காட்போட்களால் வடிவமைக் கப்பட்ட இந்த வாக்குப் பெட்டிகள் இலாபமிக்கவை போன்றே, இலகுவான தன்மை, போக்குவரத்து செய்தல் வசதி, கையாளக்கூடிய வசதி என்பன காரணமாக இந்த வாக்குப்பெட்டிகளைப் பயன்படுத்திய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் பாராட்டுக்கு உட்படுத்தப் பட்டது. எனினும், கனதியான காட்போட் வாக்குப் பெட்டிகளுக்கு மேலதிகமாக இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்ட பயிபர் மற்றும் மரப்பலகை வாக்குப் பெட்டிகளும் இத் தேர்தலின் போது பல மாவட்டங்களில் பயன்படுத்தப்பட்டது.

### 3.8. பாதுகாப்பு அலுவல்கள்.

19 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தின் 104 இ ஆம் உறுப்புரைக்கு இணங்க வாக்கெடுப்பு பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டு ஒரு வார காலம் கழியும் வரை, தேர்தல் சட்டங்களைச் செயல் வலுவாக்கம் செய்வதற்குத் தேவையான வசதிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களை தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தலின் பிரகாரம் இணைப்புச் செய்தல் பொலிஸ் மா அதிபரிடம் கையளிக்கப் பட்டுள்ளது. 104ஈ உறுப்புரையின் கீழான சுதந்திர மானதும் மற்றும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு பாதகமாக அமையக்கூடிய ஏதேனும் செயல்களை அல்லது சம்பவங்களைத் தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு குடியரசின் ஆயுதப் படையினரைப் பரவிச் சேவையிலீடுபடுத்தல் தொடர்பில் பரிந்துரைகளைச் சனாதிபதிக்கு முன்வைப்பதற்கு ஆணைக்குழுவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய சனாதிபதி தேர்தலின் போது பாதுகாப்பு வழங்குதல் தொடர்பாக பொலிஸ் மா அதிபர் மற்றும் தேர்தல் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான சிரேட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையிலான சிரேட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் பல கலந்துரை யாடல்கள் தேர்தல்கள் செயலகத்தில் நடாத்தப்பட்டன. கலந்துரையாடலின் போது எட்டப்பட்ட இணக்கப்பாடுகளின் பிரகாரம் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் மாவட்டப் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள், மாவட்டங் களின் சிரேட்ட பொலிஸ் அலுவலர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியவர்களுடன் கலந்துரையாடி தேர்தலை நீதியாகவும் மற்றும் சுதந்திரமாகவும் நடாத்துவதற்குத் தேவையான பாதுகாப்பு வேலைத்திட்டமொன்று ஒழுங்கமைக்கப்பட்டது. மாவட்டங்களில் காணப்பட்ட நிலைமை, பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் தேர்தல்கள் சட்டங்களைச் செயல் வலுவாக்கம் செய்தல் தொடர்பான கலந்துரை யாடல்களில் தேர்தல்கள் செயலகத்தின் சட்ட விசாரணை மற்றும் தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவப் பிரிவின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். அதேபோன்று, தேர்தலுக்குத் தேவையான பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு வேலைத்திட்டங்களை அமுலாக்கம் செய்யும் போது தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு அமைச்சின் உதவிகளும் பெற்றுக் கொள்ளப்பட்டன.

வாக்கெடுப்புப் பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தேர்தல்கள் செயலகம் மற்றும் அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் ஆகியவற்றுக்குப் போதிய பொலிஸ் பாதுகாப்பு வழங்குவதற்கு பொலிஸ் மா அதிபர் அவர்களால் நடவடிக்கையெடுக்கப் பட்டிருந்தது. இந்த பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சட்ட அமுல்படுத்தல் செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்ளும் பொருட்டு இலங்கை பொலிஸாரினால் நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் தேர்தல்கள் பிரிவொன்று நிறுவப்பட்டு தேர்தல்கள் சட்டங்களை செயல் வலுவாக்கம் செய்வதற்காக தேர்தல் ஆணைக்குழு மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவல கங்களுடன் நேரடி தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளப் பட்டன. நீதியானதும் மற்றும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தேவையான சூழலொன்றை உருவாக்கிக் கொள்ளுதல் தேர்தல் ஆணைக்குழுவின் போன்றே அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் எதிர்பார்ப்பாகக் காணப்படு வதால் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், தேர்தல் கண்காணிப்புக் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியவர் களுடன் தேர்தல் ஆணைக்குழுவில் நடாத்தப்பட்ட கலந்துரை யாடல்களில் பொலிஸ் மா அதிபர் தலைமை யிலான சிரேட்ட அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் தேர்தல் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்தல், உறுதிப்படுத்தல் மற்றும் தேர்தல் காலக் கெடுவினுள் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்ப தற்காக தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல் களின்படி இலங்கை பொலிஸார், தேர்தல் காலக்கெடு வினுள் பாரிய பணிகளை நிறைவேற்றினர். அதன்படி பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சிரேட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (தேர்தல்கள்) அவர்களின் வழிகாட்டல்களின் கீழ் பொலிஸ் தலைமை யகத்தின் தேர்தல் பிரிவிற்கு 30 அலுவலர்கள் இணைப்புச் செய்யப்பட்டு பணியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். இவற்றின் நேரடி ஒருங்கிணைப்பின் கீழ் இராஜகிரிய தேர்தல்கள் செயலகத்தில் தாபிக்கப் பட்டிருந்த தேர்தல்கள் வழிநடாத்தல் மற்றும் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு நிலையத்தில் 15 பொலிஸ் அலுவலர்கள், பொலிஸ் பிரிவுகளுடன் தேர்தல்கள் வழிநடாத்தல் கூட அலுவலர்கள் 238 மற்றும் 25 மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ அலகுகளுக்காக 281 பொலிஸ் அலுவலர்கள் மூலம் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து பெறுபேறுகள் வெளியிடப்படுகின்ற தினம் வரையான காலப்பகுதியினுள் தேர்தல் சார்ந்த பாதுகாப்புச் செயற்பாடுகளை வழி நடாத்துதல் மற்றும் தேர்தல் சட்டங்களை செயல் வலுவாக்கம் செய்தல் ஒருங்கிணைப்பு மற்றும் வழிநடாத்தல் என்பன மேற்கொள்ளப் பட்டன. அதற்கு மேலதிகமாக பெயர் குறித்த நியமன தினத்தில் இராஜகிரிய தேர்தல்கள் செயலக வளாகம் மற்றும் அதன் அண்மித்த பிரதேசம் சார்ந்து விசேட பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்பட்டதுடன் அதற்கு பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் அலுவலர்கள் 350 பேர் வரையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். பிரச்சார அலுவல்கள் முடிவுற்ற அமைதிக் காலப்பகுதியின் போது, வாக்கெடுப்புத் தினம் மற்றும் முடிவுகள் வெளியிடப்படுகின்ற தினம் ஆகியவற்றுக் கிடையிலான காலப்பகுதியின் போது பாதுகாப்பு அலுவல்களை பேணிச்செல்வதற்கான பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையின் அலுவலர்கள் 72,808 பேர்களை கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு இலங்கைப் பொலிஸாரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது பற்றிய விபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

முன்கூட்டியே அடையாளம் காணப்பட்ட விசேடமான இடங்களில் நிலைப்படுத்துதல் மற்றும் பொலிஸ் நடமாடும் ரோந்து சேவைகளுக்காகவும் இந்த அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். வாக்கெடுப்பு நிலையங்கள், நியதிச் சட்ட எழுத்தாவணங்கள் மற்றும் வாக்குச் சீட்டுக்கள் உள்ளிட்ட பாதுகாப்புப் பொருட்கள் போன்றே பதவியணியினரின் பாதுகாப்பு, வாக்கெண்ணல் நிலையங்களின் அனைத்துப் பாதுகாப்பு அலுவல்கள் இலங்கை பொலிஸாருக்கு கையளிக்கப்பட்டதோடு அதன்போது அவர்கள் தமது பணிகளை வழங்கப் பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிறைவேற்றினர். தேர்தல்கள் சட்டங்களை மீறுதல் மற்றும் வன்முறை செயல்கள் தொடர்பில் தகவல் கிடைத்தவுடன் அது தொடர்பாக நடவடிக்கையெடுத்தல் இலங்கை பொலிஸார் வசமுள்ள முதன்மையான ஒரு பணி என்பதோடு மாவட்ட முறைப்பாடு விசாரணைப் பிரிவுகள் மூலம் வழிநடாத்தப்பட்ட ஆபத்துக் கொண்டதெனக் கருதப் பட்ட இடங்களின் பரிசோதனைகளின் போதும் பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளில் இலங்கை பொலிஸாரினால் அளப்பரிய சேவைகள் வழங்கப் பட்டுள்ளன.

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட பொலிஸ் அலுவலர்கள்

| **மாகாணத்தின் குறிப்பாக இனங்காணப்பட்ட இடங்கள்** | **பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர் களின் எண்ணிக்கை** |
|---|---|
| மேல் மாகாணம் | 15,902 |
| தென் மாகாணம் | 7,176 |
| வடமத்திய மாகாணம் | 5,243 |
| ஊவா மாகாணம் | 4,541 |
| வடமேல் மாகாணம் | 7,375 |
| மத்திய மாகாணம் | 8,560 |
| சப்பிரகமுவ மாகாணம் | 5,708 |
| வட மாகாணம் | 7,134 |
| கிழக்கு மாகாணம் | 6,840 |
| இராஜகிரிய தேர்தல்கள் செயலகம் | 50 |
| இராஜகிரிய தேர்தல்கள் செயலகத்திற்காக விசேட அதிரடிப்படை | 150 |
| வாக்கெடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட விசேட அதிரடிப்படையினர் | 4,129 |
| **மொத்தம்** | **72,808** |

# நான்காம் அத்தியாயம்

## பணியாட் குழுவினர்

### 4. பணியாட் குழுவினர் தேவைப்பாடு.

சனாதிபதி தேர்தலை வெற்றிகரமானதாக முகாமைத்துவம் செய்வதற்கான பிரதானமான ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் மற்றும் பெயர் குறித்த நியமனங்கள், அஞ்சல் வாக்கு, வாக்களிப்பு, வாக்கெண்ணல், ஒருங்கிணைப்பு அலுவல்கள், வாக்கெடுப்பிற்குரியதாக நியமனம் செய்யப்படுகின்ற குழுக் கடமைகள் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் போன்ற பணிகள் தொடர்பாக அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களும் மாவட்டப் பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களும் தலைமை அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மாவட்ட மட்டத்தில் பூர்வாங்க ஒழுங்கமைப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பாக வெவ்வேறாக கலந்துரையாடி தேவையான மேலதிக ஆலோசனைகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 4.1. வாக்கெடுப்பு பணியாட்குழுவினரை நியமனம் செய்தல்.

சனாதிபதித் தேர்தல் தேசிய மட்டத்தில் நடாத்தப்படுகின்ற தேர்தலொன்று என்பதால் இதற்காக அதிகளவான பணியாட்குழுவினரை ஈடுபடுத்துவதற்கு நேரிடுகின்றது. ஆதலால், ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் சனாதிபதியின் செயலாளர் அவர்களினால் 2019.10.09 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை மூலம் அனைத்து ஆளுநர்கள், அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் ஆகியவர்களுக்கு தேர்தலொன்றை வினைத்திறனானதாகவும் மற்றும் விளைதிறன் மிக்கதாகவும் ஒழுங்கமைப்புச் செய்து கொள்வதற்காக அலுவலர்களை விடுவிப்பதற்கு, வாகனங்கள் மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்தல் ஆணைக்குழுவினால் அரசியலமைப்பின் 104 ஊ (1), (2), 104எ மற்றும் 104 ஏ ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் ஏனைய நியதிச்சட்ட ஆணைக்குழுக்களின் செயலாளர்கள், அனைத்து மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள், மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள், சகல மாகாண அரச சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள், அனைத்து திணைக்களங்களின் தலைவர்கள், அனைத்து மாவட்டச் செயலாளர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியவர்களுக்கு EC/ADM/EL/1/ST மற்றும் 2019.08.05 ஆம் திகதியிடப்பட்ட "தேர்தல் பணிகளுக்காக அரச பிரிவின் அலுவலர்களின் தகவல்களைச் சேகரித்தல்"எனும் தலைப்பில் சுற்றறிக்கை வெளியிடப்பட்டு, அலுவலர்களின் விபரங்கள் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டது. அவ்வாறே, அந்த சுற்றறிக்கையின் பிரதிகள் சனாதிபதியின் செயலாளர், பிரதமரின் செயலாளர், அமைச்சரவையின் செயலாளர், மத்திய வங்கி ஆளுநர் மற்றும் கணக்காய்வாளர் நாயகம் ஆகியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்குத் தேவையான பணியாட்குழுவினரை இயன்றவரை மாவட்டத்தினுள்ளிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அந்தந்த மாவட்டத்தின் அரச மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் அலுவலர்களின் தரவுப் படிவங்களை அந்தந்த மாவட்டங்களின் தேர்தல்கள் அலுவலகத்திற்கு வரவழைத்துக் கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், கொழும்பு மாவட்டத்தில் உள்ள அரச பாடசாலைகள் தவிர்ந்த, கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசம் மற்றும் பத்தரமுல்லை பிரதேசத்தில் அமைந்துள்ள செத்சிறிபாய I, II ஆம் கட்டம், சுஹுருபாய, சம்பத்பாய, கொவிஜன மந்திரய, இசுருபாய, ரன்மகபாய மற்றும் மாகாண சபைக் கட்டிடத் தொகுதியில் தாபிக்கப்பட்டுள்ள அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் சிரேட்ட வாக்கெடுப்பு நிலைய அலுவலர்கள் பதவிக்காக தகைமையுடைய அலுவலர்களின் தரவுப் படிவங்கள் தேர்தல்கள் செயலகத்திற்கும், அந்தந்த நிறுவனங்களின் ஏனைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தரவுப் படிவங்கள் கொழும்பு நகரத் தேர்தல்கள் அலுவலகத்திற்கும் அனுப்பி வைக்கப்படல் வேண்டுமென நிறுவனத் தலைவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

வாக்குகளின் எண்ணிக்கை, வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை, விநியோகித்தல் மற்றும் கையேற்றல் நிலையங்களின் எண்ணிக்கை, வாக்கெண்ணும் நிலையங்களின் எண்ணிக்கை என்பன தொடர்பாக அவதானம் மற்றும் கவனம் செலுத்தி ஒவ்வொரு மாவட்டத்தினதும் அலுவலர் தேவைப்பாடுகள், அந்தந்த மாவட்டங்களிலிருந்து அல்லது அண்மித்த மாவட்டத்திலிருந்து மற்றும் கொழும்பு ஒதுக்குக் குழாத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற தகவல்கள் தேர்தல்கள் செயலகத்திற்கு வரவழைத்துக் கொள்ளப்பட்டது. இத்தகவல்களுக்கமைய மாவட்டத்தின் அலுவலர்கள் தேவைப்பாட்டை குறித்த மாவட்டத்திலிருந்து பூர்த்தி செய்ய முடியாதிருந்தால் அண்மித்த மாவட்டங்களிலிருந்து அல்லது தேர்தல்கள் செயலகத்தின் குழாத்திலிருந்து ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சித்திட்ட மொன்றையும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அவர்களின் அங்கீகாரத்துடன் நடைமுறைப் படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாவட்டத்தினதும் அலுவலர்களின் தேவைப்பாடுகள் தொடர்பான விபரங்கள் புள்ளிவிபரக் குறிப்பு 01 இல் காட்டப்பட்டுள்ளது.

மேலும் வாக்குச்சீட்டுக்களைப் பரிசீலனை செய்தல், வாக்குச் சீட்டுக்கள், வாக்குப் பெட்டிகள் உள்ளடங்கலாக நியதிச் சட்ட எழுத்தாவணங்களை விநியோகித்தல் மற்றும் கையேற்றல், வாக்கெடுப்பு, வாக்கெண்ணல், ஒருங்கிணைப்பு அலுவலகங்கள், பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தல், நலனோம்பல், போக்குவரத்து, பொது வசதிகள், வழிநடாத்தல் கூடங்கள் ஆகிய கடமைகள் போன்றவற்றுக்காக அமய ஊழியர் தொடக்கம்

சிரேட்ட நிறைவேற்று அதிகாரிகள் வரையிலான பல்வேறு குழுக்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு நேரிட்டது. பூர்வாங்க ஏற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தாபிக்க வேண்டிய குழுக்கள், அவற்றின் செயற்பாடுகள் மற்றும் கடமைக் காலப்பகுதி, அவற்றில் ஈடுபடுத்தப்படக்கூடிய அலுவலர் களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் நிர்வாகப் பணிகள் தொடர்பாக அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இந்த தேர்தலுக்காக அண்ணளவாக நிரந்தர மற்றும் அமய ஊழியர்கள் 223,983 பேர் வரையில் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களில் 218,623 அலுவலர்கள் குறித்த மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களில் சேவையாற்றுகின்றவர்களிலிருந்து ஈடுபடுத்தப்பட்டனர். இங்கு ஒவ்வொரு மாவட்டத்தினதும் தேவைப்பாடுகளுக்கமைய தேர்தல்கள் செயலகத்தின் ஒதுக்குக் குழாத்திலிருந்து 5,360 அலுவலர்கள் வரையில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் இதன் கீழ் வழங்கப்பட்டதோடு அந்த விபரங்கள் உள்ளடக்கப்பட்ட புள்ளிவிபரக் குறிப்பு இலக்கம் 02 இன் கீழ் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலர் களைத் தேர்ந்தெடுப்பதற்கான கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மற்றும் அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் என்பன கொழும்பு தேர்தல்கள் செயலகத்திலும் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் மட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டன.

### 4.2. பணியாட்குழு அலுவலர் ஒதுக்குக் குழாத்தைப் பேணி வருதல்.

தேர்தலின் முதன்மையான கடமையொன்றான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வாக்கெடுப்புக்கு முந்திய தினம் முற்பகலில் அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்திற்குரிய பொருட்களாதியவற்றை கையேற்றுக்கொள்வதற்காக அறிக்கையிடுமாறு அறிவிக்கப்படும். இருப்பினும், நோய் நிலைமைகள் மற்றும் ஏனைய கட்டாயத் தேவைகள் காரணமாக அறிக்கையிடாத சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்குப் பதிலாக நியமனம் செய்வதற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களால் தேவைப்படுமெனத் தீர்மானிக்கப்படுகின்ற அலுவலர்களின் எண்ணிக்கையைக் கொண்ட ஒதுக்குக் குழாமொன்று நியமனம் செய்யப்பட்டு பொருட்களாதியவை விநியோகம் செய்யப்படுகின்ற மண்டபங்கள் அமையப்பெற்றுள்ள வளாகங்களுக்கு அறிக்கையிடுமாறு அறிவிக்கப்பட்டது. வாக்கெடுப்பு நிலைய கடமைகளுக்காக நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் திடீர் மற்றும் தவிர்க்கமுடியாத காரணங் களுக்காக சேவைக்கு அறிக்கையிடாத சந்தர்ப்பங்களில் அவ்வாறு வருகை தராத அலுவலர்களுக்குப் பதிலாக உடனடியாக நியமனம் செய்து அனுப்பி வைக்கக் கூடியவகையில் மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் மற்றும் பிரதேச செயலகங்கள் மட்டத்திலும் அலுவலர் ஒதுக்கு குழாத்தை பேணிவருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பிரதேச செயலகத்தின் அலுவலரொருவர் இந்த ஒதுக்குக் குழாத்திற்கு பொறுப்பாகச் செயற்பட்டதோடு, வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் களால் பணியாட்குழு குறைபாடுகள் தொடர்பாக அறிவித்ததன் பின்னர் அவற்றைப் பரீட்சித்துப்பார்த்து ஒதுக்குக் குழாத்தில் உள்ள அலுவலர்களை நியமனம் செய்து அனுப்பி வைப்பதற்கு பொருத்தமான நிகழ்ச்சித் திட்டமொன்று ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவ்வாறு நியமனம் செய்யப்படுகின்ற அலுவலர்கள் வாக்கெடுப்பு நிலையங் களுக்குச் செல்வதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை மாவட்டத்தின் தேவைப்பாடு மற்றும் காணப்படுகின்ற வளங்களின் அடிப்படையில் தயாரித்துக் கொள்வது பொருத்தமானதென அனைத்து தெரிவத் தாட்சி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

வாக்கெண்ணல் பணியாட்குழுவிலும் வருகைதராத அலுவலர்களுக்குப் பதிலாக இணைப்புச் செய்வதற்கு சாத்தியமான வகையில் ஒதுக்குக் குழாம் அலுவலர் களை ஒவ்வொரு வாக்கெண்ணல் வளாகங்களுக்கும் நியமனம் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 4.3. போக்குவரத்து வசதிகள்.

தேர்தலொன்றின் போது போக்குவரத்து நிகழ்ச்சித் திட்டங்களைச் சிறப்பாக ஒழுங்கமைப்பது அவசியமான ஒரு விடயமாகும். ஆதலால், தேர்தலுடன் தொடர்புடைய பூர்வாங்க செயற்பாடுகளை ஒழுங்கமைக்கின்ற ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே ஒவ்வொரு மாவட்டத்திலும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவரின் தலைமையில் போக்குவரத்துக் குழுவொன்றைத் தாபித்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினத்தில் அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களுக்கும் அலுவலர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலையத்தின் பொருட்களாதியவை அனுப்பி வைக்கப்பட்டிருத்தல், வாக்கெடுப்பு நிறைவடைந்ததன் பின்னர் வாக்குப் பெட்டிகள் மற்றும் ஏனைய பாதுகாப்பு பொருட்கள் சகிதம் அலுவலர்களை வாக்கெண்ணல் நிலையங்களுக்கு மிக விரைவாகவும் பாதுகாப்பாகவும் மீண்டும் போக்குவரத்து செய்தல் வாக்கெடுப்புப் பணிகளின் ஒழுங்கமைப்பில் மிகவும் முக்கியத்துவம் கொண்டதாகும். இதற்கு மேலதிகமாக தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வாக்கெடுப்புப் பணிகளை மேற்பார்வை செய்வதற்கும் ஏனைய ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் வலுவான போக்குவரத்து நிகழ்ச்சித்திட்டமொன்று அவசியமாகும். வாக்கெடுப்புப் பணிகளை தடையின்றி முன்னெடுப்பதற்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்காக நடமாடும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக பொலிஸ் திணைக்களத்திற்கு தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சனாதிபதித் தேர்தல் நாடு முழுவதிலும் ஒரே தினத்தில் நடாத்தப்படுகின்றமையினால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்காக அதிக எண்ணிக்கையிலான வாகனங்களை ஈடுபடுத்துவதற்கு நேரிட்டது.

இந்த போக்குவரத்துத் தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு தேர்தல் ஆணைக்குழுவினால் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கு 2019.05.05 ஆம் திகதியிடப்பட்டதாக கடிதமொன்றை அனுப்பி தமது நிறுவனத்திற்கு சொந்தமான (வசமுள்ள) வாகனங்கள் தொடர்பான விபரங்களை தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்குதல் வேண்டுமென அறிவிக்கப் பட்டது. அதற்கமைய, கொழும்பு நகர எல்லையினுள் அமையப்பெற்றுள்ள அரச அலுவலகங்களில் காணப் படும் வாகனங்கள் தொடர்பான விபரங்களைத் தேர்தல்கள் செயலகத்திற்கும், அந்தந்த மாவட்டங்களில் அமையப்பெற்றுள்ள நிறுவனங்கள் வசமுள்ள வாகனங்கள் தொடர்பான தகவல்களை குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் வழங்க வேண்டியிருந்தது. தேர்தல் கடமைகளுக்காக நியமனம் செய்யப்பட்ட அலுவலர்களுக்கு தமது போக்குவரத்து அலுவல்களுக்காக தமது உத்தியோக பூர்வ மோட்டார் வாகனங்களைக் குறித்தொதுக்கி வைத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் மேலதிக செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் ஏனைய சிரேட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் மாவட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்களுக்கு மேலதிகமாக தேர்தல்கள் செயலக வாகன ஒதுக்கில் இருந்து பல்வேறு வகையான 1933 வாகனங்கள் பல்வேறு மாவட்டங்களின் தேவைக்கேற்ப வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அது தொடர்பான விபரங்கள் **03 இலக்க புள்ளிவிபரக்** குறிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வாக்கெடுப்பு அலுவல்கள் தொடர்பான வாகனத் தேவைப்பாட்டினைக் கணக்கிட்டதன் பின்னர், அரசாங்க வாகனங்களின் பற்றாக்குறை காரணமாக இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் வண்டிகள், தனியார் பயணிகள் போக்கு வரத்து பஸ் வண்டிகள் மற்றும் வேறு வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களின் போது போன்றே இந்த சனாதிபதித் தேர்தலுக்காகவும் வாடகை வாகனங் களுக்காக கட்டண முறைமையொன்று தேர்தல் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டது. அரச வாகனங்களைப் பெற்றுகொள்ள முடியாத சந்தர்ப்பங் களின் போது, அந்தக் கட்டணங்களைச் செலுத்தி வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதி தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கும் மற்றும் இலங்கைப் பொலிஸார் போன்றே அஞ்சல் திணைக்களத்திற்கும் வழங்கப்பட்டது.

வாக்கெடுப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாகச் செயற்படு கின்ற சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கும் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்கள் பலவற்றில் மேற்பார்வை அலுவல்களுக்குப் பொறுப்பாகச் செயற்படு கின்ற வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் தேர்தல் கடமைகளுக்காக தமது தனிப்பட்ட மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துவ தற்கு அனுமதி வழங்கப்பட்டது. இருப்பினும், வாக்கெடுப்பு நிலையக் கடமைகளுக்காக இணைக்கப்பட்டுள்ள சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு வாக்குப் பெட்டிகள் மற்றும் பாதுகாப்புப் பொருட்கள், பொலிஸ் அலுவலர்கள் மற்றும் தனது உதவியாளரையும் அழைத்துக் கொண்டு பயணம் செய்ய நேரிடுகின்ற காரணத்தால் அதற்காக பொருத்தமான போதுமானளவு இடவசதிகளைக் கொண்ட கார் வண்டிகள், வான் வண்டிகள் மற்றும் ஜீப் வண்டிகள் போன்ற வாகனங்கள் இருப்பின், அவற்றைப் பயன்படுத்துவதற்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படுதல் வேண்டுமென தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

வாக்களிப்புடன் தொடர்புடைய போக்குவரத்து வசதிகள் தடைப்படாதவாறு நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான எரிபொருள் கையிருப்பை சேகரித்து வைத்திருப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு அறிவித்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அது தொடர்பாக மேலும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களை அறிவுறுத்தி அந்தந்த மாவட்டத்தில் தேர்தல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களுக்கான எரிபொருள் தேவைப்பாடு, பெற்றோலிய கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் களுக்கு அறிவிக்கவும், தேவையான கையிருப்புக்களை களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதன் தேவைப்பாடு தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வாக்கெடுப்புடன் தொடர்புடைய நோக்கங்களுக்காக எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்த எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்களையும் அறிவுறுத்தி கையிருப்புக்களைக் குறித்தொதுக்கி வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 4.4. பொதுப் போக்குவரத்து வசதிகள்.

வாக்கெடுப்பு தினத்திற்கு முந்திய தினம் வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட ஏனைய பொருட்களாதியவற்றை பொலிஸ் பாதுகாப்பின் கீழ் போக்குவரத்துச் செய்வ தற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. வாக்கெடுப்பு நிலைய ஏனைய அலுவலர்கள் பொதுப் போக்குவரத்து வசதிகள் அல்லது தங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட போக்குவரத்து வசதிகளை உபயோகப்படுத்திக் கொண்டு வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் உரிய வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அறிக்கையிடுதல் வேண்டும். அங்கு புகையிரதத்தில் பயணம் செய்கின்ற அலுவலர்களுக்கு தமது கடமை நிலையத்திலிருந்து அதற்கான கடமை புகையிரத அனுமதிச்சீட்டை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. கண்டி, நுவரெலியா, மட்டக்களப்பு மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் பாதைகளின் மோசமான நிலைமை காரணமாக பொதுப் போக்குவரத்து

வசதிகள் செயற்படாத பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த வாக்கெடுப்பு நிலையங்களிலுள்ள ஏனைய பணிக்குழு வினருக்கும் தெரிவத்தாட்சி அலுவலர் அவர்களால் பொதுப் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டன. அவ்வாறே தீவுகள் சார்ந்ததாக அமைக்கப்பட்டிருந்த வாக்கெடுப்பு நிலையங்களின் ஊழியர்களின் போக்கு வரத்து நடவடிக்கைகளுக்காக இலங்கை கடற்படையின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டது.

போக்குவரத்து வசதிகளை வழங்கும் போது ஏனைய முக்கியமான பிரிவாக அமைவது வாக்காளர்களுக்காக பொதுப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதாகும். சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 82 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம் வாக்காள ருக்கு தமது சொந்த வாகனத்தின் மூலம் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வதற்கான சட்டரீதியான தடைகள் காணப்படுவதால், பொதுப் போக்குவரத்து வசதிகள் பலப்படுத்தப்படுதல் வேண்டும். அதற்காக இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை மற்றும் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபைகளின் அலுவலர்கள் தேர்தல்கள் செயலகத்திற்கு அழைக்கப் பட்டு தேர்தல் கடமைகளுக்கென ஈடுபடுத்துவதற்குத் தேவையான வாகனங்களை வழங்குதல் போன்றே வாக்கெடுப்பு தினத்தன்று வாக்காளர்களுக்கு அசௌகரியங்களின்றி வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வதற்கான தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதிலுள்ள முக்கியத்துவம் மற்றும் தேவைப்பாடு தொடர்பாக அவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. மாவட்ட மட்டத்திலும் தெரிவத்தாட்சி அலுவலர்களால் குறித்த நிறுவனங்களின் பிராந்திய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டு தேவையான வசதிகள் ஏற்படுத்தப் பட்டிருந்தன.

# ஐந்தாம் அத்தியாயம்

## அஞ்சல் வாக்கு வசதிகளைச் செய்துகொடுத்தல்.

### 05. அஞ்சல் மூலம் வாக்களித்தல்.

தேர்தல் கடமைகளில் ஈடுபடுகின்ற அரச ஊழியர்களுக்கும் மற்றும் தேர்தல் கடமை அலுவல்கள் மற்றும் தொடர்புடைய வேறு அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுகின்ற ஊழியர்களுக்கு 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான உரிமை உண்டு. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 23(3) ஆம் பிரிவின் பிரகாரம் அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்காகச் செய்யப்படுகின்ற விண்ணப்பமொன்று, தேர்தலொன்றை நடாத்துமாறு தேவைப்படுத்துகின்ற பிரகடனம் அல்லது கட்டளை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து பத்து நாட்களுக்குள் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கிடைக்கக்கூடியதாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தேருநர் இடாப்பைக் காட்சிப்படுத்தல் மற்றும் அதற்குரிய வசதிகள் தேசிய மட்டத்திலும் மற்றும் மாவட்ட மட்டங்களிலும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதோடு பத்திரிகை விளம்பரங்கள், சுற்றறிக்கைகள் மூலம் மற்றும் ஊடக அறிவித்தல்கள் மூலமும் இது தொடர்பாக வாக்காளர்களை அறிவுறுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 5.1. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குத் தகைமை பெறுகின்ற நபர்கள்.

அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குத் தகைமை பெறுகின்ற ஆட்கள் யாரென்பது, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், முப்படைகளின் உறுப்பினர்கள், பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் அலுவலர்கள், சிறைச்சாலைத் திணைக்களத்தின் அலுவலர்கள், புகையிரத, அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்புகள் திணைக்களம் ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் இலங்கைப் போக்குவரத்து சபையின் பணியாட் குழுவினர்கள், தேர்தல் கடமைகள் கையளிக்கப்படுகின்ற அரச அல்லது மாகாண சேவை அல்லது மத்திய வங்கியின் அலுவலர்கள் இவ்வசதிகளைப் பெறுவதற்காக விண்ணப்பிப்பதற்குத் தகுதியானவர்கள் ஆவர். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பி வைக்க வேண்டிய அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக விண்ணப்பதாரர்கள் தமது பதிவு விபரத்தை, தேருநர் இடாப்பிலிருந்து பரீட்சித்து பெற்றுக் கொள்வது அவசியமாகும். அந்தப் பணிகளை இலகுபடுத்துவதற்காக தேர்தலுக்காக செல்லுபடியான தேருநர் இடாப்புக்கள், மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களிலும் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளுக்குரிய தேருநர் இடாப்புக்கள் குறித்த கிராம அலுவலர் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக அரச ஊழியர்கள் பெரும்பான்மையாக உள்ள பொது நிர்வாக அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, தொழில் செயலகம் மற்றும் கல்வி அமைச்சு, பதிவாளர் நாயகம் திணைக்களம், அஞ்சல் தலைமையகம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு அமையப்பெற்றுள்ள வளாகங்களிலும் செத்சிறிபாய அலுவலகக் கட்டிடத் தொகுதியிலும் தேருநர் இடாப்புக்களை காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பாதுகாப்புப் பிரிவுகளின் உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் நாடு பூராகவும் அமையப்பெற்றுள்ள சேவை நிலையங்களில் பணியாற்றுகின்றமையினால், முப்படையினர், பொலிஸார் ஆகியவர்களுக்குரிய சேவை நிலையங்களில், அஞ்சல் வாக்கு வசதிக்காக விண்ணப்பம் செய்கின்றவர்களின் பதிவுத் தகவல்களைப் பரிசீலனை செய்து பார்ப்பதற்காக, இறுவட்டுக்களாகத் தயாரிக்கப்பட்ட தேருநர் இடாப்பின் பிரதிகள், தேர்தல் செயலகத்தினால் குறித்த அத்தாட்சிப்படுத்தல் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக தேர்தல்கள் செயலகத்தில் இத்தகவல்களை வழங்குவதற்காக தாபிக்கப்பட்ட விசேட தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும், 1919 ஆம் இலக்க அரசாங்க தகவல் மையத்தினூடாகவும் குறித்த நபர்கள் தேருநர் இடாப்பிலுள்ள தமது பதிவு விபரங்களைப் பெறுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன.

### 5.2. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்றல்.

இந்த 2019 சனாதிபதித் தேர்தலின் போது அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்றல் 2019 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 18 ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 27 ஆம் திகதி நிறைவு செய்யப்படவிருந்த போதிலும் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கின்ற செயன்முறையின் போது தகவல்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் காணப்பட்ட பிரச்சினைகள், சான்றுப்படுத்தல் தொடர்பில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் அஞ்சல் தாமதம் என்பன தொடர்பாக கவனத்தில் கொண்டு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்களை 2019 செப்தெம்பர் 30 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை கையேற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இருந்த போதிலும், அச்சந்தர்ப்பமாகும் போது நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை மற்றும் அது தொடர்பான தெரிவத்தாட்சி அலுவலர்களின் அறிக்கைகள் மற்றும் கோரிக்கைகளுக்கமைய அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கு 2019.10.04 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை கிடைக்கப்பெற்றிருந்த அனைத்து விண்ணப்பங்களையும் பொறுப்பேற்பதற்கு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டதோடு இது தொடர்பாக விரிவான ஊடகப் பிரச்சாரமொன்றை வழங்குவதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அலுவலர்களுக்கும் அதற்காக விண்ணப்பிப்பதற்குப் போதியளவு காலத்தையும் மற்றும் சந்தர்ப்பத்தையும் வழங்கும் நோக்கில் அஞ்சல் வாக்கு விண்ணப்பிக்கும் தினங்களை இவ்வாறு திருத்தம் செய்தல் கட்டாயமான ஒரு விடயமாகக் காணப்பட்டது.

அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்கும் தினங்களை காலநீடிப்புச் செய்தல் காரணமாக அஞ்சல் வாக்கு செயற்பாட்டின் பணிகளை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்காக 2019.10.04 ஆம் திகதி ஒவ்வொரு மாவட்ட அலுவலகங்களிலிருந்தும் கிடைக்கப் பெறுகின்ற ஏனைய மாவட்டங்களுக்கு அனுப்ப வேண்டிய விண்ணப்பங்களை கையேற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மற்றும் அந்த விண்ணப்பங் களிலிருந்து அண்மித்த மாவட்டங்களுக்கு அனுப்பப்பட வேண்டியவைகளை அடுத்த தினம் தகவல் கொண்டு செல்லுநர்கள் (Massenger) மூலமாக பரிமாறிக்கொள்வ தற்கும் மற்றும் தொலைவிலுள்ள (நீண்ட தூரத்தில்) மாவட்டங்களுக்குரிய விண்ணப்பங்களை வெவ்வேறாகத் தெரிவு செய்து உள்ளடகக் கடிதத்துடன் 2019.10.05 ஆம் திகதி அலுவலரொருவரின் பொறுப்பில் தேர்தல்கள் செயலகத்திற்கு வரவழைத்துக் கொண்டு அவற்றை உரிய மாவட்டங்களுக்கிடையில் பரிமாற்றம் செய்யும் நிகழ்ச்சித்திட்டமொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டது.

### 5.3. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை நிராகரித்தல்.

கிடைக்கப்பெற்றுள்ள அனைத்து அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களையும் பரீட்சித்து ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல் தொடர்பான மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் தீர்மானம் விண்ணப்பதாரர்களுக்கும் பிரதியொன்று சகிதம் அவர்களின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அறிவிக்கப்படும். அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் பல்வேறு காரணங்களினால் நிராகரிக் கப்படும். தெரிவத்தாட்சி அலுவலருக்கு விண்ணப்பங்கள் உரிய காலப்பகுதியினுள் கிடைக்கப்பெறாமை, விண்ணப் பங்களைப் பூர்த்தி செய்யும் போது விண்ணப்பதாரியின் விபரங்கள் சரியான விதத்தில் குறிப்பிடப்படாமை அல்லது குறைபாடுகளைக் கொண்டதாக குறிப்பிடப் பட்டிருத்தல், அத்தாட்சிப்படுத்தும் அலுவலரினால் அல்லது விண்ணப்பதாரியினால் விண்ணப்பம் கையொப்ப மிடப்பட்டிராமை அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறல் ஆகிய விடயங்கள் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு தாக்கம் செலுத்துகின்ற பிரதான காரணங்களாகும். இந்தத் தேர்தலுக்குரியதாக அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களிற்கும் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் பற்றிய விபரங்கள் **புள்ளிவிபரக் குறிப்பு 04** ஆம் இலக்கத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய 720,135 அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 61,106 ஆகும். இதற்கமைய, அங்கீகரிக் கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 659,029 ஆகும்.

### 5.4. அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் அலு வலர்கள்.

ஒவ்வோர் அரச நிறுவனங்களிலும் சேவையில் ஈடுபட்டுள்ள அஞ்சல் வாக்காளர்களின் விண்ணப்பங் களை அத்தாட்சிப்படுத்துவதற்காக அந்தந்த நிறுவனங் களிலிருந்து அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கும் மற்றும் அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் தொடர்பான தகவல்களை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு வரவழைத்துக் கொள்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் ஆணைக் குழுவினால் வழங்கப்பட்டது. இதற்கமைய ஒவ்வொரு நிறுவனங்களுக்காகவும் நியமனம் செய்யப்பட்ட அத்தாட் சிப்படுத்தும் அலுவலர்களினால் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட அஞ்சல் வாக்காளர் களுக்கான வாக்குச் சீட்டுக்கள் உள்ளடக்கப்பட்ட சகல ஆவணங்களும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கே அனுப்பி வைக்கப்படுகின்றன. அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் செயற்பட வேண்டிய விதம், அவர்களின் பொறுப்புகள் மற்றும் தொடர்புடைய ஏனைய விடயங்கள் தொடர்பான அறிவுரைகள் தேர்தல் ஆணைக்குழுவினால் அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் மற்றும் நிறுவனத் தலைவர்கள் மூலம் அனைத்து அத்தாட்சிப் படுத்தும் அலுவலர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்களின் கடமைகள் தொடர்பாக அவர்களை அறிவுறுத்துவதற்காக தேவையான எழுத்து மூலமான அறிவுறுத்தல்களை அந்த அலுவலர்களுக்கு அனுப்பி வைப்பதற்கும், அதற்கு மேலதிகமாக, அவர்களை வரவழைத்து அறிவுறுத்தும் பயிற்சி அமர்வுகள் நடாத்துவதற்கும், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள், பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணை யாளர்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த அறிவுறுத்தும் வழிகாட்டல் வகுப்புக்கள் ஏற்புடையவாறு சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அஞ்சல் வாக்காளர்களினால் வாக்களிப்பதற்குரிய தினத்தில் மேற்கொள்ளப்படுவது உரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் முன்னிலையில், இரகசியத் தன்மை பாதுகாக்கப்படுகின்றவாறு வாக்களிப்பதாகும். வாக்காளர் வாக்கினைப் பிரயோகித்த பின்னர் வாக்குச் சீட்டு மற்றும் தொடர்புடைய எழுத்தாவணங்கள் உள்ளடக்கப்பட்ட காப்புறுதி உறையை அஞ்சல் அலுவலகத்திற்குக் கையளித்தல் அல்லது உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கையில் எடுத்துவந்து கையளித்தல் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் பொறுப்பாகும். வாக்கு அடையாளமிடப்படாத அஞ்சல் வாக்காளர்களின் அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பக்கற்றுக்கள் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் குறித்த மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குப் பாதுகாப்பாக அனுப்பிவைப்பது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள விசேட கடமையொன்று போலவே பொறுப்பொன்றும் ஆகும்.

### 5.5. அஞ்சல் தேருநர் இடாப்புக்களைத் தயாரித்தல்.

சனாதிபதி தேர்தல்கள் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள 1981 ஆம் ஆண்டின் அஞ்சல் வாக்காளர்கள் தொடர்பான (சனாதிபதி தேர்தல்கள்) ஒழுங்குவிதிகள் 4(1) இன் பிரகாரம் அஞ்சல் வாக்காளர்களின் பதிவேட்டைத் தயாரிப்ப தற்காக ஒவ்வோர் அஞ்சல் வாக்காளர்களுக்கும் உரிய தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் அவர்களின் அஞ்சல் வாக்கினை அத்தாட்சிப் படுத்தும் அலுவலர்களின் பெயர், பதவி மற்றும் அலுவலக முகவரி என்பன அவசியமாகும். அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள

அத்தகவல்களை தரவுத் தொகுதிக்குள் உட்சேர்க்கப் பட்டு செல்லுபடியான தேருநர் இடாப்பின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவின் கணினிப் பிரிவின் மென்பொருளைப் பயன்படுத்தி அஞ்சல் வாக்காளர்களின் பதிவேடு (பெயர்ப்பட்டியல்) தயாரிக்கப்பட்டது. அந்த அஞ்சல் வாக்குப் பதிவேடு வன் பிரதிகளாகவும் மற்றும் இறுவட்டுக்களாகவும் (CD) தயாரிக்கப்பட்டன. போட்டியிடு கின்ற வேட்பாளர்களுக்கு மென் பிரதிகள் (CD) மாத்திரம் வழங்கப்பட்டன.

### 5.6. அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை வழங்குதல் / விநியோகித்தல்.

சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அஞ்சல் வாக்கா ளர்கள் தொடர்பான ஒழுங்கு விதிகளின் 10(1) ஆம் ஒழுங்கு விதிக்கமைய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் ஏனைய விசேடமாகத் தெரிவு செய்யப்பட்ட அரச நிறுவனங்கள் மற்றும் அரச பாடசாலைகளில் அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை வழங்க வேண்டியிருந்தது. 2019.10.10 ஆம் திகதி அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் வழங்குகைக்கான அறிவித்தல் வெளியிடப்பட்டது. அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை வழங்குதல் மற்றும் அஞ்சலுக்கு கையளித்தல் 2019.10.18 ஆம் திகதி 987 நிலையங்களில் மேற் கொள்ளப்பட்டன. அவ்வாறு அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் வழங்குதல் மேற்கொள்ளப்படுமெனவும் மற்றும் ஒவ்வொரு வழங்கல் நிலையத்திற்காகவும் நியமனம் செய்ய முடியுமான முகவர்களின் எண்ணிக்கை தொடர்பாகவும் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மற்றும் அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கும் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அறிவிக்கப்பட்டது. அஞ்சல் வாக்காளர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான வாக்குச் சீட்டுக்களை முன்கூட்டியே அரசாங்க அச்சகத்திலிருந்து பெற்றுக்கொண்டு பாதுகாப்புப் பெட்டகத்தில் இட்டு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும். அவ்வாறு பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக்கள் 2019.10.18 ஆம் திகதி வாக்குச் சீட்டுக்களை வழங்குவதற்கு முன்னர் பரிசீலனை செய்து பார்த்து, விநியோகித்தல் மண்டபங்களுக்குத் தேவையானளவை குறித்தொதுக்கும் போதும் மற்றும் அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை வழங்கும் போதும் அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற வளாகங் களுக்குப் போதிய பொலிஸ் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களினால் நடவடிக்கையெடுக்கப்பட்டது. அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை வழங்கி குறித்த பக்கற்றுக்களை அஞ்சல் திணைக்களத்திற்குக் கையளிக்கப்படும் வரை அனைத்துச் செயற்பாடுகளும் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் மேற் கொள்ளப்படுதல் வேண்டுமென தேர்தல் ஆணைக் குழுவினால் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

### 5.7. அஞ்சல் வாக்குகளை அடையாளமிடல்.

அண்மைக்காலத்தில் நடாத்தப்பட்ட தேர்தல்களைப் போன்று இத் தேர்தலின் போதும் அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடுவதற்காக வரையறுக்கப்பட்ட சில நாட்கள் மாத்திரம் குறித்தொதுக்கப்பட்டன. அதற்கமைய இத்தேர்தலின் போது அஞ்சல் வாக்குகளை அடையாளமிடுவதற்காக குறித்தொதுக்கப் பட்ட நாட்கள் தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன.

| நிறுவனம் | அஞ்சல் வாக்குகளை அடையாளமிடுவதற்காக வழங்கப்பட்ட தினங்கள் |
|---|---|
| அனைத்து அரச அலுவலகங்கள், முப்படை இராணுவ முகாம்கள், பாடசாலைகள், அரச கூட்டுத்தாப னங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் | 2019.10.31 மற்றும் 2019.11.01 ஆம் திகதி |
| மாவட்ட செயலகங்கள், மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள், இலங்கைப் பொலிஸ் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட் குழுவினர் | 2019.11.04 மற்றும் 2019.11.05 ஆம் திகதி |
| பிரமுகர் பாதுகாப்புப் பிரிவு | 2019.11.04 மற்றும் 2019.11.05 ஆம் திகதி |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள உரிய தினங்களில் அஞ்சல் வாக்கினை அடையாளமிட முடியாது போன அஞ்சல் வாக்காளர்களின் காப்புறுதி உறைகள் அத்தாட்சிப் படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படுவதை கண்காணிப் பதற்காக ஈடுபடுத்தப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களால் அல்லது அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களால் காலதாமதமின்றி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங் களுக்கு எடுத்து வந்துகையளிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. விதிக்கப் பட்டிருந்த தினத்தில் தமது அஞ்சல் வாக்குகளை அடையாளமிட முடியாது போன அஞ்சல் வாக்காளர் களுக்கு தமது வாக்கினைப் பிரயோகிப்பதற்காக 2019.11.07 ஆம் திகதி அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இந்நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக முகவர்களைப் பெயர் குறிக்குமாறு வேட்பாளர்களுக்கும் மற்றும் அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் களுக்கும் அறிவிக்கப்பட்டது. விசேடமாக ஊடக அறிவித்தல் மற்றும் விளம்பரம் மூலம் இது தொடர்பாக உரிய அஞ்சல் வாக்காளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். அதேபோன்று அஞ்சல் வாக்குகள் அடையாள மிடப்படுகின்ற தினங்களில் அந்தந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களுக்குப் போதியளவு பாதுகாப்பு வழங்குமாறும் மற்றும் தேர்தல் சட்டங்கள்/ விதிகளை அமுல்படுத்துமாறும் பொலிஸ் மா அதிபர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

### 5.8. அஞ்சல் வாக்கு கண்காணிப்பு அலுவல்கள்.

அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படவுள்ள தினங்களில் அப்பணிகள் தேர்தல் ஆணைக்குழு மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்

களால் முன்கூட்டி வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடைபெறுகின்றது என்பதை உறுதிப்படுத்துவ தற்காக ஒவ்வோர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலகத்திற்கும் உதவித் தெரிவத்தாட்சி அலுவல ரொருவர் அல்லது அனுபவம் கொண்ட சிரேட்ட அலுவலரொருவர் ஈடுபடுத்தப்பட்டது. பொதுவாக 30 அஞ்சல் வாக்குகளை விடக் குறைவாக வாக்குகள் அடையாளமிடப்படவுள்ள அலுவலகத்திற்காக நடமாடும் கண்காணிப்பாளர் ஒருவரையும் அதற்கு மேற்பட்ட அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படுகின்ற அலுவல கங்களில் தரித்திரிந்து காண்காணிப்புச் செய்கின்ற கண்காணிப்பாளர் ஒருவரையும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அஞ்சல் வாக்குகள் 30 இற்கு குறைவாகக் காணப்பட்ட போதிலும் இனங்காணப்பட்ட விசேட இடங்களில் அதாவது இ.போ.வ.சபை டிப்போக்கள், சிவில் பாதுகாப்பு முகாம்கள், அதிவேகப் பாதை அலுவலகங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் ஆகியவற்றுக்கு தரித்திருந்து கண்காணிப்புச் செய்கின்ற கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தக் கண்காணிப்பு அலுவல்களை மேற்கொள்கின்ற அலுவலர்களால் அவதானிப்புக்கு உட்படுத்தப்படும் ஒவ்வோர் அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படுகின்ற நிலையங்களுக்காக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தினால் வழங்கப்படுகின்ற நாட்குறிப்பேட்டில் (ஜேர்னல்) உரிய தகவல்கள் பதியப்பட வேண்டுமென்பதுடன் கண்காணிப்புக் கடமையின் இறுதியில் அதனை மாவட்டப் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களிடம் சமர்ப்பிக்கு மாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

முன்னைய தேர்தல்களைப் போன்று இம்முறையும் அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை வழங்கல் மற்றும் அடையாளமிடல் இடங்களில் அந்தப் பணிகளை கண்காணிப்பதற்காக உள்நாட்டுக் கண்காணிப்பு அமைப்புக்களான சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) மற்றும் தேர்தல்கள் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் (CMEV) ஆகிய கண்காணிப்பு அமைப்புக்களுக்கு ஒரு நிலையத்திற்கு ஒரு கண்காணிப்பு அமைப்பிலிருந்து கண்காணிப்பாளர் ஒருவரை மாத்திரம் ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

### 5.9. அடையாளமிடப்படாத அஞ்சல் வாக்குகள்.

சனாதிபதி தேர்தலின் போது 659,029 அஞ்சல் வாக்காளர்களுக்காக அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டன. அவற்றை அடையாளமிடுவ தற்காக பல சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 5,669 அஞ்சல் வாக்காளர்கள் தமது அஞ்சல் வாக்குகளை அடையாளமிட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப் பட்டது. ஓர் அஞ்சல் வாக்கிற்காகச் செலவாகின்றகாலம், உழைப்பு மற்றும் செலவினத்தைக் கருத்தில் கொள்ளும் போது அந்த விண்ணப்பதாரிகள் அஞ்சல் வாக்குகளை அடையாளமிடாமையானது பொதுமக்களின் பணத்தை வீண்விரயம் செய்தலொன்றாகக் கருத முடியும். எனவே இந்நிலைமையை எதிர்வரும் தேர்தல்களின் போது குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். அடையாளமிடப்படாத அஞ்சல் வாக்குச் சீட்டுகள் பற்றிய தகவல்கள் புள்ளிவிபரக் குறிப்பு இல. 04 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

# ஆறாம் அத்தியாயம்

## பிரச்சார அலுவல்கள் மற்றும் ஊடகங்கள்.

### 06. பிரச்சார அலுவல்கள்.

சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 68 தொடக்கம் 74 வரையான பிரிவுகளில் வேட்பாளர்களை ஊக்குவிப்ப தற்காக பொதுக் கூட்டங்களை நடாத்துதல், ஊர்வலங் களை நடாத்துதல், தேர்தலுடன் தொடர்புடைய துண்டுப் பிரசுரங்களை அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல், விளம்பரங்களை காட்சிப்படுத்தல் மற்றும் தேர்தல் அலுவலகங்களைப் பேணி வருதல் தொடர்பில் தேர்தல் காலப்பகுதியினுள் சிற்சில மட்டுப்பாடுகளின் (வரையறை களின்) கீழ் அலுவல்களை மேற்கொள்ள வேண்டிய விதம் மற்றும் வாக்கெடுப்பு தினம் அலுவல்களை மேற்கொள்ள வேண்டிய விதம் என்பன குறிப்பிடப் பட்டுள்ளன. தேர்தலொன்று பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் தேர்தல் ஆணைக்குழுவினால் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர் களுடனும் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டு தொடர்புடைய சட்டங்கள் உட்பட தேர்தலோடு தொடர்புடைய ஏனைய எழுத்தாவணங்கள் அவர்களிற்கு வழங்கப்படும். மேலும் பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் கையேற்கப்பட்டதன் பின்னர் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளின் செயலாளர்கள், தேர்தல் முகவர்கள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டு கலந்துரை யாடப்பட்டது. அதன் போது வேட்பாளர்களின் அதிகார மளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் பிரதேச முகவர்கள் சட்டங்கள் தொடர்பில் அறிந்திருப்பதுடன் அதன்படி செயலாற்ற வேண்டுமெனவும் தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 6.1. சட்ட விரோதமான பிரச்சார அலுவல்கள் தொடர்பாக நடவடிக்கையெடுத்தல்.

ஏதேனும் ஒரு தரப்பினரால் சட்டவிரோதமான தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாடொன்றை பொலிஸாரிடம் சமர்ப்பித்தால், அல்லது வேறு விதமொன்றில் அறிவிக்கப்பட்டால் அது தொடர்பில் ஆராய்ந்து பார்த்து துரிதமாக உரிய நடவடிக்கைகளை எடுக்கப்படுவது பொலிஸ் திணைக் களத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. அரசியற் கட்சிகளின் தொழிற்படுநர்கள் மற்றும் வேட்பாளர்கள் போன்று சட்டத்தை செயல்வலுவாக்கம் செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களும் பிரச்சாரப் பணிகள் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் நிபந்தனைகளைச் நடைமுறை ரீதியாக செயற்படுத்தும் போது சிக்கல்கள் தோன்றுவதாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நடைமுறை ரீதியாகத் தோன்றுகின்ற அந்த சிக்கலான நிலைமைகள் காரணமாக பிரச்சார நோக்கங்களுக்காக மாற்று வழிகளை பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவது சாதாரண நிலைமையொன்றாக மாற்ற மடைந்துள்ளது. சட்டத்தினால் ஏற்பாடுகள் செய்யப்படாத மாற்று பிரச்சார நடவடிக்கைகளின் காரணமாக தேர்தல் காலப்பகுதியினுள் சட்ட மீறல்கள் தொடர்பாக அதிகளவில் அறிக்கையிடப்பட்டது. பொதுமக்கள் நடமாடுகின்ற இடங்களில் உருவப்படங்கள், பதாகைகள் காட்சிப்படுத்துவது தடைசெய்யப்பட்டிருந்த போதிலும், அந்த சட்ட விதிகளை கருத்திற் கொள்ளாமல் செயற்பட்ட சந்தர்ப்பங்களும் இந்தத் தேர்தலின் போது அறிக்கையிடப்பட்டன. இருப்பினும் முந்திய தேர்தல் களுடன் ஒப்பீட்டளவில் நோக்கும் போது சட்ட விரோதமான பிரச்சார நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க குறைவொன்று காணப்பட்டமை சாதகமான நிலைமை யொன்றாகும்.

தேர்தல் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்யும் பணிகளுக்குப் பொறுப்பாகச் செயற்படுகின்ற பொலிஸா ருக்கு தினசரிக் கடமைகளுக்கு மேலதிகமாக இரண்டு மாதங்கள் வரையான தேர்தல் காலப்பகுதியினுள் பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கு மற்றும் வேட்பாளர் களுக்கு பாதுகாப்பு வழங்குதல், கூட்டங்கள் நடாத்தப்படுகின்ற இடங்களுக்குப் பாதுகாப்பு வழங்குதல் போன்ற கடமைகளும் பாதுகாப்புப் பணிகளுடன் தொடர்புடைய கடமைகளும் ஆற்றப்படுகின்றமையினால், தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் அதற்காக முன்னுரிமையொன்றை வழங்கி அலுவல்களை மேற்கொள்ளும் போது பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதாக இங்கு அவதானிக்கப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழுவினால் கட்சிகளின் செயலா ளர்கள் மற்றும் கட்சி முகவர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் போது பொதுவான இணக்கப் பாட்டிற்கு வரப்பட்ட, தேர்தல் பிரச்சார அலுவல்கள் மற்றும் தொடர்புடைய சில மட்டுப்பாடுகளைத்/வரையறை களைத் தளர்த்தி பிரச்சார நடவடிக்கைகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக கருத்திற்கொள்வது வழமை போன்று சட்டத்திற்கு முரணாகச் செயற்படுவதற்கு சில கட்சிகளின் ஆதரவாளர்கள் முயற்சி செய்வது சிக்கல்மிக்கதாகும். சட்டவிரோதமான பிரச்சார செயற்பாடுகள் நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை நடாத்துதல் தொடர்பில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும். தனது அல்லது வேறு ஒருவரின் உதவியுடன் பணத்தை அதிகளவில் செலவு செய்யக்கூடிய வேட்பாளர்கள் தமது வேட்பாண்மையை ஊக்குவிப்பதற்காக பெரும் தொகைப் பணத்தைச் செலவிட்டு பாரியளவில் பிரச்சார அலுவல்களை மேற்கொள்வதன் காரணமாக ஏனைய வேட்பாளர்களுக்கு அநீதி இடம்பெறுவதாக கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் பொது மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, பிரச்சார அலுவல்களுக்காகப் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் போன்ற பொருட்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்ற பிரச்சார அலுவல்கள் காரணமாக சுற்றுச்சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் சிறிதன்று. இந்த நிலைமை யினைக் கவனத்தில் கொண்டு அத்தகைய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படல் வேண்டும். வேட்பாளர் ஒருவருக்கு தேர்தல் ஒன்றுக்காகச் செலவு செய்யக்கூடிய உயர்ந்தபட்ச தொகை எல்லைகளை நிர்ணயித்தல், அனைத்து வேட்பாளர்களுக்கும் தேர்தல் பிரச்சாரங் களுக்காக சமமான சந்தர்ப்பங்களை வழங்கி அறிவித்தல்கள், உருவப்படங்கள் போன்றவற்றை குறித்துரைக்கப்பட்ட அளவில் காட்சிப்படுத்துவதற்கு

இடமளித்தல். பொதுமக்களுக்கு பாதிப்பொன்று ஏற்படாத வகையில் பொது இடமொன்றில் பிரச்சாரப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் இடமொன்றை குறித்தொதுக்கீடு செய்து வழங்குவதன் மூலம் அந்தப் பிரச்சினைக்கு ஓரளவேனும் தீர்வொன்றை வழங்கமுடியு மென்பது தேர்தல் ஆணைக்குழுவின் அபிப்பிராயமாகும். அதற்காக எதிர்வரும் தேர்தல்களின் போது கவனம் செலுத்தி அலுவல்களை மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழு எதிர்பார்ப்புடன் உள்ளது.

### 6.2. பிரச்சாரக் கூட்டங்களுக்காக இடங்களைக் குறித் தொதுக்குதல்.

தேர்தல்கள் பிரச்சாரக் கூட்டங்களை நடாத்துவ தற்கு இடங்களைக் குறித்தொதுக்கிக் கொள்ளும் போதும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் அமைப்பாளர்கள் தாம் அநீதிகளுக்கு முகம் கொடுக்க நேரிடுவதாக முறைப்பாடுகளை முன்வைத்த சந்தர்ப் பங்கள் அதிகளவில் பதிவாகியுள்ளன. இந்த நிலைமை நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு அது சிறந்த போக்கொன்றல்ல. ஆட்சி அதிகாரம் கொண்ட அரசியற் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் ஏனைய வேட்பாளர்களின் பிரச்சார நடவடிக்கைகளுக்கு பாதகமான அடிப்படையில் தாக்கம் செலுத்தி, கூட்டங்கள் நடாத்தப்படுகின்ற சகல பொது இடங்களையும் தமக்காகக் குறித்தொதுக்கி வைத்திருத்தல் வழக்கமாக மேற்கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாக அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமான பிரச்சார வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. ஆதலால், தேர்தல் பிரச்சார கூட்டங்களுக்காக இடங்களைக் குறித்தொதுக்கும் போது அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமான வாய்ப்புக்கள் வழங்கப் படல் வேண்டுமென அதன் நிர்வாகிகளுக்கு வலியுறுத்தி அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வேட்பாளர்களுக்கு பிரச்சார கூட்டங்களை நடாத்துவ தற்குத் தேவையான மண்டப வசதிகள் மற்றும் விளையாட்டு மைதானங்களைக் குறித்தொதுக்கி வழங்கும் போது அதற்காக உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஏனைய அலுவலர்கள் அனைத்து வேட்பாளர் களுக்கும் நியாயமான விதத்தில் இட ஒதுக்கீடுகளை மேற்கொள்கின்றனரா என்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு நேரிட்டது. பிரச்சார அலுவல்கள் தொடர்பில் தோற்றம் பெற்ற பிரச்சினைகளைத் தீர்க்கும் போது அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், வேட்பாளர்கள், தேர்தல் முகவர்கள் மற்றும் நிரந்தர முகவர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் அந்த பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக கிடைக்கப் பெற்ற ஒத்துழைப்பு பெரிதும் பயனுள்ளதாக அமைந்தன.

### 6.3. இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்கான ஊடக வழிகாட்டு நெறிகள்.

தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பொதுமக்களுக்கு அது பற்றிய பல்வேறுபட்ட தகவல்களை வழங்குவதற்காக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு நேரிடுகின்றது. போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்களினாலும், தமது வெற்றியின் பின்னர் நாட்டின் அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள தமது கொள்கைகள் தொடர்பில் பொதுமக்களை அறிவுறுத் துவதும் ஊடகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இத் தகவல்களை அறிக்கையிடல் போன்றே வேட்பாளர் களின் பிரச்சார அலுவல்களின் போதும் சமநிலை யாகவும் மற்றும் மத்தியஸ்தத்துடனும் செயற்படுதல் ஊடகங்கள் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது. பக்கச் சார்பாக அல்லது தனிப்பட்ட அறிமுகத்தின்படி நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் ஏனைய தரப்பினர் களுக்கு பாரிய அநீதியொன்று ஏற்படுகின்றது. அரச ஊடகங்கள் போன்று தனியார் ஊடகங்களும் தேர்தல் களுக்குரிய செய்திகளை அறிக்கையிடுகின்ற போது நடுநிலையாக/மத்தியஸ்தமாக செயற்படுதல் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் செயற்பாடொன்றுக்கு அத்தியாவசியமான காரணியாகும். தேர்தலொன்றின் போது எந்தவொரு வேட்பாளரையும் ஊக்குவிப்பதற்குக் காரணமாகும் விதமாக அல்லது பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விதமாக அல்லது பொய்யான கூற்றுக்களை வெளியிடுகின்ற அதாவது உறுதிப்படுத்த முடியாத கூற்றுக்களை வெளியிடுவதிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் கட்டுப்பட்டுள்ளன. அனைத்து இலத்திரனியல் ஊடக நிறுவனங்களும் பயன்படுத்துகின்ற அலைவரிசைகள் மக்களின் சொத்தாகும். அந்த அதிர்வெண் அல்லது அலைவரிசை பொதுமக்களுக்குரிய ஒரு சொத்தாகும். எனவே அந்த அலைவரிசைகளைப் பயன் படுத்துகின்ற நிறுவனங்கள் அவற்றின் தற்காலிக உரிமையை மாத்திரம் கொண்டுள்ளன. இவ்வாறு தற்காலிகமாக கையளிக்கப்படுகின்ற பொதுமக்களின் சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்குப் பொருத்தமான ஒழுங்குபடுத்தல் வழிமுறை களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு அந்த அலைவரிசைகள் தொடர்பாகப் பொறுப்பு வகிக்கின்ற நிறுவனங்களின் தலைவர்களுக்குத் தேர்தல் ஆணைக்குழுவினால் உத்தரவிடப்பட்டது. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ(5)(அ) ஆம் உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங் களுக்கமைய அனைத்து ஊடக நிறுவனங்களின் தலைவர்களும் கலந்துரையாடலொன்றுக்கு அழைக்கப் பட்டு அவர்களின் இணக்கப்பாட்டுடன் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் ஆகியவற்றின் உதவியுடன் தேர்தல் காலப்பகுதியொன்றினுள் குறித்த நிறுவனங்கள் பின்பற்றி யொழுக வேண்டிய ஊடக வழிகாட்டு நெறிகளைத் தயாரித்து 2141/87 ஆம் இலக்க மற்றும் 2019.09.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. அது **இணைப்பு இல.** 11 இல் காட்டப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டு நெறிகள் தனியார் உரித்துடைமையைக் கொண்டுள்ள இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்கும் ஏற்புடையதாகும். 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 83 ஆம் பிரிவுக்கமைய உண்மையற்ற (பொய்யான)

அல்லது உறுதிசெய்துகொள்ள முடியாத தகவல்களை வெளியிடுவதிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு பத்திரிகை ஆசிரியர்கள் கட்டுப்பட்டுள்ளனர். அவ்வாறு செய்தால் அதற்கான தண்டனையும் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே, இந்த சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தி செயற்படுமாறு அனைத்து அச்சு ஊடக நிறுவனங்களின் தலைவர்களும் அறிவுறுத்தப்பட்டனர். அதன் பின்னரும் அவ்வப்போது தோன்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வினை வழங்கும் நோக்கில் மேற்குறிப்பிட்ட வர்த்தமானியில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கி மீண்டும் 2146/39 ஆம் இலக்க 2019.10.27 ஆம் திகதி மற்றும் 2148/21 ஆம் இலக்க 2019.11.05 ஆம் திகதிகளில் திருத்தம் செய்யப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. அந்த வர்த்தமானி அறிவித்தல்கள் **இணைப்பு 12 மற்றும்** 13 இல் காட்டப்பட்டுள்ளன.

சனாதிபதி தேர்தல் காலப்பகுதியினுள் ஊடகப் பயன்பாடு தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்ட ஊடக வழிகாட்டு நெறிகளை வெளியிடுவதற்கு மேலதிகமாக, அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் சந்தர்ப் பத்திற்கு ஏற்றவாறு செய்தி ஆசிரியர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் ஆகியோர் 09 சந்தர்ப்பங்களில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வரவழைக்கப்பட்டு கலந்துரையாடி நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்த லொன்றை நடாத்துவதற்காக ஊடகங்களின் பொறுப்புக்கள் மற்றும் பயன்பாடுகள் தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அதேபோன்று இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் தேர்தல் சட்டங்கள் மற்றும் ஊடக வழிகாட்டு நெறிகள் மீறப்படுதல் தொடர்பாக அடிக்கடி கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக விசாரணை செய்து சகல அச்சு ஊடக நிறுவனங்களின் தலைவர்களையும் வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சுக்கு வரவழைத்து அவ்வமைச்சின் செயலாளரினதும் மற்றும் தகவல் பணிப்பாளர் நாயகத்தினதும் பங்குபற்றலுடன் இரண்டு தடவைகள் கலந்துரையாடல்களை நடாத்தி ஊடக பயன்பாடு தொடர்பாக நிலவிய மோசமான நிலைமைகளைக் குறைத்துக் கொள்வதற்கான முன்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த கலந்துரையாடல்களின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவினால் எதிர்பார்க்கப்பட்டது யாதெனில், இதுவரை வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஊடக வழிகாட்டு நெறிகள் மீறப்படாத வகையில் சுயமான கட்டுப்பாடொன்றை ஊடக நிறுவனங்கள் மூலம் உருவாக்கிக் கொள்வ தற்காக அவர்களைத் தூண்டுவதற்கான நிகழ்ச்சித்திட்ட மொன்றை உருவாக்குவதற்குப் பொருத்தமான பின்னணியை உருவாக்குதல் ஆகும். இதற்கு மேலதிகமாக ஊடக வழிகாட்டு நெறிகள் மீறப்படுதல் தொடர்பாக கிடைக்கப்பெற்றிருந்த முறைப்பாடுகள் தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடி நிலமையைச் சிறந்த முறையில் பேணிச்செல்வதற்குத் தேவையான சூழல் உருவாக்கப்பட்டது.

### 6.4. ஊடகப் பொறுப்பு மற்றும் ஊடக ஒழுங்குபடுத்தல்.

தேர்தலொன்றின் போது ஊடகங்கள் மூலம் செய்யப் படுகின்ற தாக்கம் சிறியதொன்றல்ல. அரசியலமைப்பின் பிரகாரம் ஊடக வழிகாட்டு நெறிகள் மீறப்பட்டால் தேர்தல் ஆணைக்குழுவினால் அது தொடர்பில் செயற்பட்டு அரச ஊடக நிறுவனங்களுக்கு மாத்திரமே தண்டனைகளை விதிக்கமுடியும். இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் ஊடக வழிகாட்டு நெறிகள் மீறப்படுகின்ற போது அரச ஊடகங்களா மற்றும் தனியார் ஊடகங்களா என்பன முக்கியத்துவம் பெறுவதில்லை. ஏனெனில், வானொலி மற்றும் இலத்திரனியல் அலைவரிசைகள் பொதுமக்களது சொத்துக்கள் என்பதினாலாகும். ஆதலால், அரசிய லமைப்பினால் விதிக்கப்பட்டுள்ள அச்சட்டங்கள் அனைத்து ஊடகங்களுக்கும் பொருத்தமானதாக இருத்தல் வேண்டுமென்பது தேர்தல் ஆணைக்குழுவின் கருத்தாகும். ஊடக வழிகாட்டு நெறிகள் மீறப்படுவதாக அவதானிக்கப்படுகின்ற முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தல் ஆணைக்குழுவினால் குறித்த ஊடக நிறுவனத்திற்கு அவ்வாறு செய்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறும் மற்றும் ஊடக வழிகாட்டு நெறிகளுக்கு இசைவாக செயற்படுமாறும் அறிவித்தல் வழங்கப்படும். தேர்தல் ஆணைக்குழு கருதுகின்றவாறு ஊடக வழிகாட்டு நெறிகளுக்கு இசைவாக செயற்படாத சந்தர்ப்பங்களின் போது அது அரச ஊடகம் அல்லது தனியார் துறை ஊடகமாக இருந்தபோதிலும் தேர்தல் நிறைவடையும் வரை தேர்தல் தொடர்பான செய்திகளை அறிக்கை யிடல், அரசியல் ரீதியான செய்திகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்து வதை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிப்பதற்கும் அது தொடர்பாகவும் திருப்திகரமான பதில் குறிகளைக் காட்டாமல் தொடர்ந்தும் ஊடக வழிகாட்டு நெறிகள் மீறப்படுகின்ற முறையில் அலுவல்கள் மேற்கொள்ளப்படுமாயின், தேர்தல் முடியும் வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஊடக நடவடிக்கை களை இடைநிறுத்துவதற்குத் தேவையான அதிகாரத் துடன் கூடியதாக தேர்தல் ஆணைக்குழுவினால் முறையான அதிகாரியொருவரை நியமனம் செய்யக் கூடியவாறு சட்டம் வகுக்கப்படல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் ஊடகப் பயன்பாட்டின் மூலம் பாதிப்புக்கு உட்படுகின்ற வேட்பாளர்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படக்கூடிய தலையீடுகள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவ தோடு இது நீதியானதும் மற்றும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துகின்ற செயற்பாடுகளுக்கு தடையொன்றாகும்.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், அங்கத்தவர்கள், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மற்றும் ஏனைய அலுவலர்கள் ஊடக நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற அழைப்பின் பேரில் நேர்முகக் கலந்துரையாடல் களில் கலந்து கொண்டு சனாதிபதி தேர்தல்கள் தொடர்பாக ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக வழிகாட்டு நெறிகள் மற்றும் அதற்கமைய ஊடக நிறுவனங்கள் செயற்பட வேண்டியது எவ்வாறு என்பது தொடர்பாகவும், ஊடக வழிகாட்டு நெறிகளை வெளியிடு வதன் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்ற நீதியானதும்

மற்றும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவ தற்காக ஊடகப் பயன்பாடு எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பது தொடர்பாகவும் மற்றும் வாக்கெடுப்பு மற்றும் தொடர்புடைய நியதிச்சட்டரீதியான விடயங்கள் மற்றும் சட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பாகவும் பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

அதேபோன்று தேர்தல் பிரச்சார அலுவல்கள் தடை செய்யப்பட்ட அமைதிக் காலப்பகுதியிலும் பல்வேறு ஊடகங்களிடமிருந்து தேர்தல் ஆணைக்குழுவிற்கு செய்யப்பட்ட அழைப்பின் பிரகாரம் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றிற்கு தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். மேலும் சமூக ஊடக வலையமைப்புக்களினூடாக நடாத்தப்பட்ட பல நேர்முகக் கலந்துரையாடல்களில் தவிசாளர் அவர்கள் கலந்துகொண்டு தேர்தல்கள் மற்றும் அதனோடு தொடர்பான விடயங்கள் முன்வைக்கப்பட்டதோடு அந்த அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோக பூர்வ முகநூலில் வெளியிடப்பட்டன.

### 6.5. ஊடக அறிவித்தல்கள் மற்றும் அறிக்கைகள்.

சனாதிபதி தேர்தலுக்குரிய நியதிச்சட்ட ரீதியான மற்றும் அத்தியாவசியமாக அறிவிக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்தும் பொருட்டு மும்மொழிகளிலும் 15 பகிரங்க அறிவித்தல்கள் லங்காதீப, தினமின, தினகரன், டெய்லி நியூஸ், திவயின, த ஐலண்ட், வீரகேசரி, டெய்லி மீரர் மற்றும் உதயன் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. அந்த விளம்பரங்களை வெளியிடுவதற்காக தேர்தல் ஆணைக் குழுவினால் 3,642,083.25 ரூபாத் தொகை செலவிடப் பட்டுள்ளது.

மேலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பத்திரிகை அறிவித்தல்களுக்கு மேலதிகமாக தேர்தல்களுக்குரிய தகவல்கள் தொடர்பான 90 ஊடக அறிவித்தல்களும் வெளியிடப் பட்டுள்ளன. இந்த ஊடக அறிவித்தல்கள் தொடர்பான பட்டியல் **இணைப்பு 14** இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த ஊடக அறிவித்தல்கள் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டதோடு அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களும் அனுப்பி வைக்கப்பட்டன. அந்த நிறுவனங்களுக்குரிய ஊடகங்கள் மூலம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருந்தன. அதேபோன்று செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்கள் மற்றும் ஊடக அறிவித்தல்கள் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோக பூர்வ இணையத்தளமான (www.elections. gov.lk) இலும் வெளியிடப்பட்டன.

### 6.6. வேட்பாளர் பிரச்சாரத்திற்காக தொலைக்காட்சி மற்றும் வானொலி வசதிகளை வழங்குதல்.

1988 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 117 ஆம் பிரிவின் கீழ் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு எவ்விதமான கொடுப்பனவுமின்றி வானலைப் பிரச்சார வசதிகளைச் செய்து கொடுத்தல் வேண்டும். அந்த வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பெயர்குறித்த நியமனத் திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள்ளாக அதற்காக விண்ணப்பம் செய்தல் வேண்டும். பெயர்குறித்த நியமனப்பத்திரங்களை கையளித்துள்ள அனைத்து வேட்பாளர்களுக்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினாலும் மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினாலும் தீர்மானிக்கப்படக் கூடியவாறான நிபந்தனைகளுக்கு அமைவாக அத்தகைய விண்ணப்பத்தை செய்வதற்கென நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளுக்குப் பின்னரான நாளில் தொடங்குகின்றதும், வாக்கெடுப்புத் தொடங்குவதற்கு எழுபத்திரண்டு மணித்தியாலங்களுக்கு முன்பு முடிவடைகின்றதுமான காலப்பகுதியில், ஒலிபரப்பு மற்றும் ஒளிபரப்பு வசதிகளைப் பயன்படுத்துவதற்கு குறித்த விண்ணப்பத்தைச் செய்த வேட்பாளர்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

சனாதிபதி தேர்தல்கள் சட்டத்தின் 117 ஆம் பிரிவின் கீழ் இந்த சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் 18 வேட்பாளர்கள், வேறு அரசியல் கட்சிகளின் 02 வேட்பாளர்கள் மற்றும் ஏனைய 15 வேட்பாளர்களுக்கு, தேர்தல் பிரச்சார அலுவல்களுக்காக வானலை ஒலிபரப்பு வசதிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மூலமும் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் மூலமும் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. இந்த ஒவ்வொரு ஒலிபரப்பு/ஒளிபரப்பு சந்தர்ப்பமும் 15 நிமிடங்களுக்குக் குறையாத மற்றும் ஆகக்கூடியது 30 நிமிடங்களுக்கு மேற்படாத அதேபோன்று 03 தடவைகளுக்கு மேற்படாத அல்லது உயர்ந்தபட்சம் 90 நிமிடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு வரையறுக்கப்படுகின்றது.

இந்த சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களை விட அதிகரித்தமை காரணமாக சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளின் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த ஒளிபரப்பு நேரங்களை (வானலைக் காலத்தை) ஒதுக்கிக் கொடுப்பதற்காக சீட்டிழுப்பினை நடாத்த வேண்டியேற்பட்டது. அதற்குத் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகளை செய்து தருமாறு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளிற்கேற்ப தேர்தல் ஆணைக்குழுவினால் 2019.10.10 ஆம் திகதி பி.ப 02.30 மணிக்கு தேர்தல்கள் செயலகத்திற்கு அனைத்து வேட்பாளர்கள் அல்லது அவர்களின் முகவர்களை அழைத்து சீட்டிழுப்பை நடாத்தி ஒளிபரப்பு சந்தர்ப்பத்தை ஒதுக்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்திற்கு ஆணைக்குழுவின் அலுவலர்கள் தவிர்ந்த இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

இதற்கமைய 35 வேட்பாளர்களுக்காக குறித்தொதுக்கப் பட்ட மொத்த வானலை ஒளிபரப்புக் காலம் 3,150 நிமிடங்கள் ஆகும். இக் காலப்பகுதியினுள் அனைத்து

வேட்பாளர்கள் சார்பாகவும் முன்வைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 210 ஆகும். இந்த நிகழ்ச்சிகளை ஒலி/ஒளிப்பதிவு செய்வதற்காக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் கலையகத்தைப் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பங்கள் வழங்கப் பட்டதோடு சில வேட்பாளர்கள் பல்வேறு காரணங்களை முன்வைத்து தமது அரசியல் உரை உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வெளி நிறுவனங்களிலிருந்து ஒலி/ ஒளிப்பதிவு செய்து ஒலி/ஒளிபரப்பு செய்வதற்காக ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு கையளிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. வெளி நிறுவனங் களில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் போது தொழில்நுட்ப தடங்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிடுவதாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் செய்யப் பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிகழ்ச்சிகளின் தரத்தை பேணிச்செல்லும் விசேட தேவைப்பாட்டுக் கமைய வெளியிடங்களில் ஒளிப்பதிவு செய்வதற்கு Beta Cam Casstees அல்லது XD Cam Disk மாதிரியைப் பயன்படுத்த வேண்டுமென அனைத்து வேட்பாளர் களுக்கும் எழுத்து மூலமாகவும், வாய்மொழி மூலமாகவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

வேட்பாளர்களுக்காக வழங்கப்பட்ட இந்த வானலை ஒளிபரப்பு கால வசதிகளின் கீழ் உரையாற்றும் போது பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்க நெறிமுறைகள் அரசியற் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் வேட்பாளர் களின் முகவர்களுடன் கலந்துரையாடி தேர்தல் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கும் மற்றும் போட்டியிடுகின்ற சகல வேட்பாளர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. இந்த ஒழுக்க நெறிமுறைமை யினுள் எந்தவொரு வேட்பாளருக்கும் வேறு ஒரு வேட்பாளர் சார்பாக உரையாற்றுதல், வேட்பாளர்களின் கொள்கைகளுக்குரிய விடயங்கள் தவிர்ந்த ஆத்திரமூட்டுகின்ற, தீய நோக்கம் கொண்ட அல்லது வெறுப்புப் பேச்சுக்கள் அல்லது வேறு ஒரு தரப்பினரை ஊக்குவிக்கின்ற அல்லது பாதிப்புக்கு உட்படுத்துகின்ற விதத்தில் உரையாற்றுதல் கூடாது என்ற நிபந்தனை உள்ளடக்கப்பட்டது. இந்த அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகள் 2019.10.10 ஆம் திகதி இடம்பெற்ற வானலை ஒளிபரப்பு காலத்தை ஒதுக்கிக் கொடுக்கின்ற சந்தர்ப்பத்திற்கு வருகை தந்திருந்த முகவர்களிற்கு வாசித்துக்காட்டி தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அங்கு ஒவ்வொரு வேட்பாளருக்கும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட ஒளிபரப்பு நேர ஒதுக்கீடுகள் தொடர்பான தகவல்கள் **இணைப்பு 15** இல் காட்டப்பட்டுள்ளது. மேலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் வேட்பாளர்களுக்காக ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட ஒலிபரப்பு நேரங்கள் தொடர்பான தகவல்கள் **இணைப்பு 16** இல் காட்டப்பட்டுள்ளது.

### 6.7. வாக்காளர்களுக்கு தேர்தல் தொடர்பான விடயங்களை அஞ்சல் கட்டணமின்றி அனுப்புவதற்காக வேட்பாளர் களுக்கு வழங்கப்படுகின்ற வசதிகள்.

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 114 ஆம் பிரிவிற்கமைய பெயர்குறித்த நியமனங்கள் கையேற்கப்பட்ட தினத் திலிருந்து வாக்கெடுப்புத் தினத்திற்கு 10 நாட்களுக்கு முன்னரான காலப்பகுதியினுள் தேர்தல் தொடர்பான விடயமொன்றை (பத்திரமொன்றை) அஞ்சல் கட்டண மின்றி வாக்காளருக்கு அனுப்புவதற்கு வேட்பாளர் களுக்கு உரித்து உள்ளது.

அதன் பிரகாரம் உரிய பத்திரத்தை அனுப்பும் போது அஞ்சலுக்குக் கையளித்தல் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதையும் மற்றும் பத்திரத்தின் சுபாவத்திற்குரிய நிபந்தனைகள் அஞ்சல் மா அதிபர் அவர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். இது தொடர்பாக வேட்பாளர்களை அறிவுறுத்தி அஞ்சல் மா ஆணையாளர் அவர்களால் 2019.10.02 ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்திற்கமைய பத்திரத்தின் நிறை 30 கிராம் அல்லது அதற்குக் குறைவானதாக இருத்தல் வேண்டும் எனவும், 300 X 100 மில்லிமீற்றர் நீளம், அகலம் கொண்டதாக இருத்தல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் உரிய பத்திரங்கள் அந்தந்த மாவட்டங்களில் கையளிக்கப்பட வேண்டிய அஞ்சல் அலுவலகங்கள் தொடர்பான தகவல்களும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. வாக்கெடுப்பு தினத்திற்கு, பத்து நாட்களுக்கு முன்னர் இந்தப் பத்திரங்களை அஞ்சல் அலுவலகங்களுக்கு வழங்க வேண்டுமென்பதோடு, அதன் பின்னர் வழங்கப்படுகின்ற அவ்வாறான பத்திரங்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது. வாக்கெடுப்புத் தினத்திற்கு, ஐந்து நாட்களுக்கு முன்னரான காலப்பகுதியினுள் இந்தப் பத்திரங்கள் வாக்காளர்களுக்கு கிடைப்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அஞ்சல் மூலம் பத்திரமொன்றை அனுப்புவதற்காக வழங்கப்பட்டிருந்த வசதிகளை தவறாகப் பயன்படுத்துவதற்கு முயற்சித்த சந்தர்ப் பங்களும் அறிக்கையிடப்பட்டதோடு தேர்தல் ஆணைக் குழுவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்பட்டு அந்த நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு அஞ்சல் மா அதிபர் அவர்களால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 6.8. அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங் களைத் தாபித்தல்.

சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 73 ஆம் பிரிவின் கீழ் வேட்பாளர்களின் ஊக்குவித்தல் அலுவல்களுக்காக அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களை தாபிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் கீழ் 4 வகையான தேர்தல் பிரச்சார அலுவலகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு அவ்வாறான அலுவல கங்களை தாபிப்பதற்கு அதிகாரமுடையவர்கள், அலுவலகங்களை பேணிச்செல்ல முடியுமான காலம், அலுவலகங்களை அமைக்கக்கூடிய அதிகாரப் பிரதேசம், அமைக்கக்கூடிய அலுவலகங்களின் எண்ணிக்கை போன்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் இத்தேர்தல் காலப்பகுதியில் பேணிச்செல்ல முடியுமான அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்கள் தொடர்பான விபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களைத் தாபிப்பதற்குரிய அறிவுறுத்தல்கள் மற்றும் விண்ணப் பங்கள் அனைத்து சனாதிபதி பதவி வேட்பாளர்களின் தேர்தல் முகவர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கு வழங்கி அலுவலகங்களைத் தாபித்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கியதான PRE/2019/12 ஆம் இலக்க 2019.09.29 ஆம் திகதிய கடிதம் தேர்தல்கள் ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டது.

அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களைத் தாபித்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட அந்தக் கடிதத்தின் விடயங்களைத் தெளிவுபடுத்துதலின் கீழ் தேர்தல் மாவட்டங்கள், வாக்கெடுப்புப் பிரிவுகள் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டங்கள் ஆகிய அதிகாரப் பிரதேசங்கள் மற்றும் தேர்தல் முகவர்கள், அதிகார மளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் பிரதேச முகவர்கள் ஆகிய சொற்பிரயோகங்கள் தொடர்பாகவும் தெளிவான அடிப்படையில் விளக்கமளிக்கப்பட்டது. அதன் மூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களை தாபித்தல் சம்பந்தமாக விண்ணப்பிக்கும் போது ஏற்படுகின்ற தவறுகள் மற்றும் தெளிவின்றி அலுவல்களை மேற்கொள்வதன் காரணமாக ஏற்படுகின்ற பிரச்சினை களைக் குறைத்துக் கொள்வதற்கு சாத்தியம் கிட்டியது.

| தாபிக்க முடியுமான அலுவலக வகை | அலுவலகத்தை தாபிப்பதற்கு அதிகாரம் உள்ளவர்கள் | அலுவலகத்தை பேணிச் செல்ல முடியுமான காலம் | அலுவலகத்தை தாபிப்பதற்கு முடியுமான அதிகாரப்பிரதேசம் | தாபிக்க முடியுமான அலுவலகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அறிவித்தல் கொடுக் கப்பட்ட மத்திய தேர்தல் அலுவலகம் | வேட்பாளர்/ தேர்தல் முகவர்/ அதிகார மளிக்கப்பட்ட முகவர் | 2019.10.07 ஆம் திகதி தொடக்கம் 2019.11.17 ஆம் திகதி நள்ளிரவு வரை | தேர்தல் மாவட்ட அதிகாரப் பிரதேசத்தினுள் | ஓர் அலுவலகம் மாத்திரம் |
| அறிவித்தல் கொடுக் கப்பட்ட கிளை தேர்தல் அலுவலகம் (i) | வேட்பாளர்/ தேர்தல் முகவர்/ அதிகாரமளிக் கப்பட்ட முகவர்/ பிரதேச முகவர் | 2019.10.07 ஆம் திகதி தொடக்கம் 2019.11.14 ஆம் திகதி நள்ளிரவு வரை | ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டம் | ஒரு வாக்கெடுப்பு மாவட்டத்திற்கு ஒன்று வீதம் |
| அறிவித்தல் கொடுக் கப்பட்ட மத்திய தேர்தல் அலுவலகம் (ii) | வேட்பாளர்/ தேர்தல் முகவர்/அதிகாரமளிக் கப்பட்ட முகவர்/ பிரதேச முகவர் | 2019.11.15 ஆம் திகதி தொடக்கம் 2019.11.17 ஆம் திகதி நள்ளிரவு வரை | ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவு | ஒரு வாக்கெடுப்பு பிரிவுக்கு ஒன்று வீதம் |
| சாதாரண வதிவிடத்தை அலுவலகமாகப் பயன்படுத்தல் | வேட்பாளர்/ அதிகாரமளிக்கப்பட்ட முகவர் | 2019.10.07 ஆம் திகதி தொடக்கம் 2019.11.17 ஆம் திகதி நள்ளிரவு வரை | தேர்தல் மாவட்ட அதிகாரப் பிரதேசத்தினுள் | ஓர் அலுவலகம் மாத்திரம் |

மேலும் இந்த அறிவுறுத்தல் கடிதம் மூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களில் பிரச்சாரப் பதாகைகள், கொடிகள் மற்றும் வேட்பாளரின் உருவப்படம் போன்றவைகளைக் காட்சிப்படுத்தும் போது நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய விதம் பற்றி அறிவிக்கப்பட்டது. இவற்றின் மூலம் தேர்தல்கள் காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத மான பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாடு களைக் குறைத்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அரசாங்கத்திற்குரிய நிலப் பிரதேசங்கள் (காணிகள்), அரசாங்க நிறுவனங்களுக்குரிய வளாகங்கள் மற்றும் ஏனைய பொது இடங்களை தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு முறையற்றவாறு பயன்படுத்தப்படு வதைத் தவிர்க்கும் பொருட்டு அரசாங்க, மாகாண சபைகள், உள்ளூராட்சி அதிகார சபைகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் அல்லது சபைகளுக்குச் சொந்தமான கட்டிடமொன்றில், காணியொன்றில், உத்தியோகபூர்வ இல்லமொன்றில், ஒதுக்கிடமொன்றில் மேலே குறிப்பிடப் பட்ட எந்தவோர் அலுவலகத்தையும் தாபிக்க முடியாதென நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அரசாங்கத் திற்குச் சொந்தமான குடியேற்ற வீடொன்றில் அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான வீட்டுத் தொகுதி யொன்றின் வீடொன்றில் உரிய அனுமதியுடன் வதிந்திருக்கின்ற வேட்பாளர் ஒருவருக்கு அந்த வீட்டை பிரச்சார அலுவலகமொன்றாகப் பயன்படுத்தும் ஆற்றல் தொடர்பாகவும், அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலக மொன்றுக்கு அண்மையில் மின் கம்பங்கள், பெருந் தெருக்கள், நடை பாதைகள், எல்லை மதிற்சுவர்கள் போன்றவற்றை பிரச்சார அலுவல்களிற்காகப் பயன் படுத்துவதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும் எனவும் நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எவரேனும் வேட்பாளர் ஒருவருக்காகத் தாபிக்கப்பட்ட அலுவல கத்தில் வேறு வேட்பாளர் ஒருவரை ஊக்குவிக்கும் வண்ணம் அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பிரச்சார அலுவல்களைச் செய்வது சட்ட விரோதமான செயற்பாடொன்றாகும் எனவும் அதே போன்று சட்டத்தை மீறுதல் தொடர்பாக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மேற்படி கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது.

சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அடிக்கடி பொதுமக்கள் வருகை தருகின்ற நேரடியாகத் தேர்தல் அலுவல்களுடன் தொடர்புபடுகின்ற அரச நிறுவனங் களான உள்ளூராட்சி நிறுவனங்கள், பிரதேச செயல கங்கள், அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் நீதிமன்றக் கட்டிடத் தொகுதிகள் என்பவற்றிற்கு அண்மித்ததாக போலவே பிள்ளைகள் கல்வி கற்கின்ற அரசாங்கப் பாடசாலைகளிற்கு அண்மித்த பிரதேசங்களிலும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களை தாபிப்பதன் மூலம் பொதுமக்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஏற்படக்கூடிய சிரமங்களைக் குறைக்கும் பொருட்டு அவ்வாறான இடங்களில் அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களை தாபிப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு தமது பிரதேச தொழிற்படுநர்களை அறிவுறுத்துமாறு, வேட்பாளர்கள், அவர்களது தேர்தல் முகவர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் ஆகியோர் அறிவுறுத்தப்பட்டனர்.

நேரடியாக வாக்கெடுப்புடன் தொடர்புடைய அரச நிறுவனமொன்றிற்கு அண்மித்ததாக அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகமொன்றைத் தாபிக்கும் போது தேர்தல் அலுவலகத்திற்கும் குறித்த நிறுவனங்களுக்கும் இடையில் காணப்பட வேண்டிய தூர அளவை நிர்ணயித்ததன் மூலம் பொது மக்களுக்கு ஏற்படுகின்ற இடையூறுகளைக் குறைத்துக் கொள்வதற்கு முடிந்தது. அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவல கங்களைத் தாபிக்கும் போது இந்தச் சட்டங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய அலுவல்கள் மேற்கொள்ளப் பட்டமை நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு பெரிதும் உதவியாக அமைந்தது.

# ஏழாம் அத்தியாயம்

## தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.

### 07. தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள்.

தேர்தலொன்றின் போது ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய சட்ட ஏற்பாடுகள் பல உள்ளன. அதாவது அரசியலமைப்பு மூலம் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் மற்றும் அந்தந்த தேர்தல்களுக்குரிய சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் என்பன அவற்றுள் முக்கியமானவை. அதற்கமைய, சனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான இத் தேர்தலுக்குரிய, அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட சட்ட ஏற்பாடுகள் போன்றே சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் அனைத்தும் ஏற்புடையதாகும். சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான கட்டளைகள் போன்றே தேர்தல்கள் செயன்முறையில் உள்ளடங்கும் சாதாரண நடைமுறைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்துவது கட்டாயமானதாகும். அவ்வாறு செய்யும் போது முக்கியத்துவம் பெறுகின்ற சில விடயங்கள் தொடர்பாக இந்த அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சட்டத்திற்குப் புறம்பான ஏனைய சட்டங்கள் மூலமும் வாக்கெடுப்பிற்கு ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய சட்டங்களை உள்ளடக்கப்பட்டுள்ளதால், அவை அனைத்தின் பாலும் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

### 7.1. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள்.

சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தலொன்றின் போது வாக்களிப் பதற்குத் தகைமையுடைய அனைத்து வாக்காளர் களுக்கும் தேர்தல் மாவட்டத்தின் பெயரும் இலக்கமும்,தேருநர் இடாப்பில் குறிப்பிடப்பட்டவாறாக தேருநரின் பெயரும், தகைமையளிக்கும் முகவரியும் மற்றும் பதிவு இலக்கமும், வாக்கெடுப்புப் பிரிவும் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டமும், தேருநருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையம் மற்றும் வாக்கெடுப்பு நடாத்தப்படுகின்ற திகதியும் மற்றும் நேரங்களும் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்றை தேருநர் ஒருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ள வீட்டின் முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு அல்லது வேறு வாக்களிப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ள தேருநர்களுக்கு அனுப்பப்படுகின்ற உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் அதுபற்றிக் குறிப்பிட்டு அனுப்பி வைப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் வாக்கெடுப்புத் திகதிக்கு ஆகக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் தேருநர்களுக்குக் கிடைக்கக் கூடிய வகையில் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் உரிய காலப்பகுதியினுள் கிடைக்கப்பெறவில்லையெனில் பதிவு செய்யப்பட்டுள்ள இடத்திற்கு சேவை வழங்குகின்ற அஞ்சல் அலுவலகத்திற்குச் சென்று ஆளடையாளத்தை உறுதிப்படுத்தியதன் பின்னர் தேருநர்கள் தமது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியுமென அறிவித்தல் கொடுக்கப்பட்டது. 2019 சனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைத் தேருநர்களுக்கு விநியோகிப் பதற்காக 2019.10.23 ஆம் திகதி மாவட்டத் தெரிவத் தாட்சி அலுவலர்களினால் உரிய அஞ்சல் அலுவலகங் களுக்கு கையளிக்கப்பட்டன.

ஆரம்ப காலப்பகுதியில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு உரிய விபரங்கள் எழுதப்பட்டு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் தயார் செய்யப்பட்டன. இருப்பினும் தற்போது தேருநர் இடாப்பின் அனைத்துத் தரவுகளும் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளதால், அந்த தரவுகளை அச்சிடுதல் (Data Printing) மூலம் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை எளிதாகவும் மற்றும் விரைவாகவும் அச்சிட்டுக் கொள்வதற்கான சாத்தியம் கிட்டியது. இருப்பினும், கணினித் தரவுகளை அச்சிடும் வசதிகள் அரசாங்க அச்சகத்திடம் இல்லாதிருந்த மையால் அந்த வசதிகள் காணப்பட்ட மற்றும் இதற்கு முன்னர் இந்தப் பணியை ஆற்றிய அனுபவம் கொண்ட தனியார் நிறுவனத்தின் மூலம் அச்சிட்டுக் கொள்ளப் பட்டது. இந்த உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் ஏற்புடையவாறு மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு தேருநர்களுக்கு அனுப்பப்பட்டன. அச்சிடப்பட்ட உத்தி யோகபூர்வ வாக்காளர் அட்டைகளை தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்கி தேருநர்களுக்கு அஞ்சல் மூலம் விநியோகிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. குறித்த காலப்பகுதிக்குள் விநியோ கிக்கப்படாதிருந்த உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அஞ்சல் அலுவலகத்திற்கு சமூகமளித்து பெற்றுக்கொள்வதற்கு அல்லது வேறு தினமொன்றில் விநியோகிப்பதற்குத் தேவையான வசதிகள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் ஒழுங்கு செய்யப் பட்டன.

### 7.2. வாக்காளரின் ஆளடையாளத்தை உறுதி செய்தல்.

தேர்தலொன்றின் போது வாக்காளரொருவருக்கு வாக்குச் சீட்டொன்றை வழங்குவதற்கு முன்னர் அவரது ஆளடையாளம் புகைப்படமொன்றுடன் கூடிய அடையாள அட்டையொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கமைய தேசிய அடையாள அட்டை இதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய பிரதானமான அடையாளம் காணல் ஆவணமொன்றாகும். இருப்பினும், எந்தவித தடைகளு மின்றி தேசிய அடையாள அட்டைகளை பொதுமக்கள்

பெற்றுக் கொள்வதற்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கும் வரை மற்றும் அனைத்து வாக்காளர்களுக்கும் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு முடிவடையும் வரை ஏனைய ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆளடையாள ஆவணங்களையும் வாக்களிக்கும் போது வாக்காளர்களின் ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்வதற்காக ஏற்றுக் கொள்வதற்கு முன்னைய தேர்தல்கள் ஆணையாளர்களினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தேர்தல் ஆணைக்குழுவினாலும் பின்பற்றப்பட்டது. அதற்கமைய வாக்காளர்கள் தமது வாக்கைப் பிரயோகிக்கும் போது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டைக்கு மேலதிகமாக பின்வருகின்ற அடையாள அட்டைகளையும் செல்லுபடியான அடையாள அட்டைகளாக ஏற்றுக்கொள்ளுமாறு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு விசேடமாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

- செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச் சீட்டு.
- செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.
- அரசாங்க சேவை ஓய்வூதிய அடையாள அட்டை.
- முதியோர் அடையாள அட்டை.
- ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மதகுருமார்களுக்கான அடையாள அட்டை.
- ஆட்பதிவுத் திணைக்களத்தினால் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்துள்ள ஆட்களுக்காக விநியோகிக்கப்பட்ட "தேசிய அடையாள அட்டையின் தகவல்களைப் உறுதிப்படுத்தும் கடிதம்."

மேற்குறித்த ஏதேனுமொரு செல்லுபடியான அடையாள அட்டையொன்று அல்லது ஆவணமொன்று இல்லாத வாக்காளர்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற தற்காலிக வாக்காளர் அடையாள அட்டையொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அது வாக்களிப்பதற்கு செல்லுபடியானதெனவும் 2019.10.14 ஆம் திகதி 34 ஆம் இலக்க ஊடக அறிவித்தல் மூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்டது. அதற்கமைய சனாதிபதித் தேர்தலுக்காக 195,433 தற்காலிக அடையாள அட்டைகள் தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்டன. இந்த தற்காலிக அடையாள அட்டைகள் மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் வழங்கப்பட்டன.

### 7.3. துடைத்தழிக்க முடியாத மையினால் வாக்காளர்களை அடையாளமிடுதல் இன்றேல் தோதான குறியினால் அடையாளமிடுதல்.

சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 36(3) ஆம் பிரிவிற்கமைய வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்குச் சீட்டொன்றை கோருகின்ற அல்லது அத்தகைய நோக்கத்திற்காக வருகை தந்துள்ள எவரேனும் வாக்காளர் இருப்பாராயின் அவர் தோதான குறியினால் அடையாளமிடப்படல் வேண்டுமெனக் குறிப்பிடப் பட்டுள்ளது. வாக்காளர் ஒருவர் ஒரு தடவைக்கு மேற்பட்ட தடவைகள் வாக்கினைப் பிரயோகிப்பதைத் தவிர்க்கும் முகமாக எடுக்கப்படுகின்ற ஒரு நடவடிக்கையாக இந்த அடையாளமிடுதல் கருதப்படுகின்றது. 1965 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலில் போது தோதான குறியீட்டால் அடையாளமிடுவதற்காக துடைத்தழிக்க முடியாத மையினால் வாக்காளர்களை அடையாளமிடுதல் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு வாக்காளரின் இடது கையின் சிறிய விரலின் மேற்பகுதி துடைத்தழிக்க முடியாத மையினால் பூசப்பட்டு அடையாளமிடப்படும்.

இந்த அடையாளமிடுதல் அறிமுகப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தின் போது வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்காக தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக புகைப்படமொன்றுடன் கூடிய அடையாள அட்டையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயத் தேவைப்பாடொன்று காணப்படவில்லை. தற்போது எவரேனும் வாக்காளர் ஒருவருக்கு தமது வாக்கைப் பிரயோகிப்பதற்காக தேசிய அடையாள அட்டையினூடாக அல்லது தேர்தல் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பிற ஆளடையாள ஆவணமொன்றின் மூலம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவது கட்டாயமான விடயமொன்று என்பதால், தொடர்ந்தும் பாரிய தொகைப் பணத்தைச் செலவு செய்து கொண்டு மற்றும் அதிக எண்ணிக்கையான அலுவலர்களை பணியில் ஈடுபடுத்தி துடைத்தழிக்க முடியாத மையினால் வாக்காளர்களை அடையாளமிடுகின்ற தேவைப்பாட்டை மீளாய்வு செய்ய வேண்டிய ஒரு விடயமாகும். வாக்காளரை அடையாளமிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற இரசாயனப் பொருட்கள் அடங்கிய மையை தமது விரலில் பூசுவது தொடர்பாக வாக்காளர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்ற சந்தர்ப்பங்களும் அண்மைக்காலத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளன. அந்த மை (பேனா) உரிய வாறு செயற்படாத சந்தர்ப்பங்களில் வாக்காளர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் உசாவுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்காக அடையாள அட்டை ஒன்றின் மூலம் ஆளடையாளத்தை உறுதிசெய்வது கட்டாயமானதாக்கப் பட்டதன் மூலம் குறித்த ஆள் தவிர்ந்த வேறு ஆளினால் போலியாக வாக்களிப்பதற்கான சந்தர்ப்பங்களை தவிர்த்துக் கொள்ள முடிந்துள்ளது. அதாவது, ஆள்மாறாட்ட வாக்களிப்பைக் குறைப்பதற்கு அடையாள அட்டையை சமர்ப்பிப்பது பெரிதும் உதவியாக அமைந்துள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் பிரகாரம் தோதான குறியீட்டால் வாக்காளர்களை அடையாளமிடுவதை மீளாய்வு செய்வதற்காக சட்டத் திருத்தங்களைச் செய்வதற்காக அல்லது அடையாளமிடுவதற்காக துடைத்தழிக்க முடியாத மை பூசுவதற்குப் பதிலாக மாற்று வழிமுறைகளுக்கு செல்வதற்கான காலம் மலர்ந்துள்ளது.

### 7.4. இறந்த அல்லது வெளிநாடு சென்றுள்ள வாக்காளர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களின் போது மேற்கொள்ளப்பட்டவாரே இத் தேர்தலின்போதும் வாக்கெடுப்பு நிலையப் பொறுப்பு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட தேருநர் இடாப்புப் பிரதிகளில் இறப்பெய்தியதாக அறிவிக்கப்பட்ட வாக்காளர்களின் பெயர்கள் "D" எழுத்தினாலும் மற்றும் வெளிநாடு சென்றுள்ள வாக்காளர்களின் பெயர்கள் "A" எழுத்தினாலும் அடையாளமிடப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பெயர் பதிவுசெய்யப் பட்டுள்ள ஆனால் 2019.10.15 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் இறப்பெய்தியவர்களின் விபரங்கள் மற்றும் 2019.10.15 ஆம் திகதியாகும் போது வெளிநாடு சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்ட வாக்காளர்களின் விபரங்களும் கிராம அலுவலர்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டு வாக்காளருக்கு அனுப்பப்படுகின்ற உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் அது தொடர்பான குறிப்புக்களையிட்டு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இறந்த அல்லது வெளிநாடு சென்றுள்ள வாக்காளர்களின் வாக்குகளைப் போலியாக வேறொரு ஆளினால் பிரயோகிக்கப்படுவதற்குள்ள சந்தர்ப்பத்தை தவிர்ப்பதற்காக இவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வாக்கெடுப்பு நிலையத்தில் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள தேருநர் இடாப்பில் பெயருக்கு எதிரில் இவ்வாறான ஏதேனும் குறிப்பொன்று இடப்பட்டுள்ள ஆளொருவர் வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகைதருமிடத்து, அந்த ஆள் வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களினால் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் வாக்குச் சீட்டொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாயின் சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 41 மற்றும் 43 ஆம் பிரிவுகளில் உள்ளடக் கப்பட்டுள்ள வெளிப்படுத்துகையில் கையொப்பத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மாத்திரம் அத்தகைய ஒருவருக்கு வாக்குச் சீட்டொன்று வழங்கப்படல் வேண்டுமென வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அந்தந்த மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்கு கிராம அலுவலர்களால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இறப்பெய்தி யுள்ளதாக மற்றும் வெளிநாடு சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்ட வாக்காளர்களின் விபரங்கள் **இணைப்பு 18 இல்** காட்டப்பட்டுள்ளது.

### 7.5. அலுவலக முறையான அடையாளம்- 35 ஆம் பிரிவு.

சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 35 ஆம் பிரிவின் மூலம் வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டுக்களை வழங்க வேண்டிய விதம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே பிரிவின் 35 (இ) பிரிவிற்கமைய வாக்காளருக்கு வாக்குச் சீட்டொன்றை வழங்குவதற்கு முன்னர் அது அலுவலக முறையான அடையாளமொன்றினால் அடையாளமிடப்பட/ பொறிக்கப்படல் வேண்டும். அலுவலக முறையான அடையாளத்தை வாக்குச் சீட்டில் பதிக்கப்படல் அல்லது வாக்குச் சீட்டில் துளையிடுதல் செய்ய முடியும். வழமை யாகத் தேர்தலொன்றின் போது வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் இந்த அலுவலக முறையான அடையாளம் வாக்கெடுப்புக்கு அண்மித்த தினமொன்றில் தேர்தல் ஆணைக்குழுவினால் மாவட்டத் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்பாக அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டது. அந்தந்த வாக்கெடுப்பு நிலையங்களில் பயன்படுத்தப்படவுள்ள அலுவலக முறையான அடையாளம் தொடர்பான தகவல்கள் வாக்கெடுப்பு நிலைய ஊழியர்களுக்குக் கூட வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்படும் வரை அறிந்து கொள்ள முடியாத வகையில் அவற்றின் இரகசியத் தன்மையினைப் பேணும் வகையில் உறையிலிட்டு முத்திரை பொறித்து சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டன. வாக்கெடுப்புத் தினத்தில் வாக்கெடுப்பை ஆரம்பிப்பதற்கு சிறிது நேரத்திற்கு முன்னர் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் பணியாட்குழு வினரின் முன்னிலையில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் முத்திரை பொறிக்கப்பட்டு வழங்கப் பட்டுள்ள உறையிலிருந்து ஒவ்வொரு வரிசைக்கும் எழுமாறாகத் தெரிவு செய்யப்படுகின்ற அலுவலக முறையான அடையாளமொன்று வீதம் வழங்கப்படும். அலுவலக முறையான அடையாளங்கள் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டுக்களை அடையாள மிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட அலுவலக முறையான அடையாளங்கள் வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் பாதுகாப்பாக மீளக் கையளிக்கப்படுதல் வேண்டும். அதே போன்று வாக்கெடுப்பு நிலையத்தில் பயன் படுத்தப்பட்ட அலுவலக முறையான அடையாளங்களின் மாதிரிகளை அதற்காக வழங்கப்பட்டுள்ள உறையிலிட்டு வாக்கெண்ணல் நிலையத்திற்குரிய தலைமை வாக்கெண்ணல் அலுவலருக்கு கையேற்றல் நிலை யத்தின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரூடாக கையளித்தல் வேண்டும். வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் இந்த அலுவலக முறையான அடையாளங்களை உடனடியாக மீளத் தேர்தல் ஆணைக்குழுவிற்குக் கையளிப்பதற்குத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள இந்தச் செயற்பாடுகளின் நோக்கமாக அமைவது, வாக்கெடுப்பின் போது அதன் சுயாதீனத் தன்மை, நம்பகத்தன்மை மற்றும் இரகசியத் தன்மை ஆகியவற்றைப் பாதுகாப்பதாகும்.

### 7.6. தேர்தலொன்றின் போது உடல் வலிமையிழப் பொன்றிற்குட்பட்ட வாக்காளர்களுக்கு விசேட போக்கு வரத்து வசதிகளைச் செய்து கொடுத்தல்.

சாதாரண நிலைமையொன்றின் கீழ் வாக்கெடுப்பு நிலையமொன்றுக்கு வாக்காளர்கள் நடந்துவருதல் வேண்டும். இருப்பினும், உடல் வலிமையிழப் பொன்றிற்குட்பட்ட வாக்காளர்கள் சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 82(4)(இ) ஆம் பிரிவிற்கமைய உரிய

வாக்கெடுப்பு நிலையத்திற்கு வாகனம் மூலம் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய முறை தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் மற்றும் ஊடக அறிவித்தல் ஊடாக பொதுமக்களை அறிவுறுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு வினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வாக்கெடுப்பு தினத்திற்கு 07 நாட்களுக்கு முன்னர் வைத்திய பரிந்துரைகளுடன் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில் வாகன வசதிகளைப் பெற்றுக் கொள்வ தற்கான விண்ணப்பமொன்றைச் செய்யமுடியும். தெரிவத் தாட்சி அலுவலர்களிடமிருந்து அனுமதியைப் பெற்றுக் கொண்ட உடல் வலிமையிழப்பொன்றிற்குட்பட்ட வாக்காளர்களுக்கு வாகனத்தில் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படும். இந்த வசதிகள் மிகவும் விரிவானதாகவும் மற்றும் எளிதானதாகவும் காணப்படல் வேண்டுமென்பது அவதானிக்கப்பட்டது.

### 7.7. ஊழியர் வாக்களிப்பதனை இயலச் செய்வதற்காக விடுமுறை வழங்குதல்- 110 ஆம் பிரிவு.

தேர்தலொன்றின் போது அஞ்சல் மூலம் வாக்களிப் பதற்குரிய தகைமையை மிகக் குறைந்த எண்ணிக்கை யானோரே பெற்றுக்கொள்கின்றனர். பாதுகாப்பு மற்றும் சம்பந்தப்பட்ட அலுவல்களில் ஈடுபட்டுள்ள முப்படை யினர்கள், பொலிஸ் திணைக்களம், சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியன உள்ளடங்கலாக தேர்தல்கள் பணிகளுடன் தொடர்புடைய அத்தியாவசியத் சேவை களை வழங்குகின்ற அஞ்சல், மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் ஆகிய நிறுவனங்களில் சேவையில் உள்ளவர்களுக்கு அந்தச் சேவைகளைத் தடைப்படாத வாறு பேணிச் செல்வதற்கான தேவைப்பாட்டின் மீது அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகள் வழங்கப்படுகின்றன. நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய தாக்கமொன்றைச் செலுத்துகின்ற பகுதியளவிலான அரச மற்றும் தனியார் பிரிவுகள் மூலம் பேணிவரப்படுகின்ற பல்வேறு வியாபார நிறுவனங்களில் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் சேவைகளைத் தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்வதற்கான தேவைப்பாடு காரணமாக அந்த நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் தொழில்தருநர்கள் அந்த ஊழியர்களுக்கு வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னர் அவர்களின் வாக்கைப் பிரயோகிப்பதற்கு சந்தர்ப்பமொன்றை ஏற்படுத்திக் கொடுத்தல் அல்லது அதற்காக அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளை வழங்குதல் தொடர்பாக அடிக்கடி கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும்போது அத்தகைய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் (ஊழியர்கள்) கணிசமான எண்ணிக்கையானோர் உள்ளனர். இருந்த போதிலும், அக்கோரிக்கைகளுக்கான வசதிகளை வழங்குவதற்குரிய முறையொன்று இதுவரை தயாரிக் கப்படவில்லை. தேர்தல்கள் சட்டங்களிற்குத் தேவையான திருத்தங்கள், அஞ்சல் வாக்குகளுக்காக செய்ய வேண்டிய செலவுகள் மற்றும் அச்செயற்பாடுகளை ஏற்பாடு செய்யும் போது ஏற்படலாமெனக் கருதப்படுகின்ற பிரச்சினைகள் என்பன அத்தகைய முறைமையொன்றை தயாரித்தல் தாமதம் அடைவதிற்குப் பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளது. தேவையான சட்டங்களைத் திருத்துவதற்கு ஆணைக்குழு மும்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ள போதிலும் அதன் எதிர்கால நடவடிக்கைகள் தவிர்க்க முடியாத காரணங்களால் தாமதமடைந்து வருகின்றன. மேலும், அஞ்சல் மூலம் வாக்களித்தல் வசதியொன்றை வழங்குவதற்குப் பதிலாக வாக்கெடுப்புத் தினத்தில் வேறு வாக்கெடுப்பு நிலையங் களில் அல்லது முன்கூட்டி வாக்களிப்பதற்கான வசதி களை வழங்குதலின் கீழ் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு வாக்களிப்பதற்கான வசதிகளை வழங்குதல் தொடர்பாகக் கவனம் செலுத்திய போதிலும்,அதனை இதுவரை செயல்படுத்த முடியவில்லை.

இருந்த போதிலும், சட்டத்தின் 110 ஆம் பிரிவின் படி,தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு (ஊழியர்களுக்கு) நேரடியாக தமக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு இயலச் செய்வதற்குப் போதுமானதெனக் கருதக்கூடிய சம்பள இழப்பற்ற விடுமுறையை தொழில்தருநர் அந்த ஆளுக்கு வழங்குதல் வேண்டும். இதற்கான குறைந்தபட்சக் காலம் 4 மணித்தியாலங்களாகும். அவ்வாறே தேர்தல் ஆணைக் குழு, தொழில் அமைச்சு, தொழில் திணைக்களம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியன தொழில்தருநர்களுடன் கலந்துரையாடி வாக்களிப் பதற்காக செல்லவேண்டிய தூரத்தின் அளவுக்கமைய விடுமுறை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொருவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்ததன் பின்னர் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டால் குறித்த சட்ட விதிகளுக்கமைய தண்டனைக்கு ஆளாதல் வேண்டும். இது தொடர்பில் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட ஊழியர்கள் தமது வாக்கை பிரயோகிப்பதற்கு இயலச் செய்வதற்காக விடுமுறை வழங்குதல் தொடர்பான அறிவித்தல் (ஊடக அறிவித்தல் இலக்கம் 51) **இணைப்பு 19** இல் காட்டப்பட்டுள்ளது.

# எட்டாம் அத்தியாயம்

## வாக்கெடுப்பை நடாத்துதல்.

### 8. வாக்கெடுப்பு தினத்திற்கு முந்திய தினம் ஆற்றப்பட வேண்டிய அலுவல்கள்.

சனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் இரண்டாம் (2) பிரிவின் கீழ் வாக்கெடுப்பு பற்றிய பிரகடனம் வெளியிட்டதன் பின்னர் வருகின்ற வாக்கெடுப்புத் தினம் மற்றும் வாக்குகளை எண்ணி முடிவுகளை வெளியிடுகின்ற பணிகள் தேர்தலொன்றின் மிகவும் உயர்வான சந்தர்ப்பமாகக் கருதப்படுகின்றன. வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னர் கட்டாயமாக நிறை வேற்றப்பட வேண்டியிருந்த அனைத்து ஒழுங்கமைப்பு அலுவல்களும் 2019.11.15 ஆம் திகதி காலையாகும் போது முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. வாக்கெடுப்பு தினத்திற்கு முந்திய தினத்தில் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அலுவலர்கள், வாக்குச் சீட்டுக்கள், வாக்குப் பெட்டிகள் உள்ளடங்கலாக நியதிச்சட்ட ஆவணங்கள் மற்றும் பொருட்களாதிய வற்றை அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலர்களின் பிரதானமான ஒரு பொறுப்பாகும். அதற்கமைய வாக்கெடுப்பிற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலை யங்களுக்கும் இணைப்புச் செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், வாக்கெடுப்பு நிலைய எழுதுவினைஞர்கள் ஆகியவர் களுக்கு வாக்கெடுப்பு நிலையக் கடமைகள் தொடர்பாக எழுத்து மூலமான அறிவுறுத்தல்கள் சகிதம் வாக்கெடுப்பு நிலையத்திற்கு பயணிப்பதற்கான பயணப் பாதை விபரங்கள் உள்ளடக்கப்பட்ட நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்ததோடு, வாக்கெடுப்புக்கு முந்திய தினம் பி.ப. 02.00 மணிக்கு உரிய வாக்கெடுப்பு நிலை யங்களுக்கு அறிக்கையிட்டு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களினால் நடாத்தப்படுகின்ற ஒத்திகையில் கட்டாயமாக கலந்துகொள்ள வேண்டுமெனவும், மறுநாள் கடமைகளுக்காக தயாராகுதல் வேண்டுமெனவும் அதன் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வலுவலர்கள் வாக்கெடுப்பு நிலையத்திற்கு கடமைக்காக அறிக்கையிடுவதற்காக சொந்த வாகனம் அல்லது பொதுப் போக்குவரத்து சேவையைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவுப் பகுதிகளில் அமையப்பெற்றுள்ள வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வருவதற்காக கடற்படையினரின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பெண் அலுவலர்கள் இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் வதிந்துள்ள பிரதேசத்தில் அவர் வாக்காளரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையம் தவிர்ந்த வேறு அண்மித்த வாக்கெடுப்பு நிலையமொன்றுக்கு கடமைகளுக்காக நியமனம் செய்யப்பட்டிருந்ததோடு ஆண் அலுவலர்கள் தேவைப்பாட்டுக்கு அமைவாக மாவட்டத்தினுள் அல்லது விருப்பின் பிரகாரம் கடமையாற்றுகின்ற மாவட்டத்திற்கு வெளியில் வேறு மாவட்டங்களில் கடமைகளுக்காக இணைப்புச் செய்யப் பட்டிருந்தனர்.

ஒவ்வொரு தேர்தல்கள் மாவட்டங்களின் வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட பொருட்களாதியவற்றை விநியோ கித்தல் மற்றும் கையேற்றல் நிலையங்கள் ஒரு வளாகத்தில் அல்லது தேவைப்பாட்டுக்கமைய பல வளாகங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த விநியோ கித்தல், கையேற்றல் நிலையமொன்றுக்காக பணிப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவர் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது இரண்டு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், இரண்டு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர் ஒருவர், இரண்டு எழுதுவினைஞர்கள் மற்றும் இரண்டு அலுவலக உதவியாளர்கள் ஆகியோர் இணைப்புச் செய்யப்பட்டனர். விநியோகித்தல், கையேற்றல் நிலையங்களுக்காக நியமனம் செய்யப்பட வேண்டிய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு உரிய கடமைகள் மற்றும் மாவட்டத்தின் ஒழுங்கமைப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அறிவுறுத்தல் வகுப்புக்கள் நடாத்தப்பட்டிருந்தன. வாக்கெடுப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாகச் செயற்படுகின்ற அனைத்து சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், பல வாக்கெடுப்பு நிலையங்கள் அதாவது வலயமொன்றினை மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்படவுள்ள வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் வாக்கெடுப்புக்கு முந்திய தினத்தில் கடமைக்கு அறிக்கையிட வேண்டிய இடங்கள் எவை என்பது தொடர்பாக முன்கூட்டியே அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் வலயப் பொறுப்புத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வாக்கெடுப்பு நடைமுறைகள்,தேர்தல்கள் சட்டங்கள், வாக்கெடுப்பு நிலைய நிர்வாகம், தேர்தல்கள் சட்டங்களை செயல் வலுவாக்கம் செய்தல் போன்றே மாவட்டத்தின் தேர்தல் ஒழுங்கமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகவும் அறிவுறுத்தல் அமர்வுகள் நடாத்தப்பட்டு முறையான அடிப்படையில் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் வலயத்துக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஆகியவர்களில் பெரும்பாலானவர்களை அவர்கள் வதிந்துள்ள அல்லது கடமையாற்றுகின்ற மாவட்டத்திற்கு வெளியேயான மாவட்டங்களுக்கு இணைப்புச் செய்வ தற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டிருந்ததோடு ஏனைய ஆளணியினரை கடமையாற்றுகின்ற அலுவலகங்கள் அமையப்பெற்றுள்ள பிரதேசங்களில் வதிந்துள்ள பிரதேசத்துக்கு வெளியேயான வாக்கெடுப்பு அதிகாரப் பிரதேசங்களுக்கு இணைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

### 8.1. வாக்கெடுப்பு நிலையத்திற்கு கொண்டுசெல்லக்கூடிய பொருட்களை விநியோகித்தல்.

இந்த ஒழுங்கமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் வலயப் பொறுப்பு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அவர்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையம் அல்லது வலயம் குறிப்பிடப்பட்ட முறையான நியமனம் கடிதங்கள் வாக்கெடுப்பு தினத்திற்கு முந்திய

தினத்திலேயே வழங்கப்பட்டன. எனவே, வேட்பாளர்கள் அல்லது பிரதேச அரசியல்வாதிகள் தேர்தல் கடமை களில் ஈடுபடுத்தப்படுகின்ற அலுவலர்களுக்கு அழுத்தங் களை பிரயோகித்து அவர்களுக்குச் சாதகமான விதத்தில் செயலாற்றுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது என்ற மூடநம்பிக்கை காரணமாக பொதுவாக இந்த முறைமை அனைத்துத் தேர்தல்களிலும் மேற்கொள்ளப் படுகின்றது. அதற்கமைய அரச அலுவலர்கள் அல்லது வேறு தரப்பினர்கள் தேர்தல் அலுவலர்களின் கடமை நிலையங்கள் தொடர்பாக முன்கூட்டியே அறிந்து கொள்வதில்லை என்பதால் அழுத்தங்கள் பிரயோகிக்கப் படுவதாக நிலவுகின்ற மூடநம்பிக்கை பெரும்பாலும் மாற்றமடைந்துள்ளது. முன்னர் அறிவிக்கப்பட்டவாறு வாக்கெடுப்புக்கு முந்திய தினத்தில் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகம் அல்லது வேறு இடமொன்றுக்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் அறிக்கையிட்டதன் பின்னர் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் ஆகியவர்களால் விசேட கலந்துரையாடல் அமர்வொன்றும் நடாத்தப்பட்டது. முன்னைய அறிவுறுத்தல் வகுப்புக்களில் தெளிவுபடுத்தப் பட்ட விடயங்களை மீண்டும் ஞாபகப்படுத்தல், நீதியானதும் மற்றும் சுதந்திரமானதுமான தேர்த லொன்றை நடாத்துவதன் தேவைப்பாடு, அதன்போது தலைமை தாங்கும் அலுவலர்களிற்கு கையளிக்கப்படு கின்ற கடமைப் பொறுப்புக்கள் தொடர்பாக மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. அதேபோன்று தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட விசேட அறிவுறுத்தல் களும் அவர்களுக்கு தெளிவு படுத்தப்பட்டது. பின்னர் அவர்களின் ஆளடையாளம் மற்றும் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் அறிமுக அட்டையும் பரிசீலனை செய்து பார்த்து அலுவலர்கள் சரியாக இனங்காணப்பட்டதன் பின்னர் முறையான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. இந்த நியமனங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களினால் தமக்குரிய வாக்கெடுப்பு நிலையத்திற்குரிய வாக்குச் சீட்டுக்கள், வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட பொருட்களாதியவை விநியோகிக்கப்படுகின்றன இடத்திற்கு அறிக்கையிட்டதன் பின்னர் அந்த விநியோகித்தல் நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும் மீண்டும் நியமனக் கடிதம் மற்றும் ஆளடையாளத்தை பரிசீலனை செய்து பார்த்து தகவல்களை உறுதிப்படுத்திக் கொண்டு வாக்கெடுப்பு நிலையத் திற்குரிய வாக்குச் சீட்டுக்கள், வாக்குப் பெட்டிகள் மற்றும் நியதிச் சட்ட ஆவணங்கள் உட்பட ஏனைய பொருட்களாதியவை விநியோகிக்கப்படும்.

சில மாவட்டங்களின் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு இணைக்கப்படவுள்ள கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர் ஒருவருக்கும் விநியோகித்தல் நிலையத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டிருந்ததோடு, வாக்கெடுப்பு நிலையத்திற்குரிய பொருட்களாதியவற்றைக் கையேற் பதற்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு ஒத்துழைப்பு வழங்கி சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருடன் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கு தேவை யான போக்குவரத்து நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தனது சொந்த வாகனத்தை அல்லது பெற்றுக்கொண்ட வாகனமொன்றைப் பயன்படுத்துவதாயின் மற்றும் அது தொடர்பாக முன்கூட்டி அனுமதி பெற்றுக்கொண்டிருப்பின், அந்த வாகனத்தின் தகவல்களைப் போக்குவரத்துப் பிரிவில் பதிவு செய்து கொண்டு உரிய பயணப்பாதை விபரங்களுக்கு அமைவாக நேரடியாக வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வதற்கான சாத்தியம் காணப்பட்ட தோடு, அவ்வாறான போக்குவரத்து வசதிகள் இல்லாத சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு தெரிவத்தாட்சி அலுவலர்களின் போக்குவரத்து நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாக்கெடுப்பு நிலையம் வரை போக்கு வரத்து வசதிகள் வழங்கப்பட்டன.

### 8.2. வாக்கெடுப்பு நிலைய உதவியாளர்கள் மற்றும் பாதுகாப்பு அலுவலர்களை ஈடுபடுத்தல்.

வாக்கெடுப்பு நிலைய கடமைகளுக்காக தன்னோடு அழைத்துச் செல்வதற்காக உதவியாளரொருவரை அழைத்து வருமாறு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததோடு அவ்வாறு அழைத்து வரப்பட்ட உதவியாளருக்கு இச்சந்தர்ப்பத்தின் போது அதாவது விநியோகித்தல், கையேற்றல் நிலை யத்தில் நியமனக் கடிதமொன்று வழங்கப்பட்டது. உதவியாளரொருவரை அழைத்து வர முடியாமல் போன சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு கனிட்ட அலுவலக உதவியாளர்கள் ஒதுக்குக் குழாத்திலிருந்து உதவியாளரொருவர் இணைப்புச் செய்யப்பட்டது. அதேபோன்று வாக்கெடுப்பு நிலையத்தின் பாதுகாப் புக்காக நியமனம் செய்யப்படுகின்ற ஆயுதம் தாங்கிய பொலிஸ் அலுவலர்கள் இருவரில் ஒருவர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருடன் வாக்கெடுப்பு நிலையத்திற்குரிய பொருட்களாதியவை விநியோகிக்கப் படுகின்ற நிலையத்திலிருந்து பாதுகாப்பு வழங்கி பயணிக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டிருந்தது. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் உரிய விநியோகித்தல் நிலையங்களிலிருந்து பொருட்களாதிய வற்றைப் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பத்திலிருந்து வாக்கெடுப்பை நிறைவு செய்து அவற்றை மீண்டும் கையளிக்கும் வரையான காலப்பகுதியினுள்,அந்த பொலீஸ் அலுவலர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருடனிருத்தல் வேண்டும். வாக்கெடுப்பு நிலை யத்தின் பாதுகாப்புக்காக நியமனம் செய்யப்பட்ட மற்றைய பொலிஸ் அலுவலர் வாக்கெடுப்பு நிலையம் அமையப் பெற்றுள்ள பிரதேசத்தின் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் நேரடியாக வாக்கெடுப்பு நிலை யத்திற்கு இணைப்புச் செய்வதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரிக்குமாறு பொலீஸ் மா அதிபர் அவர்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

### 8.3. வாக்கெடுப்பு நிலையத்திற்கு வசதிகளை வழங்குதல்.

சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் வாக்குச் சீட்டுக்கள் உள்ளிட்ட பொருட்களாதியவற்றை எடுத்துக் கொண்டு உரிய வாக்கெடுப்பு நிலையத்தை வந்தடையும் போது அது அமையப்பெற்றுள்ள பிரிவின் கிராம அலுவலரினால் அல்லது அவரின் முகவரினால்

வாக்கெடுப்பு நிலையத்திற்குத் தேவையான வசதிகளைச் செய்து பொருத்தமான முறையில் ஒழுங்கமைக்கப் பட்டிருக்கும். சில கிராம அலுவலர்களுக்கு, குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் தமது பிரிவினுள் பல வாக்கெடுப்பு நிலையங்களை ஒழுங்குபடுத்தும் பொறுப்புக் கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஒழுங்குபடுத்த வேண்டிய வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை 03 ஐ விட அதிகமாகவுள்ள சந்தர்ப்பங்களில் வாக்கெடுப்பு நிலையங்களை ஒழுங்கமைப்பதற்காக அவரின் முகவர் ஒருவரை நியமனம் செய்வதற்கும் மற்றும் அந்த அலுவலரின் ஊடாக வாக்கெடுப்பு நிலைய பணியாட்குழு வினருடன் ஒருங்கிணைப்பை பேணிக்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் வாக்கெடுப்பு நிலையத்தின் முன்னேற் பாடுகள் மற்றும் நலனோம்பல் வசதிகளைச் செய்து கொடுத்தல் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறான வாக்கெடுப்பு நிலை யங்கள் தொடர்பாக மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் நேரடியாக மேற்பார்வை செய்து நடவடிக்கைகளை யெடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களின் கீழ் வாக்கெடுப்பு நிலையப் பணிக்குழுவினருக்கு தேவையான உணவுப் பொருட்களை வழங்கும் பொறுப்பும் கிராம அலுவலர்களுக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. வாக்கெடுப்பு நிலையக் கடமைகளுக்காக நியமனம் செய்யப்பட்ட சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் உதவியாளர், பொலிஸ் அலுவலர்கள் உட்பட வாக்கெடுப்பு நிலை யங்களில் இரவு தங்குவதற்கு உத்தரவிடப்பட்டிருந்த ஆண் அலுவலர்கள் தங்குவதற்கான வசதிகளை வழங்குவதும் கிராம அலுவலர்களின் பொறுப்பாகும். நிரந்தரக் கட்டிடங்கள் இல்லாத காரணத்தால் தற்காலிகக் கொட்டில்களில் பேணப்படவுள்ள வாக்கெடுப்பு நிலையங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்குப் பொருத்தமானதென அடையாளம் காணப்பட்டுள்ள வேறு அண்மித்த பொருத்தமான இடங்களில் பாதுகாப்பாக வாக்கெடுப்பு நிலையத் திற்குரிய வாக்குச் சீட்டுக்கள் உள்ளிட்ட பொருட்களா தியவற்றையும் மற்றும் பணியாட்குழுவினரின் தனிப்பட்ட பொருட்களையும் பாதுகாப்பாக வைக்கக்கூடியவாறு தங்குமிட வசதிகளை வழங்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. கிராம அலுவலர்களால் ஒழுங்குகள் செய்யப்படுகின்ற இந்த வசதிகள் தொடர்பாக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் பரிந்துரைகள் உள்ளடங்கிய இரண்டு பிரதிகளைக் கொண்ட அறிக்கையின் ஒரு பிரதியைக் கிராம அலுவலர்களுக்கு வழங்க வேண்டுமெனக் கட்டளையிடப் பட்டிருப்பது, முன்னைய அனுபவங்களின் அடிப்படையில் மிகவும் விளைதிறன்மிக்க சேவையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தின் அடிப்படையிலாகும். வாக்கெடுப்பு நிலைய அலுவலர்கள் எதிர்பார்க்கின்ற விதத்தில் வசதிகள் மற்றும் ஏனைய நலனோம்பல் சேவைகளை வழங்குவது அந்தந்த பிரதேசங்களில் காணப்படுகின்ற நடைமுறை நிலைமைகளின் கீழ் ஓரளவு அசௌகரியமான பணியொன்றாகக் காணப்படினும் அரச உத்தியோகத்தர்கள் சனநாயகத்தை மதிப்பீடு செய்யும் முகமாக, நாட்டிற்காக மேம்பாட்டிற்காக சேவையாற்றும் மனநிலையில் அத்தகைய குறைபாடுகள் தொடர்பாக தேவையற்ற மோதல்களை அல்லது முரண்பாடுகளை ஏற்படுத்தாது அவற்றை சகித்துக் கொள்வதைப் பாராட்டுதல் வேண்டும்.

### 8.4. வாக்கெடுப்பு அலுவல்களின் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பு.

வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுக்கள் உள்ளடங் கலான நியதிச் சட்டரீதியான பொருட்களை வாக்கெடுப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்வது தொடக்கம் வாக்கெண்ணலை ஆரம்பித்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிட்டுப் பணிகளை நிறைவு செய்தல் வரையான காலத்தினுள் அத்தகைய நடைமுறைகளை வழிநடாத் துவதற்கான தொடர்பாடல் வழிமுறையொன்று தேர்தல் ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது வரையில் அதற்காக தொலைபேசி மற்றும் தொலைநகல் செய்திகள் பயன்படுத்தப்பட்டன. ஆயினும், 2019 சனாதிபதித் தேர்தலின் போது ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் இதன் ஆரம்பப் பணிகளின் வழிநடாத்தல் மற்றும் மேற்பார்வை அலுவல்கள் தொடர்பாக தகவல் தொழில்நுட்ப வழிமுறையான குறுந்தகவல் (SMS) சேவையொன்று அறிமுகப்படுத்தப் பட்டது. குறிப்பாக வாக்கெடுப்பு நிலையங்களுக்குப் பொறுப்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் அவர்களால் வலயத்துக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாகத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்க வேண்டிய செய்தி முன்னர் தயாரிக்கப்பட்ட குறுந்தகவல் சேவையினூடாக இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் குறுந்தகவல் தொலைபேசி சேவையூடாக தேர்தல் ஆணைக்குழுவின் கணினி முறைமைக்கு அனுப்பப்பட்டதோடு தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் அச்செய்திகளின் தகவல்களின் அடிப்படையில் வாக்கெடுப்பு நிலையங்களின் செயற்பாடு களைக் கண்காணித்து மற்றும் வழிநடாத்தி கண்காணிப்பு அறிக்கை தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தொலைபேசி மற்றும் தொலை நகல் ஊடாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்கு மேலதிகமாக இதன் மூலம் மிக இலகுவான மற்றும் ஒழுங்கான முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இலங்கையின் சில பிரதேசங்களில் கையடக்க தொலைபேசி சமிக்ஞை காணப்படாமை அல்லது பலவீனம், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வாக்கெடுப்பு நிலையங்களின் ஒப்படைக்கப்பட்டிருந்த கடமைகள் அதிகரிப்பு, தகவல்கள் தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்துவதில் இருந்த சில சிரமங்கள் காரணமாக இச்செயற்றிட்டத்தின் மூலம் வாக்கெடுப்பு நிலையங்களை 100% உள்ளடக்க முடியவில்லை. இருப்பினும், அறிமுகப்படுத்தப்பட்டிருந்த இந்த வழிமுறையை எதிர்வரும் தேர்தல்களில் பயன்படுத்தும் போது வினைத்திறனான மற்றும் விளைதிறனான தொடர்பாடல் ஒன்றினூடாக வாக்கெடுப்பு நிலையங்களில் மேற்பார்வை, வழிநடாத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல் போன்ற செயற்பாடுகளுக்கு வசதியாக அமையும்.

வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் களுக்காகவும் கடமைகளுக்காக அறிக்கையிட்ட நிலையங்களில் குறுகிய கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களால் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு ஏற்புடைய கடமைகள் அலுவல்கள் முன்கூட்டியே வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் சட்டவிதி களின் பிரகாரம் உரிய முறையில் செயற்படுத்துவதன் தேவைப்பாடு தொடர்பாகவும் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து கிடைக்கப்பெற்ற விசேட அறிவுறுத்தல்கள் தொடர்பாகவும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. அதன்பின்னர், வலயத்துக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக முறையான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு நியமனக் கடிதங் களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் வரையில் அவர்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ள வலயம் எது என்பது தொடர்பாக அவர்கள் அறிந்திருக்கவில்லை. முறையான நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் அவர்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ள வலயத்திற்குரிய விநியோகித்தல் நிலையங்களுக்குச் சென்று தமது மேற்பார்வைக்குரிய வாக்கெடுப்பு நிலை யங்களின் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் பொருட்களாதியவற்றைப் பெற்றுக் கொண்டு சென்று விட்டார்கள் என்பதை உறுதிசெய்து கொண்டதன் பின்னர், நியமனம் வழங்கப்பட்டுள்ள வலயத்தின் மேற்பார்வைக்காக செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கப் பட்டிருந்தது, சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த போக்குவரத்து நிகழ்ச்சித் திட்டத்தையொத்த போக்குவரத்து நிகழ்ச்சித் திட்டமொன்று வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்காகவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மேற்பார்வை செய்யும் வலயத்தில் வாக்கெடுப்பு நிலை யங்கள் அமையப்பெற்றுள்ள பிரதேச செயலகத்திற்குச் சென்று அங்குள்ள ஒருங்கிணைப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் அறிக்கையிட்டதன் பின்னர் வாக்கெடுப்பு நிலையங்களின் மேற்பார்வைக்காகச் செல்ல வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த மைக்கான நோக்கம் எந்தவொரு கருமத்தையும் தவறவிடாமல் முன்னெடுப்பதற்காகவேயாகும்.

## 8.5. வாக்கெடுப்பு தினத்திற்கு முந்திய தினம் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் செயற்பட வேண்டிய விதம்.

சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் உரிய வாக்கெடுப்பு நிலையத்திற்கு அறிக்கையிட்ட பின்னர் அதன் வசதிகளைப் பரீட்சித்துப் பார்த்து தெரிவத்தாட்சி அலுவலரால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நீதியாகவும் மற்றும் சுதந்திரமாகவும் வாக்கெடுப்பை மேற்கொள்வதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பாகவும், வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குச் சீட்டுக்கள் உள்ளிட்ட பொருட்களாதியவற்றை பாதுகாப்பாக வைத்திருப்ப தற்கான வசதிகள் உள்ளனவா என்பது தொடர்பாகவும் ஆராய்ந்து பார்த்து அது தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டுமென்பதோடு, பொருத்தமான வசதிகள் வழங்கப்படவில்லையெனில் அல்லது வேறு ஏதாவது இடையூறுகள் காணப்படின், உடனடியாக வலயப் பொறுப்பு உதவி தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவித்து அவருடாகத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிக்கை யிடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

பிற்பகல் 02.00 மணியளவில் அனைத்து அலுவலர் களுக்கும் உரிய வாக்கெடுப்பு நிலையங்களுக்கும் அறிக்கையிடுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டிருந்தன. அவர்கள் அறிக்கையிட்டதன் பின்னர், அந்த அலுவலர்களின் தேசிய அடையாள அட்டை மற்றும் நியமனக் கடிதத்துடன் ஆளடையாளத்தைப் பரிசீலனை செய்து பார்த்து வரவு இடாப்பில் கையொப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்து அலுவலர்களும் இணைந்து அவரவர்களை அறிமுகம் செய்தல் மற்றும் வாக்கெடுப்பு நிலைய ஒத்திகையை நடாத்துதல் வேண்டு மென்பதோடு, இந்த ஒத்திகைக்காக எந்தவொரு காரணங்களிற்காகவும் வாக்குச்சீட்டுக்கள், அலுவலக முறையான குறிகள் (உத்தியோகபூர்வ முத்திரை), துடைத்தழிக்க முடியாத மை என்பன திறக்கப்படக் கூடாதென அறிவுறுத்தல் வகுப்புக்களின் போது சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் வலியுறுத்தப் பட்டிருந்தனர். ஒத்திகையின் போது ஒவ்வொரு அலுவலர்களினதும் இயலுமையைக் இனங்கண்டு கொண்டு கடமைகளை ஒப்படைப்பதும் அதற்காக வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை படிப்பதன் மூலம் உரிய பணிகளை எளிதாக்குவதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் பொறுப்பாகும். மேலும், இந்த ஒத்திகையை நடாத்துவதன் ஊடாக வாக்கெடுப்பு நிலை யத்திற்கு இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களின் வருகையை உறுதிப்படுத்திக் கொள்ளல் மற்றும் நாளைய தினத்தில் எதுவித இடையூறுகளுமின்றி வாக்கெடுப்பை ஆரம்பிக்க முடியும் என்பதற்கான முன்னோடி சமிக்ஞையுமாகும். வாக்கெடுப்பு நிலையங் களுக்குப் போதியளவு அலுவலர்கள் இணைக்கப் பட்டிருந்த போதிலும் ஏதேனும் காரணத்தால் நாளைய தினம் வாக்கெடுப்பை நடாத்த அவசியமான ஆகக் குறைந்த மற்றும் போதுமானளவு அலுவலர்கள் முதல் நாள் ஒத்திகைக்கு அறிக்கையிட்டிராவிடின் உடனடியாக மேற்பார்வைக்காக வருகை தருகின்ற தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அது பற்றி அறிக்கையிட்டு பிரதேச செயலக மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒதுக்குக் குழாத்திலிருந்து அவசியமான அலுவலர் களை இணைப்புச் செய்வதற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. ஒத்திகையின் பின்னர் பெண் அலுவலர்களுக்கு நாளைய கடமைகளுக்காக தயாராவதற்காக முற்கூட்டியே அதாவது மு.ப. 06.00 மணிக்கு முன்னர் வருகை தருமாறு அறிவித்து அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்ததோடு ஆண் அலுவலர்கள் வாக்கெடுப்பு நிலை யத்தில் இரவைக் கழித்தல் வேண்டும். ஏற்கனவே வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும் வாக்கெடுப்பு நிலைய மேற்பார்வைக்காக வருகைதந்து, கையேற்கப்பட்ட பொருட்களாதியவை சரியானதாகவும் போதியதாகவும் இருக்கின்றதா என்பதைக் குறிப்பாக

வாக்குச் சீட்டுக்கள், உத்தியோகபூர்வ இலச்சினைகள், துடைத்தழிக்க முடியாத மை என்பனவற்றைத் திறக் காமல் தனிப்பட்ட முறையில் நேரடியாகப் பரிசீலனை செய்து பார்த்து ஐயமின்றி உறுதிப்படுத்திக் கொள்ளல் கட்டாயமாக மேற்கொள்ளப்படல் வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது, அதேபோன்று வாக்கெடுப்பு நிலையங்களில் இருக்க வேண்டிய வசதிகள் தொடர்பாகவும் ஆராய்ந்து பார்த்து ஒத்திகை நடாத்தப்படுவதைக் கண்காணித்தல் மற்றும் அதுவரை ஒத்திகை நடாத்தப்பட்டிராவிடின் அச் சந்தர்ப்பத்திலேயே ஒத்திகையை நடாத்துமாறு அறிவித்து அத்தொழிற்பாடு களை மேற்பார்வை செய்தல் வேண்டுமென்பதோடு, தேவையானதெனக் கருதுமிடத்து, மேலதிக ஆலோசனைகள் மற்றும் பொருத்தமான கட்டளைகளை வழங்குதல் வேண்டும். மேற்பார்வைச் செயற்பாடுகளின் பின்னர், அடுத்த தினத்திற்குரிய வாக்கெடுப்பை உரியவாறு மு.ப. 07.00 மணிக்கு ஆரம்பிக்க முடியுமானவாறு பணிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதென வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் தனது முதலாவது செய்தியை தொலைபேசி அல்லது தொலைநகல் ஊடாக தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்திற்கு அல்லது வழிநடாத்தல் அலுவலகத் திற்கு அறிவித்தல் வேண்டும்.

### 8.6. வாக்கெடுப்புத் தினக் கடமை அலுவல்கள்.

வாக்கெடுப்பு தினம் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் தனது கடமைகளை நிறைவேற்றும் போது பேணிவர வேண்டிய மிக முக்கியமான ஆவணம் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் குறிப்பேடாகும். வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து வாக்கெடுப்பு முடிவுறுத்தப்படுகின்ற காலப்பகுதி வரை யிலான காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து அலுவல்கள் மற்றும் இடம்பெறுகின்ற நிகழ்வுகள் தொடர்பில் இங்கு குறிப்புக்களையிடுதல் வேண்டும். அதேபோன்று பணியாட்குழுவினர் தொடர்பான தகவல்கள், வருகை தந்துள்ள தேர்தல் முகவர்கள் மற்றும் அடிக்கடி வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகை தருகின்ற வேட்பாளர்கள் அல்லது அவர்களின் முகவர்கள் மற்றும் ஏனைய அலுவலர்கள் உள்ளிட்ட வாக்கெடுப்பு நிலையத்திற்குள் வருகை தருவதற்கு அனுமதியுள்ள ஆட்கள் தொடர்பாக இதில் குறிப்புக்களை இடுதல் வேண்டும். மேலும் வாக்கெடுப்பு நிலையத்தில் இடம்பெறுகின்ற குழப்பங்கள் அல்லது வேறு நிகழ்வுகள் இருப்பின் அவை தொடர்பான குறிப்புக்களையும் இந்த குறிப்பேட்டில் உள்ளடக்குதல் வேண்டும். வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் இந்தக் குறிப்பேட்டை வாக்குப் பெட்டிகளை மீளக் கையளிக் கின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வாக்கெடுப்புத் தினம் மு.ப. 06.00 மணியாகும் போது சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் ஏனைய அலுவலர்கள் வாக்கெடுப்பு நிலைய கடமைகளுக்காகத் தயாராக இருத்தல் வேண்டுமெனவும், வாக்காளர்களை அறிவுறுத்தும் பொருட்டு அச்சிட்டு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் அறிவித்தல் அட்டைகளை காட்சிப்படுத்தல், வாக்கெடுப்பு சிற்றறைகளைத் தாபித்தல் மற்றும் வாக்குப் பெட்டிகளை முத்திரை பொறிக்கத் தயாராக வைத்திருத்தல் போன்ற பணிகளை ஆற்றுதல் வேண்டுமென ஆணைக்குழுவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. ஒரு வாக்கெடுப்பு நிலையத்திற்காக இரண்டு முகவர்களை ஈடுபடுத்துவ தற்கு சட்டத்தினால் அதிகாரம் கிடைத்துள்ள போதிலும் இம்முறை சனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டமையினால் ஒரு வாக்கெடுப்பு நிலையத் திற்கு ஒரு வேட்பாளருக்கு இரண்டு முகவர்களை ஈடுபடுத்துவது சிக்கலானதாகக் காணப்பட்டது. இதற்கமைய வாக்கெடுப்பு நிலையத்தின் இடவசதிகளுக் கமைய ஆகக் குறைந்தது ஒரு முகவரையாவது கண்காணிப்புக்காக ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்கப் பட்டது.

முகவர்களின் நியமனக் கடிதத்துடன் ஆளடை யாளத்தைப் பரிசீலனை செய்ய வேண்டியமை மற்றும் வாக்குப் பெட்டிகளை முத்திரை பொறிக்கும் போது அவர்களின் பங்கேற்பு தேவையாக இருந்தமையினால் வாக்கெடுப்பு நிலையத்திற்காக நியமிக்கப்பட்டிருந்த முகவர்களுக்கு அன்றைய தினம் மு.ப. 06.30 மணியாகும் போது வருகை தந்திருக்குமாறு தெரிவத் தாட்சி அலுவலர்களால் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். இந்த வாக்கெடுப்புக்காகப் பயன்படுத்தப்படுகின்ற தேருநர் இடாப்புக்கள், வாக்குப் பெட்டிகள், வாக்குச்சீட்டுக்கள், அலுவலக முறையான குறியீடுகள் (உத்தியோக பூர்வ இலட்சிணைகள்) ஆகியவற்றைப் பரிசீலனை செய்தல், விசேடமாக வாக்குச் சீட்டின் பின்புறம் பொறிக்கப்படுகின்ற அலுவலக முறையான குறியீட்டை எழுமாறாகத் தெரிவு செய்யும் போது அவர்களின் கண்காணிப்பு எதிர்பார்க்கப்படுவதோடு தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமான முறையிலும் நடாத்தப் படுதல் தொடர்பில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவ தற்காக, முகவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பம் வழங்கப் பட்டுள்ளது. வாக்குப் பெட்டிகளை முத்திரை பொறிப் பதற்கு முன்னர் அவற்றை தெளிவாக வெளிப்பகுதி தெரியும் வண்ணம் காட்டி பெட்டியினுள் எதுவும் இல்லையென்பதை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் முத்திரை பொறிப்பதற்கு முன்னர் அவசியமெனில் வாக்குப் பெட்டியின் உட்பகுதியில் அல்லது முத்திரை பொறிக்கப்பட்டதன் பின்னர் அதன் வெளியில் அரசியல் கட்சிகளின் சின்னம் அல்லது வாக்குச் சீட்டில் உள்ளடக்கப்பட்ட சின்னமல்லாத பொறியொன்றை அல்லது இனங்காணக்கூடிய சின்னமொன்றை அல்லது ஸ்ரிகர் ஒன்றை ஒட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறு முத்திரை பொறிப்பதாயின் அவற்றின் மாதிரிகள் வாக்குப் பெட்டியில் ஒட்டப்படுவதற்கு முன்னர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு வழங்கப்பட வேண்டியிருந்தது.

தேர்தலொன்றின் போது அத்தியாவசியமான நியதிச் சட்டப்படிவங்களைக் குறைபாடுகளின்றி சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் கோப்பில் சரியான முறையில் உள்ளடக்குவது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். ஆகையால் இது தொடர்பாக களஞ்சியப் பொறுப்பு அலுவலர்கள் போன்றே அதற்குரிய அனைத்து அலுவலர்களையும் அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த மாதிரிப் படிவங்களைப் பூரணப்

படுத்தல் மற்றும் அந்த மாதிரிப் படிவங்களை இடும் உறைகளை பூரணப்படுத்தல் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்களைக் கொண்டு ஆற்றிக்கொள்வ தற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டிருந்தன.

### 8.7. வாக்கெடுப்பை நடாத்துதல்.

சனாதிபதி தேர்தல் தீர்மானிக்கப்பட்டவாறு 2019.11.16 ஆம் திகதி மு.ப. 07.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. இந்த வாக்கெடுப்பை சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பி.ப. 04.00 மணிக்கு நிறைவு செய்யப்படல் வேண்டும் எனினும் வாக்குச் சீட்டின் அளவு அதிகரித்தமையைக் காரணமாகக் கொண்டு வாக்காளருக்கு வாக்கை அடையாளமிடுவதற்கு அதிக காலமொன்று செலவாகலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னர் வாக்கெடுப்பை முடிவுறுத்தல் பி.ப. 05.00 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அது 2147/46 ஆம் இலக்க 2019.10.29 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட தோடு **இணைப்பு 20 இல்** அது உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக உரிய காலப்பகுதியினுள் நாட்டில் 12,845 வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. இதற்காக பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த 223,983 அரச அலுவலர்களின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டது. இங்கு நேரடியாகத் தேர்தல்கள் செயற்பாடுகளில் ஈடுபட்ட அலுவலர்கள் மற்றும் உதவிச் சேவைகள் அடிப்படையில் தேர்தல் நடவடிக்கை களுக்காக மறைமுகமாகப் பங்களிப்புச் செய்த அலுவலர்களும் துணைச் சேவைகளை வழங்கிய சேவை வழங்குநர்களும் உள்ளடங்கும். பாதுகாப்புப் பிரிவினால் பாதுகாப்பு வழங்குதல் மற்றும் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்வதற்காக வழங்கப்பட்ட உதவிகள் வாக்கெடுப்பு அலுவல்களை அமைதியாகப் பேணிச்செல்வதற்கு மிகவும் முக்கியமானதாகும். ஒட்டுமொத்த தேர்தல்கள் செயற்பாடுகளை உரியவாறு குறித்த நேரத்தினுள் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடாத்துவதற்கும் பெரும்பாண்மை மக்களின் எதிர் பார்ப்பான சனநாயக ரீதியில் தமது சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கு இந்த சனாதிபதித் தேர்தல் உதவியமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

### 8.8. வாக்கெடுப்பை நிறைவு செய்தல், வாக்குப் பெட்டிகள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட ஆவணங்களைக் கையளித்தல்.

வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்ட பின்னர், வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், தெரிவத்தாட்சி அலுவலர்கள் அல்லது பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் உதவிக்காக நியமனம் செய்யப்படுகின்ற, விசேட அல்லது பெரிய வலயப் பொறுப்பு உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் (Mega Zone) வாக்கெடுப்பு நிலையங்களின் கண்காணிப்புக்காக அவ்வப்போது வருகை தந்திருந்தனர். இந்த உத்தி யோகத்தர்கள் வாக்கெடுப்பு நிலையக் கடமைகளைக் கண்காணித்தல் மாத்திரமின்றி அதற்கு வெளியில் உள்ள பிரதேசங்களிலும் தேர்தல் சட்ட விதிகளை அமுல்படுத்துவதற்குத் தேவையான மேற்பார்வை நடவடிக்கைகளும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதேபோன்று ஏதேனும் சட்ட விரோதமான விடயமொன்று அல்லது தேர்தல் சட்டங்கள் மீறப்படுகின்றமை அவதானிக்கப் பட்டவுடன் உடனடியாக பொலிசாரின் உதவியுடன் அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பதும் அவர்களின் பிரதான கடமையொன்றாகும். வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் கட்டாயமாகவும் மற்றும் குறைந்தபட்சம் மூன்று தடவைகளும் தனது வலயத்திற்குரிய நிலையங்களை மேற்பார்வை செய்ய வேண்டியிருந்ததுடன் அவ்வாறு செய்வதற்குச் சாத்தியமான முறையில் அவர்களுக்கு நிலையங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

அதேபோன்று இந்த அலுவலர்கள் வாக்கெடுப்பு ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் ஒரு நிலையத்தில் தரித்திருத்தல் மற்றும் வாக்கெடுப்பு முடிவடையும் சந்தர்ப்பத்தில் மற்றொரு நிலையத்தில் தரித்திருத்தலும் கட்டாயமானதாகுமெனத் தெரிவத்தாட்சி அலுவலர் களினால் அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப் பட்டிருந்தது. வாக்கெடுப்பு பி.ப. 05.00 மணிக்கு நிறைவடைந்த பின்னர் வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல் களின் பிரகாரம் வாக்கெடுப்புப் பெட்டிகள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட உறைகள் பொறியிடப்பட்டன. வாக்குப் பெட்டிகள் பொறியிடப்பட்ட பின்னர், முகவர்கள் கோரினால் அவர்களின் முத்திரைகள் மற்றும் ஸ்டிக்கர்களை ஒட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த தோடு, அவற்றின் மாதிரிகளை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் முகவர்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர், வாக்கெடுப்பு நிலையத்திற்குரிய பொருட்களாதியவற்றை மீளக்கையளிக்கும் நிலையம் வரை முன்னைய தினம் பயன்படுத்தப்பட்ட போக்கு வரத்து நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் அதே பாதையால் அவற்றைக் கொண்டு செல்வதற்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். வாக்குச் சீட்டுக்கள் உள்ளடக்கிய வாக்குப் பெட்டிகளை மீளக் கொண்டு செல்லும் போது முறைகேடுகள் இடம்பெறுவதாக வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் மூடநம்பிக்கை சமூகமயப்படுத்தப்பட்டுள்ளதால் வாக்கெடுப்பின் பின்னர் வாக்கெடுப்பு நிலையத்தின் பொருட்களாதியவற்றை மீள வாக்கெண்ணல் நிலையங் களுக்கு கொண்டு செல்வதை கண்காணிப்பதற்காக ஒரு வேட்பாளர் சார்பாக வாக்கெடுப்பு நிலைய பிரதிநிதி ஒருவருக்கு அனுமதி வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் வேண்டுகோள் விடுத்து வாக்கெண்ணல் நிலைய வளாக நுழைவாயில் வரை தமது வாகனத்தில் பயணம் செய்து கண்காணிப்புச் செய்வதற்குத் தேவையான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப் பட்டிருந்தது.

வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் களும் தமது கண்காணிப்புக்குட்படுத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களின் இறுதி அறிவித்தலை தொலைநகல் மூலம் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி, தொலைபேசியூடாகவும் அது பற்றி அறிவித்து பிரதேச

ஒருங்கிணைப்பு நிலையத்திற்கும் அறிக்கையிட்ட பின்னர், தெரிவத்தாட்சி உத்தியோகத்தரிடம் வருகை தந்து வாக்கெடுப்பு வலயக் கண்காணிப்புப் பணிகளுக் குரிய குறிப்பேட்டைக் கையளித்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கிடைக்கப் பெற்றிருந்த அந்த அறிக்கைகளின் பிரகாரம் நாடுபூராகவும் வாக்கெடுப்பு மிக அமைதியான முறையில் நடாத்தி நிறைவு செய்யப்பட்டிருந்ததாக அறிக்கையிடப் பட்டிருந்தன. வாக்கெடுப்பை தடைசெய்வதற்கு அல்லது இடைநிறுத்துவதற்குரிய எந்தவொரு பாரதூரமான நிகழ்வும் இடம்பெறாதிருந்தமை பாராட்டப்படல் வேண்டும். வாக்கெடுப்புத் தினம் நாட்டின் அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களிலும் வாக்கெடுப்பை அமை- தியாக நடாத்தி எந்தவித இடையூறுகள் அல்லது தடைகளின்றி வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய வாக்குப் பெட்டிகள் அனைத்தும் அன்றைய தினம் இரவு 8.00 மணியளவில் வாக்கெண்ணல் நிலையங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவத்தாட்சி அலுவலர் களினால் தேர்தல்கள் செயலகத்திற்கு அறிக்கையிடப் பட்டிருந்தது.

### 8.9. தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவம்.

இந்த சனாதிபதித் தேர்தலை நடாத்தும் தேவைப் பாட்டை பிரகடனப்படுத்தி அதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கான களமொன்றை உருவாக்கும் பொறுப்பு தேர்தல் சட்டத்தை செயல்வலுவாக்கம் செய்வதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் புதிதாக தாபிக்கப்பட்ட “தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவப் பிரிவுக்குக்” கையளிக்கப் பட்டது. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள், பொது மக்கள், சிவில் அமைப்புக்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் ஆகியவற்றால் தேர்தல் காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்படுகின்ற சட்ட மீறல்கள் சம்பந்தமாக முன்வைக்கப்படுகின்ற முறைப் பாடுகள் தொடர்பாக உடனடியாகச் செயற்பட்டு சட்டத்தை செயல் வலுவாக்கம் செய்தல் தொடர்பில் இதுவரை காலமும் காணப்பட்ட நடைமுறையை மேலும் வலுப்படுத்தும் நோக்கம் போன்றே தேர்தல்களை சுதந்திரமாகவும் நீதியாகவும் நடாத்துதல் தொடர்பான நம்பகத்தன்மையை மேலும் உறுதிப்படுத்தும் நோக்கிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவத்திற்காக தேர்தல்கள் செயலகத்தில் தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவ பிரிவின் கீழ் தேசிய தேர்தல்கள் பிணக்குகள் முகாமைத்துவ நிலையம் தாபிக்கப்பட்ட தோடு அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் விதத்தில் மாவட்டத் தேர்தலகள் பிணக்குகள் முகாமைத்துவப் பிரிவுகள் பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் கையேற்கப்பட்டதைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டன. அதற்கமைய அந்த தேசிய தேர்தல்கள் பிணக்குகள் முகாமைத்துவப் பிரிவு 2019.11.18 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் தொடர்ச்சியாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தேர்தலின் போது தேர்தல் பிணக்குகள் முகாமைத் துவப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளை பின்வருமாறு பொழிப்புப்படுத்தி குறிப்பிட்டுக் காட்ட முடியும்.

- சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 66 ஆம் பிரிவு தொடக்கம் 75 ஆம் பிரிவு வரையான “தவறுகள்”, 76 ஆம் பிரிவு தொடக்கம் 81 ஆம் பிரிவு வரையான “ஊழல் பழக்கங்கள்”, மற்றும் 82 ஆம் பிரிவு தொடக்கம் 87 வரையான “சட்டமுரணான பழக்கங்கள்” தொடர்பான சட்டங்களைச் செயல் வலுவாக்கம் செய்வதற்கான சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களை வெளியிடுதல்.
- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசிய லமைப்பின் 104 எ உறுப்புரையில் குறித்துரைக்கப் பட்டவாறு பணிப்புரைகள், வழிகாட்டு நெறிகள் மற்றும் ஒழுக்க நெறிகள் ஆகியவற்றைத் தயாரித்தல் மற்றும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் விநியோகித்தல் மற்றும் அதன் மூலம் அவற்றைப் பிரசுரித்தல்.
- தேசிய, மாவட்ட, பிரதேச தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ அலகுகளைத் தாபித்தல் அலுவல்கள் மற்றும் அவற்றுக்கு இணைப்புச் செய்யப்படுகின்ற அலுவலர்களுக்குப் பயிற்சி யளித்தல், முறைப்பாட்டு அலகின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், விசேட முறைப்பாடுகள் சம்பந்தமான அறிக்கைகளை வைத்திருத்தல் மற்றும் அவை தொடர்பிலான நாளாந்த அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அவற்றின் மீளாய்வு அறிக்கை களைப் பொருத்தமான அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகளைப் பெற்றுக் கொள்வதற்காகத் தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்தல்.
- அரசாங்கச் சொத்துக்கள், அலுவலர்கள் உள்ளடங் கலாக ஏனைய அரச வளங்கள் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்காகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்குத் தேவையான விதிகளை அடையாளம் காணுதல், அரச வளங்கள் தேர்தல் காலப்பகுதியினுள் துஷ்பிரயோகம் செய்யப் படாமல் பொது மக்களின் நலன்களுக்காக மாத்திரம் பயன்படுத்துவதன் தேவைப்பாடு தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் வழங்குதல்.
- சுதந்திரமானதும் மற்றும் நீதியானதுமான தேர்த லொன்றுக்கான சூழலை உருவாக்குதல் மற்றும் அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமான களச் சூழலை உருவாக்கும் பொருட்டு தொடர்ச்சியாக ஆராய்தல் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக் கைகள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவிற்கு பரிந்துரைகளை முன்வைத்தல்.
- தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவப் பிரிவு களுக்குக் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக தாமதமின்றி ஆராய்ந்து பார்த்து தலை யிடுதல் மற்றும் அவசியமான சந்தர்ப்பங்களில் தமது அவதானிப்புக்களை சமர்ப்பித்தல், ஆரம்ப விசாரணை அலுவல்களை மேற்கொள்ளல் மற்றும் உரிய தரப்பினரை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அழைத்து விடயங்களை விசாரிப்பதற்கு ஏற்பாடு களைச் செய்தல்.
- சமூக ஊடகங்கள் ஊடாகத் தேர்தல் சட்டங்கள் மீறப்படுகின்றமை தொடர்பாகக் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்காக

சமூக ஊடக நிருவாகிகளுடன் இணக்கப்பாடுகளுக்கு வருதல் மற்றும் அவ்வாறான செயற்பாடுகளைக் குறைத்தல் தொடர்பாக சமூக ஊடக வலையமைப்பு செயற்பாட்டாளர்களுடன் ஒருங்கிணைப்பை பேணிவருதல்.

- அனைத்து அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள், இலங்கை பொலிஸ், உள்நாட்டுத் தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புக்கள், போட்டியிடுகின்றன அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் ஆகியவர்களுடன் தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணிவருதல்.

- தேர்தல்கள் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்யும் போது தோன்றுகின்ற சட்டப் பிரச்சினைகள் மற்றும் தொடர்புடைய நடைமுறைப் பயன்பாடு தொடர்பில் தேவையான பின்னாய்வை மேற்கொள்ளல் மற்றும் அது தொடர்பாக மாவட்டத் தேர்தல்கள் உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் தேர்தல்கள் பிணக்குகள் முகாமைத்துவ பிரிவுகளுக்கும் அறிவித்தல்.

தேர்தல்கள் பிணக்குகள் முகாமைத்துவ பிரிவினால் மேற்கூறப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட நிறுவனக் குறிப்பு **இணைப்பு 21 இல்** காட்டப்பட்டுள்ளது.

அந்த நிறுவனக் குறிப்புக்கமைய மாவட்ட மட்டத்தில் மற்றும் பிரதேச மட்டத்தில் தாபிக்கப்படுகின்ற முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்காக இணைப்புச் செய்வதற்குப் பொருத்தமான சிவில் அலுவலர்கள் முற்கூட்டியே இனங்காணப்பட்டு அவர்களுக்காக விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்டன. அத்துடன் அனைத்து முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்காகவும் பொலிஸ் அலுவலர்கள் குழுவொன்றை நியமிக்கவும் பொலிஸ் மா அதிபர் அவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு இப்பணிகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற சிரேட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பொலிஸ் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், தேர்தல்கள் பணிகளுக்குப் பொறுப்பான பொலிஸ் அலுவலர்கள் ஆகியோருக்காகவும் தேர்தல் சட்டங்கள் மற்றும் முறைப்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்தத் தேசிய மற்றும் மாவட்ட முறைப்பாட்டு நிலையங்களுக்கு மேலதிகமாக மாவட்டத்தின் விசாலம், நிலத்தின் சுபாவம், போக்குவரத்து அசௌகரியங்கள் மற்றும் முன் அனுபவத்தின் அடிப்படையில் இனங்காணப்பட்ட விசேட பிரதேசங்களில் பிரதேச முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்கள் நிறுவப்பட்டிருந்தன.

### 8.10. தேர்தல்கள் முறைப்பாடுகளை அறிக்கையிடல்.

தேசிய தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் மற்றும் மாவட்ட முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்கள் வாய்மொழி மூலமாக அல்லது கீழே காட்டப்பட்டுள்ளவாறான பாரம்பரிய தொடர்பாடல் வழிமுறைகளான தொலைபேசிச் செய்திகள், தொலைநகல் செய்திகள், கடிதம் அல்லது மின்னஞ்சல் மூலமாகவும் மற்றும் வட்ஸ்அப், வைபர் மற்றும் முகநூல் போன்ற சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. "Tel Commissioner" மற்றும் "Election Commission" ஆகிய முகநூல் பக்கங்கள் ஊடாகவும் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியுமெனவும் அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது.

மாவட்ட முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு மேற்கூறப்பட்ட எந்தவொரு முறையினூடாகவும் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கும் உசாவுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதனூடாக எதிர்பார்க்கப்பட்டது யாதெனில், ஆர்வம் காட்டுகின்ற அனைத்து நபர்களுக்கும் வாக்கெடுப்பிற்குரியதான பிரச்சினைகளை இலகுவாகவும் மற்றும் துரிதமாகவும் முன்வைப்பதற்கு வசதிகளைச் செய்து கொடுப்பதாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட முறைகள் ஊடாக தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவத்தில் நேரடியாகத் தொடர்புபடுகின்ற தரப்பினர்களாக, அரசியல் கட்சிகளின் செயற்பாட்டாளர்கள் மற்றும் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் முகவர்களைக் குறிப்பிட முடியும். முறைப்பாடுகளை முன்வைத்தல் தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள் மூலம் ஆற்றப்படுகின்ற பணிப்பொறுப்புக்களை இங்கு மறந்துவிட முடியாது. ஆகையினால், தேர்தல் காலப்பகுதியின் போது இந்த அனைத்து தரப்பினர்களுடன் நேரடியான தொடர்பினைப் பேணி, தேர்தல் பிணக்குகளை முகாமைத்துவம் செய்வது சவால்மிக்கதாயினும், தொடர்ச்சியான சந்திப்புக்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்தி பொதுவான இணக்கப்பாடுகளுக்கு வந்து தேர்தல் சட்டங்கள் மீறப்படாத வகையில், பிரச்சார அலுவல்களை மேற்கொள்ளல், கூட்டங்களை நடாத்துதல், அறிவுறுத்துதல் போன்ற பணிகள் ஊடாக குறித்த தரப்பினரை இதற்காகத் தூண்டுவதற்கு ஆணைக்குழுவினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

### 8.11. தேசிய மற்றும் மாவட்ட தேர்தல்கள் முறைப்பாட்டு நிலையத்திற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான விபரங்கள்.

நீதியானதும் மற்றும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்தும் எதிர்பார்ப்பில் தேர்தல் ஆணைக் குழுவினால் சட்டங்கள் மீறப்படுவதை தவிர்ப்பதற்காக உயர்ந்த பட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவத்திற்கான பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அரசியல் கட்சிகளின் முகவர்கள் உள்ளிட்ட பொது மக்களால் வாக்கெடுப்பு தொடர்பாக முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்தினூடாக தேர்தல் ஆணைக் குழுவிற்கு செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான தகவல்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| திகதி | மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | | | | தேசிய தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | | | | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வன்முறைச் செயல்கள் | தேர்தல் சட்ட மீறல்கள் | ஏனையவை | மொத்தம் | வன்முறைச் செயல்கள் | தேர்தல் சட்ட மீறல்கள் | ஏனையவை | மொத்தம் | |
| 2019.10.08 | 1 | 16 | 0 | 17 | 1 | 45 | | 46 | 63 |
| 2019.10.09 | 0 | 42 | 0 | 42 | 1 | 50 | | 51 | 93 |
| 2019.10.10 | 0 | 43 | 0 | 43 | 1 | 66 | 2 | 69 | 112 |
| 2019.10.11 | 0 | 53 | 0 | 53 | | 45 | 4 | 49 | 102 |
| 2019.10.12 | 0 | 42 | 0 | 42 | | 51 | 9 | 40 | 82 |
| 2019.10.13 | 0 | 44 | 0 | 44 | 1 | 8 | 1 | 10 | 54 |
| 2019.10.14 | 1 | 51 | 1 | 53 | | 22 | | 22 | 75 |
| 2019.10.15 | 0 | 70 | 0 | 70 | | 15 | | 15 | 85 |
| 2019.10.16 | 0 | 60 | 6 | 66 | | 23 | | 23 | 89 |
| 2019.10.17 | 2 | 56 | 4 | 62 | | 25 | 2 | 27 | 89 |
| 2019.10.18 | 0 | 55 | 0 | 55 | | 31 | 1 | 32 | 87 |
| 2019.10.19 | 0 | 62 | 4 | 66 | | 30 | | 30 | 96 |
| 2019.10.20 | 0 | 73 | 5 | 78 | | 22 | | 22 | 100 |
| 2019.10.21 | 1 | 63 | 4 | 68 | | 34 | 1 | 35 | 103 |
| 2019.10.22 | 1 | 88 | 6 | 95 | | 27 | | 27 | 122 |
| 2019.10.23 | 0 | 92 | 11 | 103 | | 23 | | 23 | 126 |
| 2019.10.24 | 1 | 99 | 6 | 106 | 3 | 24 | | 27 | 133 |
| 2019.10.25 | 2 | 117 | 11 | 130 | | 18 | | 18 | 148 |
| 2019.10.26 | 1 | 55 | 0 | 56 | | 11 | 2 | 13 | 69 |
| 2019.10.27 | 0 | 58 | 0 | 58 | | 30 | | 30 | 88 |
| 2019.10.28 | 0 | 78 | 0 | 78 | | 13 | | 13 | 91 |
| 2019.10.29 | 2 | 79 | 1 | 82 | | 38 | 4 | 42 | 124 |
| 2019.10.30 | 1 | 62 | 1 | 64 | | 47 | 1 | 48 | 112 |
| 2019.10.31 | 2 | 83 | 2 | 87 | | 55 | 1 | 56 | 143 |
| 2019.11.01 | 1 | 109 | 1 | 111 | | 35 | 1 | 36 | 147 |
| 2019.11.02 | 1 | 92 | 3 | 96 | | 36 | | 36 | 132 |
| 2019.11.03 | 0 | 82 | 0 | 82 | | 16 | | 16 | 98 |
| 2019.11.04 | 0 | 73 | 0 | 73 | | 24 | | 24 | 97 |
| 2019.11.05 | 1 | 84 | 2 | 87 | | 29 | | 29 | 116 |
| 2019.11.06 | 0 | 84 | 2 | 86 | | 14 | | 14 | 100 |
| 2019.11.07 | 0 | 94 | 3 | 97 | | 34 | | 34 | 131 |
| 2019.11.08 | 0 | 85 | 1 | 86 | | 17 | 2 | 19 | 105 |
| 2019.11.09 | 0 | 68 | 1 | 69 | | 29 | | 29 | 98 |
| 2019.11.10 | 0 | 79 | 0 | 79 | 1 | 22 | | 23 | 102 |
| 2019.11.11 | 0 | 81 | 0 | 81 | 1 | 26 | | 27 | 108 |
| 2019.11.12 | 0 | 74 | 1 | 75 | | 27 | | 27 | 102 |
| 2019.11.13 | 0 | 68 | 1 | 69 | | 23 | | 23 | 92 |
| 2019.11.13 – 2019.11.14 (4.00 PM) | 0 | 59 | 0 | 59 | | 25 | | 25 | 84 |
| 2019.11.14 4.00 PM – 2019.11.15 12.00 MN | 4 | 104 | 7 | 115 | | 8 | | 8 | 123 |
| 2019.11.15 12.00 MN – 2019.11.15 12.00 Noon | 0 | 156 | 0 | 156 | 3 | 31 | | 34 | 190 |
| 2019.11.15 12.00 Noon – 2019.11.15 5.00 PM | | 123 | | 123 | | 41 | | 41 | 164 |
| 2019.11.15 5.00 PM – 2019.11.16 12.00 MN | 1 | 91 | | 92 | | 37 | | 37 | 129 |
| 2019.11.16 12 MN – 12.00 Noon | 1 | 385 | | 386 | 7 | 151 | | 158 | 544 |
| 2019.11.16 Noon – 5.00 PM | | 151 | 1 | 152 | | 121 | | 121 | 273 |
| | **24** | **3683** | **84** | **3792** | **19** | **1479** | **31** | **1529** | **5323** |

8.12. தேசிய தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகள்.

தேர்தல்கள் செயலகத்தில் தாபிக்கப்பட்டிருந்த தேசிய தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான பொழிப்பு.

| தேசிய தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகள்.- வகைப்படுத்தலுக்கமைய | | | |
|---|---|---|---|
| வகை | உப வகை | எண்ணிக்கை | |
| வன் முறைச் சம்ப வங்கள் | மிரட்டுதல் | 7 | |
| | ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்தல் / துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்வதற்கு முயற்சி செய்தல் | 1 | |
| | தாக்குதல் நடாத்தல்/குண்டர்கள் மூலம் தாக்குதல் நடாத்தல் | 9 | |
| | தேர்தல் பிரச்சார அலுவலகங்களுக்கு பதாகைகள் / சுவரொட்டிகள் போன்ற வற்றிற்கு சேதம் ஏற்படுத்துதல் | 2 | |
| | **மொத்த வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை** | | **19** |
| தேர்தல் சட்ட மீறல்கள் | அசையும், அசையாத பொதுச் சொத்துக்கள் மற்றும் கட்டிடங்களின் முறையற்ற உபயோகம் | 178 | |
| | அரச அலுவலர்கள் அரசியல் அலுவல்களில் ஈடுபடுதல் / ஈடுபடுத்தல் | 91 | |
| | அலுவலர் நியமனம் / பதவியுயர்வு / இடமாற்றம் | 161 | |
| | ஊடக முறையற்ற பயன்பாடு / துஷ்பிரயோகம் | 85 | |
| | பொய்ப்பிரச்சாரம் / போலியான செய்திகளை உருவாக்குதல் / வெறுப்புப் பேச்சு | 44 | |
| | தேர்தல் பிரச்சார அலுவல்களுக்கு இடையூறு விளைவித்தல் | 4 | |
| | சட்டவிரோதமான பதாகைகள் / சுவரொட்டிகள் / பாரிய உருவப்படங்களைக் காட்சிப்படுத்தல் | 330 | |
| | பொருட்களை விநியோகித்தல் / அன்பளிப்புக்களை வழங்குதல் | 158 | |
| | கூட்டங்கள்/ ஊர்வலங்கள் நடாத்தல் / சட்ட விரோதமான அரசியல் அலுவல கங்களை நடாத்துதல் | 178 | |
| | சமயத் தலைவர்கள் ஊடாக பிரச்சாரம் செய்தல்/ பிரச்சார அலுவல் களுக்காக சமயத் தலங்களை மற்றும் வைபவங்களைப் பயன்படுத்தல் | 34 | |
| | அஞ்சல் வாக்குகள் தொடர்பான முறைப்பாடுகள் | 24 | |
| | வாக்கெடுப்பு நிலையங்கள்/தேர்தல் அலுவலர்கள்/ தேர்தல் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான முறைப்பாடுகள் | 9 | |
| | வாக்களிப்புக்கு இடையூறு ஏற்படுத்தல் | 141 | |
| | சட்ட விரோதமான வைபவங்கள் ஏற்பாடு | 18 | |
| | வாக்காளர்களுக்கு உபசாரம் செய்தல் | 21 | |
| | **மொத்த தேர்தல் சட்ட மீறல்களின் எண்ணிக்கை** | | **1476** |
| **வேறு** | | 34 | |
| | **மொத்தம்** | **1529** | |

### 8.13. தேர்தல் முறைப்பாடுகள் வகையீடு.

தேர்தல் முறைப்பாடுகள் முகாமைத்துவ நிலையத் திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் பிரதானமாக கீழே காட்டப்பட்டுள்ளவாறு வன்முறை செயல்கள், தேர்தல் சட்டங்களை மீறுதல், விசாரணைகள் மற்றும் அனுமதி எதிர்பார்த்தல் என பிரதான நான்கு பகுதி களாகப் பிரிக்கப்பட்டன.

#### 8.13.1. வன்முறைச் செயல்கள்.

வன்முறைச் செயல்களின் சுபாவத்தின் அடிப் படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- மிரட்டுதல்.
- ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்தல்/ ஆயுதத்தால் சுட்டுக் கொலை செய்வதற்கு முயற்சி செய்தல்.
- தாக்குதல் நடாத்தல் / குண்டர்கள் மூலம் தாக்குதல் நடாத்தல்.
- பாரிய காயங்களை ஏற்படுத்தல் / மனித படுகொலைக்கு முயற்சி செய்தல்.
- மனித படுகொலைகள்.
- ஆட்கடத்தல்.
- துப்பாக்கிச் சூடு நடாத்துதல்.
- சொத்துக்களுக்கு தீ வைத்தல்.
- குழப்பம் விளைவித்தல்.
- சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் / சொத்துக்களைக் கைப்பற்றுதல்.
- தேர்தல் பிரச்சார அலுவலகங்களுக்கு பதாகைகள்/ சுவரொட்டிகள் போன்றவற்றிற்கு சேதம் ஏற்படுத்துதல்.

இந்தத் தேர்தலுக்குரியதாக மேற்குறிப்பிடப்பட்டவாறு தேசிய மட்டத்தில் 19 வன்முறைச் சம்பவங்களும், மாவட்ட மட்டத்தில் 24 வன்முறைச் சம்பவங்களும் அறிக்கையிடப்பட்டதோடு அது தொடர்பாக நடாத்தப்பட்ட விசாரணைகளின் போது தாக்குதல் நடாத்தல், மனித படுகொலைகள், மிரட்டுதல் / பயமுறுத்தல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை முன்னைய நிலைமைகளுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவானதாகும். இந்த முறைப்பாடுகள் தொடர்பாக பரிசீலனை செய்யும் போது அந்த சம்பவங்கள் தனிப்பட்ட காரணங்களின் அடிப்படையில், குடும்பப் பிரச்சினைகள் காரணமாகவும் மற்றும் வாய்த்தர்க்கம் மூலமாகவும் இடம்பெற்றவைகள் என்பது தெரியவந்தன. எவ்வாறாயினும் இந்த முறைப்பாடுகளின் ஊடாக வாக்கெடுப்பு அலுவல்களுக்கு அல்லது தேர்தல் முடிவுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வாறான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற வில்லையென்பது அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை சனாதிபதித் தேர்தல் தொடர்பில் நோக்குகையில் சிறந்ததொரு போக்கொன்றாகக் கருதமுடியும்.

#### 8.13.2. சட்டங்கள் மீறப்பட்டமை.

தேர்தல் காலப்பகுதியில் செயல்வலுவிலுள்ள தேர்தல் சட்டங்கள் மற்றும் ஏற்பாடுகள் என்பவற்றிற்கு முரணான விதத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கை கள் தேர்தல்கள் சட்டத்தை மீறுகின்ற நடவடிக்கை களாகக் கருதப்படுகின்றன. இந்தச் சட்டங்களை மீறுதல் நடவடிக்கைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டன.

- அசையும் மற்றும் அசையாத பொதுச் சொத்துக் களின் முறையற்ற பயன்பாடு.
- அரச உத்தியோகத்தர்கள் அரசியல் நடவடிக்கை களில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படுதல்.
- அரசியல் காரணங்களின் அடிப்படையில் அலுவலர் களின் நியமனங்கள் / பதவி உயர்வுகள் / இட மாற்றங்கள்.
- ஊடகங்களின் முறையற்ற உபயோகம்.
- பொய்ப் பிரச்சாரம், போலியான பத்திரிகைகள் தயாரித்தல், பிரச்சாரம் மற்றும் வெறுப்புப் பேச்சுக்கள்.
- தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு தடைகளை ஏற்படுதல்.
- சட்டவிரோதமான முறையில் சுவரொட்டிகள், பதாகைகள் மற்றும் பாரிய உருவப் படங்களைக் காட்சிப்படுத்தல்.
- பொருட்கள் விநியோகம், அன்பளிப்புகள் மற்றும் உபசரிப்புகள்.
- கூட்டங்கள், ஊர்வலங்கள் நடாத்துதல், சட்ட விரோதமாக அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவல கங்களை நடாத்துதல்.
- மதத் தலைவர்கள் ஊடாக பிரச்சாரங்களைச் செய்தல், பிரச்சார நடவடிக்கைகளுக்காக சமயத் தலங்கள் மற்றும் சமய விழாக்களைப் பயன் படுத்தல்.
- சட்ட விரோதமான விழாக்களை ஒழுங்கமைத்தல் மற்றும் நடாத்துதல்.
- அஞ்சல் மூலம் வாக்களித்தல் தொடர்பான முறைகேடுகள்.
- வாக்கெடுப்புக்குத் தடைகளை ஏற்படுத்தல்.

#### 8.13.3. உசாவுதல்கள்.

தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவப் பிரிவிற்குக் கிடைக்கப்பெறுகின்ற சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு மேலதிகமாக கிடைக்கப்பெற்ற உசாவுதல்களின் எண்ணிக்கை மிக அதிகமாகும். இந்த உசாவுதல்களில் அதிகமானவை, சட்டங்கள் தொடர்பான பிரச்சினைகள், சனாதிபதி வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்திய கட்சிகளின் செயற்பாடுகள், சனாதிபதி வேட்பாளர்களின் நடவடிக்கைகள் போன்றவைகள் தொடர்பானவைகளாகக் காணப்பட்டன. இந்த உசாவுதல்கள் தொடர்பில் செயற்படும்போது பெரும்பாலானவை நடைமுறைச் சிக்கல் நிறைந்தவையாகக் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக தேர்தல்கள் அலுவல்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் அவர்களின் செயற்பாடுகள்

தொடர்பாக பொது மக்கள் மத்தியில் ஏற்பட்ட சந்தேகங்கள் காரணமாக உசாவப்பட்ட விடயங்களாகக் காணப்பட்டன. மேலும், இந்த உசாவுதல்களில் பொருட்கள் விநியோகம், விழாக்களை ஏற்பாடு செய்தல், பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக அனுமதி வழங்கல், ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்டவைகளாகக் காணப்பட்டன.

### 8.13.4. அனுமதியை எதிர்பார்த்து முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள்.

தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியை எதிர் பார்த்து அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைகளில் பெரும்பாலானவை தேர்தல் காலப்பகுதியினுள் நடை முறைப்படுத்துவதற்கு உத்தேச அபிவிருத்திப் பணிகள், அரசாங்க நிறுவனங்களின் பதவிகளுக்கான அலுவலர் களை நியமனம் செய்தல், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் அல்லது தேர்தல் காலப்பகுதியினுள் அரச உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்லல் ஆகிய விடயங்கள் தொடர்பாகச் செய்யப்பட்டவைகளாகும். இந்தக் கோரிக்கைகளுக்குரிய விடயங்களை ஆராய்ந்து பார்த்து அனுமதி வழங்குவது பொருத்தமானதென உறுதிப்படுத்தப்பட்டால் அதன்படி அனுமதி வழங்குவது அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களின் போது அங்கீகாரம் வழங்குவதை நிராகரித்து தேர்தல் நிறைவடையும் வரை அந்தப் பணிகளை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. சில கோரிக்கைகள் மேலதிக விசாரணைக்கு அனுப்பப்பட்டதோடு, சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டதெனத் தெரிய வந்த முறைப்பாடுகள் குறித்து சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக அனுப்பப்பட்டன.

### 8.14. அரச வளங்கள் துஷ்பிரயோகத்தை தவிர்த்தல்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104 (ஆ) (4) (அ) உறுப்புரைக் கமைய தேர்தலில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவதை ஊக்கப்படுத்துகின்ற அல்லது பாதிப்புக்குற்படுத்துகின்ற நோக்கத்திற்காக அரசுக்கு அல்லது ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத் துக்குச் சொந்தமான அசையும் அல்லது அசையா ஆதனமொன்று பயன்படுத்தப்படுவதைத் தடைசெய்வ தற்கான தத்துவம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இந்த உறுப்புரைக்கமைய தேர்தல் ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்ற பணிப் புரைகளுக்கு இணங்கியொழுகுவதற்கு அரச சொத்துக் களுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்கள் கட்டுப் பட்டுள்ளனர். இந்தப் பணிப்புக்கள் அனைத்து அமைச்சுக்கள், ஆணைக்குழுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபன நியதிச்சட்ட சபைகள், அரசாங்கப் பாடசாலைகள், அரச பல்கலைக்கழகங்கள் போன்ற அனைத்து அரச நிறுவனங்கள், அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள கம்பனிகள் ஆகியவற்றுக்கு ஏற்புடையதாகும். அரச சொத்துக்கள் வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்காக பயன்படுத்தப்படுதல் தொடர்பாக கூடிய கவனம் செலுத்திய தேர்தல் ஆணைக்குழுவினால் அரசியலமைப்பின் மேற்குறித்த ஏற்பாடுகளின் பிரகாரம், 2141/52 ஆம் இலக்க மற்றும் 2019.09.09 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தேர்தல் காலப்பகுதியினுள் அரசாங்கத்திற்கு அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் அல்லது நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றுக்குரிய அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை கட்சிகள், குழுக்கள் அல்லது வேட்பாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றவாறு அல்லது பாதிப்புக்குற்படுகின்றவாறு அல்லது நீதி யானதும் மற்றும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துகின்ற பணிகளுக்கு தடையேற்படக்கூடியவாறு பயன்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கான பணிப்புக் களுக்கு மேலதிகமாக 2143/47 ஆம் இலக்க மற்றும் 2019.09.19 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட பணிப்புக்கள் திருத்தம் செய்யப்பட்டதோடு மேலதிக பணிப்புக்களும் உள்ளடக்கப்பட்டன. இந்தப் பணிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் **இணைப்பு 22 மற்றும் இணைப்பு 23** இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் EC/EDR/PRE-2019 மற்றும் 2019.09.18 ஆம் திகதிய 01ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் தேவையான அறிவுறுத்தல்கள் அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டது. இதற்கு மேலதிக மாக அந்த சுற்றறிக்கை மூலம் அரசுக்கு அல்லது அரச கூட்டுத்தாபன, நியதிச்சட்ட சபைகளுக்கு சொந்தமான சொத்துக்களை தேர்தல் காலப்பகுதிக்குள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவதைத் தடுப்ப தற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அந்நிறுவனங் களிற்கு அலுவலர்கள் / ஊழியர்களை புதிதாக ஆட்சேர்ப்புச் செய்தல், பதவி உயர்வு வழங்குதல், இடமாற்றம் செய்தல் என்பன வரையறுக்கப்பட்டுள்ளதாக அறிவித்து அமைச்சுக்களின் செயலாளர்கள், அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் உள்ளிட்ட அனைத்து ஆணைக்குழுக்களின் செயலாளர்கள், அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள், அனைத்து மாவட்ட செயலாளர்கள், அனைத்து மாகாண ஆளுநர்கள், மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுக்களின் செயலாளர்கள் மற்றும் அனைத்துத் திணைக்களத் தலைவர்கள், அனைத்து அரச கூட்டுத்தாபன நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள், நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் பொது முகாமையாளர்கள் ஆகியோர் அறிவுறுத்தப்பட்டனர்.

இதற்கு மேலதிகமாக உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் உத்தியோகபூர்வ வாகனங்களில் அரசியல் பிரச்சாரக் கூட்டங்களுக்குச் சென்று வருவதற்காகப் பயன்படுத்தல் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் ஏனைய உபகர ணங்கள், தளபாடங்கள், ஊழியர்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றை போக்குவரத்துச் செய்தல், கூட்டங்களை ஒழுங்கு செய்தல் போன்ற வேட்பாளர்களின் ஊக்குவிப்பு அலுவல்களுக்குப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டது. இந்தத் தடை தொடர்பாக மற்றும் அரசியல் கட்சி வேட்பாளர்களின் கூட்டங்கள், பிரச்சார சுவரொட்டிகள், பாதயாத்திரை, துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற தொடர்புடைய சட்ட மீறல்களிலிருந்து தவிர்ந்திருப்பதன் தேவைப்பாட்டை வலியுறுத்தி 41 ஆம் இலக்க ஊடக அறிக்கை வெளியிடப்பட்டது. இதனை

தேர்தல்கள் சட்டங்களை முறைப்படி அமுல்படுத்துவ தற்குத் தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்ட ஒரு நடவடிக்கையாகக் குறிப்பிட முடியும்.

பொதுவாக தேர்தல் பற்றிய அறிவித்தல் அல்லது பிரகடனம் வெளியிடப்பட்ட பின்னர், அரசாங்க நிதியைப் பயன்படுத்தி விழாக்களை ஏற்பாடு செய்தல், பொருட்கள் மற்றும் பண்டங்களை வழங்குதல் போன்ற நிவாரணங்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல், அலுவலர்கள் / ஊழியர்கள் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் வழங்கல் முன்னைய அனுபவமொன்று எனினும், அரசியலமைப்பினால் கையளிக்கப்பட்டுள்ள இந்த பணிப்புக்களை வெளியிடுவ தற்குரிய அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிக்குக் கையளிக்கப்பட்டமை, இது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை அறிவுறுத்தல், முன்னைய தேர்தல்களின் போது அவ்வாறான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதற்குப் பங்களிப்புச் செய்த அலுவலர் களுக்கு தாபன விதிக்கோவையின் பிரகாரம் தண்டனை வழங்குதல் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருத்தல் ஆகிய காரணங்களினால், இத்தேர்தலின் போது இந்நிலைமை கணிசமானளவு குறைவடைந்து சாதகமான சூழ்நிலையொன்று நிலவியதைக் காணக் கூடியதாக இருந்தது. தேர்தல் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டிருந்த இத்தகைய முன்னெடுப்புக்களின் விளைவாக அலுவலர்கள், ஊழியர்கள் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, இடமாற்றங்கள் மாத்திரமன்றி, உத்தியோகபூர்வ அலுவல்கள் அல்லது தனிப்பட்ட கருமங்களுக்காக வெளிநாடு செல்லும் போது கூட தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் இதர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்த நிறுவனத் தலைவர்களின் கவனம் ஈர்க்கப்பட்டிருந்தமை பாராட்டுக் குரியதாகும். மேலும், ஆட்சேர்ப்புக்கள், இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பாக கோரிக்கை சமர்ப்பித்த நிறுவனத் தலைவர்களின் பரிந்துரைகள் தொடர்பாக எந்தவொரு தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாதெனத் திருப்தியடைந்த சந்தர்ப்பங்களில் மாத்திம் அவ்வாறான கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் சுயேச்சைக்குழு வேட்பாளர்கள் தொடர்பாக பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்க நெறிகள் உள்ளடக்கப்பட்ட 2142/47 ஆம் இலக்க மற்றும் 2019.09.25 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டது. அது **இணைப்பு 24** இல் காட்டப்பட்டுள்ளது. நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை நடாத்துவதற்கான பின்னணியொன்றை உருவாக்குவதே இதன் எதிர்பார்ப்பாகக் காணப்பட்டது.

### 8.15. தேர்தல்கள் மற்றும் தொடர்புடைய நீதிமன்ற அலுவல்கள்.

இந்தத் தேர்தலுக்குரியதாக தடையுத்தரவை பெற்றுக்கொள்வதற்காக உச்ச நீதிமன்றத்தில் இரண்டு கோரிக்கைகளும், ஓர் அடிப்படை உரிமை வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. SC/Writ/10/2019 இலக்கத்தின் கீழ் சனாதிபதித் தேர்தலை நடாத்துதல் தொடர்பில் தடை உத்தரவினைப் பெற்றுக்கொள்வதற்காக கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டதோடு மற்றைய கோரிக்கை ஊடகம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டதாகும். அவை தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| தொ. இல. | வழக்கு இலக்கம் மற்றும் நீதிமன்றம் | முறைப்பாட்டாளர் | கோரப்பட்ட உதவி | தீர்ப்பு / தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 01 | SC/Writ/08/2019 உச்ச நீதிமன்றம் | EMERGING MEDIA (PVT) LTD | தேர்தல் காலப்பகுதியினுள் வேட்பாளர் களின் பிரச்சார அறிவித்தல்கள் LED திரைகளில் மற்றும் திரையரங்கு களில் பிரச்சாரம் செய்வதற்கு இடமளிக்குமாறு கோரி | இந்த வழக்கு கௌரவ நீதிமன்றத்தினால் 2019.11.21 ஆம் திகதி நிராகரிக்கப்பட்டது |
| 02 | SC/Writ/10/2019 உச்ச நீதிமன்றம் | சமிந்த தயான் லேனவ | 2141/25 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை இடை நிறுத்துமாறும் மற்றும் மக்கள் தீர்ப்பொன்றை நடாத்துதல் தொடர்பாக | இந்த வழக்கு கௌரவ நீதிமன்றத்தினால் 2019.11.21 ஆம் திகதி நிராகரிக்கப்பட்டது |
| 03 | SC/FR/440/2019 உச்ச நீதிமன்றம் | தரிந்து இரங்க ஜயவர்தன மற்றும் கே.வீ. சந்துன் பிரியங்கர விதானகே | தனியார் மற்றும் அரச ஊடகங் களினால் தேர்தல் காலத்தினுள் ஊடக வழிகாட்டு நெறிகள் மீறப்படல் தொடர்பாக நடவடிக்கையெடுக்கு மாறு கோரி | தற்போது விசாரிக்கப்பட்டு வருகின்றது |

### 8.16. தேர்தல்கள் அலுவல்களை கண்காணித்தல்.

தேர்தலொன்றின் போது அது தொடர்பான கண் காணிப்பில் ஈடுபடுகின்ற உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அமைப்புக்களுக்கு அல்லது நபர்களுக்கு தேர்தல்கள் சட்டங்கள் மூலம் அதற்காக வசதிகள் செய்யப்படவில்லை. இருப்பினும் நீண்டகாலமொன்றினுள் கண்காணிப்பு அலுவல்கள் தொடர்பில் செயலாற்றுவ தற்கும் அதற்காக அந்த நிறுவன வலையமைப்பினுள் உள்ள பலம், பக்கச்சார்பின்றி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக உணர்த்தியுள்ளதாலும், அரசியல் கட்சிகள் மற்றும் உரிய ஏனைய தரப்பினர்களின் இணக்கப்பாட்டின் மீது தேர்தல் கண்காணிப்புக்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தி இலங்கையில் தேர்தல் கண்காணிப்பு அலுவல்களில் ஈடுபடுத்துவதற்கு சந்தர்ப்பத்திற்கேற்ப அனுமதி வழங்கப்படும். கண்காணிப்பின் பின்னர் தேர்தல் அலுவல்கள் சுதந்திரமாக, பக்கச்சார்பின்றி வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும் மற்றும் நம்பகத்தன்மை கொண்டதாகவும் இடம்பெறுகின்றதா என்பது தொடர்பாக அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பது இவ்வாறு கண்காணிப்புக் குழுக்களை ஈடுபடுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. சனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக 2019.11.16 ஆம் திகதி நடாத்தப்பட்ட வாக்கெடுப்பு அலுவல்களைக் கண்காணிப்பதற்காக அனுமதிகோரி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமைப்புக்கள் பல தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இந்த உள்நாட்டு கண்காணிப்பு நிறுவனங்களில் பெரும்பாலானவை அரச சார்பற்ற நிறுவனங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களாகும். கடந்த பல தசாப்தங்களாக தேர்தல்களை கண்காணிப்புச் செய்தல் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவம் மற்றும் செயற்பாடுகள் ஆகிய வற்றைக் கருத்திற் கொண்டு இந்தக் கண்காணிப்பு அமைப்புக்களில் சில அமைப்புக்களுக்கு கண்காணிப்பு அலுவல்களில் ஈடுபடுவதற்காக அனுமதியளிக்கப்பட்டது. அதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் அல்லது அரசினால் எவ்விதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதில்லை.

இந்தத் தேர்தல் கண்காணிப்புக்காக உள்நாட்டுக் கண்காணிப்பு அமைப்புக்களுக்கு மேலதிகமாக வெளிநாட்டு கண்காணிப்பு நிறுவனமான பொது நலவாய நாடுகள் மற்றும் ஐரோப்ப சங்கத்தின் கண்காணிப்பு குழுக்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டன.

#### 8.16.1. உள்நாட்டு கண்காணிப்பு நிறுவனங்கள்.

சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான இத்தேர் தலில் போதும் கடந்த தேர்தல்களைப் போன்றே போட்டியிடுகின்ற வேட்பாளர்களை அறிவுறுத்தி அவர் களின் இணக்கப்பாட்டின் மீது தேர்தல்கள் கண்காணிப்பு தொடர்பான அனுபவம் கொண்ட கண்காணிப்பு அமைப்புக் களுக்கு தேர்தல் அலுவல்களைக் கண்காணிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

கடந்த தேர்தல்களில் அந்தந்த கண்காணிப்பு நிறுவனங் களின் செயற்பாடுகள் மற்றும் இருப்பு அவர்களின் அனுபவம் என்பன தொடர்பாக பரிசீலித்துப் பார்த்து கீழே காட்டப்பட்டுள்ள இரண்டு உள்நாட்டு நிறுவனங் களுக்கு வாக்கெடுப்பு நிலையங்களுக்குள் தேர்தல் அலுவல்களை கண்காணிப்பதற்காக தரித்திருந்து கண்காணிக்கும் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தி கண்காணிப்பதற்கும், வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியில் நடமாடும் கண்காணிப்பிற்காகவும் அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறு தேர்தல் ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்ட கண்காணிப்பு நிறுவனங்களின் தகவல்கள் பின்வருமாறு.

01. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL)
    இலக்கம் 12/3, ரொபட் டெரஸ், ரொபட் குணவர்தன மாவத்தை, கொழும்பு 06.
02. தேர்தல்கள் வன்முறைச் செயல்கள் கண்காணிப்பு நிலையம். (CMEV)
    இலக்கம் 6/1, லெயாட்ஸ் வீதி, கொழும்பு 05.

இந்த இரண்டு அமைப்புக்களின் பிரதானிகளான, நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், இணை அழைப்பாளர் மற்றும் இணை இணைப்பாளர், செயலாளர்கள், தேசிய அமைப்பாளர்கள், சிரேட்ட முகாமையாளர்கள் ஆகிய பதவிகளை வகிக்கின்றவர்களுக்கு நாட்டின் எந்தவொரு வாக்கெடுப்பு நிலையத்தினுள்ளும் பிரவேசித்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப் பட்டதோடு, மாவட்ட இணைப்பாளர்களுக்கு மாவட்டத்தினுள் எந்தவொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும் உட்பிரவேசித்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேற்படி கண்காணிப்பு அமைப்புகளுக்கு மேலதிகமாக கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக இதற்கு முன்னர் தேர்தல்களின் போது பங்குபற்றிய மற்றும் உயிர்ப்புடன் செயலாற்றிய பின்வரும் நான்கு கண்காணிப்பு அமைப்புக்களுக்கும் கண்காணிப்பு நடவடிக்கை களுக்காக அனுமதி கோரிய மாவட்டங்களில் அமையப் பெற்றுள்ள வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்கெடுப்பு அலுவல்களை நடமாடும் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தி வாக்கெடுப்பு நிலைய வளாகத்திற்கு வெளியில் இருந்து கண்காணிப்பதற்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறு வெளியிலிருந்து கண்காணிப்பதற்காக மாத்திரம் அனுமதி வழங்கப்பட்ட கண்காணிப்பு அமைப்புகளின் விபரங்கள் பின்வருமாறு:

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் அமைப்பு (CaFFE)
இல. 100/19, வெலிகடவத்தை, இராஜகிரிய.

இலங்கையின் அன்னையரும் புதல்வியரும் அமைப்பு (MDL)
இல. 117, தலாகேன, மாலபை.

ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா (TISL)
இலக்கம் 5/1, எலிபேன்ங் வீதி, கொழும்பு 05.

தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையம். (NPOC)
கார்ல்ஷு கோர்ட், 195, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09.

கண்காணிப்புக்காக அனுமதி வழங்கும் போது அரசியற் கட்சிகளின் செயற்பாடுகளுடன் தொடர்புபடாத ஆட்களை கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக நியமனம் செய்வ தற்கும், சுதந்திரமாக கண்காணிப்பு அலுவல்களை மேற்கொள்வதற்கும் தேவையான அறிவுறுத்தல்கள் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்படுகின்ற நபர்களுக்கு வழங்குமாறும், கண்காணிப்பு அமைப்புகளின் தலைவர் களுக்கு அறிவிக்கப்பட்டதோடு, அவ்வாறு செயற்படுவ தற்குத் தவறும் நிறுவனங்களை கண்காணிப்பு நடவடிக்கைகளிலிருந்து அகற்றுவதற்கு நேரிடுமெனவும் மேலும் வலியுறுத்தப்பட்டது. கண்காணிப்பு அலுவல் களுக்காக மாவட்ட மட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கண்காணிப்பாளர்களின் பெயர்ப் பட்டியலை வாக்கெடுப்புத் தினத்திற்குக் குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்னர் மாவட்ட பிரதி / உதவி ஆணை யாளரினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கு மாறும், அவ்வாறு இல்லையெனில் உரிய கண்காணிப் பாளர்களின் விபரங்களை வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு முன்கூட்டியே வழங்க முடியாது போவதால் பிரச்சினைகள் ஏற்படலாமெனவும் கண்காணிப்பு அமைப்புகளுக்கு அறிவிக்கப்பட்டது. வாக்கெடுப்பு தினம் வாக்கெடுப்பு நிலையத்தில் தரித்திருந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட பின்னர் தேர்தலுக்குரியதாக அவர்களினால் குறிப்புக்களையிட்டு பேணிவரப்பட்ட அறிக்கையை வாக்கெடுப்பு முடிவடைந்தவுடன் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களிடம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக அஞ்சல் வாக்குகள் அடையாள மிடப்படுகின்ற நிலையங்களுக்கு தமது கண்காணிப்பு அலுவலர்களை ஈடுபடுத்துவதற்கு நீதியானதும் சுதந்திர மானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு மற்றும் வன்முறைச் செயல்கள் கண்காணிப்பு நிலையம் ஆகிய அமைப்புக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இந்த சனாதிபதித் தேர்தலின் போது, உள்நாட்டு கண்காணிப்பு நிறுவனங்களுக்கு வாக்கெண்ணல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கும் சந்தர்ப்பங்கள் செய்து கொடுக்கப்பட்டன. வாக்கெண்ணலின் போது பல்வேறு ஊழல்கள் நடைபெறுவதாக அரசியல் கட்சிகள் மற்றும் வேறு அமைப்புக்கள் கொண்டுள்ள மூட நம்பிக்கையை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டு வாக்கெடுப்பு அலுவல்களில் ஈடுபடுத்தப்படுகின்றவாறே வாக்கெண்ணல் அலுவல்கள் வாக்கெண்ணல் மண்டபத் தினுள் தரித்திருக்கின்ற முகவர்களை நிறுத்தி கண்காணிப்பதற்கு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) மற்றும் தேர்தல் வன்முறைச் செயல்கள் கண்காணிப்பு நிலையம் (CMEV) ஆகிய கண்காணிப்பு அமைப்பு களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) தேர்தல் வன்முறைச் செயல்கள் கண்காணிப்பு நிலையம் (CMEV) ஆகிய கண்காணிப்பு அமைப்புகள் தமது உள்நாட்டு கண்காணிப்பாளர்களுக்கு மேலதிகமாக, ஏனைய சில நாடுகளின் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களும் ஈடுபடுத்தப்பட்டு அவர்களின் கண்காணிப்புச் செயற்பாடு கள் விரிவான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதோடு அதற்காக தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து முன்னனு மதியும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

### 8.16.2. வெளிநாட்டு கண்காணிப்பு அமைப்புகள்.

சனாதிபதி தேர்தல் தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர், தேர்தலில் போட்டியிடுவ தற்கு வேட்பாளர்களை நிறுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர் களின் பங்கேற்புடன் தேர்தல்கள் செயலகத்தில் 2019.10.09 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் தேர்தல் கண்காணிப்புக்காக வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. அதற்கமைய ஆசியத் தேர்தல்கள் அதிகாரிகளின் சங்கத்தின் (AAEA) தலைவருக்கும், தெற்காசிய தேர்தல்கள் முகாமைத்துவ அதிகாரிகளின் சங்கத்தின் (FEMBoSA) தலைவருக்கும் மற்றும் தென் ஆபிரிக்க மனித உரிமைகள் அமைப்பிற்கும் 2019.11.16 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தல் அலுவல்களைக் கண்காணிப்பதற்கு கண்காணிப்பாளர் களை ஈடுபடுத்துமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அதே போன்று பொதுநலவாய நாடுகளின் (The Commonwealth) தேர்தல்கள் கண்காணிப்பு குழு மற்றும் ஐரோப்பா சங்கத்தின் தேர்தல்கள் கண்காணிப்புக் குழு ஆகியவற்றுக்கு அழைப்பு விடுப்பதற்குத் தேர்தல் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த அழைப்பின் பேரில் குறித்த அமைப்புக்களின் கண்காணிப்பாளர் குழுக்கள் இத் தேர்தல் கண்காணிப்பில் கலந்துகொண்டன. இந்த கண்காணிப்பு அமைப்புகளின் கண்காணிப்பாளர்கள் நாடு முழுவதும் உள்ளடங்கும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் பூட்டான், பங்களாதேஷ் மற்றும் மாலைத்தீவு ஆகிய நாடுகளின் தேர்தல்கள் நிறுவனங்களின் பிரதானிகள் அடங்கிய ஆய்வுக் குழுவொன்று ஏழு மாவட்டங்களில் தேர்தல்களை நடாத்துவது தொடர்பான ஆய்வு நிகழ்ச்சித் திட்டமொன்றுக்காக கலந்து கொண்டனர்.

தேர்தல் ஆணைக்குழுவினால் ஆசியத் தேர்தல்கள் அதிகாரிகளின் சங்கம் (AAEA) மற்றும் தெற்காசிய தேர்தல்கள் முகாமைத்துவ அதிகாரிகளின் சங்கம் (FEMBoSA) ஆகிய அமைப்புக்களின் கண்காணிப் பாளர்கள் நேரடியாக ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டனர். பொதுநலவாய நாடுகளின் (Commonwealth) கண் காணிப்புக் குழு மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கண் காணிப்புக் குழு என்பன ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் இணைப்புச் செய்யப்பட்டு அவர்களின் விபரங்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டன. கண்காணிப்பு நடவடிக்கைகளின் போது அவர்களுக்குத்

தேவையான தகவல்களை வழங்குவதற்காக மாத்திரம் தேர்தல் ஆணைக்குழுவினால் தலையீடு செய்யப்பட்டது. மேலும் இணைப்புச் செய்யப்பட்டுள்ள மாவட்டத்தினுள் வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் அலுவல்களைக் கண்காணிப்பதற்காக தேவையான எந்தவோர் இடத் திற்கும் செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. பெயர் குறித்த நியமனங்கள் கையேற்றல் அலுவல்களின் பின்னர் 2019.11.16 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் மேற்குறித்த கண்காணிப்பு அமைப்புக்களின் சுமார் 50 கண் காணிப்பாளர்கள் வரை பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு வருகைதந்து கண்காணிப்பு நடவடிக்கை களில் கலந்துகொண்டனர்.

தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்ட பொது நலவாய நாடுகள் மற்றும் ஐரோப்பிய சங்கம் ஆகியவற்றின் கண்காணிப்பாளர்கள் அல்லாத ஏனைய வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுக்கு உதவி புரிவதற்காக தேர்தல்கள் செயலகம் மற்றும் அந்தந்த மாவட்டங்களிலிருந்தும் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டதோடு, அவர்கள் மாவட்டத்தினுள் தங்கியிருக்க வேண்டியதன் தேவைப்பாட்டைக் கவனத்திற் கொண்டு கண்காணிப்பாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குமாறும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் அந்தந்த மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் அறிக்கையிட்டதன் பின்னர் அவர்களுக்கு மாவட்டத் பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களைச் சந்தித்து தேர்தல் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடி அரசியல் கட்சிகள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், உள்ளூர் கண்காணிப்பு அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸார் ஆகியவர்களுடன் கலந்துரையாடுவ தற்குத் தேவையான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்குமாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. ஐரோப்பிய சங்கம் மற்றும் பொதுநலவாய நாடுகளின் ஆகியவற்றின் கண்காணிப்புக் குழுக்களுக்கு இந்த கண்காணிப்புச் செயற்பாடுகளுக்கான மொத்தச் செலவுகளும் அந்த நிறுவனங்கள் மூலமாகச் செய்யப்பட்டது. ஆதலால், அந்த கண்காணிப்பு அமைப்புக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் அலுவல்களின் கண்காணிப்புக்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மாத்திரம் தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டன.

அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் 2019.10.31 ஆம் திகதி மற்றும் 2019.11.01 ஆம் ஆகிய இரு தினங்களிலும் நடைபெற்ற அஞ்சல் வாக்கு அடையாளமிடல் நடவடிக்கைகளைக் கண்காணிப்ப தற்காகவும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் கலந்து கொண்டதோடு 2019.11.16 ஆம் திகதி வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்கெடுப்பு அலுவல்கள் இடம் பெறுகின்ற விதத்தைக் கண்காணித்தல் மற்றும் வாக்கெண்ணல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் அலுவல்களைக் கண்காணிப்பதற்காகவும் அவர்களுக்கு சந்தர்ப்பங்கள் செய்து கொடுக்கப்பட்டன.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் கண்காணிப்பு அறிக்கைகளின் பொதுவான அபிப்பிராயம் யாதெனில், 2019 சனாதிபதித் தேர்தல்களைப் பொதுவாக நோக்கும் போது அமைதியாகவும் மற்றும் நீதியாகவும் தேர்தல்கள் நடாத்தப்பட்டது என்பதாகும். சிறிய அளவிலான சில சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் முன்னைய தேர்தல்களுடன் ஒப்பிடும் போது 2019 சனாதிபதித் தேர்தல்கள் பாராட்டத்தக்க மட்டத்தில் நடாத்தப்பட்ட தேர்தலொன்று என அறிக்கையிடப் பட்டிருந்தமை மகிழ்ச்சிக்குரியதொரு விடயமாகும்.

# ஒன்பதாம் அத்தியாயம்

## வாக்கெண்ணல் மற்றும் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தல்.

**09. வாக்கெண்ணல்.**

சனாதிபதித் தேர்தலுக்குரிய வாக்கெண்ணல் அலுவல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2019.11.16 ஆம் திகதி வாக்கெடுப்பு அலுவல்கள் நிறைவு செய்யப்பட்டு வாக்குப் பெட்டிகள் அந்தந்த வாக்கெண்ணல் நிலையங்கள் அமையப்பெற்றுள்ள வளாகங்களுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பிரகாரம் அனைத்து மாவட்டங்களிலும் 43 வாக் கெண்ணல் வளாகங்களில் அமைக்கப்பட்டிருந்த வாக்கெண்ணல் நிலையங்களின் எண்ணிக்கை 1550 ஆகும். அதில் 1179 சாதாரண வாக்கெண்ணல் நிலை யங்கள், 371 அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங்கள் என வேறுபடுத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு மாவட்டத்திலும் தாபிக்கப்பட்ட வாக்கெண்ணல் நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணல் வளாகங்கள் தொடர்பான விபரங்கள் முறையே **05 மற்றும் 06 ஆம் இலக்க புள்ளிவிபரக்** குறிப்பில் காட்டப்பட்டுள்ளது. வாக்கெண்ணலுக்குப் பொறுப்பாக ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலைய மொன்றிலும் பிரதான வாக்கெண்ணல் உத்தியோகத்த ரொருவர் (CCO), உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் வாக்கெண்ணல் அலுவலர்கள் போதுமானளவு ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். வாக்கெண்ணல் நடவடிக்கை களில் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்தும் முகமாக பரிசோதனை, சிறப்புப் பரிசோதனை மற்றும் எழுமாற்றுப் பரிசோதனை மற்றும் அப்பணிகளின் மேற்பார்வை என்பன ஒவ்வோர் அலுவலர்கள் குழுவினாலும் மேற்பார்வை செய்யப்பட்டது. மேலும் இந்தச் செயற்பாடுகள் வேட்பாளர்களின் கோரிக்கையின் பிரகாரம் நியமனம் செய்யப்பட்ட வாக்கெண்ணல் முகவர்களின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டதன் ஊடாக வாக்கெண்ணல் அலுவல்கள் நீதியாகவும் மற்றும் முறையாகவும் இடம்பெற்றமையை உறுதிப்படுத்துவதற்கு முடிந்தது.

சனாதிபதித் தேர்தல்கள் தொடர்பான 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 47 முதல் 59 வரையான பிரிவுகளில் வாக்கெண்ணல் தொடர்பான விடயங்களும் மற்றும் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 18 முதல் 28 வரையான பிரிவுகளில் அஞ்சல் வாக்கெண்ணல் தொடர்பான விடயங்களும் குறிப்பிடப் பட்டுள்ளன. அச்சட்டத்தின் 47 ஆம் பிரிவிற்கு அமைய தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பேரில் அந்தந்த தேர்தல் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வாக்கெண்ணலின் பின்னர் அவற்றின் பெறுபேறுகள், தேர்தலுடன் தொடர்புடைய மொத்தப் பெறுபேறுகளைத் தயாரிப்பதற்காகத் தேர்தல் ஆணைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**9.1. வாக்கெண்ணல் நிலையங்கள்.**

மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வாக்கெண்ணல் பணிகளுக்காகப் பொருத்தமான இடங்களை அடையாளம் காணுதல். வாக்கெண்ணல் பணியாட்குழுவினரை நியமனம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வாக்கெண்ணல் திகதி மற்றும் நேரம், வாக்கெண்ணல் நிலையங்களின் அமைவிடம் மற்றும் வாக்கெண்ணல் கண்காணிப்புக்காக வருகை தர முடியுமான முகவர்கள் தொடர்பாக போட்டியிடுகின்ற வேட்பாளர்களை அறிவுறுத்தல் வேண்டும். வாக்கெடுப்புப் பிரிவொன்றுக் குரிய பல வாக்கெடுப்பு நிலையங்களின் வாக்குச் சீட்டுக்கள், ஒரு வாக்கெண்ணல் நிலையத்தில் வாக்கெண்ணலை மேற்கொள்ளக்கூடிய வகையில் அந்த நிலையங்கள் திட்டமிடப்பட்டன. இத்தேர்தலில் பொதுவாக ஒரு வாக்கெண்ணல் நிலையத்திற்காக பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்கள் 7,500 தொடக்கம் 10,000 உள்ளடங்கும் வகையில் வாக்கெண்ணல் நிலையங்கள் திட்டமிடப்பட்டன. அஞ்சல் வாக்குப் பக்கற்றுக்கள் 1500 - 2500 வரையான எண்ணிக்கை, ஒரு வாக்கெண்ணல் நிலையத்திற்குரியவாறு வாக்கெண்ணல் நிலையங்களைத் தாபிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப் பட்டது. அதற்கமைய தேர்தல்கள் மாவட்டத்தின் அனைத்து வாக்கெடுப்புப் பிரிவுகளுக்குமுரிய வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய வாக்குப் பெட்டிகள் மற்றும் முத்திரை பொறிக்கப்பட்டு மீளக் கையளிக்கப்படுகின்ற உறைகள் போன்ற ஏனைய பொருட்களாதியவை உரிய முறையில் கையேற்கப்பட்டதன் பின்னர் அந்த வாக்குப் பெட்டிகளில் உள்ள வாக்குச் சீட்டுக்கள் மற்றும் அஞ்சல் வாக்குப் பக்கற்றுக்களில் உள்ள வாக்குச் சீட்டுக்கள் என்பன அந்தந்த வாக்கெண்ணல் நிலையங் களில் வேட்பாளர்களின் முகவர்களின் முன்னிலையில் வாக்கெண்ணப்பட்டு ஒவ்வொரு வேட்பாளரும் ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவுகளிலிருந்தும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழு விற்கு அறிக்கையிடுதல், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் பிரதானமான பணியாகக் காணப்பட்டது.

வாக்கெண்ணல் நிலையங்களின் இட அளவு மற்றும் அவற்றிலுள்ள வசதிகளுக்கு அமைவாக தேர்தல் ஆணைக்குழுவினால் வாக்கெண்ணல் தொடர்பாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் இத் தேர்தலில் வாக்குச் சீட்டுக்கள் பெரிதாகக் காணப்பட்டமை தொடர்பாகவும் கவனம் செலுத்தி வாக்கெண்ணல் நிலையங்களைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. வாக்கெண்ணல் நிலைய மொன்றினுள் 30 – 40 இடைப்பட்ட எண்ணிக்கையான பணியாட்குழுவினருக்கும் மற்றும் சட்டத்தின் ஏற்பாடு களுக்கமைய 70 பேர் வரையான வேட்பாளர்களின் முகவர்களுக்கும் வசதிகள் செய்வதற்கு நேரிடுவதால், வாக்கெண்ணல் வளாகங்களினுள் போதுமானளவு வசதிகள் கொண்ட பொருத்தமான நிலையங்கள் காணப்படாமை தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டப் பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையா ளர்கள் முகங்கொடுத்த பிரதான பிரச்சினையொன்றாகக் காணப்பட்டது. அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங் களுக்காகத் தலைமை வாக்கெண்ணல் அலுவலர் உள்ளடங்கலாக 15 அலுவலர்கள் வரையில் ஈடுபடுத் துவதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைப் பிரச்சினைகள்

காரணமாக பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தேர்தல் மாவட்டமொன்றின் அனைத்து வாக்கெண்ணல் நிலையங் களையும் ஒரு வளாகத்தில் தாபிக்க முடியவில்லை. அதன் காரணமாக ஒரு தேர்தல் மாவட்டத்திற்காக பல வளாகங்களில் வாக்கெண்ணலை மேற்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வாக்கெண்ணலின் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தப்படுவதற்காக பயன்படுத்தப்பட்ட நிலையங்களையும் சாத்தியமான அனைத்து சந்தர்ப் பங்களிலும் வாக்கெண்ணல் வளாகத்தினுள் தாபிப்ப தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, இடவசதி இன்மை காரணமாக சில மாவட்டங்களில் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தும் நோக்கத்திற்காக மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்ட வளாகமொன்றில் மேற்கொள்ளப் பட்டன.

**9.2. வாக்கெண்ணல் நிலையங்களுக்கான முகவர்களை நியமித்தல்.**

சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் கட்டளைகளுக் கமைய ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் அஞ்சல் வாக்கெண்ணல் நிலையமொன்றுக்கு இரண்டு முகவர்கள் வீதமும் மற்றும் சாதாரண வாக்கெண்ணல் நிலைய மொன்றுக்கு ஐந்து முகவர்கள் வீதமும் நியமனம் செய்வதற்கு சந்தர்ப்பம் செய்துகொடுத்தல் வேண்டும். அதற்கமைய வாக்கெடுப்புக்கு முன்னர், வேட்பாளர் களுக்குத் தமது வாக்கெண்ணல் முகவர்களை நியமனம் செய்யக்கூடிய வகையில் தெரிவத்தாட்சி அலுவலர் களினால் அந்தந்த மாவட்டங்களுக்குரிய வாக்கெண்ணல் நிலையங்களின் அமைவிடம், அவற்றுக்கு வாக்கெடுப்பு நிலையங்கள் (பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை சகிதம்) இணைப்புச் செய்யப்பட்டுள்ள முறைகள் மற்றும் அவற்றிற்காக நியமனம் செய்யக் கூடிய முகவர்களின் எண்ணிக்கை உட்பட உரிய விபரங்கள் அனைத்து தேர்தல் முகவர்கள் மற்றும் அங்கீகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டன. ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையங்களுக்கும் நியமனம் செய்வதற்கு எதிர்பார்க் கின்ற முகவர்களின் விபரங்களைத் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கையளிக்க வேண்டிய திகதி மற்றும் வாக்கெண்ணல் நிலையங்களுக்கு உட்பிரவேசிப்ப தற்கான அனுமதிப் பத்திரங்கள் மற்றும் நியமனக் கடிதங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக வருகை தர வேண்டிய திகதி மற்றும் அவை விநி-யோகிக்கப்படுகின்ற இடம் ஆகிய தகவல்கள் அந்த அறிவித்தல் கடிதங்களில் குறிப்பிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டன. அந்த முறைப்படியான அனுமதியைப் பெற்றுக்கொண்ட முகவர்களுக்கு வாக்கெடுப்புத் தினத்தில் பிற்பகலில் வாக்கெண்ணல் நிலையங்களுக்கு நேரடியாக அறிக்கையிடுமாறு அறிவுறுத்தல் வழங்கப் பட்டிருந்தது. வாக்கெண்ணும் போது பல்வேறு மோசடிகள் இடம்பெறலாமென்ற ஊகத்தின் மீது வேட்பாளர்களுக்கு சட்டத்தின் பிரகாரம் வாக்கெண்ணல் நிலையமொன்றுக்கு நியமனம் செய்யக்கூடிய முகவர் களின் எண்ணிக்கையை விட மேலும் முகவர்களை நியமனம் செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென அரசியற் கட்சிகளின் செயலாளர்களுடன் நடைபெற்ற கூட்டங்களின் போதும், கட்சிகளின் நிரந்தர முகவர்கள் பங்கேற்ற கூட்டங்களிலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அவ்வாறான கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு, வேட்பாளரொருவர் சார்பாக மேலும் ஒரு முகவருக்கு வாக்கெண்ணல் நிலையங்கள் அமையப்பெற்றுள்ள வளாகத்தினுள் பிரவேசித்து வளாகத்தில் உள்ள அனைத்து வாக்கெண்ணல் நிலையங்களினதும் அலுவல்களை அவற்றிட்கு வெளியிலிருந்து கண்காணிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப் பட்டது. கடந்த தேர்தல்களைப் போன்று இம்முறையும் ஒவ்வொரு வேட்பாளரையும் பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு வாக்கெண்ணல் முகவருக்கு வாக்கெடுப்புத் தினத்தன்று பிற்பகல் 3.00 மணிக்கு வாக்கெண்ணல் நிலையத்திற்கு சமூகமளித்து சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் களால் மீள பொருட்களாதியவை கையளிக்கப்படுகின்ற பணிகளை அங்கு தரித்திருந்து கண்காணிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. வாக்கொடுப்பு நிலையத்தின் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் கோருகின்ற ஒரு வேட்பாளரின் வாக்கெடுப்பு நிலைய முகவரொரு வருக்கு வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லும் வாகனத்தின் பின்னால் வாக்கெண்ணல் நிலைய வளாக நுழைவாயில் வரை தமது வாகனத்தில் பயணம் செய்து அப்பணிகளைக் கண்காணிப்பதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது. மேலும், வளாகத்தில் குறித்துரைக்கப்பட்ட இடமொன்றி லிருந்து வாக்கெண்ணல் நிலையம் வரை அந்தப் பணிகளைக் கண்காணிப்புச் செய்து கொண்டு தரித்திருப்பதற்கும் முகவரொருவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. வாக்கெண்ணலின் போது முகவர்களின் பணிப்பொறுப்புக்கள் தொடர்பாக அவர்களை அறிவுறுத் துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

மேலும் வாக்கெடுப்பு நிறைவடைந்ததன் பின்னர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் கொண்டு வரப்படு கின்ற வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட ஏனைய பாதுகாப்பான பொருட்களை இந்த வாக்கெண்ணல் நிலையங்களில் கையேற்பதற்குப் பொருத்தமான முறையான நிகழ்ச்சித்திட்டமொன்று தெரிவத்தாட்சி அலுவலர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற பொருட்களில், வாக்குச் சீட்டுக்கள் அடங்கியுள்ள வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்கெண்ணலுக்குத் தேவையான ஆவணங்கள் ஆகியவற்றை வாக்கெண்ணல் நிலையத்திற்கு வருகை தந்துள்ள தலைமை வாக்கெண்ணல் உத்தியோகத்தர் களுக்கு கையளிப்பதற்கும், ஏனைய பொருட்களை பொதிகளில் இட்டு மண்டபத்தினுள் பாதுகாப்பாக ஒதுக்கி வைத்துக்கொள்ளவும், வாக்கெண்ணல் நிறை வடைந்ததன் பின்னர் வாக்கெண்ணப்பட்ட வாக்குச் சீட்டுக்களையும், வாக்கெண்ணலுடன் தொடர்புடைய ஆவணங்களுடன் அவற்றைப் பாதுகாப்பாறையில் வைப்பதற்காகத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு கையளிக்க வேண்டுமெனவும், பொருட்களாதியவற்றை மீளக் கையேற்றல் அலுவல்களுக்குப் பொறுப்பான உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. வாக்குப் பெட்டிகள் மற்றும் ஏனைய பொருட்களாதியவை கையேற்கப்படுகின்ற வாக்கெண்ணல் நிலையங்கள் மற்றும் அதற்கு வெளியில்

அண்மித்த பிரதேசங்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், பிரதேச சிரேட்ட பொலிஸ் அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் இடம்பெற்றது.

### 9.3. வாக்கெண்ணல் பணியாட் குழுவினர்கள்.

வாக்கெண்ணலுக்குத் தேவையான தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், எழுதுவினைஞர்கள் மற்றும் உதவிப் பணியாட்குழு வினர்கள் பெரும்பாலும் மாவட்டத்தின் அரசாங்க ஊழியர்களைக் கொண்டு நியமனம் செய்யப்பட்டதோடு சில மாவட்டங்களிற்கு தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தேர்தல்கள் செயலகத்தில் ஒதுக்குக் குழாத்திலிருந்து வழங்கப்பட்டது. அவ்வாறு இணைப்புச் செய்யப்பட்ட தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள் உள்ளிட்ட ஏனைய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கான கடமைகள் தொடர்பான அறிவுறுத்தல் பயிற்சி அமர்வுகள் இராஜகிரிய தேர்தல்கள் செயலக பிரதான கேட்போர் கூடத்தில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அவர்களினால் நடாத்தப்பட்டது. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்காக அந்தந்த மாவட்டங்களில் நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் வகுப்பு களில் வாக்கெண்ணல் பணிகள் தொடர்பாகவும் அவர்கள் அறிவுறுத்தப்பட்டதோடு, ஏனைய பணியாட்குழு வினர்கள் வாக்கெண்ணல் பணிகள் ஆரம்பிக்கப்படுவ தற்கு முன்னர் தலைமை வாக்கெண்ணல் அலுவலர் களினால் அறிவுறுத்தப்படல் வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் நலனோம்பல் நடவடிக்கை களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக மாவட்டத்தில் பணியாற்றுகின்ற சிரேட்ட அலுவலரொருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். வாக்கெண்ணல் பணியாட் குழுவினர்களுக்கான நலனோம்பல் வசதிகளை வழங்கும் பொறுப்பு அந்தந்த மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அது தொடர்பில் வெளியிடப்பட்ட பொது அறிவுறுத்தல்களின் பிரகாரம் நலனோம்பல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### 9.4. வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்காகப் பூரணப்படுத் தப்பட வேண்டிய அடிப்படை நிபந்தனைகள்.

முன்னைய தேர்தல்களைப் போன்று வாக்கெண்ணல் நிலையத்திற்குரிய அனைத்து வாக்குப் பெட்டிகளும் கிடைக்கப் பெற்றிருப்பின், வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பொறுப்பாகச் செயற்பட்ட சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் கையளிக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையக் குழப்பங்கள் பற்றிய அறிக்கையை (Z- அறிக்கை) திறந்து பார்த்து அதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல் களை தலைமை வாக்கெண்ணல் அலுவலரின் (ZCCO) அறிக்கையில் குறித்துக் கொண்டு தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவித்து அனுப்பி, வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்கு அனுமதி பெற்றுக் கொள்ளல் வேண்டும். சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் தனது Z அறிக்கையின் மூலம் வாக்கெடுப்பு நிலையத்தினுள் சுதந்திரமாகவும் நீதியாகவும் வாக்கெடுப்பை நடாத்துவ தற்குத் தேவையான சூழ்நிலையொன்று காணப்பட வில்லையென அறிக்கையிடப்பட்டிருப்பின், அந்த நிலையத்திற்குரிய, வாக்கெடுப்பு நிலையத்தினுள் தரித்திருந்த பொலிஸ் அலுவலர்கள், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்பாளர்களின் அறிக்கைகள் போன்று வாக்கெடுப்பு நிலையத்திற்குரிய வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலரின் அறிக்கையையும் பரிசோதித்துப் பார்த்து வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை மேலும் உறுதிப் படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும் வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்கு முன்னர் வாக்கெண்ணல் நிலையத்திற்கு வேட்பாளர்களின் பிரதி நிதிகள் வருகை தரவில்லையாயின், வாக்கெண்ணல் மண்டபத்தைச் சுற்றி அவர்கள் உள்ளனராவென, தேடிப்பார்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்ததோடு வாக்கெண்ணல் ஆரம்பிக்கத் தயார் நிலையில் இருப்பதாக முகவர்களுக்கு கேட்கக்கூடியவாறு ஒலி பெருக்கி இயந்திரத்தின் மூலம் அறிவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்காக கீழ்க்காணும் அடிப்படை நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

- வாக்கெண்ணல் நிலையத்திற்குரிய வாக்கெடுப்பு நிலையங்களின் வாக்குப் பெட்டிகள் மற்றும் ஏனைய இரகசிய ஆவணங்கள் கையளிக்கப் பட்டிருத்தல்.
- வேட்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த வாக் கெண்ணல் ஆரம்பிக்கும் நேரம் கடந்திருத்தல்.
- வாக்கெண்ணல் நிலையத்திற்குரிய வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்கெடுப்புக்கு தடைகள் ஏற்பட வில்லையெனவும் மற்றும் சட்ட விரோதமான செயல்கள் இடம்பெறவில்லையெனவும் திருப்தி யடைந்ததன் பின்னர் வாக்கெண்ணலை ஆரம்பிப் பதற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களின் கட்டளை கிடைக்கப்பெற்றிருத்தல்.

அறிக்கைகளைப் பரீட்சித்துப் பார்க்கும் போது மற்றும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மூலம் குறித்த வாக்கெடுப்பு நிலைய அலுவல்களுக்கு தடையொன்று ஏற்பட்டுள்ளதென தெரியவருமாயின், அதுபற்றி தெரிவத் தாட்சி அலுவலரால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். குறித்த அறிக்கைகள் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அந்த சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பின் அவற்றையும், வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர், பொலிஸ் அலுவலர்கள், வலயப் பொறுப்பு தெரிவத்தாட்சி அலுவலர் ஆகியவர்களிட மிருந்தும் தகவல்களைப் பெற்றுக்கொண்டு அதற்கமைய வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்குகளை எண்ண வேண்டுமா இல்லையா என்பது தேர்தல் ஆணைக்குழு வினால் தீர்மானிக்கப்படும். வாக்குச் சீட்டுக்களைப்

பறித்தல், பலாத்காரமாக வாக்குச் சீட்டுக்களை பெற்றுக் கொண்டு அவற்றை அடையாளமிட்டு வாக்குப் பெட்டியில் இடுதல். நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்கெடுப்பை தொடங்க இயலாது போனமை, முடிவடைவதற்கென நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்கு முன்னர் வாக்கெடுப்பை நிறைவு செய்ய வேண்டி நேரிட்டமை, முகவர்களுக்கு மற்றும் பணியாட்குழுவினர்களுக்கு அழுத்தம் கொடுத்தல் போன்ற இடையூறுகள் / தடைகள் ஏற்பட்டுள்ளதென உறுதிப்படுத்தப்பட்டால் அந்த வாக்கெடுப்பு நிலை யத்தின் வாக்கெடுப்பை வறிதாக்கி மீண்டும் வாக்கெடுப்பை நடாத்துவதற்கான தீர்மானத்தை எடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது. இந்த சனாதிபதித் தேர்தலுக்குரியதாக நாட்டில் எந்தவொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் இது போன்ற நிலைமையொன்று பதிவாகவில்லை.

### 9.5. வாக்கெண்ணல்.

சனாதிபதித் தேர்தலொன்றின் போது வாக்கெண்ணல் மூன்று கட்டங்களைக் கொண்டதாகும். அந்தக் கட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறானதாகும்.

**முதலாம் கட்டம்** - இதன் கீழ் ஒவ்வொரு வாக்குப் பெட்டியிலுமுள்ள வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை எண்ணப்பட்டு பிழையற்றதன்மை உறுதி செய்து கொள்ளப்பட்டதன் பின்னர் வாக்குச் சீட்டுக்கள் தட்டில் வைக்கப்படும்.

**இரண்டாம் கட்டம்** - இரண்டாம் கட்டத்தின் அலுவல்கள் இரண்டு உப கட்டங்களைக் கொண்டுள்ளது. முதலாம் உப கட்டத்தின் கீழ் தட்டில் உள்ள வாக்குச் சீட்டுக்களை எண்ணுவதற்கான மேசைக்கு எடுத்து, முழுப் பணியாட்குழுவினரையும் ஈடுபடுத்தி வாக்குச் சீட்டுக்கள் அடையாளமிடப்பட்டுள்ள முறைக்கமைய ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் அடையாளமிடப் பட்டுள்ள வாக்குச் சீட்டுக்களை அந்தந்த வேட்பாளர் களுக்குரிய பெட்டிகளுக்குள் இடுதல் மற்றும் நிச்சயமற்ற வாக்குச் சீட்டுக்களை தலைமை வாக்கெண்ணல் அலுவலருக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

இரண்டாம் உப கட்டத்தின் கீழ் வாக்கெண்ணல் மேசையின் அலுவலர்கள், தெரிதல் குழு, வாக்கெண்ணல் குழு, பரீட்சித்தல் குழு, மீள் பரீட்சித்தல் குழு மற்றும் எழுமாற்றுப் பரீட்சித்தல் குழு என ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் கையளிக்கப்படும். அலுவலர்களின் சிரேட்ட தன்மைக்கமைய அமரச் செய்து வாக்கெண்ணல் மற்றும் பரீட்சித்தல் என்பன மேற்கொள்ளப்படும். இங்கு ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் ஏற்கனவே முதலாம் உப கட்டத்தின் கீழ் தெரியப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பெட்டியை எடுத்து அவற்றை மேலே குறிப்பிட்ட ஐந்து குழுக்களின் கீழ் மீள எண்ணல் மற்றும் பரீட்சித்தல் போன்றவை மேற்கொள்ளப்படும்.

வாக்கெண்ணலின் இரண்டாவது கட்டத்தின் இறுதியில் வாக்கெண்ணல் நிலையத்தில் ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையைக் காட்டும் பெறுபேறுகள் தலைமை வாக்கெண்ணல் அலுவலரினால் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிக்கை யிடப்படுதல் வேண்டும். இந்தப் பெறுபேறுகள் ஆவணத்தின் பிரதியொன்றை அந்தந்த கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி இப் பெறுபேற்று ஆவணத்தில் கையொப்பமிட்ட முகவருக்குக் கையளிக்கப்படும். இதன் காரணமாக தமது முகவர் மூலம் வேட்பாளர்களுக்கும் பெறுபேறுகளை குறித்துக் கொள்வதற்கு (அட்டவணைப் படுத்துவதற்கு) சந்தர்ப்பம் கிடைத்ததோடு அவை தெரிவத்தாட்சி அலுவலர்களின் முடிவுகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு முடிந்தமை காரணமாக பெறுபேறுகள் தொடர்பில் முகவர்களினதும் வேட்பாளர்களினதும் நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்தது. ஒவ்வொரு வாக்கெண்ணல் வளாகத்தினுள் தமது முகவர்கள் மூலமாக வாக்கெண்ணல் நிலையங் களிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற பெறுபேற்று ஆவணங்களின் பிரகாரம் பெறுபேறுகளைத் தயாரிப்ப தற்காக ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் மடிக் கணினி ஒன்றுடன் ஒவ்வொரு வளாகத்திலும் இரண்டு முகவர்களை நிறுத்தி வைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வாக்கெண்ணல் வளாகத்தில் அதற்காக ஒதுக்கப் பட்டுள்ள இடங்களில் தேவையான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

**மூன்றாம் கட்டம்** - இதன் கீழ் தேவையான பெரும் பான்மை இல்லாமையைக் காரணமாகக் கொண்டு தேவைப்பாட்டின் பிரகாரம் விருப்பெண்ணல் மேற் கொள்ளப்படும். நாட்டில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையில் 50% இற்கும் அதிகமான எண்ணிக்கையொன்றை எந்தவொரு வேட்பாளரும் பெற்றுக்கொள்ளாதவிடத்து, அதிகமான மற்றும் அதற்கடுத்த அதிக எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ள இரண்டு வேட்பாளர்களையும் போட்டியிலிருந்து நீக்கிவிட்டு, ஏனைய வேட்பாளர்களுக் குரிய வாக்குச் சீட்டுக்களில் போட்டியிலிருந்து நீக்கப்பட்ட இரண்டு வேட்பாளர்களில் ஒருவர் சார்பாக அடையாளமிடப்பட்டுள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்பு வாக்குகள் இங்கு எண்ணப்படும். ஏனைய தேர்தல்களில் விருப்புக்களை எண்ணுவதைப் போன்று சனாதிபதித் தேர்தலுக்குரிய விருப்புக்களை எண்ணுவது சிக்கலற்றதென்பதோடு அந்த விருப்பு வாக்கு விபரங்கள் வேறு மாதிரிப் படிவங்களில் அடையாளமிடப்படாமல் வாக்குச் சீட்டுக்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். எவ்வாறாயினும், இதுவரை நடாத்தப்பட்ட எந்தவொரு சனாதிபதித் தேர்தலிலும் சனாதிபதியைத் தேர்ந்தெடுப்ப தற்காக விருப்புக்களை எண்ணுவதற்கான தேவைப் பாடொன்று ஏற்படவில்லை. எவ்வாறாயினும் தேர்த லொன்றில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையில் சரி அரைவாசிக்கு அதிகமாக ஒரு வேட்பாளர் பெற்றுக் கொண்டுள்ளாரா என்பதைத் தீர்மானித்துக் கொள்வதற்கு முடிவது, ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களின் அனைத்து வாக்கெண்ணல் நிலையங்களிலிருந்தும் பெறுபேறுகள் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கப்பெற்று, அனைத்துத் தெரிவத்தாட்சி அலுவலர்களும் தேர்தல் ஆணைக்குழு விற்கு அனுப்பி வைத்ததன் பின்னர் மாத்திரமாகும். இதற்கான குறிப்பிட்ட காலமொன்று செலவாகின்றமையால் வாக்கெண்ணலுக்குரிய ஆரம்ப கட்டப் பணிகள் முன் கூட்டியே பூர்த்தி செய்யப்பட்ட வாக்கெண்ணல் நிலையங்

களின் அலுவலர்களாக இருந்த போதிலும் கடமையிலிருந்து விடுவிப்பதற்காகத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குத் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல் கிடைக்கும் வரை காத்திருத்தல் வேண்டும்.

### 9.6. பெறுபேறுகளைக் கணிப்பீடு செய்தலும் மாவட்டப் பெறுபேறுகளை வெளியிடுதலும்.

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 55 ஆம் பிரிவிற்கமைய அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங்கள் உள்ளிட்ட ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையங்களின் தலைமை வாக்கெண்ணல் அலுவலர்களினால் வழங்கப்பட்ட பெறுபேற்று அறிக்கைகளில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலிருந்தும் வேட்பாளரின் சார்பாக அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தீர்மானிக்கப்பட்டு, அதுபற்றி கூற்றொன்றைத் தயாரித்து உடனடியாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுபேறு வெளியிடப்படுவது ஒரு தேர்தல் பெறுபேறு என்ற அடிப்படையிலாகும். சட்டத்தின் 64 ஆம் பிரிவின் பிரகாரம் முடிவுகளை வெளியிடுதல் தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இச்சட்டத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இறுதி முடிவு மாவட்ட முடிவுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதால் மாவட்ட மட்டத்திலும் முடிவுகள் வெளியிடப்படுகின்றன. ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்ட அஞ்சல் வாக்கு முடிவுகள் சேர்க்கப்பட்டு ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்குமுரிய இறுதி முடிவுகளை வெளியிட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

### 9.7. முடிவுகளை அட்டவணைப்படுத்தல்.

வாக்கெண்ணும் போது தேர்தல் மாவட்டம் சார்பாக ஒரு பெறுபேறு தயாரிக்கப்பட்டு சான்றுப்படுத்தப்பட்ட பின்னர் தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இந்த பணிகளை இலகுவாகவும் மற்றும் வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையத்திலிருந்தும் கிடைக்கப்பெறுகின்ற பெறுபேறுகளை வாக்கெடுப்புப் பிரிவுகளுக்கிணங்க பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அட்டவணைப்படுத்தப்படும். அவ்வாறு வாக்கெடுப்பு பிரிவுகளுக்கிணங்க கிடைக்கப்பெறுகின்ற பெறுபேறுகளின் பிரகாரம் தேர்தல் மாவட்டத்தின் முடிவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தரவுகளும் அட்டவணைப்படுத்தப்படும். அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங்களில் பெறுபேறுகளும் தனியாக அட்டவணைப்படுத்தப்பட்டு தேர்தல் மாவட்டத்தின் மொத்த அஞ்சல் வாக்கு முடிவுகளும் பெற்றுக் கொள்ளப்படும். அதன் பின்னர் தேர்தல்கள் மாவட்டத்தின் இறுதி முடிவு தயாரிக்கப்படும். அந்த முடிவுகள் மீண்டும் பரீட்சித்துப் பார்த்த பின்னர் தேர்தல் ஆணைக்குழுவிற்கு தொலைநகல் செய்தி மூலம் அறிவித்து அதனை தொலைபேசி ஊடகவும் அந்த முடிவுகளை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாவட்டங்கள் மட்டத்தில் முடிவுகளை அட்டவணைப்படுத்தல் மற்றும் வெளிப்படுத்தல் இடத்தைத் தெரிவு செய்யும் போது, வாக்கெண்ணல் நிலையங்கள் அனைத்திலிருந்தும் இலகுவாக அடையக்கூடிய இடமாக இருத்தல், போக்குவரத்து வசதிகள், மின்சார ஒளி வழங்குதல், பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தல், தொலைபேசி, தொலைநகல் வசதிகள், இணையத்தள வசதிகளை வழங்குதல் மற்றும் சகல நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யக்கூடிய இடமொன்றைத் தெரிவு செய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்பட்டது. வாக்கெண்ணல் அலுவல்களுக்காக மாவட்டச் செயலாளர் அலுவலகத்திலிருந்து மிகவும் தூரத்திலுள்ள நிலையங்களைத் தெரிவு செய்வதற்கு நேரிட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்துவதற்காக மாவட்டச் செயலகத்தின் கூட்ட மண்டபம் பயன்படுத்தப்பட்டது. தேசிய மட்டத்தில் இறுதிப் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தல் மற்றும் வெளியிடுதல் இடமாக கடந்த சனாதிபதித் தேர்தல்களைப் போன்று இம்முறையும் தேர்தல்கள் செயலகம் தெரிவு செய்யப்பட்டது.

தேர்தல்கள் மாவட்ட அடிப்படையில் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான தேவைப்பாடு குறித்து சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதால், முடிவுகளை அட்டவணைப்படுத்தல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர்களால் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு அறிவிக்க வேண்டிய தேவைப்பாடு இல்லையெனினும், இதற்காக வேட்பாளர்களின் முகவர்களுக்குப் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்காமல் விடுவதானது தவறான செய்திகள் பரவுவதற்கும் மற்றும் பல்வேறு வகையான சந்தேகங்களுக்கும் காரணமாக அமைய முடியுமென்பதால், முடிவுகளை அட்டவணைப்படுத்தல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் நிலையங்களுக்கு மாவட்ட அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு மற்றும் அவரினால் பெயர் குறிக்கப்பட்ட மேலும் ஒருவருக்கு வருகை தந்திருக்க முடியுமென அறிவித்தலொன்றை வெளியிடுமாறு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. மேற்குறிப்பிட்டவாறு சட்டத்தின் 64 ஆம் பிரிவிற்கு அமைய பெறுபேறுகளை வெளிப்படுத்தும் பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவிற்குக் கையளிக்கப்பட்டுள்ளதால், இறுதி முடிவுகள் வெளிப்படுத்துகின்ற திகதி, நேரம், இடம் மற்றும் அந்த இடத்திற்கு போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், தேர்தல் முகவர்கள் மற்றும் ஒவ்வொரு வேட்பாளரினாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றுமொரு நபருக்கு வருகைதர முடியுமென அறிவித்து அறிவித்தலொன்று அனைத்து வேட்பாளர்கள் மற்றும் தேர்தல் முகவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது தவிர கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் கட்சிகளின் நிரந்தர முகவர்களுடன் நடாத்தப்பட்ட கூட்டங்களில் எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கு அமைவாக, இறுதிப் பெறுபேறுகள் வெளிப்படுத்தப்படும் நிலையம் அமையப்பெற்றுள்ள தேர்தல்கள் செயலகத்திற்குப் போட்டியிட்ட கட்சிகளின் செயலாளர்களுக்கு மற்றும் நிரந்தர முகவர்களில் ஒருவருக்கு வருகை தருவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

**9.8. இறுதி முடிவைக் கணிப்பீடு செய்தல்.**

(அ) இறுதி முடிவைத் தீர்மானித்தல் தேர்தல்கள் செயலகத்தில் மேற்கொள்ளப்படுவதனால் தேர்தல்கள் செயலகத்தின் பெறுபேறுகளை அட்டவணைப் படுத்தும் பணிகளை முகவர்களுக்கு நேரடியாக அவதானிப்பதற்கு இயலுமான முறையில் நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. மாவட்ட மட்டத்தில் ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையங் களிலிருந்தும் கிடைக்கின்ற பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தல் தொடக்கம் தேர்தல்கள் செயலகத்தில் பெறுபேறுகளை அட்டவணைப் படுத்தல் வரையிலான செயன்முறைகள் தொடர்பாக அரசியல் கட்சி முகவர்களிடத்தில் காணப்பட்ட சந்தேகங்கள் மற்றும் தவறான புரிதல்களை அகற்றுவதற்காக ஊடகவியலாளர்கள், அரசியல் கட்சி முகவர்கள் மற்றும் முதன்மை அரசியல் வாதிகள் ஆகியவர்களை இச்செயற்பாடுகள் பற்றி அறிவுறுத்தும் கலந்துரையாடலொன்றை நடாத்துவ தற்கும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு நேரிட்ட தோடு, இதன் மூலம் வாக்கெண்ணல் தொடக்கம் பெறுபேறுகளை வெளிப்படுத்தல் வரை வேண்டு மென்று எந்தவொரு மாற்றத்தையும் செய்ய முடியாது என்பது மாத்திரமின்றி, தவறுதலாக ஏற்படுவதற்கான வாய்ப்பொன்றும்கூட இல்லை யென்பதை உணர்த்துவதற்கு முடிந்தது.

(ஆ) கைகளால் முடிவுகளை தயாரிப்பதற்கு மேலதிகமாக கணினியூடாகப் பெறுபேறுகளை கணிப்பீடு செய்தல் மற்றும் அட்டவணைப்படுத்தல் லங்கா மென்பொருள் மன்றத்தின் உதவியுடன் தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் நிறைவேற்றப் பட்டது. இதற்காக லங்கா மென்பொருள் மன்றத்தின் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு மேலதிகமாக தகவல் தொழில்நுட்பப் பிரிவின் அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் ஊடாக வழங்கிய உதவி முடிவுகளை கணிப்பீடு செய்தல் மற்றும் அட்டவணைப்படுத்தல் செயற்பாடுகளை உரிய முறைப்படி பேணுவதற்கு உதவியாக அமைந்தது. கணினித் தொழில்நுட்பத்திற்கமைய பெறுபேறுகளை கணிப்பீடு செய்வதற்கு மேலதிகமாக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளப் பட்ட பெறுபேறுகளை சாதாரண முறையில் (Manual) கணிப்பீடு செய்வதற்காக வேறாக பதவி யணியினர்களை ஈடுபடுத்துவது தேர்தல்கள் திணைக்களம் காணப்பட்ட காலப்பகுதி தொடக்கம் இடம்பெற்று வந்துள்ளது. இம்முறை சனாதிபதித் தேர்தலின் போது பெறுபேறுகள் கையினால் கணக்கிடப்பட்டதோடு கணினித் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறு களைக் கையால் கணிப்பீடு செய்து பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுபேறுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து அவை சரியானதென உறுதி செய்யப்பட்டதன் பின்னர் மாத்திரம் முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**9.9. இறுதிப் பெறுபேறுகளைத் தயாரித்தலும் பரிசீலனை செய்தலும்.**

இறுதி முடிவுகளைத் தயாரிக்கின்ற பணியின் போது, தேர்தல்கள் செயலகத்தில் அட்டவணைப்படுத்தி தயாரிக்கப்பட்ட மாவட்ட இறுதி முடிவு மற்றும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பெறுபேறுகளுடன் ஒப்பீடு செய்து பார்த்து பிழையற்ற தன்மையை உறுதி செய்துகொண்டு மாவட்ட பெறுபேறுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. முடிவு களின் பிழையற்ற தன்மையை மேலும் உறுதிப் படுத்துவதற்காக அந்தந்த மாவட்டங்களின் கணக் கெடுப்பு நிலையங்களிலிருந்து ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக் கொண்ட பெறுபேறுகளை காட்டுகின்ற ஆவணம் தொலைநகல் மூலம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அதனை தொலைபேசி மூலம் மேலும் உசாவி மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மேலதிகமாக, அந்தப் பெறுபேறுகள் ஆவணங்கள் ஸ்கேன் (Scan) செய்வதற்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றும் இம்முறை புதிதாக ஏற்படுத்தப்பட்டது. அதற்கேற்ப மாவட்டங்களிலிருந்து தொலைநகல் செய்தி மூலம் கிடைக்கப்பெறுகின்ற ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையங்களின் பெறுபேற்று ஆவணங்கள் இரண்டு நிழற் பிரதிகள் பெறப்பட்டு ஒரு பிரதியை அலுவலர்களால் கையால் அட்டவணைப்படுத்தப்பட்டு பெறுபேறுகள் தயாரிக்கப்படுகின்ற பிரிவிற்கும் மற்றைய பிரதி தேர்தல்கள் செயலகத்தில் தாபிக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கும், கணினி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் பெறுபேறுகளைத் தயாரிப்பதற்காகவும் அனுப்பி வைக்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் வாக்கெண்ணல் மண்டபங்கள் மட்டத்தில் கிடைக்கப் பெறுகின்ற ஒவ்வொரு வேட்பாளருக்கும் அளிக்கப் பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கை தொடர்பான பெறுபேறுகள் ஆவணம் தலைமை அலுவலகத்திற்கு தொலைநகல் மூலமும் ஸ்கேன் செய்யப்பட்டு மின்னஞ்சல் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவிற்குரிய பெறுபேறுகள் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மாவட்ட முடிவுகள் தயாரிக்கப்படுகின்ற நிலையத்தில் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்ட வாக்கெடுப்புப் பிரிவு மட்டத்திலான பெறுபேறுகளுடன் ஒப்பிட்டுப்பார்த்ததன் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப் பட்டது. தேர்தல்கள் மாவட்டங்களுக்குரிய வாக்கெடுப்புப் பிரிவுகளின் பெறுபேறுகள் மற்றும் தேர்தல்கள் மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் வாக்கெடுப்புப் பிரிவுக்காக மற்றும் தேர்தல் மாவட்டத்திற்காக ஒவ்வொரு வேட்பாளர் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையைக் காட்டுகின்ற பெறுபேறும், அந்தந்த தேர்தல் மாவட்டங்களின் அஞ்சல் வாக்குகள் பெறுபேறும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற பெறுபேறுகளும், தேர்தல்கள் செயலகத்தில் பெறுபேறுகளைத் தயாரிக்கும் பணிகள் நிறைவேற்றப் பட்ட மூன்று பிரிவுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற

பெறுபேறுகளும் அந்தப் பிரிவுகளுக்குப் பொறுப்பான பதவிநிலை அலுவலர்களினால் தேர்தல்கள் செயல கத்தில் தாபிக்கப்பட்டிருந்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அவர்களின் தலைமையில் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் அனுபவம் கொண்ட ஏனைய சிரேட்ட பதவி நிலை உத்தியோகத்தர் களைக் கொண்ட பெறுபேறுகளை மீளப் பரீட்சிக்கும் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அந்தப் பெறுபேறுகள் சரியானவை என திருப்தியடைந்ததன் பின்னர் முடிவுகளை வெளிப்படுத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இருந்த போதிலும், தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப் பெற்ற பெறுபேறுகளை மீண்டும் ஒப்பிட்டுப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவின் உதவிக்காக மேலும் சிரேட்ட பதவி நிலை அலுவலர்கள் சிலர் ஈடுபடுத்தப்பட்டதோடு அவர்கள் இறுதியாகப் பரிசீலனை செய்ததன் பின்னர் பெறுபேறுகளை ஏற்றுக்கொள்வதாக தேர்தல் ஆணைக்குழுவிற்குக் கையளிக்கப்பட்டது.

### 9.10. உத்தியோகபூர்வ முடிவுகளை வெளிப்படுத்தல்.

தேர்தல் ஆணைக்குழுவினால் தேர்தல்கள் மாவட்டத்தின் இறுதிப் பெறுபேறு சரியானதென உறுதிசெய்து கொள்ளப்பட்டதன் பின்னர், பெறுபேறு களைத் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்த தொட ரொழுங்கில் உறுதிப்படுத்தி மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களிற்கும் ஊடகங்களுக்கும் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழு வினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுபேறுகள் தொலை நகல் மூலம் முதலாவதாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் இரண்டாவதாக அரசாங்கத் தகவல் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. தேர்தலின் பெறுபேறுகள் வாக்கெடுப்புப் பிரிவு மட்டத்திலும், தேர்தல்கள் மாவட்ட மட்டத்திலும் வெளியிடப்பட்டன. அஞ்சல் வாக்கு முடிவுகள் தேர்தல்கள் மாவட்ட மட்டத்தில் வெளியிடப்பட்டன. அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுக்கு தகவல் பணிப்பாளர் நாயகம் அவர்கள் ஊடாக உத்தியோகபூர்வமாக பெறுபேறுகள் வழங்கப்பட்டன.

சனாதிபதித் தேர்தலின் பெறுபேறுகள் 2019.11.17 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு இராஜகிரிய தேர்தல் செயலகத்தில் வெளிப்படுத்தப்படும் என அனைத்து வேட்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டது. அந்த சந்தர்ப்பத்திற்கு வருகை தருமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

நாட்டின் 22 தேர்தல்கள் மாவட்டங்களிலிருந்து உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அனுப்பி வைக்கப் பட்ட ஒவ்வொரு வேட்பாளர் சார்பாக அளிக்கப்பட்ட வாக்குகளின் மொத்த எண்ணிக்கை தொடர்பான முடிவுகள், தேர்தல்கள் செயலகத்தில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணங்களுடன் ஒப்பிட்டு பிழையற்ற தன்மை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மொத்த தேர்தல்கள் மாவட்டங்களிலிருந்து ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுகின்ற வேட்பாளர் யாரென்பது தொடர்பாகவும் தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் திரு. கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் சனாதிபதித் தேர்தலின் போது அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையான 13,252,499 இல் அரைவாசியான 6,626,250 என்ற எண்ணிக்கையை விட அதிகமாக 298,005 வாக்குகளைப் பெற்று மொத்தம் 6,924,255 வாக்குகளைப் பெற்றுக் கொண்டிருந்தமையால், 2019 சனாதிபதித் தேர்தலுக் குரியதாக விருப்பு வாக்குகளை எண்ணுவதற்கான தேவைப்பாடொன்று எழவில்லையென்பதோடு சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 56(2) ஆம் பிரிவின் கீழ் திரு. கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் வெற்றி பெற்றார். அதற்கமைய 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 64(2) ஆம் பிரிவின் பிரகாரம் 2019.11.16 ஆம் திகதி இலங்கையின் ஏழாவது சனாதிபதியாக திரு. கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக 2019.11.17 ஆம் திகதி பி.ப. 2.00 மணியளவில் தேர்தல் ஆணைக்குழுவின் சார்பில் தவிசாளர் அவர்களால் தேர்தல்கள் செயலகத்தில் வெளிப்படுத்தப்பட்டது. அந்த சந்தர்ப்பத்திற்கு திரு. கோட்டாபய ராஜபக்ஷ அவர்களும் மற்றும் ஏனைய வேட்பாளர்கள் சிலரும் கலந்து கொண்டனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனயின் வேட்பாளர் திரு. கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்ற அறிவித்தல் 2149/34 ஆம் இலக்க 2019.11.17 ஆம் திகதிய அதிவிசேட வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்டது. அது **இணைப்பு 25** இல் காட்டப்பட்டுள்ளது. இந்த சனாதிபதித் தேர்தலின் போது ஒவ்வொரு தேர்தல்கள் மாவட்டத்தின் கீழ் வாக்கெடுப்புப் பிரிவுகளுக்கு அமைய ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை **08 ஆம் இலக்கப் புள்ளிவிபரக்குறிப்பில்** காட்டப்பட்டுள்ளதோடு ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் சதவீதம் **08 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

# பத்தாம் அத்தியாயம்

## தேர்தலுக்கான செலவுகளைச் செய்தல்.

**10. சனாதிபதித் தேர்தலுக்கான செலவுகள்.**

சனாதிபதி தேர்தல் நாடளாவிய ரீதியில் ஒரு தினத்தில் நடாத்தப்படுகின்ற ஒரு தேர்தலாகும். இத்தேர்தலில் போது பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் 15,992,096 பேருக்கு வாக்களிப்பதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியிருந்தது. தேர்தலொன்றின் போது நிதி செலவிடப்பட வேண்டிய பிரதான பணிகள் பல காணப்படுகின்றன. பணியாட் குழுவினர்களுக்கான சம்பளங்கள் மற்றும் படிகள், போக்குவரத்து அலுவல்கள், நலனோம்பல் அலுவல்கள், அச்சிடல் அலுவல்கள், பாதுகாப்பு அலுவல்கள் மற்றும் ஏனைய பொதுச் சேவைகளைப் பேணிச் செல்வதற்கு முன்னுரிமை வழங்கி செயற்படுதல் வேண்டும். அவை தவிர வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் முகவர் களுக்காகவும் குறிப்பிடத்தக்களவு வசதிகளை வழங்குவ தற்காகவும் செலவினங்களைச் செய்வதற்கு நேரிடும். இந்த அனைத்துப் பணிகளையும் முறையானவாறு உரிய நேரத்தில் ஆற்றிக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் காரணமாக சில சந்தர்ப்பங்களில் செலவினங்களின் கட்டுப்பாடு தொடர்பில் சிக்கல்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

எனினும், 2019 சனாதிபதித் தேர்தலுக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் செலவு செய்வதற்கு நேரிட்ட மொத்தச் செலவு 4,566.2 மில்லியன் ரூபாவாகும். அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக் கமைய பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஒருவருக்காகச் செய்யப்பட்ட செலவு 286.53 ரூபா வரையாகும்.

**10.1. தேர்தலுக்காகச் செலவுகளைச் செய்தல்.**

தேர்தல்கள் அலுவல்களுக்காக செய்யவேண்டிய செலவினங்கள் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக் களத்தால் நேரடியாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகையில் 3,066 மில்லியன் ரூபா ஆணைக்குழுவினால் நேரடியாகச் செலவிடப்பட்டதோடு, ஏனைய ஒதுக்கீடுகள் வாக்கெடுப்புக்குரிய செலவினங் களை மேற்கொள்வதற்கு முடியுமானவாறு தேர்தல் களுக்குரிய கட்டாய சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டன.

**10.2. சனாதிபதித் தேர்தலுக்காகச் செய்யப்பட்ட மொத்தச் செலவினங்களின் வகையீடு.**

சனாதிபதித் தேர்தல்கள் - 2019 இற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட செலவுகள் 4,566,224,424.69 ரூபா ஆகும். அந்த மொத்தச் செலவினத்தை செலவினத்தின் தன்மையின் அடிப்படை யில் பின்வருமாறு வகைப்படுத்திக் காட்ட முடியும்.

| செலவின் தன்மை | செலவு செய்த தொகை ரூபா | சதவீதம் |
|---|---|---|
| 01. பணியாட்குழுவினர் சம்பளம், மேலதிக நேரம், பிரயாணச் செலவுகள் மற்றும் படிகள் கொடுப்பனவு | 2,631,006,992.01 | 57.62% |
| 02. வாகன வாடகைகள் | 249,112,817.90 | 5.46% |
| 03. எழுது பொருட்கள் / அலுவலக உபகரணங்கள் | 274,148,233.90 | 6.00% |
| 04. எரிபொருட்கள் செலவுகள் | 160,741,596.46 | 3.52% |
| 05. நிர்மாணம் மற்றும் பழுதுபார்த்தல் செலவுகள் | 104,356,667.28 | 2.28% |
| 06. நலனோம்பல் செலவுகள் | 228,083,081.95 | 4.99% |
| 07. அச்சிடல் செலவுகள் | 397,299,599.35 | 8.70% |
| 08. சட்ட விரோத காட்சிப்படுத்தல் பொருட்களை அகற்றுதல் | 42,215,520.74 | 0.92% |
| 09. முத்திரை மற்றும் அஞ்சல் கட்டணங்கள் | 1,668,360.35 | 0.04% |
| 10. மின்சாரம் | 148,656,590.07 | 3.26% |
| 11. வாக்கெடுப்பு நிலைய வசதிகள் மற்றும் சேவைகளுக்காக | 195.211,344.48 | 4.28% |
| 12. நீர், தொலைபேசி உள்ளிட்ட சேவைகள் மற்றும் வேறு சேவைகளுக்காக | 133,723,620.20 | 2.93% |
| **மொத்தம்** | **4,566,224,424.69** | **100%** |

அதன் பிரகாரம் தேர்தலுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகையில் 57.62% அதிகளவான சதவீதமொன்றை பதவியணியினரின் கொடுப்பனவுகளுக்காகச் செலவிடுவதற்கு நேரிட்டுள்ளதென்பதனை சுட்டிக்காட்ட முடியும். அதேபோன்று சேவை மற்றும் ஏனைய செலவினங்களுக்காகச் செலவிடப்பட்டுள்ள 133.7 மில்லியன் ரூபாவில், நீர் வழங்கலுக்காக 17 மில்லியன் ரூபாவும், தொடர்பாடல் அலுவல்களுக்காகவும் 12 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

**10.3. ஏனைய நிறுவனங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்.**

இந்த சனாதிபதித் தேர்தலின் போது பாதுகாப்பு அமைச்சு, பொலிஸ் திணைக்களம், அஞ்சல் திணைக்களம் அரசாங்க அச்சகத் திணைக்களம், பொலிஸ் விசேட அதிரடிப் படையணி, சிவில் பாதுகாப்புத் திணைக்களம், அரசாங்க தகவல் திணைக்களம், ஆட்களைப் பதிவு செய்தல் திணைக்களம் உள்ளிட்ட அரசாங்க ஏனைய நிறுவனங்களுக்கு ஒதுக்கீடுகள் குறித்தொதுக்கிக் கொடுக்கப்பட்டதன் பின்னர் அந்த நிறுவனங்களினால் செய்யப்பட்ட செலவுகள் 1500 மில்லியன் ரூபா ஆகும். இது இந்த தேர்தலுக்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவினமான 4566.2 மில்லியன் ரூபா தொகையில் இது 32.81% வீதமாகும். தேர்தல் அலுவல்களுக்காக நிறைவேற்றப்பட்ட சேவைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் கையளிக்கப்பட்ட அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் தொடர்பாக அந்த ஒதுக்கீட்டின் கீழ் குறித்த நிறுவனங்களினால் செலவிடப்பட்ட மொத்தத் தொகை மற்றும் அந்த மொத்தச் செலவினத்தின் சதவீதங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| நிதி ஒதுக்கீடுகள் குறித்தொதுக்கிக் கொடுக்கப்பட்ட நிறுவனங்கள் | செலவிடப்பட்ட தொகை ரூபா | மொத்தச் செலவின் சதவீதமாக |
|---|---|---|
| பொலிஸ் திணைக்களம் | 659,804,681.73 | 14.44% |
| அஞ்சல் திணைக்களம் | 378,498,292.59 | 8.28% |
| அரசாங்க அச்சகத் திணைக்களம் | 349,885,284.94 | 7.66% |
| பொலிஸ் விசேட அதிரடிப் படையணி | 39,959,462.00 | 0.87% |
| சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | 18,079,057.80 | 0.39% |
| ஆட்களைப் பதிவு செய்தல் திணைக்களம் | 10,366,910.88 | 0.22% |
| பாதுகாப்பு அமைச்சு | 5,025,771.28 | 0.11% |
| அரசாங்க தகவல் திணைக்களம் | 1,184,010.89 | 0.02% |
| வேறு நிறுவனங்கள் | 37,582,240.69 | 0.82% |
| **மொத்தம்** | **1,500,385,712.80** | **32.81%** |

சனாதிபதித் தேர்தலின் போது அரசாங்க அச்சகத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட சேவைகளுக்கான செலவு 349.8 மில்லியன் ரூபாவாகும். அந்த மொத்தச் செலவில் வட் வரி சகிதம் 268 மில்லியன் ரூபா (76.6%) வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்காகச் செலவிடப்பட்டுள்ளது. மீதித் தொகை மாதிரிப் படிவங்கள், அறிவித்தல்கள், சுவரொட்டிகள், நூல்கள், கடித உறைகள் போன்றவற்றை அச்சிடுவதற்கான அச்சிடல் செலவுகளாகும். உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்காக தனியார் நிறுவனமொன்றிட்கு 36.8 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது.

இந்த தேர்தலின் போது பொலிஸ் திணைக்களத்திற்கு குறித்தொதுக்கி வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் செய்யப்பட்ட செலவுகள் 659.8 மில்லியன் ரூபா ஆகும். இந்த செலவில் 341.5 மில்லியன் ரூபா (51.75%) பொலிஸ் அலுவலர்களுக்கான உரிய படிகளைக் கொடுப்பனவு செய்வதற்காகவும், தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியுடன் தேர்தல் கடமைகளுக்குத் தேவையான மேலதிக வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக 130.1 மில்லியன் ரூபாவும் (19.71%), தேர்தல்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களுக்கான எரிபொருட்களுக்காக 44.8 மில்லியன் ரூபாவும் (6.78%) மற்றும் சட்டவிரோதமான அறிவித்தல்களை அகற்றுவதற்கான செலவினமாக 42.2 மில்லியன் ரூபாவும் (6.39%), எழுதுபொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களிற்காக 35.5 மில்லியன் ரூபாவும் (5.38%), நலனோம்பல் அலுவல்களுக்காக 28.9 மில்லியன் ரூபாவும் (4.35%), நீர், தொலைபேசி மற்றும் ஏனைய சேவைகள் தொடர்பாக 34.1 மில்லியன் ரூபாவும் (5.16%), அச்சிடல் செலவினங்களுக்காக 2 மில்லியன் ரூபாவும் (0.3%) என்றவாறு செலவு செய்யப்பட்டிருந்தது.

தேர்தல்கள் சந்தர்ப்பமொன்றின் போது அஞ்சல் திணைக்களத்தின் மூலம் ஆற்றிக்கொள்ளப்பட வேண்டிய விசேட கடமைகள் சில உள்ளன. அதற்காக அஞ்சல் திணைக்களத்திற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் இந்தத் தேர்தலுக்குரியதான நிதி ஒதுக்கீடாக 378.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் 365.6 மில்லியன் ரூபா (96.59%) ஊழியர்களின் மேலதிக நேர வேலைக்காகவும், 8.3 மில்லியன் ரூபா (2.19%) எழுது பொருட்களுக்காகவும், எரிபொருட்களுக்காக 2.7 மில்லியன் ரூபாவும் (0.71%) மற்றும் ஏனைய செலவுகளுக்காக 1.9 மில்லியன் ரூபாவும் (0.5%) என்றவாறு பிரதான செலவுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தலுக்காக அதிக செலவினங்களைச் செய்ய வேண்டியேற்பட்டமை தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளதோடு எதிர்வரும் தேர்தல்களின் போது செலவினத்தைக் குறைப்பதற்குப் பொருத்தமான மாற்று வழிமுறைகளை இனங்கண்டு அவற்றின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனத் தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பதினோராம் அத்தியாயம்

## அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள்.

### 11. சனாதிபதித் தேர்தல் தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள்.

தேர்தல் ஆணைக்குழுவினால் 2019.11.16 ஆம் திகதி நடாத்தப்பட்ட வாக்கெடுப்பின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அது தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பது இந்த அத்தியாயத்தின் நோக்கமாகும். அதற்கமைய அரச அலுவலர்களைத் தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தல், வேட்பாளர் வைப்புப் பணம், அஞ்சல் வாக்கு வசதிகள், தேர்தல் சட்டத் திருத்தங்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் இதில் உள்ளடங்கியுள்ளன.

### 11.1. அரச அலுவலர்களைத் தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தல்.

தேர்தல் கடமைகளுக்காக கட்டாயமாக அரச அலுவலர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அரச அலுவலர் களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காகப் பாரிய செலவொன்றைச் செய்து அஞ்சல் மூலம் வாக்களிப்ப தற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று தற்போது கடமைக்காகச் செலுத்தப்படுகின்ற கொடுப் பனவுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்ற போதிலும், தனிப்பட்ட அசௌகரியங்களை முன்வைத்து மற்றும் பல்வேறுபட்ட நோய்கள் இருப்பதாக போலியான மருத்துவச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து தேர்தல் கடமைகளிலி ருந்து விலகுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களும் அறிக்கையிடப்பட்டன. இந்நிலைமை மேலும் விருத்தியடையுமாயின் தேர்தல் கடமை களுக்காக ஈடுபடுத்துவதற்கான அரச ஊழியர்கள் போதுமானதாக இல்லாமல் போகலாம். அரச அலுவலர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவது தமது கடமையும் பொறுப்பும் எனக் கருதி அலுவல்களை மேற்கொள்ளாமல் இருப்பார்களாயின், இக் கடமைகளில் ஈடுபடுவது கட்டாய சேவைத் தேவைப்பாடொன்றாகக் கருதி செயற்பட வேண்டியேற்படும். அதே போன்று அரசியல் அமைப்பினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் தேர்தல் கடமை களில் கலந்து கொள்ளாமல் கடமைகளை தவறவிடுகின்ற நபர்கள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதற்கான தேவைப்பாடு ஏற்பட்டுள்ளது.

சில அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் அரசியல் செயற்பாடு களுக்கு ஆதரவளித்தல், வேட்பாளர்களை ஊக்குவிப்ப தற்கு மற்றும் ஏனைய வேட்பாளர்களை பாதிப்புக் குற்படுத்துவதற்கு காரணமாகக் கூடியவாறான கூற்றுக் களை வெளியிடுதல் மற்றும் ஏதேனுமோர் அரசியல் கட்சியின் கருத்துக்கள் தொடர்பாகக் கருத்துக் களைத் தெரிவித்தல் போன்றன நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு பாரியதொரு தடையாகும். நேரடியாக அரசியல் மற்றும் தொடர்புடைய நபர்களை அரச நிறுவனங்களின் தலைவர் களாக நியமனம் செய்வதன் மூலம் இந்த நிலைமை உயர்வடைந்துள்ளதெனத் தெரிய வருகின்றது. எனவே நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குப் போன்றே சனநாயக சமூகமொன்றின் இருப்புக்கும் தடையாக அமையும் விதத்திலான செயல்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்காக அமைச்சுக் களின் செயலாளர்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள் மற்றும் நிறைவேற்று அலுவலர்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளதென விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளை மேலும் வலுவாக்கம் செய்யவேண்டியதன் தேவைப்பாடு இனங்காணப்பட்டுள்ளது. மேலும் இந்நிலை மைகளைத் தடுப்பதற்காக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அல்லது அரசியல் உறவுகளைப் பேணிவருவதாக அறிக்கையிடப்பட்டுள்ள நபர்களை, அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு அரச நிறுவனங்களின் தலைவர்களாக நியமனம் செய்யப்படுவதிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கையெடுப்பது கட்டாயமான விடய மொன்றாகும்.

அதே போன்று தேர்தல் கடமைகளுக்காக அரச அலுவலர்களின் தகவல்களைச் சேகரிக்கும் போதும் சிக்கல் மிக்க சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. உரிய நிறுவனத்தின் கீழ் பணியாற்றுகின்ற தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற அனைத்து அலுவலர்களதும் தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்படுகின்ற போதிலும் சில நிறுவனங்களிலிருந்து அந்தத் தகவல்கள் சமர்ப்பிக்கப் படாத சந்தர்ப்பங்களும் தெரியவந்துள்ளன. அலுவலர்கள் தங்களின் தரவுப் படிவங்களைச் சமர்ப்பிக்காத சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இது சிறந்த போக்கொன்றல்ல என்பதால் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் போது அலுவலர்கள் தொடர்பான உண்மையான தகவல்களைத் தவறவிடப்படாமல் பெற்றுக் கொள்வதற்கு அதன் பொறுப்பு ஒவ்வொரு நிறுவனத் தலைவர்களுக்கும் கையளிப்பதற்காக ஏற்பாடுகளை உட்சேர்ப்பதற்கு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

### 11.2. வேட்பாளர் வைப்புப் பணம்.

சனாதிபதித் தேர்தல்கள், பாராளுமன்றத் தேர்தல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஆகிய அனைத்துத் தேர்தல்களின் போதும் வேட்பாளர்களால் வைப்புச் செய்ய வேண்டிய வைப்புப்பணம் தேர்தலுக்காக செலவிடப்படுகின்ற செலவினத்திற்கு ஏற்றவாறு போதுமானதொன்றல்ல என பல்வேறு தரப்பினர்களாலும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வைப்புப் பணம் தற்போதைய நிலைமைக்கேற்ப மிகவும் சிறியதொரு பெறுமானத்தைக் கொண்டிருப்பதால் ஏனைய வேட்பாளர் களுக்கு உதவுவதற்காக அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் போட்டியிடுவதன் காரணமாக தற்காலத்தில் தேர்தல்கள் நடவடிக்கைகளை ஒழுங் கமைப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதென்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இம்முறை தேர்தலில் 41 வேட்பாளர்கள் சார்பாக வைப்புப் பணம் வைப்புச் செய்யப்படல் மற்றும் 35 வேட்பாளர்கள் மாத்திரம்

பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையளித்தல் என்பனவற்றிலிருந்து அது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் போட்டியிட்டமை காரணமாக தேர்தல் காலப்பகுதியினுள் வன்முறைச் செயல்கள் அதிகரித்தல் போன்றே சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதகமான விளைவுகள் குறித்தும் கவனம் செலுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், வைப்புப்பணத்தை அதிகரிப்பது தொடர்பாக தொடர்புடைய தரப்பினர்களுடன் மேலும் கலந்துரையாடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமெனத் தேர்தல் ஆணைக்குழுவினால் முன்மொழிவு முன்வைக்கப்படுகின்றது.

### 11.3. அஞ்சல் வாக்கு வசதிகள்.

தேர்தலொன்றின் போது அஞ்சல் மூலம் வாக்களிப்ப தற்கு உரித்துப் பெறாத இருப்பினும் தொழிலின் கட்டாயக் கடமைத்தேவைப்பாட்டு சுபாவம் காரணமாக தமக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலை யத்திற்குச் சென்று வாக்கெடுப்பு தினத்தில் வாக்களிக்க முடியாது போவதாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு பெரும்பாலானவர்களால் விடயங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. வாக்கெடுப்பு தினத்தில் அத்தியாவசியமாக சேவையில் ஈடுபட வேண்டிய சுகாதாரம், தனியார் பாதுகாப்பு சேவைகள், துறைமுகம் மற்றும் விமான நிலையம், வர்த்தக வலயங்கள், ஊடகங்கள், விமான சேவைகள், அதிவேக நெடுஞ்சாலைகள் முகாமைத்துவம், சுற்றுலா மற்றும் ஹோட்டல் கைத்தொழில் ஆகிய துறைகளில் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அந்தந்த சேவை நிலையங்களுக்கு மிகவும் அருகிலுள்ள மாற்று வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்கு அல்லது பொருத்தமானவாறு அதற்கு முன்கூட்டி வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் செய்து தருமாறு தொடர்புடைய தரப்பினர்களால் முன்மொழியப்பட்டது. இதற்காக சட்டத்தை திருத்தம் செய்வது அத்தியா வசியமான ஒரு விடயமாகும். அதே போன்று வெளிநாடுகளிலுள்ள வாக்காளர்களுக்கும் வாக்களிப்ப தற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் பிரச்சினை நீண்டகாலமாக கலந்துரையாடப்படுகின்ற போதும் இது தொடர்பில் இன்னும் தேவையான சட்ட ஏற்பாடுகள் திருத்தம் செய்யப்படவில்லை. மேற்படி விடயங்கள் தொடர்பாக சட்டங்களை வகுக்கின்றவர்களின் துரித கவனம் செலுத்தப்பட வேண்டியது மிக முக்கியமான சமகாலத் தேவைப்பாடொன்றாகும்.

மேலும் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு அஞ்சல் வாக்கு வசதிகளை வழங்குவதற்கு சட்ட ரீதியான அனுமதி காணப்படினும், பெயர் குறித்த நியமனத் திகதியாகும் போது அஞ்சல் வாக்கு விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கின்ற காலம் முடிவடைந்து விடுகின்றது. இதற்கமைய போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பம் செய்வதற்கு இயலக்கூடியவாறு அந்த விண்ணப்பங்களைக் கையேற்கும் தினம் பெயர் குறித்த நியமனத் திகதியின் பின்னர் வருகின்ற ஒரு தினமாகத் திருத்தம் செய்வது கட்டாயமானதாகும்.

### 11.4. இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.

தேர்தல்கள் செயற்பாடுகளின் போது இலத்திரனியல் முறையில் வாக்களிப்பதற்காக இயந்திரமொன்றினைப் (Electronic Voting Machine) பயன்படுத்துதல் தொடர்பாக 2000 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து கலந்துரையாடப்பட்டு வருகின்ற ஒரு விடயமாகும். இதற்காக அரசியல் கட்சிகள் மற்றும் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பூர்வாங்க கலந்துரை யாடல்கள் பல நடாத்தப்பட்டுள்ளன. வாக்காளர்களைப் போன்று தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற அலுவலர்களின் காலம், ஊழியம் மற்றும் செலவினங்கள் என்பன குறைகின்ற வினைத்திறன் வாய்ந்த மற்றும் விளைதிறன் கொண்ட இவ்வாறான சாதகமான நடவடிக்கைகள் தொடர்பில் அலுவல்களை மேற் கொள்வது பொருத்தமானதாகும். இது தொடர்பில் இவ்வாறான துறைகளிலுள்ள தொழில்நுட்ப மாற்றங்கள், அதற்காக ஏற்படுகின்ற அதிகரித்த செலவுகள், வாக்கெடுப்பு மற்றும் பெறுபேறுகளின் நம்பகத்தன்மை தொடர்பாகவும் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்ற மையைக் கருத்திற் கொள்வதும் அவசியமாகும். எவ்வாறாயினும் வாக்களித்தல் தொடர்பிலுள்ள போக்கின் அடிப்படையில் அதனைப் பயன்படுத்துகின்ற நாடுகள் அதனை கைவிடுவதற்கு முயற்சிக்கின்றமை தெரிய வருகின்றமையினால் குறைந்த பட்சம் வாக்கெண்ணல் நடவடிக்கைகளுக்காவது புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துவது பொருத்தமாகும்.

### 11.5. தேர்தல் சட்டத் திருத்தங்கள்.

- தேர்தலொன்றின் போது செல்லுபடியான தேருநர் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்படாத இருப்பினும் வாக்கெடுப்புத் தினமாகும் போது 18 வயது பூர்த்தியடைந்து நீண்ட காலம் கடந்த இளைஞர் களினால் தமக்கு வாக்களிக்க முடியாமல் போகின்றமை தொடர்பாக தேர்தல் ஆணைக் குழுவை உசாவுகின்ற சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டுள்ளது. தகைமை பெற்றுள்ள அனைத்து நபர்களதும் பங்கேற்புடன் கூடிய நீதி யானதும் மற்றும் சுதந்திரமானதுமான தேர்த லொன்றுக்கு இது சாதகமான நிலைமை யொன்றல்ல என்பதும், இயன்றவரை அதனைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்பதும் தேர்தல் ஆணைக்குழுவின் கருத்தாகும். பதினெட்டு வயது பூர்த்தியடைகின்ற அனைத்து நபர்களுக்கும் வேறு தகைமையீனங்களுக்கு உட்படவில்லையெனில் அந்த சந்தர்ப்பத்திலேயே தேருநர் இடாப்பில் பெயரைப் பதிவு செய்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்காக 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தைத் திருத்தம் செய்து குறைநிரப்பு தேருநர் இடாப்பைத் தயாரித்து அவற்றைத் தேருநர் இடாப்பின் ஒரு பகுதியாகக் கருத்திற் கொள்வ தற்கு இயலுமான அடிப்படையில் சட்ட ஏற்பாடு களை உள்ளடக்கி சட்ட வரைவு பாராளு மன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டவாக்க சபையினால் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இந்நிலைமையை தீர்த்துக் கொள்வ தற்கான சாத்தியம் கிடைக்கும்.

- தற்கால நிலைமைகளுக்குப் பொருந்தக்கூடியவாறு தற்போது நடைமுறையில் உள்ள இந்தத் தேர்தல்கள் சட்ட திருத்தங்களுக்காகப் பாராளு மன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதற்கும் அதன் முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரை களுக்கமைய பொருத்தமானவாறு தேர்தல்கள் சட்டம் மற்றும் ஏனைய சட்ட விதிகளைத் திருத்தம் செய்வதற்காக சட்டவாக்க சபையினால் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ள தென்பது எமது அவதானிப்பாகும்.
- சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் கீழ் வாக்காளர் ஒருவரைத் துடைத்தழிக்க முடியாத மையினால் தோதான குறியீட்டை அடையாளமிடுதல் 1965 ஆம் ஆண்டு தொடக்கம் அறிமுகம் செய்யப்பட்டது. ஒரு வாக்காளர் ஒரு தடவைக்கு மேற்பட்ட தடவைகள் வாக்களிப்பதைத் தடுத்தல் இதன் நோக்கமாகும். அக்காலப்பகுதியில் வாக்காளரின் ஆளடையாளத்தை உறுதி செய்வ தற்காக ஆளடையாள ஆவணமொன்று கட்டாயப் படுத்தப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் தற்போது வாக்களிப்பதற்காக தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயப்படுத்தப் பட்டுள்ளதோடு அதற்காக வேறு அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டைகள் சிலவும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அந்த அடையாள அட்டைகள் எதுவும் இல்லாதவொரு வருக்குக் கூட தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டையைப் பயன் படுத்துவதற்கான அனுமதி கிடைக்கும். இதன் காரணமாக துடைத்தழிக்க முடியாத மையினால் அடையாளமிடுதல் சட்ட ரீதியானதொரு தேவைப்பா டெனினும் தற்கால நிலைமைகளின் கீழ் அவ்வாறான தேவைப்பாடு காணப்படுகின்றதா என்ற சிக்கல் தோன்றியுள்ளது. இதற்காகச் செலவிட வேண்டிய செலவுகள், ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும் ஒவ்வொரு வரிசைக்கும் மேலுமோர் அலுவலரை ஈடுபடுத்தல் மற்றும் அந்த அலுவல்களுக்காக மேலதிகமான நேரம் செலவாகுதல் ஆகிய விடயங்களைக் கருத்திற் கொள்ளும் போது அது அநாவசியமான செலவொன்று, உழைப்பு மற்றும் காலம் வீனாகுதல் என்பதால் துடைத்தழிக்க முடியாத மையினால் தோதான குறியீட்டை அடையாள மிடுவதற்கான தேவைப்பாடொன்று காணப்படு கின்றதா என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்வதோடு அதற்காகச் சட்டத் திருத்தங்கள் முன்வைக்கப்பட வேண்டுமெனவும் முன்மொழியப்படுகின்றது.

### 11.6. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகித்தல்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைப் விநியோகித்தல் காணப்படுகின்ற சட்டத்தின் கீழ் அஞ்சல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் படுதல் வேண்டும். இருப்பினும் இது தொடர்பில் சிக்கலான நிலைமைகள் காணப்படுவதால் மற்றும் அதற்காகப் பயன்படுத்தக்கூடிய மாற்று வழிகளை மேற்கொள்வதற்கான வசதிகள் காணப்படுவதால் அதற்காக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரங்கள் கையளிக்கப்படுவதோடு உரிய சட்டத்திருத்தங்கள் காலத்தின் தேவைப்பாடாகும்.

### 11.7. அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம்.

சனாதிபதித் தேர்தல் காலக்கெடுவினுள் அரசாங்க சொத்துக்களை நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ முறையற்ற விதத்தில் பயன்படுத்தி வேட்பாளர் ஒருவரை ஊக்குவிப்பதற்காக அல்லது வேறு வேட்பாளர்களை பாதிப்புக்கு உட்படுத்தக் கூடியவாறாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கிடைக்கின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஏனைய தேர்தல்களை விடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். தேர்தல் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்ற சிறிய முறைப்பாடுகள் தொடர்பாகவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் மூலம் எதிர்காலத்தில் நடாத்தப்படவுள்ள தேர்தல்களின் போது அரச சொத்துக்கள் துஷ்பிரயோகத்தைக் குறைத்துக் கொள்வதற்கான போக்கு மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### 11.8. ஊடகப் பயன்பாட்டை முகாமைத்துவம் செய்தல்.

தற்காலத்தில் தொடர்பாடல் துறையில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்கள் மற்றும் புதிய போக்குகள் காரணமாக தொழிற்படு தேர்தல் காலப்பகுதியினுள் "ஊடகப் பயன்பாடு தொடர்பாக ஒழுங்குபடுத்தல்" செய்ய முடியாத அல்லது தேவையற்ற விடயமொன்றாக ஒருவருக்குத் தென்பட முடியும். இருப்பினும், எமது சமூ கத்திலுள்ள மக்களில் அதிக சதவீதமானவர்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்கின்ற அச்சு ஊடகமாக பத்திரிகைகளும் இலத்திரனியல் ஊடகங்களாக வானொலி, தொலைக்காட்சி ஆகியனவற்றையும் மக்கள் நம்புகின்றனர். ஆதலால் வேட்பாளர்கள் தமது வேட்பான்மையை ஊக்குவிப்பதற்காக மற்றும் தமது அரசியல் கருத்துக்களைப் பொதுமக்களிடையே கொண்டு செல்வதற்காக பத்திரிகைகள், வானொலிகள், தொலைக் காட்சிகள் போன்ற பாரம்பரிய ஊடகங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு விருப்பம் காட்டுகின்றனர். இங்கு அந்நிறுவனங்களிலிருந்து மிக முக்கியமான பணிப்பொறுப்புக்கள் ஆற்றப்படுகின்றன. எனவே, தேர்தல் காலப்பகுதியினுள் சகல அரச மற்றும் தனியார் ஊடகங்கள் வேட்பாளர்களின் பிரச்சார நடவடிக்கை களின் போது அன்றாடச் செய்தி ஒலி/ஒளிபரப்பு களின் போதும் மற்றும் ஏனைய அறிக்கையிடல் அலுவல்களின் போதும் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படுகின்ற ஊடக வழிகாட்டு நெறிகளுக்கு இணங்கி செயற்படுவது நீதியான தேர்தலொன்றை நடாத்துவதற்குப் பெரிதும் உதவுகின்றது. தேர்தல் காலப்பகுதியினுள் வேட்பாளரொருவருக்கு அல்லது அரசியல் கட்சியொன்றிற்கு விசேட கவனிப்பொன்றைக் காட்டுகின்ற தனியார் ஊடக நிறுவனங்களுக்கு அவர்களால் சுயமாக அது பற்றி வெளியிடுமாறு அறிவித்து தேர்தல் மற்றும் தொடர்புடைய ஏனைய நடவடிக்கைகளின் போதும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடும் நடவடிக்கைகளுக்கும் அவர்கள் தொடர்பு படுத்திக்கொள்ளக் கூடாது என்ற முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த முன்மொழிவுகள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் கவனம் ஈர்க்கப் பட்டுள்ளது.

நேரடியாக அரசுக்குச் சொந்தமான ஊடக நிறுவனங்களான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனியொன்றான சுயாதீன தொலைக்காட்சி சேவை (ITN) மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களான வரையறுக்கப் பட்ட செய்திப் பத்திரிகைக் கம்பனி (லேக்ஹவுஸ்) தேர்தல் காலப்பகுதியினுள் மட்டுமல்லாது ஏனைய காலப்பகுதியினுள்ளும் ஆளும் கட்சியின் நிறுவனமாக அல்லாது அரச நிறுவனமாகச் செயற்படுவது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு அத்தியாவசியமான காரணியொன்றாகு மென தெரிவிக்கப்பட்டுள்ள அபிப்பிராயத்துடன் ஆணைக் குழுவும் முழுமையாக உடன்படுகின்றது. இலத்திரனியல் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீளமைத்து நீதியானதாக தேர்த லொன்றை நடாத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்ற பணிப்புக்கள் மற்றும் ஊடக வழிகாட்டு நெறிகளுக்கு இணங்கச் செயற்படுவதாக உடன்பட்ட பின்னர் அந்த அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்குத் தேவையான விசேட சட்டங்களை வகுத்தல் வேண்டும். அவ்வாறே ஊடக வழிகாட்டு நெறிகளுக்கு முரணாகச் செயற்படுகின்ற நிறுவனங்களில் ஒலி/ஒளிபரப்பு அனுமதிப் பத்திரத்தை தேர்தல் காலப்பகுதியின் போது இடைநிறுத்துவதற்கு அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் முகவரொருவர் அல்லது உரிய அதிகாரியொருவரின் மூலம் அச்செயற்பாடுகளை மேற்பார்வை செய்யக்கூடிய வகையில் தனியார் ஊடகங்கள் தொடர்பாக சட்டங்கள் திருத்தம் செய்யப்படல் வேண்டும். விசேடமாக அரச அல்லது அரச சார்பற்ற இலத்திரனியல் ஊடக நிறுவனங்களினால் பயன்படுத்தப்படுகின்ற அலைவரிசை பொதுச் சொத்தொன் றென்பதால் பொது மக்களின் சுதந்திரமான கருத்து வெளிப்படுத்தப்படுகின்ற தேர்தலொன்றின் போது அவற்றின் துஷ்பிரயோகத்தைத் தவிர்ப்பதற்குப் பொருத்தமான ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்வது கட்டாய தேவைப்பாடாக உள்ளது.

### 11.9. சமூக ஊடக வலையமைப்புக்கள்.

முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களுடன் ஒப்பிடும் போது சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப் பட்ட இந்தத் தேர்தலின் போது சமூக ஊடக வலைப்புக்கள் ஊடாக பாரியளவில் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வேட்பாளர்களை ஊக்குவித்தல், அரசியல் கட்சிகளை ஊக்குவித்தல், வெறுப்புப் பேச்சுக்கள் மற்றும் தவறான கூற்றுக்களை பரப்புதல், அநாகரிகமான மற்றும் திரிபுபடுத்தப்பட்ட புகைப்படங்களை வெளியிடுவதன் மூலம் வேட்பாளர் களை பாதிப்புக்கு உட்படுத்தல் மற்றும் அவர்களின் நற்பெயருக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தல்,போலியான மற்றும் பக்கச்சார்பான கருத்துக் கணிப்புக்களை வெளியிடுதல் போன்ற நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்கு தடையாகவுள்ள பல்வேறு நடவடிக்கைகள் சமூக ஊடகங்களினூடாக இடம் பெற்றதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. சமூக ஊடக வலையமைப்புக்கள் மூலம் இடம்பெறு கின்ற இவ்வாறான நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது தேர்தல் காலப்பகுதியினுள் அவற்றை முறையாக மேற்பார்வை செய்தல் தொடர்பாகச் செய்யப்படுகின்ற முன்மொழிவுகள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, வெறுப்புப் பேச்சுக்கள், பொய்யான செய்திகள் மற்றும் பணம் பெறுவதற்காக வெளியிடப்படுகின்ற செய்திகளைத் தவிர்ப்பதற்குச் தற்போது காணப்படுகின்ற சட்ட ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை என்பதால், அதற்காக புதிய சட்டங்களை வகுப்பது அத்தியாவசிய மாகும்.

### 11.10. சமயத் தலங்களை தேர்தல் பிரச்சார அலுவல் களுக்காகப் பயன்படுத்தல்.

சமயச் செயற்பாடுகளெனக் கூறிக்கொண்டு விகாரைகள், பள்ளிவாசல்கள், கோயில்கள் போன்ற சமயத்தலங்களில் வேட்பாளர்களை ஊக்குவிக்கின்ற வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. இலங்கையின் கலாச்சாரப் பின்னணி மற்றும் சமயச் சுதந்திரம் போன்று சமயம் தொடர்பாக மக்கள் மத்தியில் காணப்படுகின்ற உயர் அங்கீகாரம் மற்றும் கௌரவம் காரணமாகவும் மற்றும் நாடு பூராகவும் பல்வேறு சமயங்களுக்குரிய வழிபாட்டுத் தலங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுவதன் காரணமாகவும் முறைப்பாடுகளை விசாரணை செய்தல் மற்றும் சட்டத்தின் மூலம் சட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல் மிகவும் சிக்கல்மிக்க பணியொன்றாக உள்ளது. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 78 ஆம் பிரிவிற்கமைய சமய வழிபாட்டுத் தலங்களில் வேட்பாளர் ஊக்குவிப்புக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் சமய நடவடிக்கைகளின் போது வேட்பாளர்களை ஊக்கு வித்தல் சட்ட விரோதமானதெனக் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதியை அமுல்படுத்துவதற்காக எதிர்வருகின்ற தேர்தல்களுக்கு முன்னர் அனைத்து மதத் தலைவர் களுடனும் கலந்துரையாடி வழிபாட்டுத் தலங்களிற்குப் பொறுப்பான மதகுருக்களை அறிவுறுத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமெனவும் அதற்கமைய சட்டமுறையற்ற செயல் களைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

### 11.11. தேர்தல் பிரச்சார செலவினக் கட்டுப்பாடு.

தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்களினால் அதிகளவிலான பணம் செலவிடப்பட்டு செய்யப்படுகின்ற பிரச்சார அலுவல்கள் மூலம் வாக்காளர்களின் சுதந்திரத் திற்குத் தடைகள் ஏற்படுவதாக அவதானிக்கப் பட்டுள்ளது. அதேபோன்று பாரிய தொகைப் பணத்தை செலவிடுவதற்கு முடியாதுள்ள எதிர்த்தரப்பு வேட்பாளர் களுக்கு இது ஒரு சிறந்த நிலைமையொன்று இல்லை யென்பதோடு அவர்கள் சனநாயக செயற்பாடுகளிலிருந்து விலகுவதற்குக்கூட வழிவகுக்கத்தக்க நிலைமையொன் றாகும். ஆதலால் தேர்தலொன்றின் போது போட்டி யாளர்கள் சகலருக்கும் சமகளமொன்றில் போட்டியிடுவ தற்காக தேர்தலொன்றின் போது செலவு செய்யக்கூடிய

செலவினத்தைக் கட்டுப்படுத்தும் முறையொன்றை அறிமுகப்படுத்துவது அத்தியாவசியமாகவுள்ளது. இது தொடர்பில் ஏற்கனவே தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புக்கள் உள்ளிட்ட சிவில் செயற்பாட்டாளர்களால் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்தகைய முன்மொழிவுகளையும் கவனத்திற் கொண்டு ஏற்கனவே உரிய அதிகாரிகளிடத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செலவினக் கட்டுப்பாடு தொடர்பான சட்டமூலத்தை சட்டமாக்குவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத் துவது அத்தியாவசியமான ஒரு விடயமாகும்.

### 11.12. வேட்பாளர்களுக்கு வானொலி மற்றும் தொலைக் காட்சி ஒலி/ஒளிபரப்புக்காக வானலைக் காலத்தை வழங்குதல்.

சனாதிபதித் தேர்தல்கள் சட்டம் செயல்வலு வாக்கம் செய்யப்பட்ட 80 ஆம் தசாப்த காலத்தில் இலங்கையில் பிரதான இலத்திரனியல் ஊடகங் களாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியன காணப்பட்டன. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 117 ஆம் பிரிவின் பிரகாரம் அரச ஊடக நிறுவனங் களாகிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் என்பன வேட்பாளர்களுக்கு இந்த ஒலி/ஒளிபரப்பு வசதிகளை எந்தவொரு கட்டணத்தையும் அறவிடாமல் வழங்கி வருகின்றன. இருந்த போதிலும் தற்போது அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடக நிறுவனங்கள் பல நாட்டினுள் இயங்கி வருகின்றன. அதற்கமைய காணப்படுகின்ற போட்டி நிலைமை காரணமாக அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் அரச ஊடகங்களை விட அதிக பிரபல்யம் வாய்ந்த தனியார் ஊடகங்கள் மூலமும் மற்றும் வேறு நாடுகளிலிருந்து வழிநடாத்தப் படுகின்ற கேபள் ரூபவாஹினி அலைவரிசைகள் மூலமும் தமது பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு முயற்சிப்பதை அவதானிக்க முடிகின்றது. திறைசேரி நிதியத்தின் மீது தங்கியுள்ள அரச ஊடக நிறுவனங்களின் உயர் வர்த்தகப் பெறுமதி கொண்ட வானலைக் காலத்தை இலவசமாக அரசியல் பிரச்சார வசதிகளுக்காக வழங்கவேண்டி ஏற்பட்டமை ஊடாக அந்த நிறுவனங்களுக்கு ஏற்படுகின்ற நிதி ரீதியான இழப்புகளைச் சீர்செய்து கொள்வதற்காக அரசாங் கத்துக்கு மேலதிகமான செலவுகளைச் செய்வதற்கு நேரிட்டுள்ளது. போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்களின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்தமை காரணமாக, அவர்கள் அனைவருக்கும் சமமான சந்தர்ப்பங்களை வழங்க வேண்டியதன் தேவைப் பாட்டுக்கமைய அதற்காக குறித்தொதுக்க வேண்டிய வானலைக் காலத்தின் அளவு போன்றே அதற்காக அரசாங்கத்திற்கு செய்ய வேண்டியுள்ள செலவுகளும் அதிகரித்துள்ளன. ஆதலால், சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் அப்பிரிவு, இந்த அனைத்து நிலைமைகள் மற்றும் விடயங்களைக் கருத்திற் கொண்டு காலத்திற்கு ஏற்றவாறு இற்றைப்படுத்தப்படுதல் வேண்டுமென முன் மொழியப்படுகின்றது.

# பன்னிரெண்டாம் அத்தியாயம்

## நன்றி நவிலல் மற்றும் முடிவுரை.

### 12. நன்றி நவிலல்.

இலங்கையில் இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல்களின் போது, பாராளுமன்றத் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் பலவற்றில், பாரிய அடிப்படையில் வகைப்படுத்தப்பட வேண்டிய வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றதோடு, அவற்றில் சிலவற்றில் மனிதப் படுகொலைகளும் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடாத்தப்பட்ட இத் தேர்தலின் போது பாரியதாகக் கருதப்படக்கூடிய எந்தவொரு வன்முறைச் செயலும் முழுமையான தேர்தல்கள் காலப்பகுதியினுள் அதாவது, பெயர் குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு ஒரு வாரம் கழியும் வரையான காலப்பகுதியினுள் இடம்பெறாமை மொத்த இலங்கை சமூகத்தினருக்கும் கிடைத்த வெற்றியாகும். இத்தேர்தல் அமைதியாகவும் நீதியாகவும் நடாத்தப்பட்டதாகத் தேர்தல் கண்காணிப்பில் கலந்து கொண்ட பொது நலவாய நாடுகளின் கண்காணிப் பாளர்கள் உட்பட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு எந்தவொரு வன்முறைச் செயலும் இடம் பெறாதவாறு செயற்பட்ட தேர்தல் காலக்கெடுவினுள் பதவி வகித்த, தேர்தல் காலப்பகுதியினுள் பக்கச் சார்பின்றி அலுவல்களை மேற்கொண்ட கௌரவ சனாதிபதி, கௌரவ பிரதமர், கௌரவ சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அனைத்து அரசியற் கட்சிகளின் தலைவர்கள் அவற்றின் முதன்மை செயற்பாட்டாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் அனைத்து சனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களும் அவர்களது முகவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் உள்ளிட்ட அனைத்து இலங்கைப் பிரசைகளுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் கௌரவமிக்க நன்றிகளை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினம் உள்ளிட்ட வாக்கெடுப்புத் தினத்தில் எந்தவொரு வாக்கெடுப்பு நிலையத்தில் அல்லது வாக்கெண்ணல் மற்றும் பெறு பேறுகளை வெளியிடுதல் செயன்முறைகளில் எந்தவொரு வாக்கெண்ணல் நிலையத்தில் அல்லது பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தி வெளியிடப்படுகின்ற வளாகமொன்றில் அல்லது எந்தவொரு வகையான சட்ட ரீதியான செயற்பாடும் இடம்பெறாமை காரணமாக வாக்கெடுப்பு, வாக்கெண்ணல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் பணிகளுக்கு சிறிய அளவிலான தடையொன்று கூட இடம் பெறாமை பாராட்டத்தக்க நிலையொன்றாகும். முழு நாட்டிலும் வாக்காளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகைதரும் போது மற்றும் உரிய வாக்கெடுப்பு நிலையத்தில் தனது விருப்பின் படி சுதந்திரமாகவும் இரகசியமாகவும் தமது வாக்கைப் பிரயோகிப்பதற்கு எவ்விதத் தடையொன்றும் ஏற்பட்டதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறாமை தேர்தல் ஆணைக் குழுவின் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

தேர்தலொன்றை முறையாக நடாத்துவதற்குப் போதிய சட்ட ரீதியான ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் அனைத்தும் காணப்பட்ட போதிலும், நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு அரசியல் கட்சித் தலைவர்கள், கட்சிகளின் செயலா ளர்கள், வேட்பாளர்கள், அரசியல் கட்சிகளின் செயற்பாட்டாளர்கள் மற்றும் வாக்காளர்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் அதற்காக அர்ப்பணிப்புச் செய்வது அத்தியாவசியமானதாகும். ஆதலால் இந்தத் தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் வெற்றிகரமாக நடாத்தியமை தொடர்பாகக் கிடைக்கின்ற கௌரவத்தில் பெரும்பகுதி சட்டத்தை மதித்து செயற்பட்ட அரசியல் வாதிகளுக்கு உரித்தாகும். மேலும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 82% இற்கும் அதிகமான சதவீத மானோர் எந்தவொரு நிலைமையின் கீழும் வாக்களித் தலின் உயர்ந்த சதவீதமாகக் கருத முடியும். ஆதலால், தமது வாக்குரிமையைப் பிரயோகித்த அனைத்து இலங்கை வாக்காளர்களுக்கும் ஆணைக்குழுவின் கௌரவத்தையும், நன்றிகளையும் மற்றும் பாராட்டுக் களையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாக்கெடுப்புத் தினம் புத்தளம் தொடக்கம் மன்னார் வரை இடம்பெயர்ந்த வாக்காளர்கள் சிலர் பிரயாணம் செய்த பேருந்து வண்டியொன்றின் மீது தந்திரிமலை பிரதே சத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்ட தாகவும், அதே போன்று அன்றைய தினம் மன்னாரிலிருந்து வாக்காளர்கள் மீண்டும் திரும்பி வந்துகொண்டிருந்த பஸ் வண்டி மீது மதவாச்சியில் வைத்து தாக்குதல் நடாத்தப்பட்டதாக முறைப்பாடும் மற்றும் தெரனியகல பிரதேசத்தில் ஒழுக்கமற்ற இளைஞர் ஒருவரால் கூரிய ஆயுதமொன்றினால் மூன்று இளைஞர்களுக்கு சிறிய காயங்கள் ஏற்படுத்தப் பட்டதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. அந்த செயல்கள் தேர்தல் தினத்திற்கு முந்திய காலப்பகுதியில் காணப்பட்ட முழுமையான அமைதியான சூழலுக்கு தாக்கமொன்றை ஏற்படுத்தியது. அத்தகைய சம்பவங்கள் காரணமாக எவ்விதமான உயிரிழப்புக்கள் அல்லது எவரொருவருக்கும் பாரிய காயங்கள் ஏற்படாமை தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஆறுதல் தரும் விடயமாகும். இந்த சம்பவங்கள் காரணமாக பாதிக்கப் பட்ட அனைவருக்கும் தேர்தல் ஆணைக்குழு தனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. இந்த சம்பவங்களை விசாரித்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு, அவை தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அந் நடவடிக்கைகள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு தொடர்ச்சியாக அவதானத்தோடு உள்ளது. இருப்பினும், இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருப்பதற்காக தேர்தல் ஆணைக்குழு மேற்கொள்கின்ற முயற்சிகளுக்கு அரசியல்வாதிகள் உள்ளிட்ட சகல பிரசைகளும் உதவிகளை வழங்குவது கைவிடப்பட முடியாத ஒரு பொறுப்பாகும்.

அமைதியாகவும் மற்றும் சட்டத்தை மதித்தும் தமது பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சிறந்த நடத்தையுடன் செயற்பட்ட அனைத்து

வேட்பாளர்கள் மற்றும் அந்த வேட்பாளர்களது கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் அவற்றின் தொழிற்படு ஆதரவாளர்கள், முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான குழுவின் பணிகளுக்கு ஆதரவளித்த அரசியற் கட்சிகளின் நிரந்தர முகவர்கள் ஆகியோர் இந்தத் தேர்தலை வெற்றிகரமாக நடாத்துவதற்கு வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அதற்குச் சமமான வேறு பதவிகளை வகிக்கின்ற அரச சேவையின் சிரேட்ட அதிகாரிகள் தொடக்கம் அமய உதவியாளர்கள் வரையிலான அரச சேவையின் மற்றும் மாகாண அரச சேவையின் சகல அலுவலர்களின், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஏனைய அரச ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லையெனில் தேர்தல் தொடர்பான பணிகளை முறையாக நிறைவேற்ற முடியாது போகும். அரச சேவையின் கௌரவம் மற்றும் நற்பெயரைப் பாதுகாத்து தேர்தலை வெற்றிகரமாக நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அந்த அனை வருக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் நன்றிகள் உரித்தாகும்.

இந்த வாக்கெடுப்பை நடாத்தும் போது தேர்தல் ஆணைக்குழு சார்பாக களத்தில் வாக்கெடுப்பு மற்றும் தொடர்புடைய பணிகளுக்கான பொறுப்பில் பெரும்பகுதி தெரிவத்தாட்சி அலுவலர்களாகச் செயற்படுகின்ற மாவட்டச் செயலாளர்கள் மற்றும் அவர்களது பணியாட்குழுவினருக்கு கையளிக்கப்பட்டது. முன்னைய தேர்தல்களின் போது போன்றே அந்தப் பொறுப்புக்களை ஆணைக்குழுவினால் எதிர்பார்க்கப்பட்டவாறு நிறை வேற்றியமை தொடர்பாக அவர்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதற்கு விரும்புகின்றோம்.

அதேபோன்று தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் மாவட்டப் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையா ளர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய அவர்களுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை செய்து கொடுத்த பிரதேச செயலாளர்கள் மற்றும் அவர்களது பணியாட் குழுவினர்களால் வழங்கப்பட்ட சேவைகளை தேர்தல் ஆணைக்குழு பாராட்டுகின்றது. குறுகிய காலப்பகுதியினுள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தடைகளின்றி வாக்கெடுப்பு நிலையங்களின் அலுவல் களை மேற்கொள்ளப்படுவதற்குத் தேவையான வசதி களை வழங்குதல், தேர்தல் பணியாட் குழுக்களுக்கு நலனோம்பல் வசதிகளை வழங்குவதற்காகப் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் பொறுப்புடன் செயற்பட்ட அனைத்து கிராம அலுவலர்களுக்கும் பாராட்டுக்கள் உரித்தாகும்.

வாக்கெடுப்பின் போது செல்லுபடியான ஆளடையாள ஆவணம் ஒன்றின் மூலம் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டுமென்ற சட்ட நிலைமையை முறை யாகப் பாதுகாத்து மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக வாக்கெடுப்பு நிலையங்களின் செயற்பாடுகளை ஒழுங்குமுறையாகப் பேணிக் கொண்டு, கட்டாயமாகத் தேவைப்படுகின்ற தனிப்பட்ட வசதிகளைக் கூட மிகவும் கஷ்டங்களுக்கு மத்தியில் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த பின்தங்கிய வாக்கெடுப்பு நிலையங்களில் கூட முகம் சுழிக்காமல் மனப்பூர்வமாகவும் மகிழ்ச்சி யுடனும் பணிகளில் ஈடுபட்டு தமது கடமைகளை நிறைவேற்றிய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் உள்ளிட்ட வாக்கெடுப்பு நிலையங்களில் சேவையாற்றிய சகல அரச அலுவலர்களினதும் சேவையினை விலை மதிக்க முடியாது. இந்தத் தேர்தலின் போது அவர்கள் ஆற்றிய சேவை மிக உயர்வாக மெச்சப்படுகின்றது.

மேலும் மிகவும் களைப்புமிக்க பணியொன்றாகிய தேர்தல்களின் உச்ச சந்தர்ப்பமான வாக்கெண்ணலில் ஈடுபட்ட தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள், மற்றும் அவர்களின் உதவியாளர்கள் உள்ளிட்ட வாக்கெண்ணல் நிலையங்களினுள் சட்டத்தை மதித்தும் மற்றும் பொறுமையுடனும் செயற்பட்ட வேட்பாளர்களின் முகவர்களுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் நன்றிகள் உரித்தாகும். மேற்குறிப்பிட்ட அனைத்துத் தரப்பினர் களும் வினைத்திறனாகவும், சரியாகவும் மற்றும் துரிதமாகவும் தமது பணிகளை நிறைவேற்றியதன் காரணமாக தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு தமது வேலைகளை செய்து முடிக்க வசதிமிக்கதாக அமைந்தது. வாக்கெடுப்பு நிலையக் கடமைகள், பொருட்களாதியவற்றை விநியோகித்தல் மற்றும் கையேற்றல் மற்றும் வாக்கெண்ணல் ஆகிய நேரடியான தேர்தல் செயற்பாடுகள் மற்றும் தொடர்புடைய பணி களுக்கு மேலதிகமாக, நலனோம்பல், போக்குவரத்து, மண்டப வசதிகள், பொது வசதிகள், அஞ்சல் மூலம் வாக்களித்தல் அலுவல்கள், பணியாட் குழு நியமனங்கள் மற்றும் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தல் ஆகியன உள்ளிட்ட ஏனைய பணிகளுக்குப் பொறுப்பாகச் செயற்பட்ட மற்றும் அவர்களுக்கு உதவிய அலுவலர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்கள் உரியவாறு நிறை வேற்றப்பட்டமை இந்தத் தேர்தலின் வெற்றிக்கு வழிவகுத்த காரணங்களில் முதன்மையானதாகும். இந்த அலுவல் களுக்கு உதவிகளை வழங்கிய அனைத்து அலுவலர் களுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் நன்றிகள் உரித்தாகும்.

சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் தலைமை வாக்கெண்ணல் அலுவலர்களாகக் கணிசமான எண்ணிக்கை பெண் அலுவலர்கள் பணியில் ஈடுபடுத்தப் பட்டமை, வாக்கெடுப்பு நிலையப் பணிக்குழுவினரில் மற்றும் விநியோகித்தல் அலுவல்கள் மற்றும் கையேற்றல் பணியாட்குழுவினரில், வாக்கெண்ணல் நிலையங்களின் அலுவலர்களில் பெரும்பாலானோர் பெண் அதிகாரிகளாகக் காணப்பட்டமை, அதற்காக அவர்களின் பங்கேற்பு வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் விசேட பாராட்டுக்கு உட்பட்டதென்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். அத்தியா வசிய அடிப்படை வசதிகள் மாத்திரம் உள்ள வாக்கெடுப்பு நிலையங்களிலும் சேவையாற்றுவதற்காகத் தயக்கம் காட்டாமல் முன்வந்த பெண் அலுவலர்களின் சேவை பெரிதும் மதிக்கப்படுகின்றது.

சனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்கான பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கோரும் அறிவித்தல் வெளியிடப் பட்டதன் பின்னர் அரச சேவையின் பல்வேறு சேவைகளின் தொழில்சார் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வேலைநிறுத்தங்கள் பல இடம்பெற்ற தோடு பல வேலை நிறுத்தங்கள் பெயர் குறித்த நியமனங்களைக் கோரல் அறிவித்தல் வெளியிடப்படுவ

தற்கு முன்னர் இருந்தே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்தத் தொழில் நடவடிக்கைகளில் சில முன்வைக்கப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டமையினால் அல்லது சனாதிபதித் தேர்தல்கள் கடமைகளின் சேவைத் தேவைப்பாட்டைக் கருத்தில் கொண்டு முடிவுறுத்தப் பட்டிருந்தது. இருந்த போதிலும், மேலும் கட்டாய சேவைகளில் ஈடுபட்டுள்ள அரச சேவை தொழிற் சங்கங்கள் பல தமது கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுத்துவ தற்கு எதிர்பார்ப்புடன் இருக்கின்றமை தேர்தல் காலப்பகுதியின் ஆரம்பத்தில் அவதானிக்கப்பட்டது. முழு அரச சேவையிலுமுள்ள அனைத்து உறுப்பினர் களினதும் பங்கேற்புடனான பொறிமுறையொன்றின் மூலம் தேர்தல் அலுவல்கள் மேற்கொள்ளப்படவில்லையெனில் அல்லது மக்களின் இறைமையை உறுதிப்படுத்துவ தற்காக கட்டாயம் நடாத்தப்பட வேண்டிய தேர்தல்கள் அரச ஊழியர்களின்றி நடாத்த வேண்டியேற்படுமாயின் அத்தேர்தலை முறையாகவும் நியாயமாகவும் நடாத்துவ தற்கு தடைகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. சுதந்திரமான, நீதியான மற்றும் வெளிப்படைத் தன்மையுள்ள, நம்பகமான தேர்தலொன்றை நடாத்துவ தற்கு முடிவது அரச ஊழியர்களின் உயர்ந்தபட்சமான உதவி கிடைக்கப்பெற்றால் மாத்திரமே என்பதால், வேலை நிறுத்தங்களிலிருந்து தவிர்ந்து அதற்காகத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு அனைத்து அரச ஊழியர்களிடமும், அரச ஊழியர்களுக்கு தடைகளின்றி மகிழ்ச்சிகரமான சேவையை வழங்கக் கூடியவாறான சூழ்நிலையொன்றை உருவாக்குவதற்காக கலந்துரையாடி அசௌகரியங்களின்றி எடுக்கமுடியுமான சரியான நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களை உடனடியாக மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரி களிடமும், தொழில் சங்கங்களிடமும் தேர்தல் ஆணைக் குழுவினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆணைக் குழுவினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு மிகச் சிறந்த பதிலளிப்பை வழங்கி அவர்களால் வேலைநிறுத்தங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன. நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக நாட்டினுள் சிறந்த தொழில்நுட்ப ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்வதற்குரிய இணக்கப்பாடுகளுக்கு வருவதற்கு உதவியளித்த சுகாதாரம், புகையிரதம், கல்வி மற்றும் உயர் கல்வித் துறைகளின் தொழிற் சங்கங்கள் உட்பட ஏனைய தொழிற்சங்கங்கள் அவற்றின் முதன்மைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் அவற்றின் உறுப்பினர்களுக்கு ஆணைக்குழுவின் நன்றிகள் உரித்தாகும். அதே போன்று அந்த தொழிற் சங்கங்களின் கோரிக்கைகளுக்கு சிறந்த பதில் குறிகளைக் காட்டிய அமைச்சுக்களின் செயலாளர்கள் உட்பட அதிகாரிகளுக்கும் நன்றிகள் உரித்தாவதோடு இத்தகைய தொழில்சார் செயற்பாடுகளுக்குக் காரணமான கோரிக்கைகளுக்கும், இந்த தொழிற்சங்க நடவடிக்கை களுக்கு காரணமான கோரிக்கைகளுக்கு எதிர்காலத்தில் சிறந்த பதில்களை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரால் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென நம்புகின்றோம்.

தேர்தல் காலப்பகுதியின் ஆரம்ப சில வாரங்களினுள் தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள், ஆணைக் குழுவின் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக வேறு நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள சிவில் அலுவலர்கள் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த வரையறுக்கப் பட்ட பொலிஸ் அலுவலர்கள் ஆகியோர்களுக்கே தேர்தல் சட்டங்களை அமுலாக்கம் செய்ய வேண்டி யிருந்தது. தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர் அந்த அலுவலர்களினால் சுவரொட்டிகள், பாரிய உருவப்படங்கள் மற்றும் பதாகைகள் ஆகியவற்றை அகற்றுதல் உட்பட சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கு உயர்ந்த பட்சமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை காரணமாக அந்த நடவடிக்கை களினால் எந்தவிதமான பயன்களும் இல்லையென அரசியல் செயற்பாட்டாளர்கள் புரிந்து கொண்டதன் விளைவாக, சட்டவிரோதமான பிரச்சார நடவடிக்கைகள் குறைவாகக் காணப்பட்டன. அதன் மூலம் நீதியான தேர்தலொன்றை நடாத்துதல் தொடர்பான மக்கள் நம்பிக்கையை பெருமளவு உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடிந்தது. அச் செயற்பாடுகளில் ஈடுபட்ட தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள் உள்ளடங்கலாக அனைத்து சிவில் அலுவலர்கள், பொலிஸ் அலுவலர்கள், சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் அனைவருக்கும் விசேடமான நன்றிகள் உரித்தாகும். அதன் பிரகாரம், சுவரொட்டிகள், பதாகைகள், பாரிய உருவப்படங்கள் ஆகியவையற்ற சுற்றாடல் நட்புறவான மற்றும் அமைதியான நிலைமையொன்றின் கீழ் நாட்டில் தேர்தலொன்றை நடாத்துவதற்கு முடிந்தமை குறித்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம். சுவரொட்டிகள், உருவப் படங்கள் மற்றும் பதாகைகள் இன்றி தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பெரும்பாலான சனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் தேர்தல் முகவர்கள் செயற்பட்டமையை விசேடமாகப் பாராட்டுதல் வேண்டும்.

தேர்தலின் ஆரம்பத்திலிருந்து முற்று முழுதாக ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்கிய பொலிஸ் மா அதிபர் மற்றும் தேர்தல் விடயப்பொறுப்பு சிரேட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அவர்களும் தேவையான சந்தர்ப்பங்களில் தமது உதவிகளை வழங்கிய மாகாணப் பொறுப்பு சிரேட்ட பொலிஸ் மா அதிபர்கள், பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் ஏனைய சிரேட்ட பொலிஸ் அலுவலர்கள் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட இந்தத் தேர்தலை அமைதியாகவும் மற்றும் வெற்றிகரமாகவும் நடாத்துவ தற்கு பங்களிப்பு வழங்கிய அத்துடன் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஏனைய அனைத்து பொலிஸ் அலுவலர்களுக்கும் மற்றும் விசேட அதிரடிப்படையின் உறுப்பினர்களின் கடமை சார்ந்த உதவிகளையும் பெரிதும் பாராட்டுவதோடு அவர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின் றோம். வாக்கெடுப்பு தினத்தன்றும் அதற்கு முன்னரும் செயற்பட்ட தேசிய தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் மற்றும் பிரதேச இணைப்பு நிலையங்களில் பணியாற்றிய சகல பொலிஸ் அலுவலர்களினாலும் வழங்கப்பட்ட சேவைகளும் மிக உயர்ந்த பாராட்டத்தக்க நிலையில் காணப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழு மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர் களின் கோரிக்கைகளின் பேரில் வாக்கெடுப்புக்கு முந்திய தினம், வாக்கெடுப்புத் தினத்தில் வாக்கெடுப்பு

நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணல் மண்டபங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு களைப்பையும் பொருட்படுத்தாமல் சேவையில் ஈடுபட்ட அனைத்து பொலிஸ் அலுவலர்களுக்கும், விசேட அதிரடிப்படையின் அலுவலர்களுக்கும் ஆணைக்குழுவின் விசேட நன்றிகள் உரித்தாகும். பாதுகாப்புச் சேவைகள் வழங்குவதோடு சட்டமுரணான செயல்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பொலிஸ் திணைக்களத்திற்கு அவசியமான ஒத்துழைப்புச் சேவைகளை வழங்குதல் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்களால் கோரப்பட்ட சந்தர்ப்பங்களில் வாக்கெடுப்பு மற்றும் தொடர்புடைய சேவைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கியமை தொடர்பாக சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் தலைவர் உள்ளிட்ட பணியாட்குழுவினருக்கு எமது நன்றிகள் உரித்தாதல் வேண்டும். மேலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொலிஸ் திணைக்களத் திற்கு ஒத்துழைப்பு வழங்கும் எதிர்பார்ப்போடு தயார் நிலையில் இருந்த முப்படையினர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் ஆணைக்குழுவின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதே போன்று விசேடமாக வட மாகாணத்திலும் மற்றும் தேவையான ஏனைய வாக்கெடுப்பு நிலையங்களுக்கும் கடல்வழிப் போக்குவரத்து வசதிகளை வழங்கியமைக்காக கடற்படைத் தளபதி அவர்களுக்கும் அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய அவரின் பணியாட்குழுவினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தேர்தலுக்குரிய அச்சிடல் பணிகளில் கணிசமானளவை ஆற்றும் பொறுப்பு அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. இதற்கமைய விசேட பாதுகாப்பின் கீழ் அரசாங்க அச்சகத்தின் இரகசியப் பிரிவில் வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டதோடு, ஏனைய தேவையான எழுத்தாவணங்களில் பெருமளவானவற்றை அச்சிட்டு வழங்குவதற்கு அவர்களால் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. தேர்தல் ஆணைக்குழுவினால் எதிர்பார்க்கப்பட்ட விவரக் குறிப்புக்களின் பிரகாரம் மற்றும் காலவரை யறைக்குள் அச்சக வேலைகளை நிறைவேற்றிக் கொடுத்தமை தொடர்பாகவும் மற்றும் மிகவும் நட்புறவான ஒத்துழைப்புடன் அலுவல்களை மேற்கொண்டமை தொடர்பாக அரசாங்க அச்சக அழுத்தகருக்கும் அவரின் பணியாட் குழுவினர்களுக்கும் விசேடமான பாராட்டுக்கள் உரித்தாகும்.

வாக்காளர்களின் வீடுகளுக்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகித்தல், அஞ்சல் மூலம் வாக்களித்தல் தொடர்பாகச் செயற்படுதல் மற்றும் அவசர தேர்தல் கடிதங்களை விநியோகித்தல் ஆகியன பணிகளை முறையாக நிறைவேற்றிய அஞ்சல் திணைக்களத்தின் அஞ்சல் மா அதிபர் உள்ளடங்கலாக அனைத்துப் பணியாட்குழுவினருக்கும் ஆணைக்குழுவின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாக்கெடுப்புச் சந்தர்ப்பமாகும் போது தங்களிடம் தேசிய அடையாள அட்டை இல்லாமை காரணமாக தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்த விண்ணப்பதாரர் களுக்கு தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப் பட்டுள்ள தகவல்கள் உள்ளடக்கப்பட்ட விசேட கடதாசி யொன்றில் அச்சிடப்பட்ட சான்றிதழ் ஒன்றை தற்காலிகமாக அடையாள அட்டையாகப் பயன்படுத்துவ தற்கு ஏற்றவாறு மிகக் குறுகிய காலப்பகுதியொன்றினுள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததோடு, அது வாக்களிப்பதற்கான செல்லுபடியான ஆளடையாள ஆவணமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்குச் செயற்பட்ட ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் உட்பட அலுவலர்களுக்கு ஆணைக்குழுவின் நன்றிகள் உரித்தாகும். செல்லுபடியான ஆளடையாள அட்டையொன்றில்லாத வாக்காளர்களுக்கு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்கும் போது மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அனைத்துக் கிராம அலுவலர்களும், பெருந்தோட்ட அத்தியட்சகர்களும் உதவிகளைச் செய்தனர். அந்த அலுவல்களிற்குப் பங்களிப்பு வழங்கிய கண்காணிப்பு அமைப்புக்களுக்கும் ஆணைக்குழுவின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேர்தல்கள் பணிகளைத் தேசிய தேவையொன்றாகக் கருதி இலங்கை போக்குவரத்துச் சபை, இலங்கைப் புகையிரதத் திணைக்களம் மற்றும் தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கங்கள் மற்றும் மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபைகள் ஆகியவற்றினால் வாக்காளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையங்களுக்கு செல்வதற்கான வசதிகள் உள்ளடங்கலாக அனைத்து போக்குவரத்து அலுவல்களையும் தடையின்றி பேணிச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனை களின் கீழ் அவர்களினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு குறித்து அந்த நிறுவனங்களின் தலைவர்களுக்கும் கடமையில் ஈடுபட்ட அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகும்.

மேலும், போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக அரசாங்க வாகனங்களுக்கு மேலதிகமாக வாகனங்கள் தேவைப்படு கின்ற போது தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட விலைகளின் கீழ் வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்கிய வாகன உரிமையாளர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். முன்னர் இடம்பெற்ற தேர்தல்களில் போன்று வாக்கெண்ணல் வளாகங்களுக்குத் தேவையான மேலதிக மின்சாரம் இலங்கை மின்சார சபையினாலும், தேவையான தொலை பேசி இணைப்புக்கள் மற்றும் இணைய வசதிகள் இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினாலும், மேலதிக நீர் வசதிகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினாலும் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட சேவை களுக்காக அந்த நிறுவனங்களின் பணியாட்குழு வினருக்கு நன்றிகள் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

தேர்தலின் போது வாக்கெடுப்பு நிலையங்களுக்காகவும் மற்றும் வாக்கெண்ணல் நடவடிக்கைகளுக்காகவும் அரச பாடசாலைகளை வழங்கியமை தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையிலான அலுவலர் களுக்கும், அனைத்து மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், அந்தப் பாடசாலை

களில் காணப்பட்ட வசதிகளை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு இனக்கம் தெரிவித்த பாடசாலைகளின் தலைவர்களுக்கும் விசேட நன்றி களைத் தெரிவித்துக் கொள்வதற்கு விரும்புகின்றோம். அதேபோன்று வாக்கெண்ணலுக்காக தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்விக் கூடங்கள் உள்ளிட்ட ஏனைய இடங்களை வழங்கிய அந்த அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகும். வாக்கெடுப்பு நிலையங்களுக்காக தமது பொறுப்பிலுள்ள விஹாரைகள் மற்றும் ஏனைய சமயத் தலங்களை வழங்கிய விஹாரைகளின் பிரதம விகாராதிபதிகள் மற்றும் ஏனைய மதத் தலைவர்கள் ஆகியோர்களுக்கும் கௌரவத் தோடு எமது நன்றிகளை நவில்கின்றோம். மேலும் வாக்கெடுப்பு நிலையங்களைத் தாபிப்பதற்காக தங்களின் தனிப்பட்ட கட்டிடங்கள் மற்றும் காணிகளை வழங்கிய அந்த ஆதனங்களின் உரிமையாளர்களுக்கும் ஆணைக் குழுவின் நன்றிகள் உரித்தாகும்.

பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் கையேற்கப்பட்ட தினத்திலிருந்து தேர்தல் முடிவடையும் திகதி வரை நாட்டினுள் சிறந்த காலநிலை நிலைமையொன்று காணப்படவில்லை. அதன் காரணமாக, இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் மண்சரிவு, வீதிகள் தடைப் படுதல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வெள்ள நிலைமை, மின்னல் தாக்குதல்கள் போன்ற இயற்கை அனர்த்தங்களிற்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது. இருந்த போதிலும், இந்த அனைத்துச் சிரமங்களுக்கும் மத்தியில் வாக்கெடுப்பை எந்தவொரு தடையின்றியும் முறையாக நடாத்துவதற்குத் தேவையான முன்னேற்பாடு களைப் மேற்கொள்ளல் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர், தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அலுவலர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவுகளின் அலுவலர்கள் மற்றும் பணியாட்குழுவினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு அவசியமான உதவிகளை வழங்கிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அலுவலர்கள், இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியவர் களுக்கும் அவர்களின் பதவியணியின் அலுவலர் களுக்கும் மற்றும் அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து முப்படைகளின் உறுப்பினர்களுக்கும், பொலிஸ் அலுவலர்களுக்கும் ஆணைக்குழுவின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். வருடத்தின் நவம்பர் - திசெம்பர் காலப்பகுதியினுள் சனாதிபதித் தேர்தல் நடாத்தப்படவுள்ளதால், அந்தக் காலப் பகுதியினுள் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அவசர இடர் நிலைமைகளில் போது மேற்கொள்ளும் முன் ஆயத்தமொன்றைத் தயாரிப்பதன் தேவைப்பாடு தொடர்பாக பெயர் குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்படுவதற்கு முன்னரே தற்போதைய இராணுவத்தளபதி அவர்களால் தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதோடு அது தொடர்பாக அவருக்கு எமது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து அறிவித்தலகள் மற்றும் உத்தியோகபூர்வ பெறுபேறுகளை ஊடகங் களுக்கு வழங்கும் போதும், ஊடக வழிகாட்டு நெறிகளை செயல்வலுவாக்கம் செய்யும் போதும் அவசியமான அனைத்து சந்தர்ப்பங்களில் ஊடகங்களின் ஒருங்கிணைப்பின் போதும் அளப்பரிய பணிப்பொறுப்புக் களை ஆற்றிய ஊடக அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பதவியணியினர், அரசாங்கத் தகவல்கள் பணிப்பாளர் நாயகம் உள்ளடங்கலாக அவரின் பதவியணியினர்கள் மற்றும் பெயர் குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தேர்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து சரியான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்கும் மற்றும் வாக்காளர் களை அறிவுறுத்துவதற்கும் அலுவல்களை மேற்கொண்ட ஊடக நிறுவனங்கள் மற்றும் அவ்வூடக நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஊடகவியலாளர்கள் வழங்கிய ஒத்துழைப்பையும் நன்றியுடன் நினைவுகூறுகின்றோம். அதே போன்று ஊடக வழிகாட்டு நெறிகளுக்கு அமைய செயற்படுவதற்காக அர்ப்பணித்த ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், செய்தி ஆசிரியர்கள், செய்திப் பணிப்பாளர்கள் மற்றும் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள் ஆகிய அனை-வருக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சனாதிபதித் தேர்தல் காலப்பகுதியினுள் சமூக ஊடக வலையமைப்புக்கள் விசேடமாக முகநூல் (Facebook) ஊடாக பொய்யான கூற்றுக்கள் மற்றும் வெறுப்புப் பேச்சுக்கள் இடம்பெறுவதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறானவற்றை இணைய வலையமைப்பிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தமை தொடர்பாக அவற்றின் நிருவாகிகளுக்கு தேர்தல் ஆணைக்குழுவின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தயாரிக்கப் படுகின்ற தேர்தல் பெறுபேறுகள் தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் மீளப் பரீட்சிப்பதற்காக ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அரச அலுவலர்களுக்கும் மற்றும் அனுமதிக்கப்பட்ட பெறுபேறுகளை ஊடக நிறுவனங் களுக்கு வழங்குவதற்காக அலுவல்களை மேற்கொண்ட கணினிப் பிரிவின் சகல அலுவலர்களுக்கும் அதற்குத் தேவையான இலத்திரனியல் தொடர்பாடல் வசதிகளை வழங்கியமை தொடர்பாக இலங்கை டெலிகொம் நிறுவனத்துக்கும் ஆணைக்குழுவின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது தகவல் தொழில்நுட்ப முறைமைகள் ஊடாக பெறுபேறுகளைத் தயாரித்தல் மற்றும் அதனூடாகப் பெறுபேறுகளை ஊடகங்களுக்கு வழங்கும் போது தொழில்நுட்ப ரீதியில் தடைகள் ஏற்பட்டன. அந்த நிலைமையைக் கவனத்திற் கொண்ட தேர்தல் ஆணைக்குழுவினால் அதற்கு 03 மாதங்களின் பின்னர் கணினி தொடர்பான நிபுணர்களை அழைத்து மீளாய்வு கலந்துரையாடலொன்று நடாத்தப் பட்டது. இதன் பயனாக எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான செயலமர்வொன்று நடாத்தப்பட்டதோடு,

அங்கு தீர்மானிக்கப்பட்டவாறு பெறுபேறுகளைத் தயாரிப் பதற்காக புதிய கணினி நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டது. இந்த தேர்தலின் முடிவுகளை வெளியிடுவதற்காக தனது பங்களிப்பை வழங்கிய தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு, கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினிப் பிரிவின் விரிவுரையாளர்கள் மற்றும் இலங்கை மென்பொருள் மன்றத்தின் செயற்பாட்டாளர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனைவருக்கும் திரைமறைவில் இருந்து கொண்டு சுயமாக சேவை வழங்கிய தகவல் தொழில்நுட்பவியலாளர்களுக்கும் விசேட நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.

1982 தொடக்கம் இதுவரை இலங்கையில் நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலொன்றுக்காக வேட்பாளர்கள் அதிக எண்ணிக்கையானவர்கள் போட்டியிட்ட முதலாவது சந்தர்ப்பமாக இத்தேர்தல் வரலாற்றில் இடம்பிடிக்கும். இவ்வாறு போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை காரணமாக இதுவரை காணப்பட்ட நிலைமைக்கு அப்பால் ஏற்பட்ட சவால்மிக்க இலக்குகளை எதிர்கொள்ளும் பொருட்டு முன்னேற்பாடுகளை மேற் கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு நேரிட்டது. அதன் விசேடமான ஒரு நடவடிக்கையாக வழமையாகப் பயன்படுத்தப்பட்ட மரப்பலகை வாக்குப் பெட்டிகளுக்குப் பதிலாக பாதுகாப்பான காட் போர்ட் வாக்குப் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன. இருப்பினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாக்கெடுப்பு நிலையங் களுக்காகத் தேர்தல் ஆணைக்குழு வசம் காணப்பட்ட மரப் பலகை மற்றும் பிளாஸ்டிக் வாக்குப் பெட்டிகளைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. வாக்காளர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களின் நம்பிக்கை பாதுகாக்கப்படும் வகையில் மிகவும் குறுகிய காலப்பகுதியினுள் இந்த பணியை சரியான முறையில் நிறைவேற்றியமை தொடர்பாக தேர்தல் ஆணைக் குழுவின் தேசிய தேர்தல்கள் விடயப் பொறுப்பு மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் அவரின் உதவிப் பணியாட்குழு வினர்கள் மற்றும் அந்த காட்போர்ட் பெட்டிகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை யெடுத்த வழங்குநர்கள் உள்ளிட்ட அதற்காக முன்வந்த ஏனைய வழங்குநர் களுக்கும் எமது விசேட நன்றிகள் உரித்தாகும். மரப்பலகை வாக்குப் பெட்டிகளுக்குப் பதிலாக மாற்றீடொன்றை அறிமுகம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி சிறப்பாக வெற்றிகரமாக முடிவடைந்தமை தொடர்பாக நாம் மிகவும் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

தேர்தல் நடாத்தப்பட்ட காலப்பகுதியினுள் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களால் தேர்தல்கள் சட்டங்கள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிடல் மூலமும், வேட்பாளர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களை தேர்தல் சட்டத்திற்கு உட்படுத்துவதற்காக முயற்சிப்பதன் ஊடாகவும் தேசிய அடையாள அட்டைகள் இல்லாத நபர்களுக்கு அவற்றை வழங்குவதற்கு தலையீடு செய்தும் மற்றும் வாக்களிப் பதன் முக்கியத்துவம் தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்தல் வரையில் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் ஆர்வம் தொடர்பாகவும் ஆணைக்குழுவின் விசேட நன்றிகள் அந்த நிறுவனங்களுக்கு உரித்தாகும். முறைப்பாடுகள் மற்றும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும் போது உறுதிப்படுத்தக்கூடிய விடயங்கள் தொடர்பாக மாத்திரம் தகவல்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை யெடுக்குமாறு ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட கோரிக்கைக்கு இணக்கப்பாட்டை வெளிப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு அலுவல்களை மேற்கொண்ட கண்காணிப்பு அமைப்புக்களுக்கு அது தொடர்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நீதியானதும் மற்றும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவ தற்காக பக்கச்சார்பற்ற கண்காணிப்பு அமைப்புகளின் தொழிற்பாடு கட்டாயமானதென்பதால் தேர்தல் ஆணைக் குழு எதிர்காலத்திலும் அவ்வாறான கண்காணிப்பு அமைப்புக்களின் உதவிகளை மிகவும் விநயமாக எதிர்பார்க்கின்றது.

இந்த தேர்தல் அலுவல்களின் கண்காணிப்புக்காக ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் தெற்காசிய நாடுகளின் தேர்தல் அதிகாரிகள் சங்கத்தின் முகவர்கள் குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டது. அந்த கண்காணிப்பாளர்கள் தேர்தல் காலப்பகுதியினுள் நாடுமுழுவதும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். தேர்தல் சட்டங்களைச் செயற்படுத்துவ தற்குப் போன்று வேட்பாளர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களை தேர்தல்கள் சட்டங்களுக்கு இணங்கியொழுகச் செய்வதற்கு இந்த வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் வருகை பெரிதும் உதவியாக அமைந்ததென தேர்தல் ஆணைக்குழு நம்புகின்றது. தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியோடு ஐரோப்பிய ஒன்றியம் (EU) மற்றும் பொதுநலவாய நாடுகள் (The Commonwealth) ஆகியனவற்றின் கண்காணிப்புக் குழுக் களும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இதற்கு மேலதிகமாக, உள்நாட்டு கண்காணிப்பு அமைப்புக்களான நீதியானதும் சுதந்திர மானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) மற்றும் தேர்தல்கள் வன்முறைச் செயல்கள் கண்காணிப்பு நிலையம் (CMEV) ஆகிய அமைப்புகளின் அழைப்பின் பேரில் மற்றும் ஆணைக்குழுவின் இணக்கத்தோடு சுதந்திரமான தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப் பினாலும் (ANFREL) வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவர்களது கண்காணிப்பாளர் களால் வாக்கெடுப்புக்கு முன்னரான விடயங்கள் உட்பட முடிவுகளை வெளியிடும் சந்தர்ப்பம் வரையான எல்லாப் பணிகளும் கண்காணிக்கப்பட்டன. அவர்களின் செயற் பாடுகளுக்கு தேர்தல் ஆணைக்குழுவின் முழுமையான உதவிகள் வழங்கப்பட்டன. ஆதலால், சனாதிபதித் தேர்தல்கள் கண்காணிப்புக்காக இந்நாட்டிற்கு வருகை தந்து அதற்காக உயிர்ப்பான பங்களிப்பை வழங்கிய மைக்காக குறித்த கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் அவற்றுக்காக வருகை தந்த கண்காணிப்பாளர்கள் ஆகியவர்களுக்கு ஆணைக்குழு தனது கௌரவமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தேர்தலுக்கான பூர்வாங்க ஒழுங்கமைப்பு அலுவல்கள் மற்றும் நியதிச் சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு மேலதிகமாக தேர்தல் பிரச்சார கூட்டங்களுக்கான

இடங்களை ஒதுக்கீடு செய்யும் சிக்கல்கள், சட்ட விரோத பிரச்சார விடயங்கள் தொடர்பான பிரச்சினைகள் அரச அலுவலர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் அரச வளங்கள் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல் ஆகிய அனைத்து விடயங்களிலும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தேவையான சிறந்த நிலைமையொன்றை பேணுவதற்காக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க துரிதமாகத் தலையிட்டு அச்சமின்றியும் மற்றும் பூரணமாகவும் இத்தேர்தல் காலப்பகுதினுள் தேர்தல் சட்டங்களைப் பாதுகாப்பதற்காக விசேட முயற்சிகளை மேற்கொண்டு தேர்தலை உரிய முறையில் நடாத்துவதற்காக அளப்பரிய சேவைகளை ஆற்றிய தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், செயலாளர், மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்கள், பிரதி /உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள், பணிப்பாளர்கள், பிரதம நிதி அலுவலர், கணக்காளர்கள் உள்ளிட்ட ஏனைய பதவிநிலை அலுவலர்கள் மற்றும் தேர்தல்கள் செயலகத்தின் அனைத்துப் பணிக்குழுவினர்கள், மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் பணியாட் குழு உறுப்பினர்கள், இந்தக் காலப்பகுதியில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அமய உதவி ஊழியர்கள் மற்றும் தேர்தல்கள் வழிநடாத்தல் நோக்கங்களுக்காக வேறு அரசாங்க அலுவலகங்களின் முழு நேரம் மற்றும் பகுதி நேரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு இணைப்புச் செய்யப்பட்டு பணியாற்றிய அலுவலர்கள், மீண்டும் கடமைக்கு அழைக்கப்பட்ட ஓய்வு பெற்ற அரசாங்க அலுவலர்கள், சாரதிகள் மற்றும் ஏனைய உதவியா ளர்கள் ஆகியவர்களின் சேவைகளை உயர்வாக மதிப்பதோடு அவர்களுக்கு ஆணைக்குழுவின் நன்றியும் பாராட்டும் உரித்தாகும். விசேடமாக தேர்தல்கள் செயலகத்தினதும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங் களினதும் பதவிநிலை அலுவலர்கள் ஏனைய அனைத்து பணியாட்குழுவினர்கள் இரண்டு மாதங்களுக்கு அண்மித்த காலமாக இரவு பகல் பாராது வார நாட்களில் போன்று விடுமுறை தினங்களிலும் களைப்புப் பாராது தேர்தல் மற்றும் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் உரியவாறு மேற்கொள்ளவில்லையெனில் இந்த, சனாதிபதித் தேர்தலை உரியவாறு நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றாக நடாத்துவதற்கு முடியாமல் போயிருக்கும்.

### 12.1. முடிவுரை.

தேர்தல் சட்டங்களைக் கடுமையாகப் பாதுகாப் பதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான காரணம், எந்தவோர் அரசியற் கட்சியை அல்லது குழுவை, அல்லது வேட்பாளர் ஒருவரை ஊக்குவிக்கும் அல்லது பாதிப்புக்குற்படுத்தும் நோக்கங்களிற்காக அல்லவென்பதோடு. அது எவ்விதத் திலும் தீய நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையொன்றல்ல என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். தேர்தல் ஆணைக்குழு தேர்தல் சட்டங்கள் மீறப்படுவதனை தடுப்பதற்காக ஆகக்கூடிய முயற்சிகளை எடுத்தமைக்குக் காரணம், மக்களின் வாக்குரிமையைப் பாதுகாத்து மக்களின் விருப்பத்திற்கு எவ்வித அழுத்தங்கள் அல்லது தூண்டுதல்கள் இன்றி நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக நாட்டினுள் தேர்தல் சட்டத்தைச் செயல்வலுவாக்கம் செய்யும் காலத்தின் தேவைப்பாடு நிலவிய காரணத்தினாலாகும். அதே போன்று எதிர்காலத்திலும் அந்த நோக்கத்திற்காக தேர்தல் ஆணைக்குழு தயக்கமின்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பது தெரிவிக்கப்படுகிறது. மேலும் இத்தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தல் சட்டங்கள் மற்றும் ஆணைக்குழுவின் கட்டளைகளை மீறிய அனைத்து அலுவலர்கள் மற்றும் ஏனைய நபர்கள் சம்பந்தமாக சட்ட ரீதியான மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளையெடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றினால் நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை இங்கு குறிப்பிடுவ தற்கு விரும்புகின்றோம்.

சனாதிபதி தேர்தலை நீதியாகவும் சுதந்திரமாகவும் மற்றும் உரிய முறையிலும் நடாத்தியமை தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு பல பாராட்டுக்கள் கிடைத்த வண்ணமுள்ளன. அவ்வாறு பாராட்டுக்களைத் தெரிவிக்கின்ற அனைவருக்கும் ஆணைக்குழுவின் நன்றிகள் இத்தால் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. அரசியலமைப்பினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள கடமைகளை முறையாக நிறைவேற்றுதல் அல்லது மக்கள் விருப்பத்தை முறையாக வெளியிடுவதற்குத் தேவையான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அந்த மக்கள் அபிப்பிராயம் வெளியிடப்பட்ட வாக்குகளை உரிய அடிப்படையில் எண்ணி சரியான பெறுபேறுகளுக்கு அமைவாக சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது மாத்திரமெனவும், எமக்குக் கிடைக்கின்ற பாராட்டுக்கள், இதற்கு முன்னர் தெரிவிக்கப்பட்ட விமர்சனங்கள் போன்றே நடுநிலையான மனதுடன் ஏற்றுக் கொள்கின்றோம் என்பதை தயவன்புடன் அறிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலை நீதியாகவும் மற்றும் சுதந்திரமாகவும் நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும் மீண்டும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு அந்த கௌரவம் அதற்காக பங்களிப்புச் செய்த அனைவருக்கும் உரித்துடையதாக வேண்டு மெனவும் ஏதேனும் சிறிய தவறுகள் அல்லது தாமதங்கள் ஏற்பட்டிருப்பின் அது தொடர்பான பொறுப்பை தேர்தல் ஆணைக்குழு ஏற்றுக்கொள்கின்றதென்பதை தெரிவித்து இந்தக் குறிப்பை இத்தால் நிறைவு செய்கின்றோம்.

**நிமல் ஜீ. புஞ்சிஹேவா,**
**தவிசாளர்,**
**தேர்தல் ஆணைக்குழு சார்பாக,**
**2021.10.01**

## இணைப்புக்கள் மற்றும் புள்ளிவிபரக் குறிப்புக்கள்.

### இணைப்புக்கள்.

| இணைப்பு இல. | விபரம் |
|---|---|
| 01 | 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம் - 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை<br>(2141 / 25 ஆம் இலக்க 2019.09.18 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) |
| 02 | 22 தேர்தல்கள் மாவட்டங்களுக்காக 22 தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமனம் செய்தல்<br>(2141 / 26 ஆம் இலக்க 2019.09.18 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) |
| 03 | 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம் - 7(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை<br>(2141 / 27 ஆம் இலக்க 2019.09.18 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) |
| 04 | 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் - 7(4)(ஆ) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்<br>(2108 / 41 ஆம் இலக்க 2019.01.31 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்ப்பட்டியல் |
| 05 | சனாதிபதித் தேர்தல்கள் - 2019<br>1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம் - 8(1)(ஆ)(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல்<br>(2141 / 92 ஆம் இலக்க 2019.09.22 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) |
| 06 | வைப்புப் பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ள முறை பற்றிய அறிக்கை |
| 07 | 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம் - 21 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்<br>(2144 / 06 ஆம் இலக்க 2019.10.07 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல் |
| 08 | ஒவ்வொரு வேட்பாளர்களினால் நியமனம் செய்யப்பட்ட தேர்தல் முகவர்களின் பெயர்ப் பட்டியல் - 31(3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்<br>(2144 / 07 ஆம் இலக்க 2019.10.07 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) |
| 09 | தேர்தல்கள் மாவட்டங்கள் மற்றும் வாக்கெடுப்புப் பிரிவுகள் உள்ளடக்கப்பட்ட வரைபடம் |
| 10 | வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அதற்காகப் பயன்படுத்தப்பட்ட கட்டிடங்கள் தொடர்பான விபரங்கள் |
| 11 | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5)அ என்னும் உறுப்புரையின் கீழான ஊடக வழிகாட்டுநெறிகள்<br>(2141/ 87 ஆம் இலக்க 2019.09.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) |
| 12 | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5)அ உறுப்புரையின் கீழான ஊடக வழிகாட்டுநெறிகள்<br>(2146/ 39 ஆம் இலக்க 2019.10.27 ஆம் திகதிய திருத்தம் செய்யப்பட் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) |
| 13 | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5)அ உறுப்புரையின் கீழான ஊடக வழிகாட்டு நெறிகள்<br>(2148/ 21 ஆம் இலக்க 2019.11.05 ஆம் திகதிய திருத்தம் செய்யப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) |
| 14 | ஊடக அறிவித்தல்கள் |
| 15 | வேட்பாளர்களுக்கான தொலைக்காட்சி ஒலி/ஒளிபரப்புக் காலத்தைக் குறித்தொதுக்கல் |

| இணைப்பு இல. | விபரம் |
|---|---|
| 16 | வேட்பாளர்களுக்கான வானொலி ஒலிபரப்புக் காலத்தைக் குறித்தொதுக்கல் |
| 17 | தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் |
| 18 | இறப்பெய்தியுள்ளதாக மற்றும் வெளிநாடு சென்றுள்ளதாக அறிக்கையிடப்பட்ட வாக்காளர்கள் தொடர்பான விபரங்கள் |
| 19 | தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தமது வாக்கை அளிப்பதற்கு இயலச் செய்யத்தக்கவாறு விடுமுறை (லீவு) வழங்குதல் |
| 20 | வாக்கெடுப்புக் காலத்தை முற்பகல் 7.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரையான காலப்பகுதியை முற்பகல் 7.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை மாற்றம் செய்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்)<br>(2147/ 46 ஆம் இலக்க 2019.10.29 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) |
| 21 | தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவ பிரிவினால் தேர்தல்கள் சட்டங்களைச் செயல் வலுவாக்கம் செய்வதற்காக தயாரிக்கப்பட்ட நிறுவனக் குறிப்பு |
| 22 | தேர்தல் காலப் பகுதியினுள் அரசாங்கத்திற்கு அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கு அல்லது நியதிச் சட்ட சபைகளுக்குச் சொந்தமான அசையும் அல்லது அசையாத சொத்துக்களை கட்சிகள் அல்லது குழுக்கள் அல்லது வேட்பாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்ற அல்லது பாதிப்புக்குட்படுகின்ற விதத்தில் நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தடையானவாறு பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள்<br>(2141/ 52 ஆம் இலக்க 2019.09.19 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) |
| 23 | தேர்தல் ஆணைக்குழுவினால் 2019.10.03 ஆம் திகதிய 2143/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்ட பணிப்புக்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் மேலதிகமாக வெளியிடப்படுகின்ற கட்டளைகள் |
| 24 | தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் / சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் ஆகியோரினால் பின்பற்றவேண்டிய ஒழுக்க நெறிக்கோவை<br>(2142/ 47 ஆம் இலக்க 2019.09.25 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) |
| 25 | ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளர் திரு. கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கும் அறிவித்தல்<br>(2149/ 34 ஆம் இலக்க 2019.11.17 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) |

| புள்ளிவிபரக் குறிப்பு இல. | விபரம் |
|---|---|
| 01 | பணியாட் குழுவினர் தேவைப்பாடு (ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை) |
| 02 | தேர்தல்கள் செயலகத்தின் பணியாட்குழு ஒதுக்குக் குழாத்திலிருந்து ஒவ்வொரு மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்ட பணியாட்குழுவினர் தொடர்பான தகவல்கள் |
| 03 | ஒவ்வொரு மாவட்டங்களிலும், தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்கள் |
| 04 | அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை வகைப்படுத்தல் |
| 05 | ஒவ்வொரு மாவட்டங்களுக்கமைய அடையாளமிடப்படாத அஞ்சல் வாக்குகளின் எண்ணிக்கை |
| 06 | சனாதிபதித் தேர்தலுக்குரிய வாக்கெண்ணல் வளாகங்கள் தொடர்பான பட்டியல் |
| 07 | வாக்கெண்ணல் நிலையங்கள் தொடர்பான தகவல்கள் |
| 08 | சனாதிபதித் தேர்தல்கள் 2019.11.16<br>தேர்தல்கள் மாவட்டங்கள் மற்றும் வாக்கெடுப்புப் பிரிவுகள் அடிப்படையில் முடிவுகள் |
| 09 | சனாதிபதித் தேர்தல்கள் 2019.11.16<br>தேர்தல்கள் மாவட்டங்கள் அடிப்படையில் இறுதி முடிவுகள் |

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2141/25 - 2019 සැප්තැම්බර් මස 18 වැනි බදාදා - 2019.09.18

2141/25 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

சனாதிபதியின் பதவிக்காலம் 2020, சனவரி மாதம் எட்டாம் திகதி முடிவுறுகின்றதாதலாலும்,

அத்துடன், பதவியிலுள்ள சனாதிபதியின் பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் ஒரு மாதத்திற்குக் குறையாமலும் இரண்டு மாதங்களுக்கு மேற்படாததுமான காலப்பகுதிக்குள் சனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டுமென அரசியலமைப்பின் 31 ஆம் உறுப்புரையின் (3) ஆம் பந்தியானது தேவைப்படுத்துகின்றதாதலாலும்,

அரசியலமைப்பின் 104ஆ உறுப்புரையோடு சேர்த்து வாசிக்கப்படும் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவு என்பவற்றால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு :

I. 2019, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதியை சனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர்களைப் பெயர் குறித்து நியமிப்பதற்கான திகதியாகவும் ;

II. தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை, இராஜகிரிய - இத்தகைய தேர்தலுக்கான வேட்பாளர்களைப் பெயர்குறித்து நியமிப்பதற்கான இடமாகவும் ;

III. 2019, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதியை அத்தகைய தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டிய திகதியாகவும் இக்கட்டளை மூலம் நிர்ணயிக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| மஹிந்த தேசப்பிரிய,<br>தவிசாளர்,<br>தேர்தல் ஆணைக்குழு. | என். ஜே. அபேசேகர,<br>அங்கத்தவர்,<br>தேர்தல் ஆணைக்குழு. | எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,<br>அங்கத்தவர்,<br>தேர்தல் ஆணைக்குழு. |

தேர்தல்கள் செயலகம்,
இராஜகிரிய,
2019, செத்தெம்பர் 18.

1A - G 30914 — 637 (2019/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2141/26 - 2019 සැප්තැම්බර් මස 18 වැනි බදාදා - 2019.09.18

2141/26 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்

7(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் இவ்வறிவித்தல் வாயிலாக இதற்கான அட்டவணையின் II ஆம் நிரலில் பதவி வழியால் சொல்லப்படும் அலுவலர்களை இவ்வட்டவணையின் I ஆம் நிரலில் இயைந்த பதிவில் குறிக்கப்பட்டுள்ள தேர்தல் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களாக இத்தால் நியமிக்கின்றோம்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

இராஜகிரிய,
2019, செத்தெம்பர் 18.

1A - G 30915 — 267 (2019/09)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II |
|---|---|
| இல. 1 - கொழும்பு | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், கொழும்பு நிருவாக மாவட்டம் |
| இல. 2 - கம்பஹா | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், கம்பஹா நிருவாக மாவட்டம் |
| இல. 3 - களுத்துறை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், களுத்துறை நிருவாக மாவட்டம் |
| இல. 4 - மஹநுவர | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், கண்டி நிருவாக மாவட்டம் |
| இல. 5 - மாத்தளை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், மாத்தளை நிருவாக மாவட்டம் |
| இல. 6 - நுவரெலியா | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், நுவரெலியா நிருவாக மாவட்டம் |
| இல. 7 - காலி | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், காலி நிருவாக மாவட்டம் |
| இல. 8 - மாத்தறை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், மாத்தறை நிருவாக மாவட்டம் |
| இல. 9 - அம்பாந்தோட்டை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டம் |
| இல. 10 - யாழ்ப்பாணம் | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் நிருவாக மாவட்டம் |
| இல. 11 - வன்னி | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், வவுனியா நிருவாக மாவட்டம் |
| இல. 12 - மட்டக்களப்பு | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், மட்டக்களப்பு நிருவாக மாவட்டம் |
| இல. 13 - திகாமடுல்ல | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், அம்பாறை நிருவாக மாவட்டம் |
| இல. 14 - திருகோணமலை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், திருகோணமலை நிருவாக மாவட்டம் |
| இல. 15 - குருநாகல் | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், குருநாகல் நிருவாக மாவட்டம் |
| இல. 16 - புத்தளம் | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், புத்தளம் நிருவாக மாவட்டம் |
| இல. 17 - அநுராதபுரம் | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், அநுராதபுரம் நிருவாக மாவட்டம் |
| இல. 18 - பொலன்னறுவை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், பொலன்னறுவை நிருவாக மாவட்டம் |
| இல. 19 - பதுளை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், பதுளை நிருவாக மாவட்டம் |
| இல. 20 - மொணராகலை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், மொணராகலை நிருவாக மாவட்டம் |
| இல. 21 - இரத்தினபுரி | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், இரத்தினபுரி நிருவாக மாவட்டம் |
| இல. 22 - கேகாலை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், கேகாலை நிருவாக மாவட்டம் |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2141/27 - 2019 සැප්තැම්බර් මස 18 වැනි බදාදා - 2019.09.18
2141/27 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்

7(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில், இவ்வறிவித்தல் வாயிலாக இதற்கான அட்டவணையின் II ஆம் நிரலில் பதவி வழியால் சொல்லப்படும் அலுவலர்களை இவ்வட்டவணையின் I ஆம் நிரலில் இயைந்த பதிவில் குறிக்கப்பட்டுள்ள தேர்தல் மாவட்டங்களின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக இத்தால் நியமிக்கின்றோம்.*

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

இராஜகிரிய,
2019, செத்தெம்பர் 18.

1A - G 30916 — 267 (2019/09)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II |
|---|---|
| இல. 1 - கொழும்பு | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், கொழும்பு நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், கொழும்பு நிருவாக மாவட்டம் |
| | நிருவாக அலுவலர், மாநகர தேர்தல்கள் அலுவலகம், கொழும்பு நிருவாக மாவட்டம் |
| இல. 2 - கம்பஹா | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், கம்பஹா நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், கம்பஹா நிருவாக மாவட்டம் |
| | நிருவாக அலுவலர், தேர்தல்கள் அலுவலகம், கம்பஹா நிருவாக மாவட்டம் |
| இல. 3 - களுத்துறை | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், களுத்துறை நிருவாக மாவட்டம் |
| இல. 4 - மஹநுவர | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், கண்டி நிருவாக மாவட்டம் |
| இல. 5 - மாத்தளை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மாத்தளை நிருவாக மாவட்டம் |
| இல. 6 - நுவரெலியா | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், நுவரெலியா நிருவாக மாவட்டம் |
| இல. 7 - காலி | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், காலி நிருவாக மாவட்டம் |
| இல. 8 - மாத்தறை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மாத்தறை நிருவாக மாவட்டம் |
| இல. 9 - அம்பாந்தோட்டை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டம் |
| இல. 10 - யாழ்ப்பாணம் | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், யாழ்ப்பாணம் நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், கிளிநொச்சி நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், யாழ்ப்பாணம் நிருவாக மாவட்டம் |
| இல. 11 - வன்னி | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், வட மாகாணம், வவுனியா நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மன்னார் நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், முல்லைத்தீவு நிருவாக மாவட்டம் |
| | நிருவாக அலுவலர், வவுனியா தேர்தல்கள் அலுவலகம், வவுனியா நிருவாக மாவட்டம் |
| இல. 12 - மட்டக்களப்பு | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மட்டக்களப்பு நிருவாக மாவட்டம் |
| இல. 13 - திகாமடுல்ல | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், அம்பாறை நிருவாக மாவட்டம் |
| இல. 14 - திருகோணமலை | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், கிழக்கு மாகாணம், திருகோணமலை நிருவாக மாவட்டம் |
| இல. 15 - குருநாகல் | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், குருநாகல் நிருவாக மாவட்டம் |
| | நிருவாக அலுவலர், தேர்தல்கள் அலுவலகம், குருநாகல் நிருவாக மாவட்டம் |
| இல. 16 - புத்தளம் | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், புத்தளம் நிருவாக மாவட்டம் |
| இல. 17 - அநுராதபுரம் | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், அநுராதபுரம் நிருவாக மாவட்டம் |
| இல. 18 - பொலன்னறுவை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், பொலன்னறுவை நிருவாக மாவட்டம் |
| இல. 19 - பதுளை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், பதுளை நிருவாக மாவட்டம் |
| இல. 20 - மொணராகலை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மொணராகலை நிருவாக மாவட்டம் |
| இல. 21 - இரத்தினபுரி | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், இரத்தினபுரி நிருவாக மாவட்டம் |
| இல. 22 - கேகாலை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், கேகாலை நிருவாக மாவட்டம் |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2108/41 - 2019 ජනවාරි මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.01.31

*2108/41 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**

*7(4) (ஆ) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(4)(ஆ) ஆம் பிரிவிற்கிணங்க தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளாகக் கணிக்கப்படுவதற்கான உரித்தைக் கொண்டுள்ள அரசியற் கட்சிகளின் பெயர்ப்பட்டியல் இதன் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.*

| | | | | |
|---|---|---|---|---|
| மஹிந்த தேசப்பிரிய | - | தவிசாளர் | - | தேர்தல்கள் ஆணைக்குழு |
| என். ஜே. அபேசேகர | - | அங்கத்தவர் | - | தேர்தல்கள் ஆணைக்குழு |
| எஸ். இரத்னஜீவன் எச். ஹூல் | - | அங்கத்தவர் | - | தேர்தல்கள் ஆணைக்குழு. |

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2019, சனவரி 31.

**அட்டவணை**

1. அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
2. அகில இலங்கை தமிழர் மகாசபை
3. எமது தேசிய முன்னணி
4. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
5. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
6. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
7. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
8. ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி

1A-G 29428 - 32 (2019/01)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

9. ஐக்கிய தேசியக் கட்சி
10. ஜனநாயக ஐக்கிய முன்னணி
11. ஐக்கிய மக்கள் கட்சி
12. ஐக்கிய இடதுசாரி முன்னணி
13. ஐக்கிய சோசலிச கட்சி
14. ஐக்கிய சமாதான கூட்டமைப்பு
15. ஒக்கொம வெஸியோ ஒக்கொம ரஜவரு அமைப்பு
16. மலையக மக்கள் முன்னணி
17. தொழிலாளர் தேசிய முன்னணி
18. மக்கள் விடுதலை முன்னணி
19. ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
20. ஜனசெத பெரமுண
21. தேசிய காங்கிரஸ்
22. தேசிய மக்கள் கட்சி
23. தேசிய சுதந்திர முன்னணி
24. தேசிய ஐக்கிய முன்னணி
25. ஜாதிக ஹெல உறுமய
26. தேசிய இனங்களின் ஐக்கியத்துக்கான அமைப்பு
27. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்
28. தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி
29. தேச விமுக்தி ஜனதா பக்ஷய
30. தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
31. தமிழர் விடுதலைக் கூட்டணி
32. புதிய ஜனநாயக முன்னணி
33. நவ சம சமாஜக் கட்சி
34. நவ சிஹல உறுமய
35. பிரஜைகள் முன்னணி
36. முன்னிலை சோஷலிஸ கட்சி
37. பொதுசன ஐக்கிய முன்னணி
38. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி
39. ஜனநாயக மக்கள் முன்னணி
40. ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
41. ஜனநாயக தேசிய இயக்கம்
42. ஜனநாயக தேசிய கூட்டணி
43. ஜனநாயகக் கட்சி
44. ஜனநாயக இடதுசாரி முன்னணி
45. மௌவ்பிம ஜனதா பக்ஷய
46. மஹஜன எக்சத் பெரமுன
47. முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு
48. நல்லாட்சிக்கான தேசிய முன்னணி
49. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (அரசியற் கிளை)
50. லங்கா சமசமாஜக் கட்சி
51. ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி
52. ஸ்ரீ லங்கா தேசிய சக்தி
53. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி
54. இலங்கை முன்னிலை கட்சி
55. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன
56. ஸ்ரீலங்கா மஹாஜன பக்ஷய
57. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
58. ஸ்ரீலங்கா கொமியூனிஸ்ட் கட்சி
59. இலங்கை சோசலிச கட்சி

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

60. சோஷலிஸ மக்கள் முன்னணி
61. சோசலிச சமத்துவக் கட்சி
62. சிங்களதீப ஜாதிக பெரமுண

**செயலாளர் பதவி தொடர்பில் பிரச்சினை நிலவுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் :**

63. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்
64. ஈழவர் ஜனநாயக முன்னணி
65. ஐக்கிய ஜனநாயக முன்னணி
66. எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய
67. எக்சத் லங்கா மகா சபா கட்சி
68. ஜாதிக சங்வர்தன பெரமுன
69. லிபரல் கட்சி
70. ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி

2-874

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2141/92 - 2019 සැප්තැම්බර් මස 22 වැනි ඉරිදා - 2019.09.22

2141/92 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல் சட்டம்

8 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை 2141/ 25 ஆம் இலக்க, 2019 செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன், அக்கட்டளை வெளியிடப்பட்ட நாளான 2019.09.18 ஆந் திகதிக்கும் பெயர்குறித்த நியமன நாளான 2019.10.07 ஆந் திகதிக்கு முன்னைய நாளான 2019.10.06 ஆந் திகதி நண்பகல் பன்னிரண்டு மணிக்கு முன்னர் அல்லது அதற்கிடைப்பட்ட காலப்பகுதியினுள் கடமை நாட்களில் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையும், 2019.10.06 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் மு. ப. 8.30 மணி முதல் நண்பகல் 12.00 மணிக்கும் இடையில் சனாதிபதித் தேர்தலுக்காக வேட்பாளரொருவரினால் அல்லது வேட்பாளர் சார்பாக வேறொருவரினால்,

(அ) அந்த வேட்பாளர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினால் பெயர்குறித்து நியமனம் செய்யப்பட்ட வேட்பாளரொருவராயின், செல்லுபடியான பணத்தால் ஐம்பதாயிரம் ரூபாவும்,

(ஆ) அந்த வேட்பாளர் வேறேதும் அரசியற் கட்சியொன்றினால் அல்லது வாக்காளரொருவரினால் பெயர்குறித்து நியமனம் செய்யப்பட்ட வேட்பாளரொருவராயின், செல்லுபடியான பணத்தால் எழுபத்தையாயிரம் ரூபாவும்,

1A - PG 4558 — 267 (2019/10)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

தேர்தல் ஆணைக்குழுவிடம் அல்லது குறித்த கடமைக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள எவரேனுமொருவரிடம் அல்லது இராஜகிரிய, சரண மாவத்தையில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிடுதல் வேண்டும். அல்லது வைப்பிலிட செய்வித்தல் வேண்டும்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

கொழும்பு,
*2019, செத்தெம்பர் 22.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

## 2019 சனாதிபதித் தேர்தலுக்காக வைப்புப் பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ள முறையைக் காட்டுகின்ற அறிக்கை (2019.10.06 ஆம் திகதி வரை)

| தொ. இல. | வைப்புப் பணம் வைப்புச் செய்த திகதி | வைப்புப் பணம் வைப்புச் செய்தவரின் பெயர் மற்றும் முகவரி | உரிய வேட்பாளரின் பெயர் மற்றும் முகவரி | வேட்பாளர் அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சியொன்றை பிரதிநிதித் துவம் செய்கின்றாரா | அங்கீகரிக்கப் பட்டஅரசியல் கட்சியொன்றை பிரதிநிதித்துவம் செய்கின்றாராயின் கட்சியின் பெயர் | பாராளுமன்ற செயலாளரின் சான்றிதழ் பெறப்பட்டுள்ளதா. (ஏற்புடையதெனில் மாத்திரம்) | அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன் றல்லாத வேறு அரசியல் கட்சி/வாக்காளர் ஒரு வரால் பெயர் குறித்து நியமனம் செய்கின்ற சந்தர்ப்பத்தில் அரசியல் கட்சியின்/வாக்காளரின் பெயர் | பெயர் குறித்து நியமனம் செய்தவரின் பெயர் 2018 தேருநர் இடாப்பில் உள்ளதா |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2019.09.19 | திரு. கெட்டகொட கமகே ஜயந்த பெரேரா. இல. – 12/ஏ. தாம்புகஹவத்தை, தலங்கம வடக்கு, மாலபே | திரு. ஜயந்த பெரேரா. இல. – 12/ ஏ. தாம்புகஹவத்தை, தலங்கம வடக்கு, மாலபே | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திரு. டபிள்யூ.ஏ.டீ.சீ. சில்வா | ஆம் |
| 2. | 2019.09.19 | திரு. சீறிபால அமரதுங்க இல. – 170 எம் 2, கொடபரகஹலந்த வீதி, கிரிவத்துடுவை | திரு. சிறிபால அமரதுங்க இல. – 170 எம் 2, கொடபரகஹலந்த வீதி, கிரிவத்துடுவை | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திரு. கே.டீ.ஜ.சீ. குணசேன | ஆம் |
| 3. | 2019.09.19 | திருமதி. அஜந்தா விஜேசிங்க பெரேரா, இல – 16, பன்சலைவீதி, ரத்தனபிட்டிய, பொரலெஸ்கமுவை | திருமதி. அஜந்தா விஜேசிங்க பெரேரா, இல – 16, பன்சலை வீதி, ரத்தனபிட்டிய, பொரலெஸ்கமுவை | ஆம் | இலங்கை சோசலிசக் கட்சி | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 4. | 2019.09.20 | திரு. ஏ.எஸ். சேனநாயக்க. இல. – 1/250, வத்துபிட்டிவல, நிட்டம்புவை | அபரக்கே பூஞ்ஞானந்த ஹிமி. ஸ்ரீ விவேகாராமய, நாகஸ் எல்ல, மர்ணுவத்த, மீரிகம | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திரு. ஏ.எஸ். சேனாநாயக்க. | ஆம் |
| 5. | 2019.09.20 | திரு. நிஷாந்த ரத்நாயக்க. இல. – 15/27, முதலாம் ஒழுங்கை, ஆதாகலவத்த, வெல்லவ வீதி, குருநாகல் | திரு. வெலிசரகே சமன் பிரசன்ன பெரேரா. இல. – 15/27, முதலாம் ஒழுங்கை, ஆதாகலவத்த, வெல்லவ வீதி, குருநாகல் | ஆம் | எங்கள் மக்கள் சக்தி கட்சி | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 6. | 2019.09.20 | திரு. சாகர காரியவசம் இல - 8/11, ரொபட் அல்விஸ் மாவத்தை, பொரலெஸ்கமுவ. | திரு. நத்தசேன கோட்டாபய ராஜபக்ஷ. இல – 1316, நெலும் மாவத்தை, பத்தரமுல்லை. | ஆம் | ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7. | 2019.09.25 | திரு. ஆரியவங்ஷ திசாநாயக்க, இல. – 47ஏ, முதலாம் ஒழுங்கை, ராவத்தாவத்தை, மொரட்டுவை | திரு. ஆரியவங்ஷ திசாநாயக்க, இல. – 47ஏ, முதலாம் ஒழுங்கை, ராவத்தாவத்தை, மொரட்டுவை | ஆம் | ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 8. | 2019.09.26 | திரு. ஸ்ரீநாத் பெரேரா இல. – 53/6, ஈ.டீ. தாபரே மாவத்தை, நாரஹேன்பிட்ட, கொழும்பு - 05 | திரு. சிறிதுங்க ஜயசூரிய. இல. – 53/6, ஈ.டீ. தாபரே மாவத்தை, நாரஹேன்பிட்ட, கொழும்பு– 05 | ஆம் | ஐக்கிய சோசலிசக் கட்சி | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 9. | 2019.09.27 | திரு. பண்டார லொகுகே ரொஹான் உதயகாந்த பிரனாந்து. இல. – 63, கப்பித்தவத்தை வீதி, களுஎலிய, ஜா – எல | திரு. வர்ணகுலசூரிய மில்ரோய் சர்ஜியஸ் பிரணாந்து, இல. – 546, புதியவீதி, வென்னப்புவ. | இல்லை | ஏற்புடைய தல்ல | ஆம் | திரு.பீ.எல். ரொஹான் உதயகாந்த பிரணாந்து | ஆம் |
| 10. | 2019.09.30 | திரு. பத்தேகமகே நந்திமித்திர. இல. – 68/2, கெகுணகஹவத்தை, மாகந்தன, மடபாத்த | திரு. பத்தேகமகே நந்திமித்திர. இல. – 68/2, கெகுணகஹவத்தை, மாகந்தன, மடபாத்த | ஆம் | நவ சமசமாஜக் கட்சி | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 11. | 2019.09.30 | திரு. நம்புநாம நானயக்கார அக்மீமன பல்லிகுருகே வஜிரபாணி விஜேசிறிவர்தன. இல. – 716/1/1, கேட்டேவீதி, எத்துல் கோட்டை, கோட்டை | திரு. நம்புநாம நானயக்கார அக்மீமன பல்லிகுருகே வஜிரபாணி விஜே சிறிவர்தன. இல. – 716/1/1, கேட்டே வீதி, எத்துல் கோட்டை, கோட்டை | ஆம் | சோசலிச சமத்துவக் கட்சி | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 12. | 2019.09.30 | திரு. சரத் மனமேந்திர இல. – 75/5/பி, யூ.எல்.எல். பெரேரா மாவத்தை, குருந்துவத்தை, துடெல்ல, ஜா - எல | திரு. சரத் மனமேந்திர இல. – 75/5/பி, யூ.எல்.எல். பெரேரா மாவத்தை, குருந்துவத்தை, துடெல்ல, ஜா - எல | ஆம் | நவ சிஹல உறுமய | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 13. | 2019.09.30 | திரு. ஏ.எச். ஸ்டீவன், இல. - 678/5, முத்தெட்டுகொட, இரண்டாம் ஒழுங்கை, தலங்கம தெற்கு, பத்தரமுல்லை | திரு. பள்ளெவத்த கமரால-லாகே ரொஹான் பள்ளெவத்த, இல. - 28, ஒருத்தொட்ட, கமபஹா | ஆம் | ஜாதிக சங்வர்தன பெரமுன | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 14. | 2019.10.01 | திரு. முதியன்சேலாகே ராஜா நிஹால் அபேசிங்க. இல. – 134 ஏ, சாந்த சேவியர் வீதி, ஹெட்டிகம, ஜா - எல | திரு. அநுர குமார திசாநாயக்க. இல. – 464/20, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | தேசிய மக்கள் சக்தி இயக்கம் திரு. எம்.ஆர். நிஹால் அபேசிங்க. | ஆம் |
| 15. | 2019.10.01 | திரு. பாலப்புவடுகே மனுல குலசூரிய ஜயஸ்ரீ துஷார மென்திஸ். இல. – 695/சீ/1, கொரதொட்ட வடக்கு, கடுவெல | திரு. சந்திரசேக்கர ஹேரத் ஹிட்டிஹாமி கோராளலாகே சமன்சிறி ஹேரத். இல. – 695/சீ/1, கொரதொட்ட வடக்கு, கடுவெல | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திரு. பீ.எம். மனுல குலசூரிய ஜயஸ்ரீ துஷார மென்திஸ். | ஆம் |
| 16. | 2019.10.01 | திரு. டிஷான் மஞ்சுல வெல்லாலகே. கிதெல்பிட்டிய, வெல்மில்ல, | திரு. வெலேரா கீர்த்திரத்ன முதியன்சேலாகே சரத் விஜித குமார கீர்த்திரத்ன. இல. – 32/பி, ரந்தாவான வடக்கு, ரந்தாவான. | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திரு. டிஷான் மஞ்சுல வெல்லாலகே. | ஆம் |
| 17. | 2019.10.01 | திரு. கொஸ்வத்தகே கோசல ஹரிப்பிரிய பெரேரா, இல. – 741, தலங்கம வடக்கு, மாலபே | திரு. பொல்கம்பலராலலாகே சமிந்த அநுருத்த, இல. – 100, நிவுன்ஹெல்ல, இம்புலான, ருவன்வெல்ல | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திரு. கொஸ்வத்தகே கோசல ஹரிப்பிரிய பெரேரா, | ஆம் |
| 18. | 2019.10.02 | திருமதி கே.வீ.டி. நாலனிபத்மலதா. இல. – 421/3, ஈ. டபிள்யூ. பெரேரா மாவத்தை, பிட்டகோட்டை, கோட்டை | திரு. சமரவீர வீரவர்தன. இல. – 421/3, ஈ. டபிள்யூ. பெரேரா மாவத்தை, பிட்டகோட்டை, கோட்டை | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திருமதி கே.வீ.டி. நாலனி பத்மலதா. | ஆம் |
| 19. | 2019.10.02 | செல்வி. டபிள்யூ. எம். சுமுது ஜயமாலி வீரவன்னி. இல. – 421/3, ஈ. டபிள்யூ. பெரேரா மாவத்தை, பிட்டகோட்டை, கோட்டை | திரு. அசோக்க வடிகமங்காவ, இல. – 59/1, புத்தளம் வீதி, ஆணமடுவை | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | செல்வி. டபிள்யூ.எம். சுமுது ஜயமாலி வீரவன்னி. | ஆம் |
| 20. | 2019.10.02 | திருமதி பனாகொடதொன் கசுனி கௌஷல்யா பேர்ல் லியனகே. இல. – 07, சம்னர் ஒழுங்கை, கொழும்பு - 08 | திரு. ஏ.எஸ்.பீ. லியனகே. இல. – 07, சம்னர் ஒழுங்கை, கொழும்பு - 08 | ஆம் | ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 21. | 2019.10.03 | வண. பத்தரமுல்லை சீலரதன தேரர், இல. -185, தேவாலய வீதி, பத்தரமுல்லை. | வண. பத்தரமுல்லை சீலரதன தேரர், இல. -185, தேவாலய வீதி, பத்தரமுல்லை. | ஆம் | ஜனசெத பெரமுண | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 22. | 2019.10.04 | திரு. ஐ.ஏ.கே ரஹ்மான். இல. – 163/5/85/என்/1/1 மெகொடகொலன்னாவை, வெல்லம்பிட்டிய. | திரு. பஷீர் சேகுதாவூத். இல. - 08, ஏறாவூர் பிரிவு 02, ஏறாவூர். | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திரு. ஐ.ஏ.கே ரஹ்மான் | ஆம் |
| 23. | 2019.10.04 | திருமதி ஷயாமிலா பெரேரா. இல. – 9/6, ஜயந்தி மாவத்தை, விஜிதபுர, பெலவத்தை, பத்தரமுல்லை. | திரு. சஜித் பிரேமதாஸ. இல. – 9/6, ஜயந்தி மாவத்தை, விஜிதபுர, பெலவத்தை, பத்தரமுல்லை. | ஆம் | புதிய ஜனநாயக முன்னணி | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 24. | 2019.10.04 | திரு. மொஹமட் சாலின் மொஹமட் நஸ்மீர். இல. - 69, மூன்றாம் குறுக்குத் தொரு, புத்தளம் | திரு. இல்லியாஸ் ஐதுருஸ் மொஹமட். இல. – 67/3, மஸ்ஜித் வீதி, புத்தளம் | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திரு. மொஹமட் சாலின் மொஹமட் நஸ்மீர் | ஆம் |
| 25. | 2019.10.04 | திரு. வனசிங்க ஆராச்சிலாகே ரஞ்சித் வனசிங்க. இல. – 46/சீ, மொரென்ன, யக்கல | திரு. விஜேநாயக்க கங்கானம் லாகே பியசிறி விஜேநாயக்க. இல. – 3/7, சென்ராபாக், கம்பஹா வீதி, யக்கல | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திரு. வனசிங்க ஆராச்சிலாகே ரஞ்சித் வனசிங்க | ஆம் |
| 26. | 2019.10.04 | திரு. ஜயந்த லியனகே, இல. – 14/5 ஏ, தர்மபால மாவத்தை, பொல்அத்தாபிட்டிய, குருநாகல். | திரு. ஜயந்த லியனகே, இல. – 14/5 ஏ, தர்மபால மாவத்தை, பொல்அத்தாபிட்டிய, குருநாகல். | ஆம் | சிங்கள தீப ஜாதிக பெரமுன | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 27. | 2019.10.04 | திரு. விதானகே சேனாதீர குணதிலக்க. இல. – 553 பி, கெமுணு மாவத்தை, உடுமுல்ல வீதி, பத்தரமுல்லை | திரு. துமிந்த நாகமுவ. இல. – 553 பி2, கெமுணு மாவத்தை, உடுமுல்ல வீதி, பத்தரமுல்லை | ஆம் | முன்னிலை சோஷலிஸ கட்சி | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 29. | 2019.10.04 | திரு. பண்டாரகே சரத் புத்ததாஸ. இல. – 137/1, கிராம அபிவிருத்தி மாவத்தை, பொல்வத்தை, பன்னிப்பிட்டிய | திரு. ராஜீவ விஜேசிங்க. இல. – 08, எல்பிரட் இல்ல வீதி, கொழும்பு 03. | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திரு. பண்டாரகே சரத் புத்ததாஸ | ஆம் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 30. | 2019.10.04 | திரு. கொடித்துவக்கு ஆரச்சிகே ரஜித லாலித. இல. – 44, புதிய கொலன்னாவை வீதி, மொரகஸ்முல்ல, ராஜகிரியா. | திரு. சாந்தகுமார ஆனந்த வெல்கம, டெனிஸ்டன் வத்த, ஹொரவல, வெலிபென்ன | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திரு. கொடித்துவக்கு ஆரச்சிகே ரஜிதலாலித | ஆம் |
| 31. | 2019.10.04 | திரு. ஜே.எம். ஆசிறி லக்மால். இல. - 58, மிஹிந்து மாவத்தை, வெயாங்கொடை | திரு. அருண த சொய்சா. காலி வீதி, நாபே, கொஸ்கொட | ஆம் | ஜனநாயக தேசிய இயக்கம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 32. | 2019.10.04 | திரு. விஜேசிங்க வெல்லப்பிலி தொன் சுமித் விஜேசிங்க இல. - 56, அத்திடிய வீதி, கவுடான, தெஹிவளை | திரு. சமல் ராஜபக்ஷ வீரகெட்டிய. | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுமக்கள் கூட்டணி<br>திரு. விஜேசிங்க வெல்லப்பிலி தொன் சுமித் விஜேசிங்க | ஆம் |
| 33. | 2019.10.04 | திரு. ஸ்ரீ ரன்ஜீவ த சில்வா, இல. – 167/1/1 ஏ, துட்டகைமுனு வீதி, கொஹுவலை. | திரு. அஜந்த த சொய்சா. இல. – 130, ஒல்கோட் மாவத்தை, காலி | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | ருஹுனு ஜனதா பெரமுண<br>திரு. ஸ்ரீ ரன்ஜீவ த சில்வா | இல்லை |
| 34. | 2019.10.06 | திரு. கபில சப்புமல் பண்டார தெமினிமுல்ல. இல. – 3/1, சங்கமித்தாமாவத்தை, கண்டி. | திரு. பிரியந்த முணிஹத் எதிரிசிங்ஹ, இல. – 167/பி, வெலிகன்ன. | ஆம் | ஒக்கொம வெஸியோ ஒக்கொம ரஜவரு அமைப்பு | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 35. | 2019.10.06 | திரு. ஹேமந்த விக்கிரமசிங்க, இல. – 2/2, கஹவிட்ட மாவத்தை, அத்திட்டிய, தெஹிவளை. | திரு. நாமல் ராஜபக்ஷ. இல. – 16, இரண்டாம் ஒழுங்கை, நாவல வீதி, ராஜகிரிய | ஆம் | தேசிய ஐக்கிய முன்னணி | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 36. | 2019.10.06 | திருமதி அனந்தி சசிதரன். அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை. | திரு. எம்.கே. சிவாஜிலிங்கம். இல. – 08, அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை. | இல்லை | ஆம் | ஏற்புடையதல்ல | திருமதி அனந்தி சசிதரன் | ஆம் |
| 37. | 2019.10.06 | திரு. மொஹமட் சஹாப்தீன் மொஹமட் இக்ராம். இல. – 10/18, லேக் ரைவ், கொழும்பு - 08 | திரு. மஹ்மூத் லெப்பை ஆலிம் முஹம்மத் ஹிஸ்புல்லா. மெத்தைப்பள்ளி வீதி, காத்தான்குடி | இல்லை | ஆம் | ஏற்புடையதல்ல | திரு. மொஹமட் சஹாப்தீன் மொஹமட் இக்ராம் | ஆம் |

## 2019 சனாதிபதித் தேர்தலுக்காக வைப்புப் பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ள முறையைக் காட்டுகின்ற அறிக்கை (2019.10.06 ஆம் திகதி வரை)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 38. | 2019.10.06 | திரு. ஜீ.ஏ.எம்.டீ. தேவப்பிரிய ஆட்டிகல வத்த, தலம்மெஹெர, பன்னல. | திரு. அஹமட் ஹஸன் மொஹமட் அலவி படபெந்த வதுயாய, பன்னல. | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திரு. ஜீ.ஏ.எம்.பீ. தேவப்பிரிய | ஆம் |
| 39. | 2019.10.06 | திரு. குணபால கங்கானம்கே இல. 20, ஜய மாவத்தை, பெல்லன்வில, பொரலஸ்கமுவ. | திரு. குணபால திஸ்ஸ குட்டியாரச்சி, இல. 90, ஜய வீதி, உடஹமுல்ல, நுகேகொட. | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திரு. குணபால கங்கானம்கே | ஆம் |
| 40. | 2019.10.06 | திருமதி பொரலுகொடகே சாகல அபயவிக்ரம இல. 31/20, முதலாம் ஒழுங்கை, பன்னல வீதி, மஹரகமை. | திரு. கனே ஆரச்சிகே மஹீ பால ஹேரத், இல. 76, கங்கொட வீதி, கேகாலை. | இல்லை | ஏற்புடையதல்ல | ஆம் | திருமதி பொரலுகொடகே சாகல அபயவிக்ரம | ஆம் |
| 41. | 2019.10.06 | திருமதி டயனா கமகே இல. 347/A, 4 ஆவது குறுக்கு வீதி, கோட்டே வீதி, கோட்டை. | திரு. சுப்பிரமணியம் குணரத்னம், இல. 347/A, கோட்டே வீதி, மிரிஹான, நுகேகொடை. | ஆம் | எமது தேசிய பெரமுன | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

ரசிக்க பீரிஸ்,
மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்,
தேர்தல் ஆணைக்குழு,
த.பெ. 2, சரண மாவத்தை,
இராஜகிரிய.

வைப்புப்பணம் பொறுப்பேற்கும் அலுவலரின் பெயர் : ஈ.ஏ. வீரசேன
கையொப்பம்
இலட்சனை
திகதி : 2019.10.06

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2144/6 - 2019 ඔක්තෝබර් මස 07 වැනි සඳුදා - 2019.10.07

*2144/6 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்**

*21 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

(i) சனாதிபதித் தேர்தலில் போட்டியுள்ளதெனவும்,

(ii) அத்தகைய தேர்தலுக்கான வாக்கெடுப்பு 2019, நவெம்பர் மாதம் பதினாறாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 7.00 மணிக்கும் பிற்பகல் 4.00 மணிக்கும் இடையில் நடைபெறுமெனவும்,

(iii) அத்தகைய தேர்தலில் வாக்குச் சீட்டுக்களில் அச்சிடப்படும் ஒழுங்கின்படி வேட்பாளர்களின் பெயர்கள், அத்தகைய வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் குறித்தொதுக்கப்பட்டுள்ள சின்னம், அத்தகைய ஒவ்வொரு வேட்பாளரையும் பெயர் குறித்து நியமிக்கின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின்/வேறு அரசியற் கட்சியின் பெயர் அல்லது தேருநரின் பெயர் என்பன இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறாகும் எனவும்,

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| மஹிந்த தேசப்பிரிய, | என். ஜே. அபேசேகர, | எஸ். இரத்னஜீவன் எச். ஹூல், |
| தவிசாளர், | அங்கத்தவர், | அங்கத்தவர், |
| தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. |

தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2019, ஒற்றோபர் 07.

1A - PG 4683— 517 (2019/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை

| வாக்குச்சீட்டில் காட்டப் பட்டுள்ளவாறு வேட்பாளரின் பெயர் | அங்கீகரிப்பட்ட அரசியற் கட்சியின்/ வேறு அரசியற் கட்சியின்/பெயர் குறித்து நியமனம் செய்த தேருநரின் பெயர் | சின்னம் |
|---|---|---|
| அபரக்கே பூஞ்ஞானந்த தேரர் | அபீத சபுமல் சேனாநாயக்க |  |
| எஸ். அமரசிங்க | காலஞ்சி தேவகே இசுரு சத்துரங்க குணசேன |  |
| ஐதுருஸ் மொஹமது இல்லியாஸ் | முஹம்மட் சாலிப் முஹம்மட் நஸ்மிர் |  |
| ஏ. எச். எம். அலவி | குணரத்ன அதிகாரி முதியன்சேலாகே பியல் தேவபிரிய குணரத்ன |  |
| ஆரியவங்ஷ திசாநாயக்க | ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி |  |
| பீ. எம். எதிரிசிங்ஹ | ஒக்கொம வெஸியோ ஒக்கொம ரஜவரு அமைப்பு |  |
| சரத் கீர்த்திரத்ன | டிஷான் மஞ்ஜுல வெல்லாலகே |  |
| சந்திரசேக்கர ஹேரத் ஹிட்டிஹாமி கோராளலாகே சமன்சிறி | பி. எம். ஜே. துஷார மெண்டிஸ் |  |
| சிறிதுங்க ஜயசூரிய | ஐக்கிய சோசலிச கட்சி |  |
| அஜந்த த சொய்சா | றுஹுணு ஜனதா பெரமுண |  |
| அருண த சொய்சா | ஜனநாயக தேசிய இயக்கம் |  |
| அநுர குமார திசாநாயக்க | தேசிய மக்கள் சக்தி இயக்கம் |  |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *வாக்குச்சீட்டில் காட்டப் பட்டுள்ளவாறு வேட்பாளரின் பெயர்* | *அங்கீகரிப்பட்ட அரசியற் கட்சியின்/ வேறு அரசியற் கட்சியின்/பெயர் குறித்து நியமனம் செய்த தேருநரின் பெயர்* | *சின்னம்* |
|---|---|---|
| துமிந்த நாகமுவ | முன்னிலை சோஷலிஸ கட்சி |  |
| ரொஹான் பள்ளெவத்த | ஜாதிக சங்வர்தன பெரமுண |  |
| கெட்டகொட ஜயந்த | வெள்ளவத்த ஆரச்சிகே துமிது சத்துரங்க சில்வா |  |
| சமன் பெரேரா | எங்கள் மக்கள் சக்தி கட்சி |  |
| அநுருத்த பொல்கம்பல | கே. கோசல ஹரிபிரிய பெரேரா |  |
| வர்ணகுலசூரிய மில்ரோய் சர்ஜியஸ் பிரனாந்து | பண்டார லொக்குகே றொஹான் உதயகாந்த பிரனாந்து |  |
| சஜித் பிரேமதாச | புதிய ஜனநாயக முன்னணி |  |
| பத்தரமுல்லே சீலரதன தேரர் | ஜனசெத பெரமுண |  |
| பத்தெ கமகே நந்திமித்திர | நவ சம சமாஜக் கட்சி |  |
| சரத் மனமேந்திர | நவ சிஹல உறுமய |  |
| எம். கே. சிவாஜிலிங்கம் | சசிதரன் அனந்தி |  |
| எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா | மொஹமட் சஹாப்தீன் மொஹமட் இக்ராம் |  |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *வாக்குச்சீட்டில் காட்டப் பட்டுள்ளவாறு வேட்பாளரின் பெயர்* | *அங்கீகரிப்பட்ட அரசியற் கட்சியின்/ வேறு அரசியற் கட்சியின்/பெயர் குறித்து நியமனம் செய்த தேருநரின் பெயர்* | *சின்னம்* |
|---|---|---|
| கோட்டாபய ராஜபக்ஷ | ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன |  |
| நாமல் ராஜபக்ஷ | தேசிய ஐக்கிய முன்னணி |  |
| ஏ. எஸ். பீ. லியனகே | ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி |  |
| அசோக வடிகமங்காவ | வீரவன்னி முதியன்சேலாகே சுமுது ஜயமாலி வீரவன்னி |  |
| பியசிறி விஜேநாயக்க | வனசிங்க ஆரச்சில்லாகே ரஞ்ஜித் வனசிங்க |  |
| அஜந்தா பெரேரா | இலங்கை சோசலிச கட்சி |  |
| ராஜீவ விஜேசிங்ஹ | பண்டாரகே சரத் புத்ததாச |  |
| பாணி விஜேசிறிவர்தன | சோசலிச சமத்துவக் கட்சி |  |
| சமரவீர வீரவன்னி | குமாரசிங்க விதானேலாகே தொன் நாலனி பத்மலதா |  |
| சுப்பிரமணியம் குணரத்தினம் | எமது தேசிய முன்னணி |  |
| மஹேஷ் சேனாநாயக்க | தேசிய மக்கள் கட்சி |  |

*10-897*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2144/7 - 2019 ඔක්තෝබර් මස 07 වැනි සඳුදා - 2019.10.07

*2144/7 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**சனாதிபதித் தேர்தல் - 2019**

*1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்*

**31 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

2019.11.16 ஆந் திகதி நடாத்தப்படவிருக்கும் சனாதிபதித் தேர்தலுக்கான பெயர்குறித்த நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் 2019.10.07 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வேட்பாளர் சார்பாக நியமிக்கப்பட்ட தேர்தல் முகவர்களின் பெயர்களும் முகவரிகளும் கீழே காட்டப்பட்டுள்ளவாறாகுமென அறிவித்துக்கொள்கின்றோம்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2019, ஒற்றோபர் 07.

1A - PG 4559— 267 (2019/10)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | வேட்பாளரின் பெயர் மற்றும் முகவரி | அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின்/வேறு அரசியற் கட்சியின்/பெயர் குறித்த நியமனம் செய்த தேருநரின் பெயர் | சின்னம் | தேர்தல் முகவரின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|---|---|
| 1. | அபரக்கே புஞ்ஞானந்த தேரர், ஸ்ரீ விவேகாராமய, நாகஸ் எல்ல, பமுணுவத்த, மீரிகம. | திரு. அபீத சபுமல் சேனாநாயக்க |  | திரு. அபீத சபுமல் சேனாநாயக்க, இல. 1/250, வத்துபிட்டிவல, நிட்டம்புவ. |
| 2. | திரு. எஸ். அமரசிங்க, இல. 170 எம் 2, கொடபரகஹலந்த வீதி, கிரிவத்துடுவ. | திரு. காலஞ்சி தேவகே இசுரு சதுரங்க குணசேன |  | திரு. சிறிபால அமரசிங்ஹ, இல. 170 எம் 2, கொடபரகஹலந்த வீதி, கிரிவத்துடுவ. |
| 3. | திரு. ஐதுரூஸ் மொஹமது இல்லியாஸ், இல. 69/3, மஸ்ஜித் வீதி, புத்தளம். | திரு. முஹம்மட் சாலிப் முஹம்மட் நஸ்மீர் |  | திரு. மீரா சாஹிபு மொஹொமட் கியாஸ், இல. 56/ஏ, தூவவத்த, மாபோலை, வத்தளை. |
| 4. | திரு. ஏ. எச். எம். அலவி, படபெத்த வதுயாய, பன்னல. | திரு. குணரத்ன அதிகாரி முதியன்சேலாகே பியல் தேவப்பிரிய குணரத்ன |  | திரு. ஹாஜா மொஹிதீன் சித்திக், இல. 08, ஸ்ரீ விமலசிறி வீதி, களுபோவில, தெஹிவளை. |
| 5. | திரு. ஆரியவங்ஷ திசாநாயக்க, இல. 47A, முதலாம் ஒழுங்கை, ராவதாவத்த, மொறட்டுவை. | ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி |  | திரு. கிரம்ப கணிதகே சுரேஷ் கருணாதிலக்க, இல. 1143/60 H, நெளும் பிளேஸ், லியனகொட வீதி, கொட்டாவ, பன்னிபிட்டிய. |
| 6. | திரு. பீ. எம். எதிரிசிங்க, இல. 77/டி/2, வல்பொல, ருக்கஹவில. | ஒக்கொம வெஸியோ, ஒக்கொம ரஜவரு அமைப்பு |  | திரு. தொன் மணிமெல்கே ஹர்ஷ ஆனந்த தர்மசிறி குமார அல்விஸ், இல. 599/2, பொல்வத்த, மில்லேவ. |
| 7. | திரு. சரத் கீர்த்திரத்ன, இல. 301, கிரிந்தி வெல வீதி, ரதாவன. | திரு. டிஷான் மஞ்ஜுல வெல்லாலகே |  | திரு. சரத் கீர்த்திரத்ன, இல. 301, கிரிந்திவெல வீதி, ரதாவன. |
| 8. | திரு. சந்திரசேக்கர ஹேரத் ஹிட்டிஹாமி கோராளலாகே சமன்சிறி, பெரணி மாவத்தை மயித்துலம, சிலாபம். | திரு. பி. எம். ஜே. துஷார மெண்டிஸ் |  | திரு. ராஜா தர்மசிறி குணரத்ன, இல. 79, புகையிரத நிலைய வீதி, மஹரகம. |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *தொடர் இலக்கம்* | *வேட்பாளரின் பெயர் மற்றும் முகவரி* | *அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின்/வேறு அரசியற் கட்சியின்/பெயர் குறித்த நியமனம் செய்த தேருநரின் பெயர்* | *சின்னம்* | *தேர்தல் முகவரின் பெயர் மற்றும் முகவரி* |
|---|---|---|---|---|
| 9. | திரு. சிறிதுங்க ஜயசூரிய, இல. 57/7, டீ எஸ். பொன்சேக்கா வீதி, கொழும்பு 05. | ஐக்கிய சோசலிச கட்சி |  | திரு. ஸ்ரீனாத் பெரேரா, இல. 74A, வாத்துவ வீதி, மொரொன் துடுவ. |
| 10. | திரு. அஜந்த த சொய்ஸா, இல. 76, 5 ஆம் ஒழுங்கை, நாவல. | ருஹுணு ஜனதா பெரமுண |  | திரு. ஸ்ரீ ரஞ்ஜீவ த சில்வா, இல. 167/1/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை. |
| 11. | திரு. அருண த சொய்ஸா, காலி வீதி, நாபே, கொஸ்கொட. | ஜனநாயக தேசிய இயக்கம் |  | திரு. ஏ. அசித த சொய்சா, நெளும், மஹ பேலென, கொஸ்கொட. |
| 12. | திரு. அநுர குமார திசாநாயக்க, இல. 464/20, பன்னிபிட்டி வீதி, பெலவத்த, பத்தரமுல்லை. | தேசிய மக்கள் சக்தி இயக்கம் |  | திரு. முதியன்சேலாகே ராஜா நிஹால் அபேசிங்ஹ, தேசிய மக்கள் சக்தி இயக்கம், இல. 33, ஸ்ரீ சுபூத்திபுற, பத்தரமுல்லை. |
| 13. | திரு. துமிந்த நாகமுவ, இல. 553/B 2, கெமுனு மாவத்தை, உடுமுல்ல வீதி, பத்தரமுல்லை. | முன்னிலை சோஷலிஸ கட்சி |  | திரு. சமீர கொஸ்வத்த, இல. 553/B 2, கெமுனு மாவத்தை, உடுமுல்ல வீதி, பத்தரமுல்லை. |
| 14. | திரு. ரொஹான் பள்ளெவத்த, இல. 28, ஒருதொட்ட, கம்பஹா. | ஜாதிக சங்வர்தன பெரமுண |  | திரு. பள்ளெவத்த கமராளலாகெ ரொஹான் பள்ளெவத்த, இல. 28, ஒருதொட்ட, கம்பஹா. |
| 15. | திரு. கெட்டகொட ஜயந்த, இல. 757/12/ஏ, தாம்புகஹவத்த, தலங்கம வடக்கு, மாலபே. | வெள்ளவத்த, ஆரச்சிகே துமிது சத்துரங்க சில்வா |  | திரு. கெட்டகொடகமகே, ஜயந்த பெரேரா, இல. 757/12/ஏ, தாம்புகஹவத்த தலங்கம வடக்கு, மாலபே. |
| 16. | திரு. சமன் பெரேரா, இல. 15/27, 1 ஆம் ஒழுங்கை, ஆந்தாகல தோட்டம் வெள்ளவ வீதி, குருநாகல். | எமது மக்கள் சக்தி இயக்கம் |  | திரு. லியன்னலாகே துஷார சந்தருவன், இல. 14, மீபிட்டிய, கேகாலை. |

**அட்டவணை** (தொடர்ச்சி)

| தொடர் இலக்கம் | வேட்பாளரின் பெயர் மற்றும் முகவரி | அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின்/வேறு அரசியற் கட்சியின்/பெயர் குறித்த நியமனம் செய்த தேருநரின் பெயர் | சின்னம் | தேர்தல் முகவரின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|---|---|
| 17. | திரு. அநுருத்த பொல்கம்பல, இல. 100, நிவுன்ஹெல்ல, இம்புலான, ருவன்வெல்ல. | திரு. கே. கோசல ஹரிபிரிய பெரேரா |  | திரு. அனுருத்த பொல்கம்பல, இல. 100, நிவுன்ஹெல்ல, இம்புலான, ருவன்வெல்ல. |
| 18. | திரு. வர்ணகுலசூரிய மில்ரோய் சர்ஜியஸ் பிரனாந்து, இல. 546, புதிய வீதி, வென்னப்புவ. | திரு. பண்டார லொகுகே றொஹான் உதயகாந்த பிரனாந்து |  | திரு. பண்டாரலொகுகே றொஹான் உதயகாந்த பிரனாந்து, இல. 63, கப்பித்தவத்த வீதி, கலஎலிய, ஜா - எல. |
| 19. | திரு. சஜித் பிரேமதாச, சுசறித செனசும, வெல்லவாய வீதி, வீரவில. | புதிய ஜனநாயக முன்னணி |  | திரு. அஜித் பீ. பெரேரா, இல. 169A/2, பாடசாலை ஒழுங்கை, பண்டாரகம. |
| 20. | பத்தரமுல்லே சீலரதன தேரர், இல. 185/5/B, தேவாலய வீதி, ரொபட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்லை. | ஜனசெத பெரமுண |  | திரு. தேமுணி தனுஜ சம்பத், இல. 185/5/B, தேவாலய வீதி, ரொபட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்லை. |
| 21. | திரு. பெத்தெ கமகே நந்திமித்ர, இல. 68/2, கெகுணகஹவத்த, மாகந்தன, மடபாத. | நவ சமசமாஜக் கட்சி |  | திரு. பெத்தெகமகே நந்திமித்ர, இல. 68/2, கெகுணகஹவத்த, மாகந்தன, மடபாத. |
| 22. | திரு. சரத் மனமேந்திர, இல. 75/5/பி, யூ. எல். எல். பெரேரா மாவத்தை, குருந்துவத்த, துடெல்ல ஜா - எல. | நவ சிஹல உறுமய |  | திரு. சரத் மனமேந்திர, 75/5/பி, யூ. எல். எல். பெரேரா, மாவத்தை, குருந்துவத்த, துடெல்ல, ஜா - எல. |
| 23. | திரு. எம். கே. சிவாஜிலிங்கம், இல. 08, அம்மன் கோவிலடி, வல்வெட்டிதுறை. | திருமதி சசிதரன் அனந்தி |  | திருமதி சசிதரன் அனந்தி, பண்ணாகம், சுழிபுரம். |
| 24. | திரு. எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா, இல. 10/18, லேக் டிரைவ், கொழும்பு 08. | திரு. மொஹமட் சஹறாப்தீன் மொஹமட் இக்ராம் |  | திரு. அஹமட் ஹிராஸ் ஹிஸ்புல்லா, இல. 10/18, லேக் டிரைவ், கொழும்பு 08. |
| 25. | திரு. கோட்டாபய ராஜபக்ஷ, இல. 26/ஏ, பெங்கிரிவத்த மாவத்தை, மிரிஹான, நுகேகொட. | ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுண |  | திரு. ஹப்பு தந்திரி கமகே சாகர காரியவசம், இல. 11/08, றொபட் அல்விஸ் மாவத்தை, பொரலெஸ்கமுவ. |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொடர் இலக்கம் | வேட்பாளரின் பெயர் மற்றும் முகவரி | அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின்/வேறு அரசியற் கட்சியின்/பெயர் குறித்த நியமனம் செய்த தேருநரின் பெயர் | சின்னம் | தேர்தல் முகவரின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|---|---|
| 26. | திரு. நாமல் ராஜபக்ஷ, அங்கொட விலேஜ், இல. 44/48, கண்டி வீதி, பேலியகொட. | தேசிய ஐக்கிய முன்னணி |  | திரு. ஹேமந்த விக்ரமசிங்க, இல. 2/2, கஹவிட்ட மாவத்தை, அத்திடிய, தெஹிவளை. |
| 27. | திரு. ஏ. எஸ். பீ. லியனகே, இல. 07, சம்னர் பிளேஸ், கொழும்பு 08. | ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி |  | திரு. ஏ. எஸ். பீ. லியனகே, இல. 07, சம்னர் பிளேஸ், கொழும்பு 08. |
| 28. | திரு. அசோக வடிகமங்காவ, இல. 59/1, புத்தளம் வீதி, ஆணமடுவ. | திரு. வீரவன்னி முதியன்சேலாகே சுமுது ஜயமாலி வீரவன்னி |  | திரு. திசத் தேவப்பிரிய பண்டார விஜயகுணவர்தன, இல. 31/2, கில்பிரட் கிறசன்ற், கொழும்பு 07. |
| 29. | திரு. பியசிறி விஜேநாயக்க, இல. 3/7, சென்ட்ரா பாக், கம்பஹா வீதி, யக்கல. | திரு. வனசிங்க ஆரச்சிலாகே ரஞ்ஜித் வனசிங்க |  | திரு. ஜே. எம். கே. சரித் ஜயசுந்தர, இல. 2/16, சியம்பலாபே தெற்கு, சியம்பலாபே. |
| 30. | திருமதி அஜந்தா பெரேரா, இல. 16, பன்சல வீதி, ரத்தனபிடிய, பொரலெஸ்கமுவ. | இலங்கை சோசலிச கட்சி |  | திரு. மஹிந்த தேவகே, அங்குருவாமுல்ல வீதி, எஹெலியகொட. |
| 31. | திரு. ராஜீவ விஜேசிங்ஹ, அல்பிரட் வீடமைப்புத் திட்ட வீதி, கொழும்பு 03. | திரு. பண்டாரகே சரத் புத்ததாச |  | திரு. ராஜீவ விஜேசிங்ஹ, இல. 08, அல்பிரட் வீடமைப்புத் திட்ட வீதி, கொழும்பு 03. |
| 32. | திரு. பானி விஜேசிறிவர்தன, இல. 716 1/1, கோட்டே வீதி, அத்துல் கோட்டே, கோட்டே. | சோசலிச சமத்துவக் கட்சி |  | திரு. டபிள்யூ. ஏ. சுனில், இல. 716 1/1, கோட்டே வீதி, அத்துல் கோட்டே, கோட்டே. |
| 33. | திரு. சமரவீர வீரவன்னி, கஹன்தேவெல, பண்டாரவளை. | திருமதி குமாரசிங்க விதானேலாகே தொன் நாலனி பத்மலதா |  | திரு. மொஹொமட் பர்மான் ஜெஹான் காசீம், இல. 7/2, கார்லசு பார்க், கொழும்பு 10. |
| 34. | திரு. சுப்ரமணியம் குணரத்தினம், இல. 134/சி/22, ஸ்டேஸ்புர, 2 கட்டம், விகாரை பிளேஸ், கொழும்பு 14. | எமது தேசிய முன்னணி |  | திரு. சேனக ஹரிபிரிய அர்நொலட் த சில்வா, இல. 347/A, கோட்டே வீதி, மிரிஹான, நுகேகொடை. |

**அட்டவணை** (தொடர்ச்சி)

| தொடர் இலக்கம் | வேட்பாளரின் பெயர் மற்றும் முகவரி | அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் /வேறு அரசியற் கட்சியின் /பெயர் குறித்த நியமனம் செய்த தேருநரின் பெயர் | சின்னம் | தேர்தல் முகவரின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|---|---|
| 35. | திரு. மஹேஷ் சேனாநாயக்க, இல. 40/24, ரிவர் சயிட்பார்க் ரெசிடன்ஸி, கதுருதுவ, கொரகான, மொறட்டுவ | தேசிய மக்கள் கட்சி |  | திரு. அன்டனி ஸ்ரீனாத் மனோஹறன் பெரேரா, இல. 428/5, சுனேத்ராதேவி வீதி, பெபிலியான, நுகேகொடை. |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.


வாக்கெடுப்புப் பிரிவுகள்
கொழும்பு மாவட்டம்
1 - கொழும்பு - வடக்கு
2 - கொழும்பு - மத்திய
3 - பொரளை
4 - கொழும்பு - கிழக்கு
5 - கொழும்பு - மேற்கு
6 - தெஹிவளை
7 - இரத்மலானை
8 - கொலன்னாவை
9 - கோட்டை
10 - கடுவலை
11 - அவிசாவளை
12 - ஹோமாகம
13 - மஹரகம
14 - கெஸ்பாவ
15 - மொரட்டுவை
கம்பஹா மாவட்டம்
16 - வத்தளை
17 - நீர்கொழும்பு
18 - கந்தானை
19 - திவுலப்பிட்டிய
20 - மீரிகம
21 - மினுவாங்கொடை
22 - அத்தனகல்லை
23 - கம்பஹா
24 - ஜா-எல
25 - மஹர
26 - தொம்பே
27 - பியகம
28 - களனி
களுத்துறை மாவட்டம்
29 - பாணந்துறை
30 - பண்டாரகம
31 - ஹொரணை
32 - புளத்சிங்கள
33 - மத்துகம
34 - களுத்துறை
35 - பேருவளை
36 - அகலவத்தை
மாத்தளை மாவட்டம்
37 - தம்புள்ளை
38 - லக்கல
39 - மாத்தளை
40 - ரத்தோட்டை
கண்டி மாவட்டம்
41 - கலகெதர
42 - ஹாரிஸ்பத்துவ
43 - பாத்ததும்பற
44 - உடுதும்பற
45 - தெல்தெனிய
46 - குண்டசாலை
47 - ஹேவாஹெட்ட
48 - செங்கடகல
49 - மஹநுவர
50 - யட்டிநுவர
51 - உடுநுவர
52 - கம்பளை
53 - நாவலப்பிட்டி
நுவரெலியா மாவட்டம்
54 - நுவரெலியா - மஸ்கெலியா
55 - கொத்மலை
56 - ஹங்குரன்கெத்த
57 - வலப்பனை
காலி மாவட்டம்
58 - பலப்பிட்டிய
59 - அம்பலாங்கொடை
60 - கரன்தெனிய
61 - பெந்தர எல்பிட்டிய
62 - ஹினிதும
63 - பத்தேகம
64 - ரத்கம
65 - காலி
66 - அக்மீமன
67 - ஹபராதுவை
மாத்தறை மாவட்டம்
68 - தெனியாய
69 - ஹக்மன
70 - அக்குரஸ்ஸ
71 - கம்புருபிட்டிய
72 - தெவிநுவர
73 - மாத்தறை
74 - வெலிகம
அம்பாந்தோட்டை மாவட்டம்
75 - முல்கிரிகல
76 - பெலியத்த
77 - தங்காலை
78 - திஸ்ஸமஹாராம
யாழ்ப்பாணம் மாவட்டம்
79 - ஊர்காவற்றுறை
80 - வட்டுக்கோட்டை
81 - காங்கேசன்துறை
82 - மானிப்பாய்
83 - கோப்பாய்
84 - உடுப்பிட்டி
85 - பருத்தித்துறை
86 - சாவகச்சேரி
87 - நல்லூர்
88 - யாழ்ப்பாணம்
89 - கிளிநொச்சி
வன்னி மாவட்டம்
90 - வவுனியா
91 - மன்னார்
92 - முல்லைத்தீவு
திருகோணமலை மாவட்டம்
93 - சேருவில
94 - திருகோணமலை
95 - மூதூர்
மட்டக்களப்பு மாவட்டம்
96 - கல்குடா
97 - மட்டக்களப்பு
98 - பட்டிருப்பு
திகாமடுல்லை மாவட்டம்
99 - அம்பாறை
100 - சம்மாந்துறை
101 - கல்முனை
102 - பொத்துவில்
புத்தளம் மாவட்டம்
103 - புத்தளம்
104 - ஆனமடுவ
105 - சிலாபம்
106 - நத்தாண்டிய
107 - வென்னப்புவ
குருநாகல் மாவட்டம்
108 - கல்கமுவ
109 - நிக்கவரட்டிய
110 - யாப்பஹுவ
111 - ஹிரியால
112 - வாரியபொல
113 - பண்டுவஸ்நுவர
114 - பிங்கிரிய
115 - கட்டுகம்பொல
116 - குளியாபிட்டிய
117 - தம்பதெனிய
118 - பொல்கஹவெல
119 - குருநாகல்
120 - மவத்தகம
121 - தொடங்கஸ்லந்த
அநுராதபுரம் மாவட்டம்
122 - மதவாச்சி
123. - ஹொரவபொதானை
124 - அநுராதபுரம் கிழக்கு
125 - அநுராதபுரம் மேற்கு
126 - கலாவெவ
127 - மிஹிந்தலை
128 - கெக்கிராவை
பொலன்னறுவை மாவட்டம்
129 - மின்னேரியா
130 - மெதிரிகிரிய
131 - பொலன்னறுவை
பதுளை மாவட்டம்
132 - மஹியங்கனை
133 - வியலுவ
134 - பசறை
135 - பதுளை
136 - ஹாலி - எலா
137 - ஊவா - பரணகம
138 - வெலிமடை
139 - பண்டாரவளை
140 - ஹப்புத்தளை
மொனராகலை மாவட்டம்
141 - பிபிலை
142 - மொனராகலை
143 - வெல்லவாய
கேகாலை மாவட்டம்
144 - தெதிகம
145 - கலிகமுவ
146 - கேகாலை
147 - ரம்புக்கனை
148 - மாவனல்லை
149 - அரநாயக்க
150 - யட்டியாந்தோட்டை
151 - றுவான்வெல்லை
152 - தெரணியகல
இரத்தினபுரி மாவட்டம்
153 - எஹலியகொட
154 - இரத்தினபுரி
155 - பெல்மடுல்லை
156 - பலாங்கொட
157 - றக்வான
158 - நிவித்திகல
159 - கலவானை
160 - கொலொன்ன
தயாரிப்பு - இலங்கை அளவையியல் திணைக்களம்
விசேட நிழற்படப் பிரிவு

## சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு - 2019.11.16

வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அதற்காகப் பயன்படுத்தப்பட்ட கட்டிடங்கள் தொடர்பான விபரங்கள்

| மாவட்டம் | வாக்கெடுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை | பெண் வாக்காளர் களுக்கான வா.நிலை.எண் | அரச பாடசாலைக் கட்டிடங்கள் எண்ணிக்கை | அரச வேறு கட்டிடங்கள் எண்ணிக்கை | வேறு பொது கட்.. எண். | சமயத் தலங்கள் | தற்காலிக /வேறு வா.நி.கட். எண்ணிக்கை | வா. நிலை. எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 1,166 | 9 | 1,043 | 72 | 102 | 363 | 95 | 1,175 |
| கம்பஹா | 1,171 | 13 | 746 | 91 | 64 | 271 | 12 | 1,184 |
| களுத்துறை | 540 | 105 | 386 | 35 | 21 | 148 | 15 | 710 |
| மஹநுவர | 825 | 8 | 584 | 47 | 80 | 123 | 1 | 835 |
| மாத்தளை | 324 | 4 | 270 | 16 | 12 | 29 | - | 327 |
| நுவரெலியா | 485 | 3 | 417 | 21 | 21 | 22 | 4 | 488 |
| காலி | 712 | - | 367 | 74 | 42 | 229 | - | 712 |
| மாத்தறை | 445 | - | 326 | 24 | 7 | 101 | - | 458 |
| அம்பாந்தோட்டை | 413 | - | 260 | 72 | 25 | 56 | - | 413 |
| யாழ்ப்பாணம் | 531 | - | 476 | 19 | 34 | 2 | - | 531 |
| கிளிநொச்சி | 100 | - | 71 | 29 | - | - | - | 100 |
| மன்னார் | 75 | 1 | 75 | 1 | - | - | - | 76 |
| வவுனியா | 142 | - | 123 | 17 | - | 17 | - | 142 |
| முல்லைத்தீவு | 134 | - | 102 | 33 | - | - | - | 135 |
| மட்டக்களப்பு | 416 | 12 | 379 | 30 | 12 | 7 | - | 428 |
| திகாமடுல்லை | 523 | - | 450 | 44 | 8 | 21 | - | 523 |
| திருகோணமலை | 307 | - | 275 | 4 | 15 | 13 | - | 307 |
| குருநாகல் | 950 | 9 | 686 | 46 | 52 | 168 | 2 | 959 |
| புத்தளம் | 384 | 24 | 272 | 25 | 13 | 23 | - | 411 |
| அநுராதபுரம் | 634 | - | 425 | 26 | 73 | 101 | 9 | 634 |
| பொலன்னறுவை | 287 | 1 | 204 | 46 | - | 38 | - | 288 |
| பதுளை | 523 | - | 445 | 42 | 4 | 32 | - | 523 |
| மொனறாகலை | 351 | - | 267 | 9 | 46 | 29 | - | 351 |
| இரத்தினபுரி | 627 | - | 466 | - | 30 | 118 | 13 | 627 |
| கேகாலை | 573 | 1 | 408 | 12 | 57 | 95 | - | 574 |
| **மொத்தம்** | **12,641** | **190** | **9,023** | **835** | **718** | **2,006** | **151** | **12,911** |

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2141/87 - 2019 සැප්තැම්බර් මස 21 වැනි සෙනසුරාදා - 2019.09.21

*2141/87 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 104ஆ(5) (அ) என்னும் உறுப்புரையின் கீழான ஊடக வழிகாட்டுநெறிகள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 104ஆ(5)(அ), (ஆ), (இ)(i) என்னும் உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஊடக வழிகாட்டுநெறிகள்.*

| | | |
|---|---|---|
| மஹிந்த தேசப்பிரிய, | என். ஜே. அபேசேகர, | எஸ். இரத்னஜீவன் எச். ஹூல், |
| தவிசாளர், | அங்கத்தவர், | அங்கத்தவர், |
| தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. |

கொழும்பு,
2019, செத்தெம்பர் 19.

*01. ஒவ்வோர் ஊடக நிறுவனமும், அரசியற் கருமங்கள் தொடர்பான தமது செய்தி மடல்களையும் வேறேதேனும் நிகழ்ச்சியையும் ஒலிபரப்புவதில் அல்லது ஒளிபரப்புவதில் அல்லது பகிரங்கப்படுத்துவதில் செம்மையான, சமச்சீரான மற்றும் பக்கச்சார்பற்ற தகவல்களை வழங்குதல் வேண்டும். ஊடகத்தின் நடுநிலைமையும் பக்கச்சார்பின்மையும், தேர்தல்கள் தொடர்பான முறைப்பாடுகளின் மீதான நிரந்தரப் பிரதிநிதிகளின் நிலையியற் குழுவினாலும், ஊடக வழிகாட்டுநெறிகள் மீதான நிரந்தரப் பிரதிநிதிகளின் நிலையியற் குழுவினாலும் கிரமமான முறையில் கண்காணிக்கப்படுதல் வேண்டும்.*

1A - PG 4661— 757 (2019/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

02. ஒவ்வோர் ஒளிபரப்பு, ஒலிபரப்பு மற்றும் அச்சு ஊடகமும், ஏதேனும் தேர்தல் தொடர்பான கருமங்களை அவை அறிக்கையிடுவதில் நடுநிலைமையுடையதாகவும் பக்கச்சார்பற்றதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் போட்டியிடுகின்ற அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது ஒரு வேட்பாளருக்கு வானொலியில் அல்லது தொலைக்காட்சியில் வானலைக் காலத்தைக் குறித்தொதுக்குவதிலும் செய்தித்தாள்களில் இடங்களைக் குறித்தொதுக்குவதிலும் அத்தகைய அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது ஒரு வேட்பாளருக்கு எதிரான முறையில் அல்லது அத்தகைய ஏதேனும் அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது ஒரு வேட்பாளருக்கு விசேட நன்மையை விளைவிக்கின்ற முறையில் செயலாற்றுதலுமாகாது.

03. செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட பதிப்பாசிரியர் கருத்துக்கள் பற்றி இலத்திரனியல் ஊடகம் கருத்துரை தெரிவித்தலாகாதென்பதுடன், அத்தகைய கருத்துரைகளிலான அபிப்பிராயங்கள் குழப்பநிலையைக் கொண்டனவாக மற்றும் சமநிலைத்தன்மையற்றனவாக இருக்கக்கூடுமாதலால், செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட எவையேனும் பதிப்பாசிரியர் கருத்துக்களை ஒலிபரப்புதலோ அல்லது ஒளிபரப்புதலோ ஆகாது. பதிப்பாசிரியர் அபிப்பிராயமொன்று ஒலிபரப்பப்படும், ஒளிபரப்பப்படும் அல்லது வெளியிடப்படும் போதெல்லாம், பாதிக்கப்பட்ட திறத்தவருக்கு, அத்தகைய அபிப்பிராயத்தை எதிர்ப்பதற்கான கருத்துக்களை ஒலிபரப்புவதற்கு, ஒளிபரப்புவதற்கு அல்லது வெளியிடுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படுதல் வேண்டும்.

04. நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்கின்றவர் மற்றும் தொலைக்காட்சி அத்துடன் வானொலி அலைவரிசைகளின் அறிவிப்பாளர் ஒவ்வொருவரும், ஒரு திறத்தவருக்குப் பங்கமேற்படுத்துகின்ற அல்லது ஒரு திறத்தவரை ஊக்குவிக்கின்ற செய்தித்தாள் தலைப்புச்செய்திகளை மற்றும் கேலிச்சித்திரங்களை தொகுத்தளிக்கின்றபோது தமது தனிப்பட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதனைத் தவிர்த்தல் வேண்டும்.

05. ஏதேனும் நிகழ்ச்சி குறைநிரப்பி அல்லது செய்தி, தேர்தல் சட்டங்களுடனும் தேர்தல் ஆணைக்குழுவின் ஊடக வழிகாட்டு நெறிகளுடனும் ஒவ்வாததாக இருப்பின், தேர்தல் காலப்பகுதியின்போது, அத்தகைய சமநிலைத்தன்மையற்றதான நிகழ்ச்சியை அல்லது குறைநிரப்பியை ஒலிபரப்பாதிருத்தல் அல்லது ஒளிபரப்பாதிருத்தல் அல்லது வெளியிடாதிருத்தல், எல்லா இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களினதும் செய்திகள் மற்றும் நடப்பலுவல்கள் பிரிவுகளினதும் பொறுப்பாகவுள்ளது.

06. தேர்தல் காலப்பகுதியினுள் ஒரு சம்பவத்தை அல்லது நிகழ்வை வெளிப்படுத்துகின்ற ஏதேனும் விடயம் ஒரு வேட்பாளரின் கருத்துரைகளுடன் ஒலிபரப்பப்படுமிடத்து அல்லது ஒளிபரப்பப்படுமிடத்து அல்லது வெளியிடப்படுமிடத்து, அத்தகைய நிகழ்வில் அக்கறை கொண்டுள்ள அல்லது அதனால் பாதிக்கப்படக்கூடிய சாத்தியங்கொண்ட வேறு ஏதேனும் அரசியற் கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் அதே சம்பவம் அல்லது நிகழ்வு தொடர்பில் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படுதல் வேண்டும்.

07. தேர்தல் காலப்பகுதியின்போது ஒலிபரப்பப்பட்டதும் அல்லது ஒளிபரப்பப்பட்டதும் அத்தகைய தேர்தலுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டதுமான ஏதேனும் விவரண நிகழ்ச்சியில் அல்லது வேறேதேனும் விசேட நிகழ்ச்சியில் எழுதுநரின், அறிவிப்பாளரின் மற்றும் பதிப்பாசிரியரின் பெயர்கள் அந்நிகழ்ச்சி நடைபெறும்போது வெளியிடப்படுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் ஊடக நிறுவனம் அத்தகைய விபரங்களை வெளியிடாதிருப்பதற்கான உரிமையைத் தொடர்ந்து வைத்திருக்கும் பட்சத்தில், அத்தகைய நிகழ்ச்சிக்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அதன் உள்ளீடுகளுக்குப் பொறுப்பானவராக்கப்படுதல் வேண்டும்.

08. ஒரு தேர்தலில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளருக்கெதிரான ஆதாரப்படுத்த முடியாத சார்த்துதல்களை நியாயமான முறையில் எண்பிக்க முடியாவிடின், ஏதேனும் ஊடக நிறுவனம் அவற்றைச் செய்வதற்கு ஏதேனும் நிகழ்ச்சியின் போது அல்லது செய்தியின் போது வானலைக் காலத்தைப் பயன்படுத்துதலாகாது. வேறோர் அரசியற் கட்சி, சுயேச்சைக்குழு அல்லது ஒரு வேட்பாளர் அல்லது அதன் ஆதரவாளர் ஒருவர் ஏதேனும் அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது ஒரு வேட்பாளருக்கு எதிராக ஏதேனும் பொய்யான மற்றும் பங்கம் விளைவிக்கும் கூற்றைச் செய்துள்ளது அல்லது செய்துள்ளார் என உரிமை கோரினால், அதனை எதிர்ப்பதற்கு அத்தகைய அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளருக்குச் சந்தர்ப்பமொன்று அளிக்கப்படுதல் வேண்டும்.

09. ஏதேனும் அரசியற் கட்சியை, சுயேச்சைக் குழுவை அல்லது ஒரு வேட்பாளரை மேம்படுத்தும் அல்லது நிலை குறைக்கும் சாத்தியங்கொண்ட ஏதேனும் குற்றச் செயலுடன் தொடர்புபட்ட ஏதேனும் அலுவலக முறையான வைபவத்தை அல்லது நிகழ்வை வெளிப்படுத்துகின்ற அல்லது குற்றச் செயல் ஒன்றோடு தொடர்புடைய ஏதேனும் செய்தி அல்லது நிகழ்ச்சி வெளியிடப்படுமிடத்து, அத்தகைய செய்தி அல்லது நிகழ்ச்சி ஏதேனும் தேர்தலுடன் தொடர்புபட்டதாக இராதிருப்பினுங்கூட ஒவ்வோர் ஊடக நிறுவனமும் அத்தகைய செய்தியை அல்லது நிகழ்ச்சியை வெளியிடுமாயின், தெளிவுபடுத்துகைக்காக அதில் சம்பந்தப்பட்டுள்ள ஏனைய திறத்தவர்களையும் கலந்தாலோசித்தல் வேண்டும்.

10. சனாதிபதியினால் அல்லது பிரதமரினால் அல்லது எவரேனும் அமைச்சரினால் தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் அல்லது கருத்துக்கள் தேர்தலொன்றின் போது, வானொலி மூலம் அல்லது தொலைக்காட்சி மூலம் வெளிப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய ஆள் எந்த அரசியற் கட்சியைச் சேர்ந்தவராகவுள்ளாரோ அந்த அரசியற் கட்சிக்குக் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்துதலாகக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆதலால் அத்தகைய தேர்தலிற் போட்டியிடுகின்ற எதிர் அரசியற் கட்சியின் எவரேனும் தலைவருக்கு ஒத்த நிகழ்ச்சிகளில் சந்தர்ப்பமளிக்கப்படுதலும் வேண்டும். விசேட கலந்துரையாடல்களை வெளியிடுவதிலும் பிரசாரக் கூட்டங்களை அறிக்கையிடுவதிலும் அச்சு ஊடகம் எல்லா அரசியற் கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக்கும் வேட்பாளர்களுக்கும் இதே போன்று சமமான இடத்தையும் முக்கியத்துவத்தையும் வழங்குதல் வேண்டும்.

11. வேட்பாளரெவரினதும் தேர்தலை மேம்படுத்தும் வகையில் அல்லது வேறொரு வேட்பாளருக்கு அனுகூலமின்மையை விளைவிக்கும் வகையில் வானொலியில் அல்லது தொலைக்காட்சியில் வானலைக் காலத்தை அல்லது அச்சு ஊடகத்திலான இடத்தைக் குறித்தொதுக்குவதில் அத்தகைய வேட்பாளர் விசேடமான முறையில் அல்லது சாதகமான முறையில் நடாத்தப்படுதலாகாது.

12. போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளரை மேம்படுத்தும் வகையில் அல்லது வேறொரு வேட்பாளருக்கு அனுகூலமின்மையை விளைவிக்கும் வகையில் பகிரங்க அலுவலர்களுடனான விரிவுரை, நேர்காணல் அல்லது அத்தகைய வேறு நிகழ்ச்சி எதுவும் வெளியிடப்படுதலோ அல்லது ஒலிபரப்பப்படுதலோ தேர்தல் காலப்பகுதியினுள் செய்தலாகாது.

13. ஒவ்வோர் இலத்திரனியல் ஊடக நிறுவனமும், குழாம் கலந்துரையாடல்களுக்கான அமைப்பு சமச்சீரானதாக இருக்கும் வகையில் கலந்துரையாடலுக்கான பங்குபற்றுநர்களைத் தெரிவுசெய்வதில் நியாயமான முறையில் செயலாற்றுதல் வேண்டும். ஒவ்வோர் ஊடக நிறுவனமும், எவரேனும் பங்குபற்றுநர் எக்குறிப்பிட்ட மொழியில் தேர்ச்சியற்றவராக உள்ளாரோ அக்குறிப்பிட்ட மொழியில் நிகழ்ச்சியை நடாத்துவதன்மூலம் அத்தகைய பங்குபற்றுநருக்கு அனுகூலமின்மையை விளைவிக்கும் வகையில் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துவதனைத் தவிர்த்தல் வேண்டும். பங்குபற்றுநர்களுடனான நேர்காணல்கள், பங்குபற்றுநர் எந்த மொழியில் தேர்ச்சியுடையவராக உள்ளாரோ அந்த மொழியில் வெளியிடப்படுதல் வேண்டும். தெளிவற்ற, புரிந்துகொள்ள முடியாத கேள்விகளினூடாகப் பெறப்பட்ட தகவல்கள் வெளியிடப்படுதலாகாது. அல்லது அத்தகைய கேள்விகள் எப்போதேனும் கேட்கப்படுதலாகாது. ஆரம்பத்தில், ஒழுக்க முறையற்றனவாக உள்ள அல்லது இனச் சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கின்றனவாக உள்ள கூற்றுக்களை நிகழ்ச்சியிலான பங்குபற்றுநர் அளிக்கக்கூடாதென அவர் எச்சரிக்கைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் கலந்துரையாடல் நடைபெறுகையில் அத்தகைய கூற்றுக்கள் அளிக்கப்படின், நிகழ்ச்சியானது உடனடியாக நிறுத்திவிடப்படுதல் வேண்டும்.

14. தொலைபேசி மூலமான ஏதேனும் நிகழ்ச்சியில், ஒழுக்கவியலுக்கு முரணாகவிராத, மத அல்லது இனச் சமூகத்துக்கு தீங்கு விளைவிக்காத மற்றும் தேர்தல்கள் தொடர்பான சட்டங்களுடன் ஒத்திருக்கின்ற கேள்விகளுக்கு அழைப்பவர் ஒவ்வொருவருக்கும் நியாயமான சந்தர்ப்பம் அளிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய தொலைபேசி மூலமான நிகழ்ச்சியை நடாத்துகின்ற ஒவ்வோர் அலுவலரும் சமச்சீரற்ற தொலைபேசி மூலமான நிகழ்ச்சிக்காக வகை சொல்ல வேண்டியவராதல் வேண்டும்.

15. ஏதேனும் இலத்திரனியல் அல்லது அச்சு ஊடக நிறுவனத்தின் எவரேனும் தவிசாளர், முகாமைச் சபை உறுப்பினர், பணிப்பாளர் அல்லது எவரேனும் ஊடகவியலாளர் அரசியற் செயற்பாடுகளில் முனைப்பாக ஈடுபடின், அத்துடன் அத்தகைய ஏதேனும் செயற்பாடு, சமச்சீரான ஒலிபரப்பை அல்லது வெளியீட்டை வழங்குவதில் அக்கறை முரண்பாட்டை ஏற்படுத்தக்கூடியவிடத்து, அத்தகைய ஆள், பின்வருவனவற்றை நிறுவனத்தின் முகாமைத்துவத்துக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும் :-

(அ) அத்தகைய ஆள் அரசியல் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ளமை ;
(ஆ) அத்தகைய ஆளினால் நிறுவனத்தில் வகிக்கப்படும் பதவி ; அத்துடன்
(இ) நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதில் அல்லது நடாத்துவதில் அத்தகைய ஆள் சம்பந்தப்பட்டுள்ள அளவு.

16. ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியில் எவரேனுமாள் ஏதேனும் முக்கிய பதவியை வகிக்கின்றவிடத்தும், அல்லது ஒத்த தத்துவங்களைக் கொண்டிருக்கின்றவிடத்தும் அத்துடன் தவிசாளர், பணிப்பாளர், சபை உறுப்பினர், பிரதான நிறைவேற்றலுவலர் அல்லது பிரதான பதிப்பாசிரியர் போன்ற அதிகாரங்கொண்ட பதவியை எவரேனுமாள் வகிக்கின்றவிடத்தும் மற்றும் அத்தகைய ஆள் தேர்தலொன்றில் வேட்பாளரொருவராக உள்ளவிடத்தும், அல்லது அத்தகைய ஆள் எந்தக் கட்சியைச் சேர்ந்துள்ளாரோ அந்தக் கட்சி அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற நேரடியான அங்கீகரிக்கப்பட்ட முன்னணியாக அல்லது அதன் கீழானதாக உள்ளவிடத்தும் அவர் அத்தகைய ஊடக

நிறுவனத்தில் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட கடமைகளில் முனைப்பான முறையில் ஈடுபடுதலாகாது. மேலும், அத்தகைய ஆள் தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற கட்சியொன்றில் வேட்பாளராக அல்லது அதில் பதவி வகிப்பவராகவிருப்பின், ஏதேனும் தொலைக்காட்சி அல்லது ஒலிபரப்பு நிறுவனத்தில் அரசியற்றன்மையினதான ஏதேனும் நிகழ்ச்சியை நடாத்துவதில் அவர் சம்பந்தப்பட்டிருத்தலாகாது என்பதுடன், அச்சு ஊடகத்தின் விடயத்தில் அத்தகைய ஆள் அந்த ஊடக நிறுவனத்தினூடாகத் தமது சொந்த அரசியல் வெளியீடுகளை வெளியிடுதலுமாகாது.

17. அரசியற் கட்சியொன்றின் எவரேனும் பங்குபற்றுநர், அத்தகைய பங்குபற்றாமைக்கான ஏதேனும் காரணத்தைக் குறித்தளிக்காமல் ஏதேனும் ஊடக நிறுவனத்தில் ஒரு கலந்துரையாடலில் அல்லது நேர்காணலில் பங்குபற்றுவதற்கு மறுக்குமிடத்து, அத்தகைய ஊடக நிறுவனம், அத்தகைய பங்குபற்றாமையை அழுத்திக் கூறுவதற்கு ஒரு வெற்றுக்கதிரையை வெளிக்காட்டி வைத்தலாகாது அல்லது வேறு ஒத்த நாடகப் பாணியிலான நிலைமையை உருவாக்குதலாகாது. பங்குபற்றுநரின் வராமை பற்றி எளிமையானதும் நேரடியானதுமான அறிவித்தலொன்றைச் செய்யவேண்டுமென விதந்துரைக்கப்படுகின்றது.

18. அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றின் பெறுபேற்றை ஒலிபரப்புகின்ற ஏதேனும் இலத்திரனியல் ஊடகம் அல்லது அதனை வெளியிடுகின்ற ஏதேனும் அச்சு ஊடகம், அத்தகைய வாக்கெடுப்பை நடாத்திய ஒழுங்கமைப்பின் பெயரையும் அத்தகைய வாக்கெடுப்புக்கு நிதியளித்த ஒழுங்கமைப்பையும் அல்லது ஆளையும், ஈடுபடுத்தப்பட்ட முறைமையியலையும், மாதிரியின் அளவையும், பிழைகளின் விளிம்பையும் வெளிக்கள வேலைக்காலப் பகுதியையும், அறிவித்தல் அல்லது வெளியிடுதல் வேண்டும். மேலும், ஒலிபரப்புநர் அல்லது வெளியீட்டாளர், அத்தகைய வாக்கெடுப்பு, அத்தகைய வாக்கெடுப்பு நடைபெறும் நேரத்தில் மட்டுமே பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கின்றதென்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

19. எவரேனும் வேட்பாளர் எக்கட்சியை அல்லது குழுவைச் சேர்ந்தவராக இராதுள்ளாரோ அக்கட்சியின் அல்லது குழுவின் வேறொரு போட்டியிடுநரின் வேட்பாண்மையை மேம்படுத்துவதற்கான ஏதேனும் கூற்றை அத்தகைய வேட்பாளர் அளிக்குமிடத்து, அத்தகைய கூற்றை ஒலிபரப்புதல் அல்லது ஒளிபரப்புதல் என்ற வகையாக அத்தகைய கூற்றுக்குப் பிரசித்தமெதுவும் கொடுக்கப்படுதலாகாது.

20. தேர்தல் ஆணைக்குழுவின் எழுத்திலான சம்மதமின்றி, ஒவ்வோர் ஊடக ஆளணியினரும் ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தின் அல்லது அஞ்சல் வாக்களிப்பு நிலையத்தின் உட்புறத்தில் நிழற்படங்களை எடுக்காது அல்லது வீடியோ செய்யாது தவிர்த்தல் வேண்டும். சட்டவிரோதமாகப் பெறப்பட்ட எவையேனும் நிழற்படங்கள் அல்லது வீடியோப் படங்கள், செய்தித் தாள்களில் வெளியிடப்படுதலோ, ஏதேனும் ஊடகத்தினூடாக ஒளிபரப்பப்படுதலோ அல்லது மேம்படுத்தப்படுதலோ ஆகாது. தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பெறப்பட்ட நிழற்படங்களும் வீடியோப் படங்களும் கூட வாக்கெடுப்புக்குப் பின்னரே வெளியிடப்படலாம் அல்லது ஒளிபரப்பப்படலாம்.

21. எவரேனும் வேட்பாளரினால் நடாத்தப்படுகின்றதாக அல்லது அவரை உட்படுத்துகின்றதாக அல்லது எவரேனும் வேட்பாளரை அல்லது கட்சியை அல்லது சுயேட்சைக் குழுவை மேம்படுத்துகின்றதாக அல்லது அதன் நிலையைக் குறைக்கின்றதாகத் தேர்தல் திகதிக்கு முன்னர் ஒளிபரப்பப்பட்ட அல்லது ஒலிபரப்பப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட ஏதேனும் விளம்பரம், நொடி வினாவிடை நிகழ்ச்சி, களியாட்ட நிகழ்ச்சி, அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான ஏதேனும் நிகழ்ச்சி அல்லது அத்தகைய எவையேனும் செயற்பாடுகள் தொடர்பான ஏதேனும் நிகழ்ச்சி, திரைப்படம், தொலைக்காட்சி நாடகம், சங்கீத நிகழ்ச்சி அல்லது அத்தகைய தன்மையினதான வேறேதேனும் நிகழ்ச்சி, வாக்கெடுப்புத் திகதிக்கு நேர் முன்னர் நிலவுகின்ற மௌன காலப்பகுதியின்போது ஒளிபரப்பப்படுதலாகாது அல்லது ஒலிபரப்பப்படுதலாகாது அல்லது வெளியிடப்படுதலாகாது. ஆகவே, தேர்தற் பிரசாரத்தின்போது அரசியற் கட்சிகளினாலும் வேட்பாளர்களினாலும் அறிவிக்கப்பட்ட பல்வேறு கொள்கைகளினதும் அவற்றினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளினதும் குற்றநற்றுக்கள் பற்றி வாக்காளர் ஆலோசனை செய்து அவற்றைக் கவனத்திற்கொள்வதனை இயலச் செய்வதற்கு வாக்கெடுப்புத் தேதிக்கு முன்னர் மௌனகாலப் பகுதியொன்று நிலவுவது அதிமுக்கியமானதெனக் கருதப்படுகின்றது.

22. மத நம்பிக்கைகள், மத வழிபாடுகள், பேசப்பட்ட மொழிகள், இனத்துவம், வழக்காறுகள் மற்றும் சாதிகள் என்பன உட்பட, பல்வேறு ஏதுக்களின் மீது இலங்கை மக்களிடையே குரோதத்தையும் பொறுமையின்மையையும் உருவாக்கக்கூடிய அல்லது தூண்டக்கூடிய பிரசாரத்தை ஒலிபரப்புவதனை அல்லது ஒளிபரப்புவதனை அல்லது வெளியிடுவதனை ஊடக நிறுவனம் ஒவ்வொன்றும் தவிர்த்தல் வேண்டும்.

23. அரசியல் செயற்பாட்டாளர்களிடையேயும் சமூகத்தினுள்ளும் குரோதம் விளைவிக்கும் அரசியலை மேம்படுத்துகின்ற பிரசாரச் செயற்பாடுகளை ஒவ்வோர் ஊடக நிறுவனமும் ஒலிபரப்புவதனை அல்லது ஒளிபரப்புவதனை அல்லது வெளியிடுவதனைத் தவிர்த்தல் வேண்டும்.

24. ஒவ்வோர் ஊடக நிறுவனமும், வெளிப்படுத்துநரின் சம்மதமின்றி வேறோர் அரசியற் கட்சியின் வேறொரு வேட்பாளர் பற்றி எவரேனும் வேட்பாளரினால் அல்லது ஆதரவாளரினால் முன்னர் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்றை மீளவெளியிடுவதனை அல்லது மீண்டும் ஒளிபரப்புவதனைத் தவிர்த்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆளினால் முன்னர் அளிக்கப்பட்ட அத்தகைய கூற்றை மீண்டும் வெளியிடாதிருக்கும்படி அல்லது ஒளிபரப்பாதிருக்கும்படி வெளிப்படுத்துநரினால் செய்யப்படும் கோரிக்கைக்கு மதிப்பளித்தலும் வேண்டும்.

25. அநாமதேய அறிவித்தல்களை அல்லது பிரசாரத்தை மற்றும் போலி ஒழுங்கமைப்புகளின் அல்லது ஆட்களின் பெயர்களின் கீழான அறிவித்தல்களை அல்லது பிரசாரத்தை ஏதேனும் ஊடக நிறுவனம் வெளிப்படுத்துதலாகாது. இது தொடர்பான பொறுப்பு அந்தந்த ஊடக நிறுவனத்தைச் சார்ந்ததாதல் வேண்டும்.

26. ஏதேனும் ஊடக நிறுவனமும், விடயத்துக்கேற்ப, அத்தகைய கூற்றை அளிக்கின்ற அல்லது செய்திகளை வாசிக்கின்ற ஆளும் பிழையான கூற்றுக்களை அல்லது செய்திகளை வெளியிடுதல், ஒலிபரப்புதல் அல்லது ஒளிபரப்புதல் தொடர்பாகச் சமமான முறையில் வகைசொல்ல வேண்டியதாகவும் வகைசொல்ல வேண்டியவராகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், இது தொடர்பாக எழக்கூடிய சட்ட வழக்கு நடவடிக்கைக்கு அமைந்ததாகவும், அமைந்தவராதலும் வேண்டும்.

27. ஊடகத்தின் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்தலும் அவற்றுக்கு அமைந்தொழுகுதலும் ஒவ்வோர் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனத்தினதும் பொறுப்பாதல் வேண்டும்.

28. எல்லா அரசாங்க மற்றும் பகுதியளவிலான அரசாங்க ஊடக நிறுவனங்களும், ஏதேனும் அரசியற் கட்சியை, குழுவை அல்லது வேட்பாளரை மேம்படுத்துவதற்கு அரச ஆதனத்தையும் நிதிகளையும் பயன்படுத்துவதனை மற்றும் அரசாங்க அரசிறைக்கு நட்டம் விளைவிப்பதனை அத்துடன் ஏதேனும் நிறுவனத்துக்குச் சேதம் விளைவிக்கும் வகையில் செயலாற்றுவதனைத் தவிர்த்தல் வேண்டும். அத்தகைய செயற்பாடு ஏற்படும் பட்சத்தில், அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுடன் சேர்த்து மேலதிகமாக, பொறுப்பாகவுள்ளோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படக்கூடும்.

29. எல்லா இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் உரிமையாளர்களும், இவ்வழிகாட்டுநெறிகளைக் கடைப்பிடித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வழிகாட்டுநெறிகளை அந்தந்த நிறுவனங்கள் பின்பற்றுவதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

30. ஏதேனும் தேர்தல் காலப்பகுதியின்போது, சமூக ஊடக இணையத்தளங்களின் நிருவாகிகளுக்கு ஏற்புடையற்பாலனவாறாக இவ்வழிகாட்டுநெறிகளைப் பின்பற்றுதலும் அவர்களின் பொறுப்பாதல் வேண்டும்.

31. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதற்கு இவ்வழிகாட்டுநெறிகளைப் பின்பற்றுவது அத்தியாவசியமாக உள்ளமையினால், இவ்வழிகாட்டுநெறிகளைக் கடைப்பிடித்தல், ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களினதும் சமூக ஊடகத்தின் நிருவாகிகளினதும் பயன்படுத்துநர்களினதும் கடமை மட்டுமேயன்றி அவர்களின் பொறுப்புமாகும்.

32. இந்த ஊடக வழிகாட்டுநெறிகளில் "தேர்தல் நடாத்தப்படுகின்ற காலப்பகுதி" எனப்படுவது, குறித்த சந்தர்ப்பத்தில் மக்கள் கருத்துக்கணிப்பு அல்லது தேர்தல்கள் நடாத்தப்படுவதற்கான வெளிப்படுத்துகையொன்றை அல்லது நியமத்தை வெளியிட்ட தினத்திலிருந்து ஆரம்பமாகி அச்சந்தர்ப்பத்தில் குறித்த மக்கள் கருத்துக்கணிப்பு அல்லது தேர்தலின் பெறுபேறுகள் வெளியிடப்படுகின்ற தினம் வரையான காலப்பகுதியேயாகும்.

33. இந்த ஊடக வழிகாட்டுநெறிகளுக்கு இணங்கியவாறு செயற்படுவதற்கு இயலாமை என்பது அரசியலமைப்பு யாப்பின் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாக அமையும்.

34. 2017.03.03 ஆந் திகதிய 2008/ 28 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2017.12.04ஆந் திகதிய 2048/1 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

10-529

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2146/39 - 2019 ඔක්තෝබර් මස 27 වැනි ඉරිදා - 2019.10.27

*2146/39 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேர்தல் ஆணைக்குழுவினால் 2141/87 ஆம் இலக்க 2019.09.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அச்சு மற்றும் இலத்திரனியில் ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஊடக வழிகாட்டுநெறிகள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் மேலதிகமாக வெளியிடப்படுகின்ற ஊடக வழிகாட்டுநெறிகள்.**

01. அரசியல் உரிமையற்ற அரச அலுவலர்களின் மற்றும் முனைப்பான சேவையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் படை மற்றும் பொலிஸ் அலுவலர்கள் போன்றே இளைப்பாறிய பாதுகாப்புப் படை அலுவலர்கள் அல்லது பொலிஸ் அலுவலர்கள் பணியில் ஈடுபட்டிருந்தபோது பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது சீருடை அணிந்தவாறு பெற்றுக் கொள்ளப்பட்ட புகைப்படங்கள் அல்லது கூற்றுக்கள், கட்சி அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் விதத்தில் அல்லது பாதிப்புக்குட்படுத்துகின்ற விதத்தில் அச்சு, இலத்திரனியல் அல்லது வேறு ஊடகங்களில் அல்லது பிரசார ஊடகமொன்றினூடாக வெளிப்படுத்தல், ஒலி/ஒளிபரப்புதல் அல்லது பகிரப்படுத்தல் கூடாது.

02. வாக்கெடுப்பு நிலையங்களில் அல்லது அஞ்சல் வாக்கெடுப்பு நிலையங்களில் புகைப்படமெடுத்தல் அல்லது காணொளிப்படமெடுத்தல் (வீடியோ எடுத்தல்) என்பவற்றை தேர்தல் ஆணைக்குழுவின் உரிய எழுத்துமூல அனுமதியின்றி மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும். ஏதேனுமொரு விதத்தில் வாக்கெடுப்பு நிலையங்களினுள் அல்லது அஞ்சல் வாக்களிப்பு நிலையங்களினுள் உரிய அனுமதியின்றி பெற்றுக் கொள்ளப்பட்ட புகைப்படங்கள் அல்லது காணொளிக் காட்சிகளை அச்சு, இலத்திரனியில் அல்லது சமூக ஊடகங்களூடாக பகிரங்கப்படுத்தல் கூடாது.

03. தேர்தலொன்றின் தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக வெளியிடும் வரை தேர்தலின் உத்தியோகப்பற்றற்ற முடிவுகளை வெளியிடுவதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என்.ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2019, ஒற்றோபர் 27.

11-1032

1A - PG 4723 — 267 (2019/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2148/21 - 2019 නොවැම්බර් මස 05 වැනි අඟහරුවාදා - 2019.11.05
2148/21 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2019.09.21 ஆந் திகதிய 2141/87 ஆம் இலக்க, 2019.10.27 ஆந் திகதிய 2146/39 ஆம் இலக்க இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்ற வேண்டிய ஊடக வழிகாட்டி நெறிகள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் மேலதிகமாக வெளியிடப்படுகின்ற ஊடக வழிகாட்டு நெறிகள்

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சம்பந்தமாக "அமைதிக் காலம்" என்பது, தேர்தலை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தினத்திற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு பெறுபேறுகள் வெளியிடும் காலம் வரையான காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியினுள் அரசியல் கட்சியொன்றை அல்லது வேட்பாளர் ஒருவரை ஊக்குவிப்பதற்கு அல்லது பாதிப்புக்குட்படுத்துவதற்கு காரணமாக அமையும் பிரகாரம் எந்தவிதமான பிரசார நடவடிக்கை அல்லது பிரசார அறிவித்தல்களை பகிரங்கப்படுத்தல் கூடாது.

எவ்வாறாயினும், அமைதிக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்னைய தினத்தில் அரசியல் கட்சி அல்லது வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக நடாத்தப்படும் கூட்டங்கள் சம்பந்தமான அறிக்கைகள், அக்கூட்டங்கள் நடாத்தப்பட்ட தினத்திற்கு அடுத்த தினம் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் செய்தி ஒளி/ ஒலிபரப்புச் செய்யப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் மாத்திரம் போட்டியிடும் கட்சிக்கு அல்லது வேட்பாளருக்குச் சமமான காலப்பகுதியொன்று ஒதுக்கப்படும் வகையில் ஒளி/ஒலிபரப்புச் செய்ய முடியும். அத்துடன் குறிப்பிட்ட இறுதிப் பிரசாரக் கூட்டம் நடாத்தப்பட்ட தினத்திற்கு அடுத்த தினம் வெளியிடப்படுகின்ற செய்திப் பத்திரிகைகளிலும் இறுதிக் கூட்டங்களின் அறிக்கைகளை எந்தவொரு கட்சிக்கோ அல்லது வேட்பாளருக்கோ விசேட கவனம் செலுத்தப்படாத பிரகாரம் வெளியிட முடியும்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2019, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி.

11-1407

1A - PG 4742— 167 (2019/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## ஊடக அறிவித்தல்கள்

## சனாதிபதித் தேர்தல் - 2019

| இலக்கம் | விடயம் | திகதி |
|---|---|---|
| 01. | பெயர்குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்றல்,வைப்புப் பணம் வைப்புச் செய்தல் மற்றும் வாக்கெடுப்பு | 2019.009.18 |
| 02. | அஞ்சல் வாக்காளர்களின் வசதிக்காக தேருநர் இடாப்புக்களைக் காட்சிப்படுத்தல் | 2019.09.18 |
| 03. | தமது வாக்கெடுப்புப் நிலையம் அமையப் பெற்றுள்ள பிரதேசத்தில் காணப்படுகின்ற நிலைமை காரணமாக அந்த வாக்கெடுப்பு நிலையத்திற்கு சென்று வாக்கை அளிக்க முடியாமல் போகும் என்ற சாதாரண அச்சத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு வேறு வாக்கெடுப்பு நிலையமொன்றிற்குச் சென்று வாக்கை அளிப்பதற்கான வசதி | 2019.09.18 |
| 04. | அஞ்சல் வாக்காளர்கள் மற்றும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் கவனத்திற்கு | 2019.09.18 |
| 05. | வைப்புப் பணம் கையேற்றல் | 2019.09.19 |
| 06. | வைப்புப் பணம் கையேற்றல் | 2019.09.20 |
| 07. | வைப்புப் பணம் கையேற்றல் | 2019.09.23 |
| 08. | இறப்பெய்திய மற்றும் வெளிநாடு சென்றுள்ள வாக்காளர்களின் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் | 2019.09.23 |
| 09. | வேட்பாளர் பெயர்ப்பட்டியலை வர்த்தமானியில் பிரசுரித்தல் தொடர்பாக | 2019.09.24 |
| 10. | வைப்புப் பணம் கையேற்றல் | 2019.09.24 |
| 11. | வைப்புப் பணம் கையேற்றல் | 2019.09.25 |
| 12. | எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலுக்குரிய ஊடக அறிவித்தல் | - |
| 13. | எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலுக்குரிய ஊடக அறிவித்தல் | - |
| 14. | வைப்புப் பணம் கையேற்றல் | 2019.09.26 |
| 15. | வைப்புப் பணம் கையேற்றல் | 2019.09.27 |
| 16. | அஞ்சல் மூலம் வாக்களித்தல் வசதி | 2019.09.30 |
| 17. | வைப்புப் பணம் கையேற்றல் | 2019.09.30 |
| 18. | வைப்புப் பணம் கையேற்றல் | 2019.10.01 |
| 19. | வைப்புப் பணம் கையேற்றல் | 2019.10.02 |
| 20. | வைப்புப் பணம் கையேற்றல் | 2019.10.03 |
| 21. | பெயர்குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்றல் நிகழச்சித்திட்டம் | 2019.10.04 |
| 22. | வைப்புப் பணம் கையேற்றல் | 2019.10.04 |
| 23. | அரச சேவையின் வேலை நிறுத்தப் போராட்டங்கள் காரணமாக அத்தியாவசிய சேவை களின் வீழ்ச்சி தொடர்பாக | 2019.10.06 |
| 24. | வைப்புப் பணம் கையேற்றல் | 2019.10.06 |
| 25. | பெயர்குறித்த நியமனப் பத்திரங்கள் தொடர்பான முடிவுகளை அறிவிப்பதற்கான அறிவித்தல்கள் | 2019.10.07 |
| 26. | சனாதிபதித் தேர்தலுக்குரிய வாக்குச் சீட்டுகள் மற்றும் வாக்குப் பெட்டிகள் தொடர்பானது | 2019.10.08 |
| 27. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.09 |
| 28. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.10 |
| 29. | 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் | 2019.10.10 |
| 30. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.11 |
| 31. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.12 |
| 32. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.13 |

| இலக்கம் | விடயம் | திகதி |
|---|---|---|
| 33. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.14 |
| 34. | வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளரின் ஆளடையாளத்தை உறுதிசெய்வது கட்டாயமான தென்பது | 2019.10.14 |
| 35. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.15 |
| 36. | அஞ்சல் மூலம் வாக்களித்தல் வசதிகள் மற்றும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகம் | 2019.10.15 |
| 37. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.16 |
| 38. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.17 |
| 39. | உடல் வலிமையிழப்பொன்றிற்கு உட்பட்ட வாக்காளர்கள் விசேட போக்குவரத்து வசதி களுக்காக விண்ணப்பித்தல் | 2019.10.17 |
| 40. | அரச அலுவலகங்கள் அல்லது நிறுவனங்களினுள் வாக்கு இரந்து கேட்டல், துண்டுப் பிரசுரங்களைப் பகிர்வதிலிருந்து தவிர்ந்திருப்பதன் தேவைப்பாடு | 2019.10.17 |
| 41. | அஞ்சல் வாக்கு அடையாளமிடல் தொடர்பாக அறிவித்தல் | 2019.10.17 |
| 42. | தேர்தல் முறைப்பாடுகளைத் தீர்த்தல் பிரிவின் தொலைபேசி எண்கள் | 2019.10.19 |
| 43. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.18 |
| 44. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.19 |
| 45. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.20 |
| 46. | செல்லுபடியான ஆளடையாள அட்டையொன்றை சமர்ப்பிக்காத எந்தவொரு வாக்காளருக்கும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்காமை | 2019.10.19 |
| 47. | உடல்வலிமையிழப்பொன்றிற்கு உட்பட்ட வாக்காளர் ஒருவருக்கு உதவியாரொருவரை உடனழைத்து செல்லல் | 2019.10.22 |
| 48. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.21 |
| 49. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.22 |
| 50. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.23 |
| 51. | தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கை அளிப்பதற்காக லீவு வழங்குதல் | 2019.10.23 |
| 52. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.24 |
| 53. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.25 |
| 54. | அரச மற்றும் தனியார் பிரிவுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வாக்களிப் பதற்கு இயலச் செய்வதற்காக லீவு வழங்குதல் | 2019.10.26 |
| 55. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.26 |
| 56. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.27 |
| 57. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.28 |
| 58. | உள்ளூர் அதிகார சபைகளின் அரச ஆதனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்து வதைத் தவிர்த்தல் | 2019.10.27 |
| 59. | அனைத்து வாகனங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளில் ஒட்டப்பட்டுள்ள ஸ்ரிக்கர்களை அகற்றுதல் | 2019.10.27 |
| 60. | வெளிநாடுகளிலிருந்து வருகை தந்துள்ள வாக்காளர் வாக்களிப்பு நிலையங்களுக்கு கடவுச் சீட்டை எடுத்து வருவதன் தேவைப்பாடு | 2019.10.27 |
| 61. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.29 |
| 62. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.30 |
| 63. | சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 78, 80 மற்றும் 90 ஆம் பிரிவிற்கமைய தேருநர்களுக்கு தகாத செல்வாக்குச் செலுத்துததைத் தவிர்த்தல் | 2019.10.30 |
| 64. | வாக்களித்தல் முறைமை | 2019.10.30 |

| இலக்கம் | விடயம் | திகதி |
|---|---|---|
| 65. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.10.31 |
| 66. | தேர்தல் முடிவுகள் ஒலி ஒளிப்பரப்பு உரிமையை வழங்குதல் (தகவல் தொழில்நுட்பப் பிரிவு) | 2019.11.02 |
| 67. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.01 |
| 68. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.02 |
| 69. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.03 |
| 70. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.04 |
| 71. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.05 |
| 72. | அஞ்சல் வாக்குகளில் தமது வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளதாக அரசியல்வாதிகள் மற்றும் ஆதரவாளர்களால் செய்யப்படுகின்ற உண்மையற்ற கருத்துக்கள் | 2019.11.05 |
| 73. | வாக்கெடுப்பு மாவட்ட மட்டத்தில் தற்போது தாபிக்கப்பட்டுள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ள அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல்கள் அலுவலகங்களை அகற்றுதல் | கையொப்பம் இடப்பட வில்லை |
| 74. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.06 |
| 75. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.07 |
| 76. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.08 |
| 77. | ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டையின் தகவல்களை உள்ளடக்கிய கடிதத்தை அங்கீகரிக்கப்பட்ட எழுத்தாவண மொன்றாக ஏற்றுக்கொள்ளல். | 2019.11.08 |
| 78. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.09 |
| 79. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.10 |
| 80. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.11 |
| 81. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.12 |
| 82. | வாக்கெடுப்பு மாவட்ட மட்டத்தில் தற்போது தாபிக்கப்பட்டுள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ள அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல்கள் அலுவலகங்களை அகற்றுதல் | 2019.11.12 |
| 83. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.13 |
| 84. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.14 |
| 85. | தேர்தல்கள் கடமைகளுக்காக நியமனம் செய்யப்பட்டுள்ள அரச அலுவலகங்களுக்காகச் செய்யப்படுகின்ற தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தல் | 2019.11.14 |
| 86. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.15 |
| 87. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.15 |
| 88. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.15 |
| 89. | தினசரி தேர்தல் முறைப்பாடுகளின் பொழிப்பு | 2019.11.15 |
| 90 | தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தல் | 2019.12.02 |

**2019 சனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களுக்காக வானலைக் காலத்தைக் குறித்தொதுக்குதல்.**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்**

| திகதி | காலம் | | | | |
|---|---|---|---|---|---|
| | இரவு 19.45 – 20.00 | இரவு 20.00 – 20.15 | இரவு 20.15 – 20.30 | இரவு 20.30 – 20.45 | இரவு 20.45 – 21.00 |
| 2019.10.16 | - | திரு. அநுருத்த பொல்கம்பல | திரு. அஜந்த த செய்சா | திரு. ரொஹான் பள்ளெவத்த | திரு. வர்ணகுல சூரிய மில்ரோய் சர்ஜியஸ் பிரனாந்து |
| 2019.10.17 | - | திரு. சமன் பெரேரா | திரு. ஏ.எஸ்.பீ. லியனகே | திரு. பீ.எம். எதிரிசிங்ஹ | திரு. சந்திரசேக்கர ஹேரத் ஹிட்டிஹாமி கோராளலாகே சமன்சிறி |
| 2019.10.18 | - | திரு. ஆரியவங்ஷ திசாநாயக்க | திரு. ஐதுருஸ் மொஹமது இல்லியாஸ் | திரு. சரத் கீர்த்திரத்ன | திரு. சமரவீர வீரவன்னி |
| 2019.10.19 | திரு. எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா | திரு. அநுர குமார திசாநாயக்க | பத்தரமுல்லே சீலரதன தேரர் | திரு. துமிந்த நாகமுவ | திரு. அஜந்த த சொய்சா |
| 2019.10.20 | திரு. ஏ.எச்.எம். அலவி | திரு. கோட்டாபய ராஜபக்ஷ | திரு. பாணி விஜேசிறிவர்தன | திரு. கெட்டகொட ஜயந்த | திரு. அசோக்க வடிகமங்காவ |
| 2019.10.21 | - | திரு. மஹேஷ் சேனாநாயக்க | திரு. பத்தெ கமகே நந்திமித்திர | திரு. சரத் மனமேந்திர | திரு. ராஜீவ விஜேசிங்ஹ |
| 2019.10.22 | - | திரு. அபரக்கே பூஞ்ஞானந்த தேரர் | திரு. பியசிறி விஜேநாயக்க | திரு. சுப்பிரமணியம் குணரத்தினம் | திரு. சிறிதுங்க ஜயசூரிய |
| 2019.10.23 | - | திரு. சஜித் பிரேமதாச | பத்தரமுல்லே சீலரதன தேரர் | திரு. எஸ். அமரசிங்க | திரு. நாமல் ராஜபக்ஷ |
| 2019.10.24 | - | திரு. வர்ணகுலசூரிய மில்ரோய் சர்பியஸ் பிரனாந்து | திரு. ஐதுருஸ் மொஹமது இல்லியாஸ் | திரு. ராஜீவ விஜேசிங்ஹ | திரு. பியசிறி விஜேநாயக்க |
| 2019.10.25 | - | திரு. பீ.எம். எதிரிசிங்ஹ | திரு. சமன் பெரேரா | திரு. ஏ.எச்.எம். அலவி | திரு. எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா |
| 2019.10.26 | திருமதி அஜந்தா பெரேரா | திரு. சஜித் பிரேமதாச | திரு. நாமல் ராஜபக்ஷ | திரு. ஏ.எஸ்.பீ. லியனகே | திரு. அநுர குமார திசாநாயக்க |
| 2019.10.28 | - | திரு. சுப்பிரமணியம் குணரத்தினம் | திரு. சந்திரசேக்கர ஹேரத் ஹிட்டிஹாமி கோராளலாகே சமன்சிறி | திரு. அருண த சொய்சா | |
| 2019.10.29 | - | அபரக்கே பூஞ்ஞானந்த தேரர் | திரு. பாணி விஜேசிறிவர்தன | திரு. அசோக்க வடிகமங்காவ | திரு. கெட்டகொட ஜயந்த |
| 2019.10.31 | - | திரு. எஸ். அமரசிங்க | திரு. சரத் கீர்த்திரத்ன | திரு. ஆரியவங்ஷ திசாநாயக்க | திரு. மஹேஷ் சேனாநாயக்க |
| 2019.11.02 | திரு. கோட்டாபய ராஜபக்ஷ | திரு. சிறிதுங்க ஜயசூரிய | திரு. அருண த சொய்சா | திரு. எம்.கே. சிவாஜிலிங்கம் | திரு. சமரவீர வீரவன்னி |
| 2019.11.03 | திரு. துமிந்த நாகமுவ | திரு. ஏ.எஸ்.பீ. லியனகே | அபரக்கே பூஞ்ஞானந்த தேரர் | திரு. சரத் கீர்த்திரத்ன | திரு. சமரவீர வீரவன்னி |

| திகதி | காலம் | | | | |
|---|---|---|---|---|---|
| | இரவு 19.45 – 20.00 | இரவு 20.00 – 20.15 | இரவு 20.15 – 20.30 | இரவு 20.30 – 20.45 | இரவு 20.45 – 21.00 |
| 2019.11.04 | - | திரு. ராஜீவ விஜேசிங்க | திருமதி. அஜந்தா பெரேரா | திரு. எஸ். அமரசிங்க | திரு. அநுர குமார திசாநாயக்க |
| 2019.11.05 | - | திரு. நாமல் ராஜபக்ஷ | திரு. ரொஹான் பள்ளெவத்த | திரு. ஆரியவங்ஷ திசாநாயக்க | திரு. சரத் மனமேந்திர |
| 2019.11.06 | - | - | திரு. பத்தே கமமே நந்திமித்திர | திரு. எம்.கே. சிவாஜிலிங்கம் | திரு. அநுருத்த பொல்கம்பல |
| 2019.11.07 | - | திரு. ஐதுருஸ் மொஹமது இல்லியாஸ் | திரு. அசோக்க வடிகமங்காவ | திரு. ரொஹான் பள்ளெவத்த | திரு. அநுருத்த பொல்கம்பல |
| 2019.11.08 | - | திரு. அஜந்தா த சொய்சா | திரு. பத்தே கமமே நந்திமித்திர | திரு. சந்திரசேக்கர ஹேரத் ஹிட்டிஹாமி கோராளலாகே சமன்சிறி | திரு. எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா |
| 2019.11.09 | திரு. பியசிறி விஜேநாயக்க | திரு. மஹேஷ் சேனாநாயக்க | திரு. சுப்பிரமணியம் குணரத்தினம் | திரு. சிறிதுங்க ஜயசூரிய | திரு. கோட்டாபய ராஜபக்ஷ |
| 2019.11.10 | திரு. சரத் பிரேமதாச | திரு. ஏ.எச்.எம். அலவி | திரு. துமிந்த நாகமுவ | திரு. பாணி விஜேசிறிவர்தன | திரு. பீ.எம். எதிரிசிங்ஹ |
| 2019.11.11 | - | திரு. கெட்டகொட ஜயந்த | திரு. அருண த சொய்சா | திரு. வர்ணகுலசூரிய மில்ரோய் சர் ஜியஸ் பிரனாந்து | திரு. சமன் பெரேரா |
| 2019.11.12 | - | - | திருமதி அஜந்தா பெரேரா | பத்தரமுல்லே சீலரதன தேரர் | திரு. எம்.கே. சிவாஜிலிங்கம் |

**2019 சனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களுக்காக வானலைக் காலத்தைக் குறித்தொதுக்குதல்.**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**

| திகதி | காலம் | | | |
|---|---|---|---|---|
| | மு.ப. 11.00 – 11.15 | மு.ப. 11.15 – 11.30 | மு.ப. 11.30 – 11.45 | மு.ப. 11.45 – 12.00 |
| 2019.10.15 | திரு. சுப்பிரமணியம் குணரத்தினம் | திரு. சரத் மனமேந்திர | திரு. அஜந்த த சொய்சா | திரு. பியசிறி விஜேநாயக்க |
| 2019.10.16 | திரு. கெட்டகொட ஜயந்த | திரு. ஆரியவங்ஷ திசாநாயக்க | திரு. நாமல் ராஜபக்ஷ | திரு. அருண த சொய்சா |
| 2019.10.17 | திரு. அநுர குமார திசாநாயக்க | திரு. சிறிதுங்க ஜயசூரிய | திரு. ஏ.எஸ்.பீ. லியனகே | திரு. சஜித் பிரேமதாச |
| 2019.10.18 | திரு. அசோக்க வடிகமங்காவ | திரு. வர்ணகுலசூரிய மில்ரோய் சர்ஜியஸ் பிரனாந்து | திரு. பாணி விஜேசிறிவர்தன | திரு. எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா |
| 2019.10.19 | திரு. சந்திரசேக்கர ஹேரத் ஹிட்டிஹாமி கோராளலாகே சமன்சிறி | திரு. ராஜீவ விஜேசிங்க | திரு. எஸ். அமரசிங்க | திரு. கோட்டாபய ராஜபக்ஷ |
| 2019.10.20 | திரு. சமரவீர வீரவன்னி | திரு. அநுருத்த பொல்கம்பல | திருமதி. அஜந்தா பெரேரா | திரு. துமிந்த நாகமுவ |
| 2019.10.21 | பத்தரமுல்லே சீலரதன தேரர் | திரு. பத்தே கமமே நந்திமித்திர | அபரக்கே பூஞ்ஞானந்த தேரர் | திரு. ஏ.எச்.எம். அலவி |
| 2019.10.22 | திரு. மஹேஷ் சேனாநாயக்க | திரு. பீ.எம். எதிரிசிங்ஹ | திரு. சமன் பெரேரா | திரு. எம்.கே. சிவாஜிலிங்கம் |
| 2019.10.23 | திரு. சரத் கீர்த்திரத்ன | திரு. ஐதுருஸ் மொஹமது இல்லியாஸ் | திரு. ரொஹான் பள்ளெவத்த | - |
| 2019.10.24 | திரு. கோட்டாபய ராஜபக்ஷ | திரு. பீ.எம். எதிரிசிங்ஹ | பத்தரமுல்லே சீலரதன தேரர் | திரு. நாமல் ராஜபக்ஷ |
| 2019.10.25 | திரு. பாணி விஜேசிறிவர்தன | திரு. சுப்பிரமணியம் குணரத்தினம் | திரு. சரத் கீர்த்திரத்ன | அபரெக்கே பூஞ்ஞானந்த தேரர் |
| 2019.10.26 | திரு. துமிந்த நாகமுவ | திரு. எஸ். அமரசிங்க | திரு. ஐதுருஸ் மொஹமது இல்லியாஸ் | திரு. பியசிறி விஜேநாயக்க |
| 2019.10.28 | திரு. சமன் பெரேரா | திரு. பத்தே கமமே நந்திமித்திர | திரு. சரத் மனமேந்திர | திரு. சிறிதுங்க ஜயசூரிய |
| 2019.10.29 | திரு. அசோக்க வடிகமங்காவ | திரு. எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா | திரு. ராஜீவ விஜேசிங்க | திரு. ரொஹான் பள்ளெவத்த |
| 2019.10.30 | திரு. அருண த சொய்சா | திரு. சஜித் பிரேமதாச | திரு. வர்ணகுலசூரிய மில்ரோய் சர்ஜியஸ் பிரனாந்து | திரு. ஏ.எஸ்.பீ. லியனகே |
| 2019.10.31 | திரு. அஜந்த த சொய்சா | திரு. சமரவீர வீரவன்னி | திருமதி. அஜந்தா பெரேரா | திரு. சந்திரசேக்கர ஹேரத் ஹிட்டிஹாமி கோராளலாகே சமன்சிறி |
| 2019.11.01 | திரு. கெட்டகொட ஜயந்த | திரு. அநுர குமார திசாநாயக்க | திரு. ஏ.எச்.எம். அலவி | திரு. மஹேஷ் சேனாநாயக்க |

| திகதி | காலம் | | | |
|---|---|---|---|---|
| | மு.ப. 11.00 – 11.15 | மு.ப. 11.15 – 11.30 | மு.ப. 11.30 – 11.45 | மு.ப. 11.45 – 12.00 |
| 2019.11.02 | திரு. அநுருத்த பொல்கம்பல | திரு. எம்.கே. சிவாஜிலிங்கம் | திரு. ஆரியவங்ஷ திசாநாயக்க | - |
| 2019.11.03 | திரு. பாணி விஜேசிறிவர்தன | திரு. அசோக்க வடிகமங்காவ | திரு. துமிந்த நாகமுவ | திரு. ஐதுருஸ் மொஹமது இல்லியாஸ் |
| 2019.11.04 | திரு. வர்ணகுலசூரிய மில்ரோய் சர்ஜியஸ் பிரனாந்து | திரு. சுப்பிரமணியம் குணரத்தினம் | திரு. சிறிதுங்க ஜயசூரிய | பத்தரமுல்லே சீலரதன தேரர் |
| 2019.11.05 | திரு. அநுர குமார திசாநாயக்க | திரு. சரத் மனமேந்திர | திரு. ராஜீவ விஜேசிங்க | திரு. ஏ.எச்.எம். அலவி |
| 2019.11.06 | திரு. சமன் பெரேரா | திரு. சந்திரசேக்கர ஹேரத் ஹிட்டிஹாமி கோராளலாகே சமன்சிறி | திரு. சஜித் பிரேமதாச | திரு. எஸ். அமரசிங்க |
| 2019.11.07 | திரு. சமரவீர வீரவன்னி | திரு. அருண த சொய்சா | திரு. அஜந்த த சொய்சா | திரு. எம்.கே. சிவாஜிலிங்கம் |
| 2019.11.08 | திரு. பீ.எம். எதிரிசிங்ஹ | திரு. ஆரியவங்ஷ திசாநாயக்க | திரு. சரத் கீர்த்திரத்ன | திரு. எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா |
| 2019.11.09 | திரு. ரொஹான் பள்ளெவத்த | திரு. கோட்டாபய ராஜபக்ஷ | திரு. மஹேஷ் சேனாநாயக்க | திரு. பியசிறி விஜேநாயக்க |
| 2019.11.11 | திரு. அநுருத்த பொல்கம்பல | திருமதி. அஜந்தா பெரேரா | திரு. நாமல் ராஜபக்ஷ | திரு. பத்தே கமமே நந்திமித்திர |
| 2019.11.12 | திரு. கெட்டகொட ஜயந்த | அபரக்கே பூஞ்ஞானந்த தேரர் | திரு. ஏ.எஸ்.பீ. லியனகே | - |

**தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் தொடர்பான விபரங்கள்.**

| மாவட்டம் | பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் கையொப்பத்துடன் | பிரதேச செயலாளர் / கிராம அலுவலர்களின் கையொப்பத்துடன் | முழு மொத்தம் |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | 8,748 | 8,749 |
| கம்பஹா | - | 16,728 | 16,721 |
| களுத்துறை | - | 13,408 | 13,408 |
| மஹநுவர | - | 14,907 | 14,907 |
| மாத்தளை | 202 | 6,702 | 6,904 |
| நுவரெலியா | 13 | 8,795 | 8,808 |
| காலி | 5,780 | 4,823 | 10,603 |
| மாத்தறை | 8,468 | 198 | 8,666 |
| அம்பாந்தோட்டை | 8,528 | 1,232 | 9,760 |
| யாழ்ப்பாணம் | 17 | 2,172 | 2,189 |
| கிளிநொச்சி | 262 | 488 | 750 |
| மன்னார் | 61 | 453 | 514 |
| வவுனியா | 598 | - | 598 |
| முல்லைத்தீவு | - | - | - |
| மட்டக்களப்பு | 2,148 | - | 2,148 |
| திகாமடுல்லை | - | - | 8,402 |
| திருகோணமலை | 4,009 | - | 4,009 |
| குருநாகல் | - | 18,008 | 18,008 |
| புத்தளம் | 2,397 | 4,747 | 7,144 |
| அநுராதபுரம் | 15 | 12,731 | 12,746 |
| பொலன்னறுவை | 06 | 6,298 | 6,304 |
| பதுளை | - | 9,283 | 9,283 |
| மொனறாகலை | - | 4,385 | 4,385 |
| இரத்தினபுரி | 762 | 17,221 | 17,983 |
| கேகாலை | 75 | 12,029 | 12,104 |
| **மொத்தம்** | **33,342** | **163,356** | **196,698** |

## இறப்பெய்தியுள்ளதாக மற்றும் வெளிநாடு சென்றுள்ளதாக அறிக்கையிடப்பட்ட வாக்காளர்கள் தொடர்பான விபரங்கள்

| மாவட்டம் | இறப்படைந்துள்ளதாக அறிக்கையிடப் பட்டுள்ள வாக்காளர்களின் பெயர்களின் எண்ணிக்கை | வெளிநாடு சென்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ள வாக்காளர்களின் பெயர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு | 7,599 | 6,775 |
| கம்பஹா | 14,577 | 21,035 |
| களுத்துறை | 8,504 | 9,265 |
| மஹநுவர | 9,244 | 16,428 |
| மாத்தளை | 4,356 | 6,662 |
| நுவரெலியா | 3,548 | 2,579 |
| காலி | 9,278 | 13,202 |
| மாத்தறை | 6,501 | 7,728 |
| அம்பாந்தோட்டை | 4,263 | 5,655 |
| யாழ்ப்பாணம் | 4,559 | 6,684 |
| கிளிநொச்சி | 605 | 1,422 |
| மன்னார் | 675 | 1,344 |
| வவுனியா | 808 | 892 |
| முல்லைத்தீவு | 499 | 969 |
| மட்டக்களப்பு | 2,973 | 15,712 |
| திகாமடுல்ல | 4,375 | 7,063 |
| திருகோணமலை | 1,956 | 4,512 |
| குருநாகல் | 14,643 | 27,823 |
| புத்தளம் | 5,303 | 19,185 |
| அநுராதபுரம் | 7,320 | 5,604 |
| பொலன்னறுவை | 2,823 | 5,246 |
| பதுளை | 5,558 | 3,600 |
| மொணராகலை | 2,524 | 1,780 |
| இரத்தினபுரி | 7,901 | 5,275 |
| கேகாலை | 6,803 | 8,778 |
| **மொத்தம்** | **137,195** | **205,218** |

**ஊடக அறிவித்தல் - 51**

## தேர்தல் ஆணைக்குழு

**சனாதிபதி தேர்தல் 2019.11.16**
**தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தமது வாக்கினை அளிப்பதற்கு இயலச்செய்வதற்காக விடுமுறை வழங்குதல்.**

2019.11.16 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலின்போது தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தமது வாக்கை அளிப்பதற்கு இயலச் செய்வதற்காக விடுமுறை வழங்குதல் தொடர்பில் தொடர்புடைய 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் தொழில்தருநர்கள் மற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் அறிந்துகொள்வதற்காக.

110(1) தேர்தலொன்றில் நேரடியாக வாக்களிப்பதற்கு உரித்துடையவரான வேறு எவரேனும் ஆளின் தொழில் தருநராக வுள்ள ஆளெவரும் அத்தகைய வேறு ஆளொருவரால், அதற்கென எழுத்து மூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், அத்தேர்தலில் அத்தகைய வேறு ஆள் நேரடியாக வாக்களிக்க இயலச் செய்வதற்குப் போதுமானதெனக் கருதக்கூடியவரான இடையறாது தொடர்ந்து செல்லும் அத்தகைய நேரத்திற்கு (4 மணித்தியாலக் கால நீட்சிக்குக் குறையாத) எழுத்திலான சம்பள இழப்பில்லாத விடுமுறையை அத்தகைய வேறு ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

(1அ) ஒவ்வொரு தொழில் தருநராலும்,

(அ) (1) முதலாம் உட்பிரிவின் கீழ் விடுமுறைக்கு விண்ணப்பிக்கின்ற ஆட்களின் பெயர்கள்: அத்துடன்

(ஆ) அந்த உட்பிரிவின் கீழ் விடுமுறை வழங்கப்பட்ட ஆட்களின் பெயர்களும் அத்தகைய ஆட்களுக்கு எக்காலப் பகுதிகளுக்கு அத்தகைய விடுமுறை வழங்கப்பட்டுள்ளதோ அக்காலப்பகுதிகளும்:

அத்துடன் அத்தகைய கூற்றை தொழிலிடத்தில் துலாம்பரமாக வெளிக்காட்டி வைக்கச் செய்தலும் வேண்டும். அத்துடன்

(2) முதலாம் உட்பிரிவின் அல்லது (1ஆ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்கும் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐநூறு ரூபாவினை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாதத்திற்கு மேற்படாத காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியத்தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

02. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தமது வாக்கை பிரயோகிக்கும் நோக்கத்திற்காக விடுமுறை வழங்குமாறு எழுத்துமூலம் கோருகின்ற அனைத்து தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் விடுமுறை வழங்குதல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படுகின்ற விடுமுறை காலப்பகுதி அமய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் உள்ளடங்களாக அனைத்து தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பிலும் சம்பளத்துடனான விசேட லீவொன்றாக கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அது தொழிலில் ஈடுபட்டுள்ளவரின் பொதுவான லீவு உரித்துக்கு அப்பாற் பட்டதாக இருத்தல் வேண்டும்.

03. தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்த நோக்கத்திற்காக வழங்கப்படுகின்ற விடுமுறை காலப்பகுதி அந்த தொழிலில் ஈடுபட்டுள்ளவரின் கடமை நிலையம் மற்றும் வாக்கெடுப்பு நிலையத்திற்கு இடையிலான தூர அளவின் மீது தொழில் வழங்குநரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

04. சட்டத்திற்கமைய லீவு பெற்றுக்கொள்ளல் தொடர்பாக இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களின்போது தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதால் இந்ததேர்தலின்போது வாக்களிப் பதற்கு உரித்துக் கொண்டுள்ள தமது தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சட்ட ரீதியாக உரித்தாகின்ற லீவினை வழங்குமாறு அரச மற்றும் தனியார் ஆகிய இரு தரப்புக்களின் அனைத்து தொழில்வழங்குநர்களிடமும் கேட்டுக் கொள்கின்றேன்.

05. மேற்குறித்த சனாதிபதித் தேர்தல் 2019 நவம்பர் 16 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 7.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை நடாத்தப்படும்.

06. இது தொடர்பில் அனைத்து தொழில்தருநர்களிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற ஒத்துழைப்புத் தொடர்பாக பெரிதும் மெச்சுகின்றேன்.

**மஹிந்த தேசப்பிரிய,**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல் ஆணைக்குழு சார்பாக.

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2019.10.23

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2147/46 - 2019 ඔක්තෝබර් මස 29 වැනි අඟහරුවාදා - 2019.10.29
2147/46 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்**

30 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

தேர்தல் ஆணைக்குழுவினால் 2019.10.07 ஆந் திகதிய 2144/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட, 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலின் II ஆம் பந்தியில் "பிற்பகல் 4.00 மணி வரை" எனும் சொற்களையும் இலக்கங்களையும் நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக "பிற்பகல் 5.00 மணி வரை" எனும் சொற்களை இடுவதன் மூலம் அந்த அறிவித்தல் திருத்தம் செய்யப்படுகின்றதென 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2019, ஒற்றோபர் 29.

11-1100

1A-PG 4726 - 267 (2019/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## தேர்தல்கள் சட்டங்களைச் செயல் வலுப்படுத்துவதற்கான நிறுவனக் குறிப்பு



ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2141/52 - 2019 සැප්තැම්බර් මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.09.19
2141/52 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்கத்திற்கு அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கு உரித்தான எவையேனும் அசையாத அல்லது அசையும் ஆதனங்களை கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கு இன்றேல் பாதிப்புக்குக் காரணமாகும் விதத்திலோ அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்தும் பணிக்கு தடங்கலாகும் விதத்திலோ பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ(4)(அ) உப உறுப்புரையின்கீழ், தேர்தல் ஆணைக்குழுவினால் உருவாக்கப்படுகின்ற அரசாங்கத்திற்கு அல்லது கூட்டுத்தாபனமொன்றுக்கு உரித்தான எவையேனும் அசையாத அல்லது அசையும் ஆதனங்களை தேர்தலொன்றின் போது கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களின் ஊக்குவிப்பு இன்றேல் பாதிப்புக்கு காரணமாகும் விதத்திலோ அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தடங்கலாகும் விதத்திலோ பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பிரகடனப்படுத்தப்படுகின்றன.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
ராஜகிரிய,
2019, செத்தெம்பர் 19.

1A - PG 4655 — 1517 (2019/09)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

அரசியலமைப்பின் 104ஆ(4)(அ) உறுப்புரைக்கமைய, "தேர்தல் காலத்தின்போது அரசுக்கு அல்லது ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையாஆதனமொன்றை"ஏதேனுமோர்அரசியல் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைத் தேர்ந்தெடுப்பதை ஊக்குவிக்கின்ற அல்லது தடுக்கின்ற பணிக்காக ஏதேனுமோர் அரசியல் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் பயன்படுத்துவதை தடை செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு. அவ்வுறுப்புரையின் (ஆ) ஆம் உபஉறுப்புரையின்கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் விடுக்கப்படுகின்ற பணிப்புக்களை அமுல்படுத்துவதற்கு அரசுக்கு உரித்தான ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் கட்டுப்பட்டுள்ளனர். ஆதலால், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அலுவலர்களும் இவ்வேற்பாடுகளுக்கு அமைவாக நடந்து கொள்ளல் வேண்டும். அதேபோன்று தமது கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து அரசாங்க அலுவலர்களும் இப்பணிப்புக்கு அமைவாக நடந்துகொள்கிறார்கள் என்பதற்கு நிறுவனத் தலைவர் பொறுப்பாதல் வேண்டும். இப்பணிப்புக்கள் அரசாங்க அமைச்சுக்கள், ஆணைக்குழுக்கள், திணைக்களங்கள், மாகாணசபைகள், உள்ளூர் அதிகார சபைகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள், அரசாங்க வங்கிகள், அரசாங்க பல்கலைக்கழகங்கள் போன்ற அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அரசாங்கத்தால் கையேற்கப்பட்டுள்ள கம்பனிகளுக்கும் வலுவுடையதாகும்.

02. **அலுவலர்கள்**

I. அரசாங்க அலுவலர்களின் ஆற்றல்கள், அறிவு, அவர்களின் காலநேரம் என்பனவும் அரச ஆதனமொன்றாவதென்பதனால் எந்தவோர் அரச அலுவலரும் தனது அலுவலக நேரத்தில் அதாவது கடமைக்கு அறிக்கை இட்டுள்ள நேரத்திற்குள் அல்லது கடமை விடுமுறை பெற்றுக் கொண்டுள்ள போது அலுவலகத்திற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ அரசியல் ரீதியான ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. அரசியல் உரிமைகள்அற்ற அலுவலர்கள் விடுமுறைகளைப் பெற்றுக்கொண்டேனும் அரசியல் ரீதியான பணிகளில் ஈடுபடக்கூடாது. அரசியல் உரிமைகள் உள்ள அலுவலர்களும் கூட அலுவலக நேரத்திற்குள் அரசியல்ரீதியான பணிகளில் ஈடுபடக்கூடாதென்பதோடு, அவ்வாறு ஈடுபடுவதாயின் முன்கூட்டியே தனிப்பட்ட அல்லது விசேட விடுமுறை அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

II. எந்தவோர் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு அரசியல் நடவடிக்கைகளுக்காக அரச ஆதனங்கள் அதாவது ஏனைய அரச அலுவலர்கள், வாகனங்கள், பிரச்சாரக் கருவிகள், அச்சு இயந்திரங்கள், தொலைபேசி வசதிகள் போன்ற அரசுக்கு உரித்தான எதனையும் பயன்படுத்தும் உரிமை கிடையாது. அவ்வாறு செய்தல் முழுமையாக தடை செய்யப்பட்டவொன்றாகும்.

III. அரசியலமைப்பு சபையினால் நியமனம் செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்களின் அதிகாரங்களின்கீழ் முறையாக மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் தவிர்ந்த இக்காலப்பகுதியில் அரசாங்க நிறுவனங்களில் எவ்விதத்திலும் ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்படுவதைத் தவிர்த்துகொள்ளுதல் வேண்டும்.

IV. தேர்தல் வெளிப்படுத்தப்பட முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அலுவலர்களின் ஆட்சேர்ப்புக்கள்/ பதவி உயர்வுகளோடு தொடர்புடைய நாடளாவிய ரீதியிலான நடைமுறையொன்று அல்லது உள்ளக பதவி உயர்வு செயல்திட்டமொன்று கால ஒத்தி வைப்பின்றி செயற்படுத்தப்பட வேண்டும் என்று அமைச்சின் செயலாளர் அல்லது நிறுவனத் தலைவர்கள் எதிர்பார்க்கின்ற போதும் முழு நாட்டுக்கும் செயற்படத்தக்கவாறு அரசாங்க சேவையோடு அல்லது அரச நிறுவனங்களோடு தொடர்புடையதாக மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள்/ பதவி உயர்வுகள் என்பன முறையாகவும் அரசியல் தலையீடுகளின்றியும் மேற்கொள்ளப்படுவதாக உரிய அதிகாரிகளுக்கு சந்தேகத்துக்கிடமின்றி உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமான சந்தர்ப்பங்களில் அதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டை வழங்க முடியும். அத்தகைய சந்தர்ப்பங்களில் அதற்காக ஆணைக்குழுவுக்கு கோரிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

V. சுகநலப் பாதுகாப்பு, சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தடைப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் அத்தியாவசிய சேவைகளைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்காகவும் பிரதேச அல்லது மாகாண மட்டத்தில் அரசாங்க ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதாயின் அத்தகைய ஆட்சேர்ப்புக்களுக்குக் கூட தேர்தல் ஆணைக்குழுவின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் எவ்வித அரசியல் தலையீடுமின்றி வெளிக்காட்டு தன்மையுடன் கூடியதாக அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு உரிய அலுவலர்களைச் சாரும்.

VI. தேர்தல் நடாத்தப்படவுள்ள பிரதேசங்களில் தேர்தல் கடமைக்காகப் பயன்படுத்துவதற்கென எதிர்பார்க்கப்படுகின்ற அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க அலுவலர்களினதும் வழமையான இடமாற்றங்கள் வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தேர்தல் முடிவடைந்து இரண்டு வாரங்கள் கழியும் வரை இடைநிறுத்தப்படும். தேர்தல் கடமைகளுக்காக பயன்படுத்தப்படாத அரசாங்க அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் அலுவலர்கள் தேர்தல் காலப்பகுதிக்குள் இடமாற்றம் செய்யப்படும் போது அரசியல் காரணங்களுக்காக இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படக் கூடாதென்பதோடு, அவ்வாறுமேற்கொண்டதாக முறைப்பாடுகள் கிடைக்காதவாறு உரிய இடமாற்றங்களை மேற்கொள்ளல் அனைத்து அதிகாரிகளினதும் பொறுப்பாகும். ஒழுக்காற்று ஆணைக்கமைய மேற்கொள்ளப்படுகின்ற

இடமாற்றங்களுக்காக இப்பணிப்பு வலுவுடையதாக காணப்படாதென்பதோடு, விசேட சந்தர்ப்பங்களில் அல்லது சேவைத் தேவைப்பாட்டுக்கமைய, இடமாற்றங்களை மேற்கொள்ள வேண்டிவரின், அதுபற்றி ஆணைக்குழுவுக்கு அறிவித்து முன்கூட்டியே அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

VII. அரசியல் உரிமைகள் அற்ற அரசாங்க அலுவலரொருவர் தனது தனிப்பட்ட சமூக வலைத்தளக் கணக்கொன்றை அல்லது வேறுகணக்கொன்றைப் பயன்படுத்தி ஏதேனும் அரசியல் கட்சியொன்றை அல்லது வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதற்கு அல்லது பாதிப்பினை ஏற்படுத்துவதற்கு ஏதேனும் ஒரு பிரச்சாரத்தை அல்லது வெளிப்படுத்துகையை மேற்கொள்வது குற்றமாகும், அரசியல் உரிமைகளுள்ள அரசாங்க அலுவலர் ஒருவராயினும் அப்பிரச்சாரமொன்றை அரச வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளக் கூடாதென்பதோடு, வெறுப்பூட்டத்தக்க வெளிப்படுத்துகைகளை மேற்கொள்ளல் அல்லது பகிரங்கப்படுத்தல் குற்றமாகும்.

### 03. வைபவங்கள், நடமாடும் சேவைகள் மற்றும் வர்த்தகக் கண்காட்சிகள்

I. *வைபவங்கள்*

தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்க நிதியை செலவிட்டு நடாத்தப்படுகின்ற பல்வேறு விதத்திலான அடிக்கல் நாட்டு விழாக்கள், திறப்பு விழாக்கள், மக்கள் கையளிப்பு நிகழ்வுகள் போன்ற வைபவங்களை அரசியல்வாதிகளின் பங்கேற்புடன் மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் தேர்தலோடு தொடர்புடைய பல்வேறு கருத்துக்கள் அவர்களினால் வெளிப்படுத்தப்படுவதாலும் இத்தகைய சந்தர்ப்பங்கள் வைபவ ரீதியாக நடாத்தப்படுவதனூடாக ஏதேனும் ஒரு கட்சி/ ஒருகுழு/வேட்பாளர் ஒருவர் ஊக்குவிக்கப்படல் அல்லது வேறொரு கட்சிக்கு/குழுவுக்கு/வேட்பாளர் ஒருவருக்கு பாதிப்பு ஏற்படக்கூடுமாதலால் இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய வைபவங்களை மற்றும் பணிகளை ஒழுங்கமைப்பதிலிருந்தும் நடாத்துவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். தேர்தல் அறிவிப்பு வெளியாவதற்கு முன்னர் திகதி நிர்ணயிக்கப்பட்ட அத்தகைய வைபவங்களை ரத்து செய்யவோ அல்லது ஒத்தி வைக்கவோ முடியாதவிடத்து, அத்தகைய வைபவங்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிட்டு அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். எவ்விதத்திலும் அரசாங்க நிதியை செலவிட்டு இத்தகைய வைபவங்கள் நடாத்தப்படுமாயின் அத்தகைய சந்தர்ப்பமொன்று எவையேனும் கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களின் ஊக்குவிப்பை அல்லது பாதிப்பை ஏற்படுத்துமாயின் அது தொடர்பாக வைபவத்தை ஒழுங்கமைத்த அலுவலர்கள் பொறுப்புக் கூறுதல் வேண்டும். அதேபோன்று இத்தேர்தல் காலப்பகுதியில் நடாத்தப்படுகின்ற வைபவங்கள் தொடர்பாக கண்காணித்து அறிக்கைகளை வைத்திருப்பதற்காக உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களை முன்கூட்டியே அறிவூட்டுவதற்கு இப்பணிகளை ஒழுங்கமைக்கின்ற அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இத்தகைய கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர்கள் ஊக்குவிப்பை அல்லது பாதிப்பை ஏற்படுத்தத்தக்கதாக எவ்வகையான வெளிப்படுத்துகையை மேற்கொள்ளல் செயற்பாடுகளை ஆற்றல் கொடிகள்/பதாகைகள்/சுவரொட்டிகள்/பத்திரங்கள்/ துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தலும் பகிர்ந்தளித்தலும் முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது. அத்தகைய பணிகளை தடுப்பதற்கு உரிய வைபவங்களை ஒழுங்கமைக்கின்ற அல்லது நிதியீட்டம் வழங்குகின்ற அரசாங்க நிறுவனங்களும் அலுவலர்களும் கட்டுப்பட்டுள்ளனர்.

II. *நடமாடும் சேவைகளும் வர்த்தக கண்காட்சிகளும்*

மக்களுக்கு சேவை வழங்கும் நோக்கோடு அரசாங்க நிதியையும் அரச ஆதனங்களையும் செலவு செய்து நடாத்தப்படுகின்ற நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் என்பவற்றினூடாக கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர் ஊக்குவிப்புகள் மேற்கொள்ளப்படும் போக்கு காணப்படுவதனால் இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய நடமாடும் சேவைகள் வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் போன்றவற்றை ஒழுங்கமைப்பதிலிருந்தும் நடாத்துவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள், களியாட்டங்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிக்கையிட்டு அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். எந்த விதத்திலும் அரசாங்க நிதியை செலவழித்து இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் போன்றவற்றை நிகழ்த்துகின்றபோது கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்பு அல்லது பாதிப்பு நிகழுமாயின் அதுதொடர்பாக உரிய பணியை ஒழுங்கமைத்த அலுவலர்கள் பொறுப்புக் கூறுதல் வேண்டும். அதே போன்று தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்தப்படுகின்ற இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் போன்றவற்றை கண்காணித்து அறிக்கைகளை வைத்திருக்குமாறு உரிய மாவட்டங்களின் தெரிவத்தாட்சியாளர்களை முன்கூட்டியே அறிவூட்டுவதற்கு இப்பணிகளை ஒழுங்கமைக்கும் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இத்தகைய எந்த ஒரு நடமாடும் சேவை, வர்த்தக கண்காட்சி மற்றும் களியாட்டத்தில் அல்லது இத்தகையதொருவேறு சந்தர்ப்பத்தில் கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்காக அல்லது பாதிப்புக்காக எத்தகைய

வெளிப்படுத்துகையையும் மேற்கொள்ளல் செயற்பாடுகளைஆற்றல் கொடிகள்/பதாகைகள்/சுவரொட்டிகள்/பத்திரங்கள்/ துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தலும் பகிர்ந்தளித்தலும் முற்றாகத் தடையென்பதோடு, அத்தகைய பணிகளைத் தடுப்பதற்கு உரிய பணிகளை ஒழுங்கமைக்கின்ற அல்லது நிதி வழங்குகின்ற அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள் கட்டுப்பட்டுள்ளனர்.

**04. வசதிகள், கொடைகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விசேட கருத்திட்டங்களை அமுலாக்கம் செய்தல்**

I. மக்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதற்காக அல்லது நாட்டில் அப்போது ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நீண்டகால அல்லது மத்தியகால விஷேட கருத்திட்டங்கள் மற்றும் வசதிகள் வழங்கும் தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை தேர்தல் காரணமாக இடைநிறுத்த முடியாத போதிலும் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டதன் பின்னர், இத்தகைய விஷேட கருத்திட்டங்கள் அல்லது தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டங்களூடாக கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர் ஊக்குவிப்பை அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதற்காக பயன்படுத்த இடமளிக்கக்கூடாது.

II. தேர்தல் காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்படுகின்ற இத்தகைய தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றினூடாக கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் நிகழ்கின்றனவாவென ஆணைக்குழு கண்காணிக்க உள்ளது.

III. தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்கத்தின் காணிகளைப் பகிர்ந்தளித்தல், அரசாங்கக் காணி உரிமைப் பத்திரங்கள் அல்லது வீடுகளின் உரிமைக் கையளிப்புக்கான உறுதிகளை வழங்குதல், பெருந்தோட்ட கைத்த அல்லது பயிரிடுகைக்காக மானியங்கள், பசளைகள், விவசாய உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், சுய தொழில் உபகரணங்கள், சைக்கிள்கள், சூரியவலு மின்சார விளக்குகள், வீடுகளைக் கட்டுவதற்கான கட்டிடப் பொருட்கள் போன்றவற்றைப் பகிர்ந்தளிக்கும் கருத்திட்டங்கள், வீட்டுக்கடன் விநியோகங்கள்/நட்ட ஈட்டுத் தொகை வழங்கல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல் நிறுத்தப்படல் வேண்டும். அவ்வாறு இடைநிறுத்தப்படுவதனால் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தடங்கல் ஏற்படுமெனத் தெரியவருமாயின் அது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். எவ்விதத்திலும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது அனுமதி வழங்கப்படுகின்ற இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது பணிகள் என்பவற்றை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டியிருப்பின் அப்பணிகளை அவ்விடயங்களுக்குப் பொறுப்பான அலுவலர்களின் பங்குபற்றலோடு மாத்திரம் எவ்வித கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்கள் ஊக்குவிப்புகள் அல்லது பாதிப்புக்கள் நிகழாதவாறு செயற்படுத்தல் அப்பணிகளுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் பொறுப்பான அலுவலர்களின் கடமையாகும்.

**05. வாகனங்கள்**

i. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்துக்கு சொந்தமான மோட்டார் வாகனங்கள், ஜீப் வண்டிகள், கெப் வண்டிகள், பஸ் வண்டிகள் அனைத்து அரச வாகனங்களுக்கும் பொறுப்பாக உள்ள அலுவலர்கள் வாகனங்களை ஏதேனுமொரு அரசியல் கட்சியின், சுயேச்சைக் குழுவொன்றின், வேட்பாளரொருவரின் பிரச்சார நடவடிக்கைகளை ஊக்குவிப்புக்காக பயன்படுத்தாத விதத்தில் தேர்தல் காலப்பகுதிக்குள் வாகனகுழாத்தைப் பேணுதல் மற்றும் குறித்தொதுக்குதல் மிகக் கவனமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். அலுவலர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் (Assigned Vehicles) வாடகைக்கு பெறப்பட்டுள்ள கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்கள் என்பன கூட இதற்குள் உள்ளடக்கப்படல் வேண்டுமென்பதைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இக்காலப்பகுதிக்குள் அலுவலர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள வாகனங்கள் தவிர மிக முக்கியமாக குழாங்களுக்கு குறித்து ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கான ஓட்டக் குறிப்புகள் முறையாக பேணப்படல் வேண்டும் என்பதோடு இந்தக் குறிப்புகளை பதவிநிலை அலுவலர் ஒருவர் அன்றாடம் பரிசீலித்து வாகனங்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பது தொடர்பாக திருப்தி அடைதல் வேண்டும். கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக போலியாக ஓட்டக் குறிப்புகளை எழுதி அரசாங்க வாகனங்களை அரசியல் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் அல்லது அத்தகைய சட்டவிரோத விடயங்களுக்காக பயன்படுத்தாமல் இருப்பதற்குப் பொறுப்பாதல் வேண்டும்.

ii. சனாதிபதி அவர்களின் பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வாகனங்கள் தவிர்ந்த எந்த வாகனத்திற்கும் மோட்டார் திணைக்களத்தினால் குறித்தொதுக்கப்பட்ட அடையாள பதிவிலக்கம் அற்ற விதத்தில் ஓடமுடியாது. ஆதலால் எவரேனுமோர் அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் அவர்களின் பணியாட்குழு அங்கத்தினர்கள் அனைவருக்கும் உரிய பதிவு இலக்கமற்ற அரசாங்கத்தின் அல்லது அரச நிறுவனங்களின் வாகனங்களை பயன்படுத்த முடியாது. அதனால் அனைத்து திணைக்களங்களுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் உரித்தான வாகனங்களை திருத்தக இலக்கங்களைப் பயன்படுத்தி (போலி இலக்கங்களை) ஓடுவதற்கு அவகாசமளிக்கக் கூடாது என்பதை அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

iii. அரசியல் பிரச்சாரப்பணிகளுக்காக விமானங்கள், ஹெலிகொப்டர்கள் அல்லது வேறு வாகனங்களை ஈடுபடுத்துவதற்காக அரசாங்க நிதி செலவிடப்படுவதில்லை என்பதை அனைத்து செயலாளர்களும் நிறுவனத் தலைவர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

**06. அரசாங்க அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசுக்குரிய ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் ஆகியன.**

i. அரசாங்க அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசுக்குரிய ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் ஆகியன அரசின் வளங்களாகும். ஆதலால், இக்கட்டிடங்களில் அரசியல் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் என்பவற்றை நடாத்தக்கூடாது. வழமையான காலப்பகுதியில் எந்தவொரு அரசியல் கட்சிக்கும்/ குழுவுக்கும் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடிந்த கட்டிடங்கள், மண்டபங்கள் தேர்தல் காலப்பகுதியிலும் முறையாக கட்டணம் அறவிடப்பட்டு எந்தவொரு கட்சிக்கும்/குழுவுக்கும் வேறுபாடு காட்டப்படாமல் வழங்கப்படுவதற்கு இவ்வேறுபாடுகளில் தடங்கல் இருப்பதாக கருதப்படக் கூடாது. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு, அரசாங்கத்துக்கு உரித்தான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை இல்லங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்குவது முற்றாகத் தடையாகும். மாகாணங்களில் அமையப்பெற்றுள்ள அரசாங்கத்திற்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு உரித்தான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை இல்லங்கள் போன்றவை எந்தவோர் அரசியல்வாதிக்கும் அலுவலருக்கும் வேறொரு நபருக்கும் தேர்தல் காலப்பகுதிக்குள் முழு காலத்துக்குமென குறித்தொதுக்கிக் கொடுப்பதை தவிர்ந்து கொள்ளல் வேண்டும். அதேபோன்று அத்தகைய இடங்களில் தங்குகின்ற நபர்கள் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. அரசாங்கத்திற்கு உரித்தான கட்டிடங்கள், அவை அமையப்பெற்றுள்ள காணிகள் என்பவற்றில் அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் தேர்தல் பிரச்சார அறிவித்தல்கள், சுவரொட்டிகள், பாரிய அளவிலான உருவப்படங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தவும் இடமளிக்கக் கூடாது.

ii. அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றிற்கு உரித்தான விளையாட்டுத் திடல்கள், வெற்றுக் காணிகள், மண்டபங்கள் அல்லது அத்தகைய ஏனைய கட்டிடங்கள் அரசியல் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள்/ வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்கான பிரச்சாரக் கூட்டங்களுக்காக குறித்தொதுக்கும் போது எந்தவொரு கட்சிக்கோ சுயேச்சைக் குழுவுக்கோ வேட்பாளருக்கோ விசேட அக்கறையொன்றோ அல்லது முன்னுரிமையொன்றோ அல்லது குறைமதிப்பொன்று ஏற்படத்தக்கவாறு குறித்தொதுக்கக் கூடாது. அவ்விடங்கள், கட்டிடங்கள் என்பவற்றை குறித்தொதுக்குதல் வெளிக்காட்டுத் தன்மையுடன் கூடியதாக மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய இடங்களை ஏனைய கட்சிகளும் குழுக்களும் பெற்றுக்கொள்ள முடியாதவாறு எந்தவொரு கட்சிக்கோ அல்லது குழுவுக்கோ அல்லது வேட்பாளருக்கோ வேறு பணிகளுக்காக தொடர்ச்சியாக குறித்து ஒதுக்கி வைத்துக்கொள்ளக்கூடாது.

**07. பொதுவான விடயங்கள்**

i. அரசாங்க ஆதனங்கள் முக்கியமாக அரசாங்க நிறுவனங்கள், வாகனங்கள், பொருட்களாதியவை மற்றும் அலுவலர்கள் தேர்தலோடு தொடர்புடைய கட்சிகள்/குழுக்கள் அல்லது வேட்பாளர் ஊக்குவிப்புக்காக பயன்படுத்தப்பட எந்தவொரு சந்தர்ப்பமும் வழங்கப்படக் கூடாது. தேர்தல் நடாத்தப்படுகின்ற பிரதேசங்களில் அவசரக் கடமைகளுக்காக விசேட அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றை முன்வைத்து கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர் ஊக்குவிப்பை (இல்லாவிடில் பாதிப்பை) ஏற்படுத்துவதற்காக அரசாங்கத்தின்/அரச நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் அரசாங்கத்திற்கு/அரச நிறுவனங்களுக்கு சொந்தமான அல்லது வாடகைக்கு அமர்த்திய வாகனங்களை வேறு அலுவலகங்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு இணைத்தல் அல்லது விடுவித்தல் போன்ற சட்ட ரீதியற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள எந்தவோர் அலுவலருக்கும் இடமளிக்கக் கூடாது. அரசாங்கத்தின், மாகாண சபைகளின், உள்ளூராட்சி சபைகளின் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரசாங்க வங்கிகள், நியதிச்சட்ட வேறு நிறுவனங்கள், அரச பல்கலைக்கழகங்கள் போன்ற எந்தவோர் அரச நிறுவனத்துக்கும் உரிய ஊடகப் பிரிவின் அலுவலர்கள், வாகனங்கள், கருவிகள் எந்தவொரு கட்சியினதும் குழுவினதும் வேட்பாளர்களினதும் ஊக்குவிப்பை மேம்படுத்துகின்ற பணிகளுக்காக ஈடுப்படுத்தக்கூடாது. சாதாரண நிலைமையின் கீழ் எந்தவொரு அரசாங்க நிறுவனத்திற்கும் உரிய மேடைகள், சோடனைகள், கருவிகள், வாகனங்கள், விமானங்கள், ஹெலிகொப்டர்கள் போன்ற வாடகை அடிப்படையில் வழங்கப்படுவதாயின் தேர்தல் காலத்துக்குள் அத்தகைய வாடகைக்கு வழங்கப்படல் அனைத்து கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு வெளிப்பாட்டுத் தன்மையுடன் கூடியதாக ஆற்றப்படல் வேண்டும்.

ii. அரசாங்க அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவோ அல்லது ஏதேனும் வருடாந்த/ நினைவு தின வைபவங்கள் ஆகியவற்றுக்காகவோ பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரச நிதியை பயன்படுத்தி தொலைக்காட்சி, வானொலி, செய்திப் பத்திரிகைகள் போன்ற ஊடகங்களூடாக அறிவித்தல் ஒலி/ஒளிபரப்பு /பிரசுரித்தல் மூலமாகவோ அறிவித்தல் பலகைகளை பகிரங்க இடங்களில் காட்சிப்படுத்தல் மூலமோ எந்தவொரு கட்சி/குழு/வேட்பாளர் சார்பாகவும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளையோ பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையோ மேற்கொள்ளல் கூடாது.

iii. அனைத்து தனியார் கேபிள் தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள், தனியார் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்கள், இணையத்தளங்கள், கையடக்க மற்றும் நிலையான தொலைபேசிச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் என்பன தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் சட்டங்களை மீறாதவிதத்திலும் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக வழிகாட்டு நெறிகள், பணிப்புக்கள் மற்றும் அறிவுறுத்தல் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நடந்து கொள்வதற்கு வகை கூறுதல் மேற்குறித்த தொடர்பாடல் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற தாபனங்களின் பொறுப்பொன்றாகவிருத்தல் வேண்டும்.

iv. கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களை ஊக்குவிக்கும் அல்லது பாதிக்கும் விதத்தில் விளக்குக் கம்பங்கள் மற்றும் தொலைபேசி கம்பித் தூண்கள் என்பவற்றில் பதாகைகள், சுவரொட்டிகள், கொடிகள், சோடனைகள் என்பவற்றை மேற்கொள்வதைத் தடுப்பது போன்றே பொதுப் பெருந்தெருக்கள் மீதும் இருமருங்கிலும் உள்ள பாதசாரிகள் மேடைகள் மீதும் கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களை ஊக்குவிக்கும் விதத்திலோ அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் விதத்திலோ மை பூசுதல் மூலமோ வேறேதேனும் முறையிலோ பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர்ப்பதற்குரிய அதிகார எல்லைக்குரிய பிரதேசத்தின் அரசாங்க நிறுவனங்கள் போன்றே குறித்த அதிகார எல்லைக்குள் அரச ஆதனங்களை கைவசம் வைத்துள்ள நிருவாகிகள் அல்லது உள்ளூர் அதிகாரசபை அலுவலர்கள் ஆகியோரின் பொறுப்பாகும்.

v. ஏதேனும் ஓர் அமைச்சு, திணைக்களம் அல்லது அரசநிறுவனம் தேர்தல் காலப்பகுதிக்கு முன்னர் நிர்மாணித்திருந்த அல்லது காட்சிப்படுத்தியிருந்த கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்குக் காரணமாகக் கூடிய விதத்தில் பகிரங்க இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள புகைப்படங்கள், பிரச்சாரப் பலகைகள், கொடிகள், பதாகைகள் மற்றும் சோடனைகள் ஆகியவற்றை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்துவதிலிருந்து அகற்றுவதற்கு அவ்வரச நிறுவனங்களின் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உள்ளூர் அதிகார சபை எல்லைக்குள் பகிரங்க இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர் ஊக்குவிப்பு பிரச்சார பலகைகள், கொடிகள், பதாகைகள் மற்றும் சோடனைகள் ஆகியவற்றை அகற்றுவதற்கு உள்ளூர் அதிகார சபைகளின் தலைவர்கள் அந்நிறுவனங்களின் ஆணையாளர்களும் செயலாளர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

vi. தேர்தலொன்றின்போது கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் என்பவற்றிற்காக அரச ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் விதத்திலான இத்தடை உத்தரவு எத்தகைய நெகிழ்ச்சிக்கும் இடமின்றி கடுமையாக செயற்படுத்தப்படும். ஒவ்வொரு அமைச்சின் கீழும் உள்ள அனைத்து திணைக்களங்களும், அரசாங்க கூட்டுத்தாபனங்களும் மற்றும் ஏனைய நிறுவனங்களின் தலைவர்களும் இதுதொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அமைச்சுக்களின் செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல்வேண்டும். அதேபோன்று அத்தகைய அனைத்து நிறுவனங்களினதும் அலுவலர்கள் இவ்வறிவுறுத்தல்களுக்கும் பணிப்புக்ககளுக்கும் அமைவாக நடந்து கொள்கின்றார்களென அமைச்சுக்களின் செயலாளர்களும் நிறுவனங்களின் தலைவர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளல் அத்தியாவசியமானதாகும்.

vii. தேர்தலோடு தொடர்புடைய அனைத்து சட்டங்களையும் வலுவாக்கம் செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் உரிய சட்ட வலுவாக்கத்திற்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அரச அதிகாரிகளினதும் பணியாக இருக்க வேண்டுமென அரசியலமைப்பின் 104ஆ(2) ஆம் உறுப்புரையில் காணப்படுகின்ற இக்குறிப்பீடு தொடர்பாக அரச அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுதல் அவசியமாகும்.

viii. இவ்வேற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் அமைச்சரவைப் பணியாளர்கள் ஆகியோரை அறிவூட்டுவது அமைச்சின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளதோடு, மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும் ஏனைய அமைச்சர்கள் அவர்களின் பணியாட் குழுவினர்கள் ஆகியோரை அறிவூட்டல் பிரதம செயலாளர் உரிய மாகாண சபையின் அமைச்சின் செயலாளர்களுக்கு உரியதாகும் என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

ix. ஏற்புடைத்தாகுமிடத்து ஆணைக்குழுக்களின் செயலாளர்கள், அக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் அதன் அங்கத்தினர்கள் இப்பணிப்புக்கள் தொடர்பாக அறிவூட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

x அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக, அமைச்சுக்கள்/திணைக்களங்கள்/நிறுவனங்களின் தலைவர்கள் பிரதான கணக்கீட்டு அலுவலர்களாக அல்லது கணக்கீட்டு அலுவலர்களாக உள்ளமையால் அரசாங்கத்திற்குரிய ஆதனங்களின் முறையற்ற துஷ்பிரயோகத்தை தவிர்ப்பது உரிய அலுவலர்களுக்குக் கையளிக்கப்படுகின்ற ஒரு பொறுப்பாகும்.

xi. இப்பணிப்புக்களுக்கு அமைவாக நடந்தொழுகாமை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104எஎ ஆம் உறுப்புரைக்கமைய தண்டனை வழங்கப்பட முடிந்த ஒரு குற்றமென்பது குறிப்பிடப்படுகின்றது.

இவ்வேற்பாடுகளில் அரசாங்கம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரச வங்கிகள் அரச பல்கலைக்கழகங்கள், அரசுக்கு கையேற்கப்பட்டுள்ள கம்பனிகள் என்ற அனைத்து நிறுவனங்கள் மற்றும் 50 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கு அரசிற்கு அல்லது அரச கம்பனிகளுக்கு உரித்தான நிறுவனங்கள் எனப் பொருள்படும்.

அரசாங்க அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் என இடப்பட்டுள்ள ஒவ்வோர் இடத்திலும் முன்பு குறிப்பிடப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டவர்களுமான வேதனம் ஒன்றையோ படி ஒன்றையோ பெற்றுக் கொள்கின்ற அனைவரும் எனப் பொருள்படும்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட 2017.12.04 ஆந் தேதிய 2048/12 ஆம் இலக்க அதி விசேடவர்த்தமானி அறிவித்தல் நீக்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2143/47 - 2019 ඔක්තෝබර් මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.10.03

2143/47 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**தேர்தல் ஆணைக்குழுவினால் 2019, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதியின் கீழ் 2141/ 52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டளைகளுடன் தொடர்புடையதாக, தேர்தல் ஆணைக்குழுவினால் மேலதிகமாக வெளியிடப்படுகின்ற கட்டளைகள்**

தேர்தலுடன் தொடர்புடையதாக அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள் அல்லது கட்டளை மீறப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ள தகவல்கள் அல்லது முறைப்பாடுகள் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடாத்த வேண்டுமென தேர்தல் ஆணைக்குழு தீர்மானிக்கின்றபோது அதுதொடர்பாக தேவைப்படுகின்ற அச்சு அல்லது இலத்திரனியல் காகிதாவணங்கள், கலந்துரையாடல் குறிப்புக்கள், அறிக்கைகள், ஆட்சேர்ப்பு செய்தல்கள் அல்லது நியமனங்கள் வழங்கப்பட்டமை தொடர்பான அறிக்கைகள் போன்ற தகவல்கள் ஆணைக்குழுவிற்கு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரொருவருக்கு வழங்கும்படி கட்டளையிடப்படும்போது, அத்தகவல்களை வழங்குவதற்கு அக்காகிதாவணங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஏதேனுமொரு கட்டளை அல்லது கட்டளைகள் மீறப்பட்டமை தொடர்பாக மேலதிக விசாரணைக்காக அல்லது வாய்மொழிமூல அல்லது எழுத்திலான கூற்றுக்களை பெற்றுத்தருமாறு தேர்தல் ஆணைக்குழு அல்லது தேர்தல் ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரொருவர் கட்டளையிடுவாராயின் அனைத்து விடயங்களும் உள்ளடங்கிய கூற்றுக்களை பெற்றுக்கொடுப்பதற்கு அவ்விடயங்களுடன் தொடர்புடைய அரச அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதற்கு அவர்கள் கட்டுப்பட்டுள்ளனர்.

1A - PG 4670 — 517 (2019/10)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*தேர்தலுடன் தொடர்புபட்டதாக அரச சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்துவது தொடர்பான கட்டளைகள் மீறப்பட்டமை தொடர்பாக விசாரிப்பதற்கு, தேர்தல் ஆணைக்குழு எவரேனுமொரு அரச அலுவலரை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அழைக்குமாயின் அவ் அரச அலுவலர் அதற்காக வருகை தந்து தேவையான அனைத்து விடயங்களையும் தெளிவுபடுத்திக் கொடுக்கவும் தேவையான காகிதாவணங்களை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதற்கு அவ்வலுவலர் கட்டுப்பட்டுள்ளார்.*

*இக்கட்டளைகளில் அரசாங்கமென குறிப்பிடப்பட்டுள்ள எல்லா இடங்களிலும் அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான சபைகள், ஆணைக்குழுக்கள், அரசாங்க வங்கிகள், அரசாங்க பல்கலைக்கழகங்கள், அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ள கம்பனிகள் போன்ற அனைத்து நிறுவனங்களும் 50% க்கு அதிக பங்குகளைக் கொண்டுள்ள அரச அல்லது அரச கம்பனிகளுக்குரிய நிறுவனங்களுமென பொருள்படும்.*

*அரசாங்க அலுவலர்கள் மற்றும் ஊழியர்களௌனக் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா இடங்களிலும் முன்கூறப்பட்ட நிறுவனங்களில் கடமையாற்றுகின்ற மற்றும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சம்பளம் அல்லது கொடுப்பனவுகளைப் பெறும் அனைவருமென பொருள்படும்.*

*இக்கட்டளைகளில் காணப்படும் தகவல்கள் என்பதற்கு 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் தகவல்கள் தொடர்பான பொருள்கோடல் ஏற்புடையதாகும்.*

*இதுதொடர்பாக விநியோகிக்கப்பட்ட 2017.12.04 ஆந் திகதிய 2048/2 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*மஹிந்த தேசப்பிரிய,*
*தவிசாளர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*என். ஜே. அபேசேகர,*
*அங்கத்தவர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,*
*அங்கத்தவர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*கொழும்பு,*
*2019, ஒற்றோபர் 02.*

*10-631*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2142/47 - 2019 සැප්තැම්බර් මස 25 වැනි බදාදා - 2019.09.25
2142/47 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேர்தலொன்றின்போது தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோரினால் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்கநெறிக் கோவை

2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8 (8) ஆம் உப்பிரிவுக்கு அமைய வெளியிடப்படுகின்ற இவ்வொழுக்க நெறிக்கோவை தேர்தலொன்றிற்கான பெயர்குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்படுகின்ற தினத்திலிருந்து தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் வரையிலான காலத்திற்கு செல்லுபடியாகும்.

